ஜெயமோகன்

இன்று பெற்றவை



இன்று பெற்றவை

எழுத்தாளனின் நாட்குறிப்புகள்

ஜெயமோகன்

ஜெயமோகன்

பிறந்தது 1962, ஏப்ரல் 22ல். பள்ளி நாள்களில் ரத்னபாலா என்கிற சிறுவர் இதழில் முதல் கதையை எழுதினார். 1987ல் கணையாழியில் எழுதிய ‘நதி’ சிறுகதை பரவலாகக் கவனம் பெற்றது. 1988ல் எழுதப்பட்ட ‘ரப்பர்’ நாவல் அகிலன் நினைவுப்போட்டியின் பரிசைப் பெற்றது. இது தவிர கதா விருதும் சம்ஸ்கிருதி சம்மான் தேசிய விருதும் பெற்றுள்ளார். இவர் எழுதிய விஷ்ணுபுரம் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு விவாதத்தையும் ஏற்படுத்தியது. இவரது படைப்புகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் அதிர்வலைகளையும் புதிய சாத்தியங்களையும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது.

செந்தில் குமாருக்கு அன்புடன்

உள்ளே

1. எழுத்தாளனின் டைரி

2. அமெரிக்காவில் தமிழன்னைக்கு சமாதி!

3. ஹெப்சிபா ஜேசுதாசனுக்கு ‘விளக்கு’ விருது விழா

4. இளமுருகு எழுதிய ‘பாத்ரூம்’ கட்டுரை பற்றி

5. ஒவ்வாத மனிதர் (எழுத்தாளர் கோபி கிருஷ்ணனுக்கு அஞ்சலி)

6 .வையாபுரிப்பிள்ளையின் மரணமின்மை

7. அய்யப்ப பணிக்கருக்கு அஞ்சலி

8. அஞ்சலி: சிரிக்கத் தெரிந்த மார்க்ஸியர்: சோதிப்பிரகாசம்

9. பயணம்

10. ஒரு இலக்கிய நிகழ்ச்சியின் கதை

11. நாஞ்சில் 60 நிறைவு: நூல் வெளியீட்டுவிழா

12.‘ இயல்’ விருதின் மரணம்

13. ஆதிமூலம்

14. மூன்று சிறுத்தைகளும் ஒரு புலியும்

15. கனிமொழி வணக்கம்

16. தமிழ் சினிமா: தொழில்நோக்கு தேவை

17. திருவாரூர் பயணம் – அரசுப் பேருந்து

18. ஆனந்த விகடனின் அவதூறு

19. ஆதிமூலம் நினைவிதழ்

20. விகடனை எண்ணும்போது

21. தேனியில்

22. விகடன் பற்றி இறுதியாக

23. பேராசிரியர் மௌனகுரு

24. சுஜாதா: மறைந்த முன்னோடி

25. விவாதிப்பவர்களைப் பற்றி

26. ஸ்டெல்லாபுரூஸ் என்ற காளிதாஸ்

27. பேருந்தில் தோப்பில் முகமது மீரான்

28. சிதம்பரம் நாட்டியாஞ்சலி

29. கத்தாழ கண்ணாலே

30. அஞ்சலி: மலையாளக் கவிஞர் கடம்மனிட்ட ராமகிருஷ்ணன்

31. சுஜாதா: இரு வம்புகள்

32. பாலுணர்வெழுத்தும் தமிழும்

33. காலச்சுவடு நூறாவது இதழ்

34. சொல் புதிது பற்றி

35. பாவலர் விருது

36. பிறந்தநாள்

37. ஜக்கி வாசுதேவ்

38. அவலாஞ்சி

39. ஜூவியின் பதினாறாம் பக்கம்

40. கலைஞனின் உடல்மொழி: ஜெயகாந்தன் ஆவணப்படம்

41. கனடிய இலக்கியத்தோட்ட விருதுகள்

42. அம்மா வந்தாள்: மூன்றாவது முறை

43. சில சினிமாப்பாடல்கள்

44. வெயிலுக்கு விருது

45. இரண்டு அறிவியல் செய்திகள்

46. சுவரில் முட்டி நிற்கும் மலையாள சினிமா

47. இரு படைப்பாளிகள்

48. பருவமழைப் பயணம் மழையில்லாமல்

49. எழுதப் போகிறவர்கள்

50. நிழல் நாடுவதில்லை நெடுமரம்

51. ஒரு விழா

52. நாமக்கல் ‘கூடு’

53. ஜெகமிதுவே ஒரு நாடகரங்கம்!

54. ராஜமார்த்தாண்டன் 60 விழா

55. மசனொபு ஃபுகோக்கா ஒரு கீழை ஞானி

56. காலச்சுவடுக்குத் தடை

57. அக்காமலையின் அட்டைகள்

58. செங்காடு

59. அலாவுதீன்

60. நெய்தல் விருது

61. ஞாநி என்ற கோபக்காரர்
62. பெண்ணேஸ்வரனும் டெல்லியும்
63. ஒரு மாறுபட்ட போதகர்
64. தீபாவளி
65. அசோகமித்திரன் சந்திப்பு

அன்றாட வாழ்க்கையில் ஓர் எழுத்தாளன் எதிர்கொள்ளும் தருணங்கள் முக்கியமானவை. ஒரு முகம் சிதறிய பல பொருட்களில் பிரதிபலிப்பதுபோல. எல்லாருக்கும் உரியவைதான் அவை. ஆனால் எழுத்தாளன் அவற்றை மொழியாக ஆக்கத்தெரிந்தவன். ஆகவே எங்கும் பதிவாகாமல் காற்றில் கலந்து மறையக்கூடும் அனுபவங்கள் மொழியில் கல்வெட்டாக மாறுகின்றன.

சமகாலப் பதிவுகள் இவை. எண்ணங்கள், எதிர்வினைகள். சென்ற சில ஆண்டுகளின் உணர்வுகளையும் நிகழ்வுகளையும் அவற்றில் திறக்கும் புதிய கோணங்களையும் காட்டுபவை என்பதனால் முக்கியமானவை. இவற்றை முதலில் தொகுப்பாக வெளியிட்ட உயிர்மை மனுஷ்யபுத்திரனுக்கு நன்றி. மீண்டும் வெளியிட்டிருக்கும் கிழக்கு பதிப்பகத்திற்கு அன்பு.

ஜெயமோகன்
அக்டோபர் 2015

1. எழுத்தாளனின் டைரி

எப்போதும் காவலாக... சீராக நாட்குறிப்பு எழுதும் வழக்கம் உள்ளவன் நான். தியானம் பயின்ற காலகட்டங்களில் தனியாக தியான அனுபவம் சார்ந்த பதிவுகளை எழுதியிருக்கிறேன். அவை இப்போது வாசிக்கையில் ஆர்வமூட்டும் விஷயங்களாக உள்ளன. ஏதோ ஒரு தருணத்தில், அவன் என்னிடமுள்ள தொடர்பை போதுமான அளவுக்கு இழந்து காம்பு கனிந்து உதிரும்போது, நூலாகலாம். இந்தக் குறிப்புகள் நானே வெவ்வேறு தருணங்களில் எழுதியவை. இதழ்களிலும் இணையத்திலும்.

தொடர்ச்சியாக எதிர்வினைகள் ஆற்றுபவன் நான். என்னுடைய கருத்துக்களை பதிவுசெய்ய எப்போதுமே தயங்கியவனல்ல. பலசமயம் எழுத்தாளர்கள் தயங்கும் விஷயங்களில் கூட கருத்து சொல்லியிருக்கிறேன். அதனால் பலவகையான முத்திரைகளுக்கு ஆளாகியிருக்கிறேன். நான் இடதுசாரி அல்ல. இங்குள்ள கருத்தியல் சரிநிலைகள் இடதுபக்கம் சாய்ந்தவை என்பதனால் இடதுசாரி அல்லாத எவருமே இங்கே வலதுசாரிகளாக சேர்க்க குத்தப்படுவார்கள். நான் வலதுசாரியும் அல்ல. நான் எழுத்தாளனின் சாரி. அந்நிலைப்பாட்டில் நின்றபடி என்னுடைய எண்ணங்களை எப்போதும் தெரிவித்து வந்திருக்கிறேன்.

இக்குறிப்புகள் அக்காலகட்டத்து நிகழ்ச்சிகளை விவாதங்களை பிரதிபலிக்கின்றன. நம்முடைய கலாசார அரசியல் சூழலில் எப்போதும் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் இரண்டுதான். எல்லா சிக்கல்களையும் ஒரு ‘முற்போக்கு’ நோக்கில் மிக எளிமைப்படுத்திக்கொண்டு அதிமுரட்டு தீர்வுகளை முன்வைப்பது. முன்வைப்பவருக்கு ஒரு புரட்சி படிமம் கிடைக்கும். மற்றபடி அதனால் எந்த பயனும் இருக்காது. ஆனாலும் பிம்ப உற்பத்தியே அன்றாடச் செயல்பாடாக உள்ள நம் சூழலில் இது எப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எழுத்தாளனின் குரல் அந்த எளிமைப்படுத்தலுக்கு எதிராக ஒலிக்க வேண்டியிருக்கிறது.

இரண்டு, ஒருசூழலில் பண்பாட்டுச் செயல்பாடுகள் விவாதம் மூலமே அடையாளம் காணப்படும் என்றால் முக்கியமானவர்கள் விடுபட்டுப் போவார்கள், முக்கியமானவை விடுபட்டுப் போகும். விளம்பர வெறியர்களும் சண்டைக்கோழிகளுமே முன்னிற்பார்கள். கடந்த பல வருடங்களில் விடுபட்டவற்றை சுட்டிக்காட்டும் முகமாகவே நான் நிறைய எழுதியிருக்கிறேன்.

அனைத்தையும் விட மேலாக ஒன்று உண்டு. தமிழில் எப்போதுமே இலக்கியமும் இலக்கிய எழுத்தாளனும் மதிக்கப்பட்டதில்லை, கௌரவிக்கப்பட்டதில்லை. சந்தேகமிருந்தால் அசோகமித்திரன் முதல் எஸ்.ராமகிருஷ்ணன் வரையிலான எழுத்தாளர்களின் பெயர்களை கூகிள் தேடுபொறியில் தட்டச்சிட்டு தேடிப்பாருங்கள், பத்துக்கு ஏழு வசைகளே அகப்படும். ஏதாவது ஒரு காரணம் கிடைத்தால் சமூகப் பொது எதிரியை சாடும் தார்மீக ஆவேசத்துடன் எழுத்தாளர்கள் மேல் பாய்ந்து குதறும் ஒரு பெரும் கும்பலே நம் பண்பாட்டுச் சூழலில் உள்ளது.

ஏன் சிற்றிதழ்களும் அப்படித்தான். சென்ற பத்து வருடத்து

‘காலச்சுவடு’,‘செம்மலர்’, ‘தாமரை’ இதழ்களில் எத்தனை எழுத்தாளர்கள்

தாக்கப்பட்டுள்ளார்கள், எத்தனைபேர் பாராட்டப்பட்டிருக்கிறார்கள், என்ன விகிதாச்சாரம் என்று பாருங்கள், புரியும். எழுத்தாளன் மரணமடையும் போது நான்கு அஞ்சலிக்கட்டுரைகள் வந்தாலே செம்மலர் போன்ற இதழ்கள் கசப்படைந்து கட்டுரைகள் போடுகின்றன, சர்வசாதாரண மான தொழிற்சங்கவாதிகளுக்கெல்லாம் நினைவுமலர்கள் போடுகின்ற அதே இதழ்கள்! அரசியல்வாதிகளுக்கு போஸ்டர் போடுபவர்கள் ஓர் எழுத்தாளனின் படம் இலக்கிய இதழொன்றின் அட்டையில் வந்தால் அதிர்ச்சி அடைகிறார்கள்!

இதுவே படைப்புமனநிலை குறித்தும் சொல்லத்தக்கது. உலகின் எந்த மூலையிலாவது படைப்பூக்கத்தை குறைத்து மதிப்பிடக்கூடிய ஒரு கோட்பாடு உருவானால் அது சில மணிநேரங்களிலேயே இங்கே வந்து விடும். அவ்வளவுதான். இலக்கியமெல்லாம் இனி அம்பேல் என்று கூப்பாடுகள் ஒலிக்கும். எத்தனை கோட்பாடுகளின் அடிப்படையில் எத்தனை முறை அக்குரல் ஒலித்திருக்கிறது என்று பார்த்தால் ஆச்சரியமே எழுகிறது. அந்த மட்டையடிகளைத் தாண்டித்தான் இங்கே இன்னமும் இலக்கியம் எழுதப்படுகிறது.

என்னுடைய குறிப்புகள் படைப்புக்கு, படைப்பாளிக்கு, படைப்புமன நிலைக்கு எதிரான இழிவுபடுத்தல்களை எப்போதும் எதிர்கொள் பவனாகவே இருந்திருக்கின்றன. இந்த வரிகள் வழியாக செல்லும் போது அந்த சமரசமில்லாத விழிப்பான நிலைப்பாடு எனக்கு உவகை அளிக்கிறது.

என் நண்பரும் வாசகரும் பயணத்தோழருமான வழக்கறிஞர் செந்திலுக்கு இந்நூல்.

ஜெயமோகன்

2. அமெரிக்காவில் தமிழன்னைக்கு சமாதி!

கன்யாகுமாரியில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டபோது என் மாமனார், தமிழறிஞர் சற்குணம் பிள்ளை இங்கே இருந்தார். அய்யன் திருமுகத்தை முதல் நாளே பார்க்க வேண்டுமென்று திறப்பு விழாவுக்குப் போனார். நெரிசலில் சிக்கி, மூச்சு திணறி வந்து சேர்ந்த போது முகம் இருளடித்துக் கிடந்தது. காரணம் நான் கேட்கவில்லை. கேட்பேன் என்று எதிர்பார்த்து ஏமாந்து அவரே சொன்னார். 'ஒருத்தருமே திருவள்ளுவரைப் பத்திப் பேசலியே. எல்லாரும் கலைஞரைத்தான் புகழ்ந்திட்டிருந்தாங்க...' நான் அவருக்கு அப்போதைய போஸ்டர் வாசகம் ஒன்றை நினைவூட்டினேன். 'வாழும் வள்ளுவர் தானே இவரும்?' மாமனார் பெருமூச்செறிந்தார்.

சிலை அமைக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்தே நான் அதைப் பார்க்கப் போனேன். அச்சிலை என்னைப் பொருத்தவரை ஆள்வோரின் அகங்காரத்தின் விஸ்வரூபம் மட்டுமே. ஆனால் இங்கே வருபவர்களுக்கு அது ஒரு சுற்றுலாக் கவர்ச்சி. அன்று கூட வந்தவர் நாராயண குருகுல துறவியான சுவாமி தியாகீஸ்வரன். கவிஞர். நாராயண குருவால் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளுக்கு ஒரு நல்ல ஆய்வுரை எழுதியவர். 'தமிழர்களின் கடவுள்கள் எல்லாம் இதே போல பெரிது தான். இதுவும் ஒரு முனியப்ப சாமி' என்றார்.

நான் வேதசகாய குமார் சொன்ன ஒரு சம்பவத்தைச் சொன்னேன். சிலையை சாரம் பிரிக்கும்போது வடங்களை கழற்றுகையில் ஒரு வடம் சரிந்து சிலையை வடித்த சிற்பியின் காலில் அடித்து விட்டது. அவர் ஆஸ்பத்திரியில் படுக்க நேர்ந்தது. இதை ஒட்டி குமரி மாவட்டம் முழுக்க ஒரே வதந்தி அலை. சிற்பம் முழுமையடையவில்லை எனவே இது நடந்தது என்று ஒரு தரப்பு. சிற்பத்தின் முகத்தில் ரௌத்ர பாவம் குடி கொண்டிருக்கிறது, ஆகவே தான் இப்படி என்று இன்னொரு தரப்பு. சிலை சரிந்தால் கலைஞருக்கு ஆபத்துதான் என்பதனால் சென்னையிலிருந்து சோதிடர் குழு வந்து பார்த்து சென்றிருப்பதாகவும், நரபலி கொடுத்து சிற்பத்தை நிலை நிறுத்த கலைஞர் ஆணையிட்டிருப்பதாகவும் எங்கும் பரபரப்பாக பேசிக் கொண்டார்கள். வேதசகாய குமார் ஒரு நண்பரிடம் வேடிக்கையாக 'கதை தெரியுமா, பாண்டியன் கண்ணகிக்கு பொற் கொல்லர்களைப் பலி கொடுத்தது போல கலைஞர் 108 தமிழாசிரியர்களை திருவள்ளுவருக்கு பலி தரப் போகிறார்' என்றார். ஒரு வாரம் கழித்து ஒரு தமிழ்ப் பேராசிரியர் 'சேதி தெரியுமா, திருவள்ளுவர் சிலைக்கு ஒரு தமிழாசிரியரை பலி தந்து விட்டார்களாம்' என்றாராம்.

'நடக்கக் கூடாது என்றில்லை. பெரிய சிலைகளாக கடவுள்களை உருவகிப்பதும், பலி தருவதும் எல்லாம் பொதுவாக பழங்குடிகளிடம் உள்ள ஒரு பழக்கம்' என்றார் தியாகி. எனக்கே பயமாகி விட்டது. கன்யாகுமரி என்றால் கடலோரப் பொதுக் கழிப்பிடம் என்று பொருள். இரண்டு காலை சேர்த்து ஊன்றினால் அது மலம் மீது தான். அதையெல்லாம் சுத்தப் படுத்துவது கன்யாகுமரியின் தனித் தன்மையை இல்லாமலாக்குவதாகும் என்பது அரசின் கொள்கை. 18 புனித தீர்த்தப் படித்துறைகளில் அதிக நாற்றம் எடுப்பவை முறையே முக்கியத்துவம் உடையவை. இப்போது அங்கு எங்கே குந்தினாலும் அய்யனை தரிசித்தபடியே மலம் அறுத்து உய்வு பெறலாம். இப்போது சில கோடி செலவில் பாறைக்கே கடல் பாலம் கட்டப் போகிறார்கள். அய்யன் காலடியில் அமர்ந்து அதைச் செய்யும் பாக்கியம் தமிழ்க் குடிகளுக்கு கிடைக்கப் போகிறது. ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு அய்யன் பாழடைந்த

பாறைமீது சாம்பல் பூத்து பயங்கரக் கோலம் கொள்கிறார். மார்வாடிகள் கையிலிருக்கும் வரை விவேகானந்தர் பாறை சுத்தமாக இருக்கும். (அய்யனையும் அவர்களுக்கே ஈந்துவிட்டால் என்ன? அவர் குந்து குந்தாச்சாரியார் என்ற சமண முனிதான் என்று வரலாறு உண்டே?)

அமெரிக்காவில் அய்யன் சிலை நிறுவப்படப் போகிறது என்ற செய்தி காதில் விழுந்த போது அங்கும் தமிழ் மணம் பரவப் போகிறது என்ற இறும்பூது ஏற்பட்டது. அமெரிக்காவில் வசிக்கும் இலங்கைத் தமிழரான பஞ்சாட்சரம் என்பவர் இலங்கைத் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பின் நிறுவனத் தலைவர். இவர் நியூயார்க் நகரில் உலகத் தமிழ் மையம் என்ற பிரம்மாண்ட கட்டடத்தைக் கட்டப் போகிறாராம். அதன் துவக்க விழா தமிழ் நாட்டில் நடந்தது. கலைஞர் அதன் சிறு மாதிரியை திறந்து வைத்து பேருரை ஆற்றினாராம். அதை மகாபலிபுரம் சிற்பக் கலைஞர் திருஞானம் என்பவர் வடிவமைத்திருக்கிறார். இதற்கு மட்டுமே ஆறு லட்சம் ரூபாய் செலவாம்! கட்டடம் ஆக்டகன் (எண்கோண) வடிவில் கட்டப்படுமாம். எட்டுத் திசைகளிலும் வாழும் தமிழர்களை இணைப்பதற்காக இந்த வடிவமாம். (விண்வெளியில் ஏதாவது கிரகங்களில் ஏன் தமிழ் பேசப்படக் கூடாது? தஞ்சை தமிழ் பல்கலை பேராசிரியர் எவராவது இது குறித்து கண்டிப்பாக ஆய்வு செய்திருப்பார்கள்.)

இங்கு கலையரங்கம், தமிழ் நாட்டு நட்சத்திர உணவு விடுதி, தமிழ் முதியோர் விடுதி, தமிழ் நீச்சல் குளம் ஆகியவை அமைக்கப்படுமாம். ஓரத்தில் நூலகம், அருங்காட்சியகம் (அங்கு புலியை விரட்ட பயன்படுத்தப்பட்ட தமிழ் முறம்) ஆகியவையும் அமைக்கப்படுமாம். இந்தியப் பெருநகர்களில் உள்ள பிரம்மாண்டமான தமிழ்ச் சங்கங்களில் நடப்பவற்றை வைத்து ஊகித்தால் கீழ் கண்டவற்றை எதிர்பார்க்கிறேன். கலை அரங்கத்தில் உதித் நாராயணன், ஹரிஹரன், மால்குடி சுபா (மலெ மலெ மல்லே மல்லே...) குழுவினரின் தமிழிசை, தமிழறிஞர் திண்டுக்கல் லியோனி, பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் ஆகியோரின் செவி விருந்து முதலியவை வழங்கப்படும். நூலகத்தில் அகப்பொருளாய்வுகள், ராஜேஷ் குமார் நூல்கள் அடுக்கப்படும். அனேகமாக செயலாளரிடமிருந்து என்னைப் போன்ற சிற்றிதழ் எழுத்தாளருக்கு எங்கள் நூல்களையும், சிற்றிதழ்களையும் எங்கள் தமிழ்ப் பற்றின் அடையாளமாகவும், அவர்கள் நிதி நிலையை கருத்தில் கொண்டும் இலவசமாக (அடிக்கோடு) அனுப்பி உதவும்படி கடிதம் வரும்.

'இருந்த பெரும் தமிழணங்கின்' பெருமைக்கு உகந்த நினைவுச் சின்னம் தான் என்பதில் ஐயமில்லை. தாஜ்மகாலில் இருப்பது போல இந்தக் கட்டடத்திலும் நிலத்தடித் தளத்தில் தமிழன்னையின் சமாதியோ அஸ்தியோ வைக்கப்பட வேண்டும். அமெரிக்காவிற்கு வரும் கணிப்பொறித் தமிழர்களும் புலம் பெயர்க்கப்பட்ட தமிழர்களின் குழந்தைகளும் தமிழ்மொழி குறித்து கேள்விப்பட்டு அங்கு வந்து மலர் வளையம் வைக்க வசதியாக இருக்கும். தமிழன்னைக்கு சிலை வைக்கப் படும் போது அவள் தொன்மையைக் குறிக்கும் வகையில் நியாண்டர்தால் தோற்றம் கொடுக்கலாம் என்று என் நண்பர் சொல்கிறார், அது சற்று அதிகப் பிரசங்கித்தனம் தான். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், கம்ப ராமாயணம், நீதி நூல்கள் முதலியவற்றைச் சுட்டு அச்சாம்பலைத் தூவி அதன் மேல் கட்டடம் கட்டலாம் என்ற கருத்து பரிசீலனைக்கு உரியது என்றுதான் படுகிறது.

ஆனால் ஏனோ இந்த மகத்தான செய்தி ஒரு வகையான உற்சாகத்தையும் தமிழ்ச் சூழலில் உண்டுபண்ணவில்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கவலை. புது மனைவியிடமிருந்து எப்படி பணத்தை லவட்டி அடுத்த இதழ் ஆரண்யத்தை கொண்டு வருவது என்று ஸ்ரீபதி பத்மனாபா. தமிழ் நாட்டில் கட்டுரை நூலையும், கவிதை நூலையும் பிரபல ஆசிரியர் கூட (திரும்பி வராத) சொந்தப் பணத்தில் தான் போடவேண்டும். கட்டுரைத் தொகுப்பு போட வைத்திருந்த பணம் இதய நோய்க்கு செலவாகி விட்ட கவலை நாஞ்சில் நாடனுக்கு. தமிழறிஞரும் இசை மேதையுமான லட்சுமண பிள்ளையின் இசைப் பாடல்களை 60 வருட இடைவெளிக்குப் பிறகு மறுபதிப்பு செய்வதற்கு நிதியுதவி செய்ய மலையாள வியாபாரிகள் எவரையாவது அணுகலாமா என்று வேத சகாய குமாருக்கு கவலை. பாவண்ணன்

பெங்களூரில் இலங்கை அகதிக் குழந்தைகள் அரைப்பட்டினியாக வதைபடுவதைப் பற்றிச் சொன்னார்.

சரவணன் 'அந்த ஆறு லட்சம் ரூபாய் இருந்தால் ஆறு சிற்றிதழ் தொடங்கி ஜாம் ஜாம் என்று நடத்தி தமிழ் இலக்கியத்தையே மாற்றி விடலாம்' என்றார். டி எஸ் சொக்கலிங்கம் மொழி பெயர்த்து நாற்பதுகளில் வெளி வந்து மறுபதிப்பே வராத தல்ஸ்தோயியின் போரும் அமைதியும் நூலை ஆயிரம் ரூபாய் செலவில் ஒளிநகல் எடுத்த அரவிந்தன் அந்த நூலையும் மறுபதிப்பே வராத பிற முக்கியமான நூல்கள் சிலவற்றையும் மறுபதிப்பு செய்யலாமே என்றார். பேராசிரியர் அ. கா. பெருமாள் மறுபதிப்பு செய்யப்பட வேண்டிய நூல்களின் பட்டியலையே சொல்ல ஆரம்பித்தார். பழைய புத்தகங்களை மட்டும் மறுபதிப்பு செய்தால் போதுமா புதிய நூல்கள் எத்தனை உள்ளன என்று சொல்ல ஆரம்பித்தார் இன்னொரு நண்பர்.

யாருக்குமே விஷயம் புரியவில்லை என்று எனக்கு பட்டது. தமிழ் பண்பாட்டையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

வயிற்றுக்கு சாப்பாடு இல்லையென்றாலும் தீபாவளிக்கு கடனில் பட்டுப் புடவையும் நகையும் எடுப்பவர்கள் நாம். மூதாதையர் பெருமையும் சொந்தக்காரர் பெருமையுமே நம் பெருமை என்று எண்ணுவது நம் மரபு. அய்யனும் நியூயார்க்கில் சமாதியும் எல்லாம் யாருக்காக? நமக்குத் தான் நம்மைப் பற்றி தெரியுமே. அதெல்லாம் 'மாற்றான்' நம் பெருமையை அறிந்து கொள்ளும் பொருட்டு அல்லவா?நாளைக்கே அமெரிக்க அதிபர் சமாதிக்கு வந்து இட்லி சாப்பிட்டு, பசலை பரவும் விதங்களை தெரிந்து கொண்டு, அன்னைக்கு மலர் வளையமும் வைத்துச் சென்றால் வாளோடு முன் தோன்றி மூத்த குடிக்கு வேறென்ன வேண்டும்?

டிசம்பர் 22, 2001

[3. ஹெப்சிபா ஜேசுதாசனுக்கு விளக்கு விருது விழா]()

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் கட்டடத்தில் ‘விளக்கு’ விருது பேராசிரியர் ஹெப்சிபா ஜேசுதாசனுக்கு வழங்கும் விழா 29.12.2002 அன்று மாலை ஆறு மணிக்கு நடைபெற்றது. வெளி ரங்கராஜன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். சுந்தர ராமசாமி முக்கிய விருந்தினராக வந்து கலந்துகொண்டு விருதை வழங்கினார். புதுமைப் பித்தனின் படத்தை தமிழ்ச் சங்க கட்டடத்திலும் அவர் திறந்து வைத்தார்.

ரங்கராஜன் ‘விளக்கு’ அமைப்பு சார்பில் வழங்கப்படும் இவ்விருது எளிமையான ஒன்று என்றாலும் முக்கியமான இலக்கிய படைப்பாளிகளுக்காக மட்டுமே இது வரை வழங்கப்பட்டுள்ளது என்றார். சி.சு.செல்லப்பா, பிரமிள், நகுலன், பூமணி ஆகியோருக்கு இது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. ஹெப்சிபா அவர்களுக்கு வழங்கப் பட்டது இப்பரிசுக்கு பெருமை சேர்க்கிறது என்றார்.

சுந்தர ராமசாமி தன் உரையில் பேராசிரியை ஹெப்சிபா அவர்களை, பேராசிரியர் ஜேசுதாசன் அவர்களிடமிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்றார். பேராசிரியர் ஜேசுதாசன் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும், ரசனையும் உடையவராக இருந்தும் கூட தன் மனைவியை முன்னிறுத்தி அவரது திறமைகளை வெளிக் கொணர்வதை மட்டுமே தன்னுடைய முதல் நோக்கமாகக் கொண்டிருந்தார். ஹெப்சிபா ஜேசுதாசன் அவர்களின் முக்கியமான பெரும் நூலான Count down from Solomonனின் ஆக்கத்தில் பேராசிரியர் ஜேசுதாசனுக்கும் முக்கியமான பங்கு உண்டு. எழுதாத நூல்களிலேயே கூட தன் பெயரை போட்டுக் கொள்ளும் இந்நாட்களில் தன்னுடைய பங்கு உள்ள நூலிலேயே தன் பெயரை போட்டுக் கொள்ளாத பேராசிரியர் மிக அபூர்வமான ஒரு ஆளுமை என்றார்.

‘புத்தம் வீடு’ மிக முக்கியமான ஒரு நூல், அந்நூல் வெளிவந்தபோது பரவலான கவனத்தை அது பெறவில்லை. விமரிசகர்கள் அதைப் பேசி முன்னிறுத்தவுமில்லை. ஆயினும் அந்நூல் தன் அழகியல் குணத்தாலேயே இலக்கிய முக்கியத்துவத்தைப் பெற்று ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கும் மேலாக தன்னுடைய இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. Count down from Solomon அடிப்படையில் ஒரு இலக்கிய வரலாறு என்றாலும் நுட்பமான முறையில் அது தமிழிலக்கியம் மீது விமரிசனங்களை முன் வைக்கிறது.

‘ரங்கராஜன் குறிப்பிட்டது போல இப்பரிசு எளிய ஒன்று அல்ல. இன்று தமிழில் வழங்கப் படுவதிலேயே மிக முக்கியமான இலக்கிய பரிசு இது தான். இதனுடன் ஒப்பிடுகையில் சாகித்ய அகாதமி விருது மதிப்பிற்குரியதல்ல. காரணம் தரமான படைப்பாளிகளுக்கு மட்டுமே இப்பரிசு இது வரை வழங்கப்பட்டுள்ளது. சாகித்ய அகாதமியால் புறக்கணிக்கப் பட்ட படைப்பாளிகளுக்கு மட்டுமே இது வழங்கப்பட்டுள்ளது. இதை பெற்றுக் கொண்ட ஒருவர் சாகித்ய அகாதமி விருதை புறக்கணிக்க வேண்டும். சாகித்ய அகாதமி விருது தமிழ் எழுத்தாளர்களை சிறுமைப் படுத்தி வருகிறது. சிலர் அதைப் பெற போட்டியும், சிபாரிசும் செய்கிறார்கள்’ என்றார் சுந்தர ராமசாமி.

நீல.பத்மநாபன், ‘ஹெப்சிபா ஜேசுதாசன் அவர்களின் ‘புத்தம் வீடு’ தமிழில் ஒரு முக்கியமான திறப்பை உருவாக்கியது’ என்றார். வட்டார வழக்கு என்றும் கொச்சைமொழி என்றும் முத்திரை குத்தி மண்ணின் மணம் கொண்ட படைப்புகளை நிராகரித்து வந்த காலகட்டத்தில்

வெளி வந்த 'புத்தம் வீடு' ஒரு முக்கியமான முன்னுதாரணமாக அமைந்து இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டது. பொதுவாக தமிழில் ஒதுங்கி இருப்பவர்களைப் புறக்கணிக்கும் போக்குதான் உள்ளது. அதற்கு மாறாக ஹெப்சிபா ஜேசுதாசன் போன்ற ஒரு அமைதியான சாதனையாளருக்கு விருது தர விளக்கு அமைப்பு முன் வந்தது பாராட்டுக்கு உரியது என்றார்.

ஆ.மாதவன், 'தமிழில் ஆர்.ஷண்முக சுந்தரத்தின் 'நாகம்மாள்', சுந்தர ராமசாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை', ஹெப்சிபா ஜேசுதாசனின் 'புத்தம் வீடு' ஆகியவை முக்கியமான முன்னோடி இலக்கிய முயற்சிகள் என்றார். அது வரை தமிழிலக்கியத்தில் மொழி பற்றி உருவாக்கியிருந்த பிரமைகளை உடைத்து அசலான வாழ்க்கையை எழுத்தில் வைத்த முக்கியமான இலக்கிய படைப்புகள் இவை. ஏறத்தாழ முப்பது வருடங்களுக்குப் பிறகு 'புத்தம் வீடு' மறு பதிப்பு வந்திருப்பதும் மற்ற நூல்கள் மறு பதிப்பு வராததும் தமிழின் உதாசீன மனநிலையை காட்டுபவை. விளக்கு விருது முக்கியமான சேவையை செய்துள்ளது' என்றார்.

ஜெயமோகன் 'தமிழ் இலக்கியத்தில் அறுபதுகள் வரை யதார்த்தத்துக்கு இடமில்லாத நிலை இருந்தது என்றார். ஒன்று கற்பனாவாதப் பண்பு கொண்ட மிகையான கதைகள். மறுபக்கம் சீர்திருத்த நோக்கம் கொண்ட விமரிசன யதார்த்தத்தை முன் வைக்கும் படைப்புகள். இரண்டுமே அப்பட்டமான உண்மையை பேசும் தன்மை இல்லாதவை. கற்பனாவாதப் பண்பு கொண்ட இலக்கியங்கள் ஒரு சமூகத்துக்கு அவசியம் தேவை. அவை இல்லையேல் சமூகம் தன் கனவு காணும் திறனை இழந்து விடும். ஆனால் அவை யதார்த்த வாத இலக்கியத்தால் சமநிலைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். மேலான இலக்கியம் யதார்த்தத்திலிருந்தே துவங்கும். ஆனால் அதில் நின்று விடாது. அதன் உச்சம் கற்பனையின் உச்சமே.

தமிழில் தூய யதார்த்தவாதப் பண்புள்ள எழுத்தை முன் வைத்த மூன்று நாவல்கள் ஆர்.ஷண்முக சுந்தரம் எழுதிய 'நாகம்மாள்', நீல. பத்மநாபன் எழுதிய தலைமுறைகள் மற்றும் ஹெப்சிபா ஜேசுதாசன் எழுதிய 'புத்தம் வீடு'. 'புத்தம் வீடு' துவங்குவதே அழகான குறியீட்டுத் தன்மையுடன் தான். மண்ணை விவரித்து மனிதர்களுக்கு வருகிறது. 'நாகம்மாள்' கூட அப்படித்தான். மண்ணிலிருந்து சொல்ல ஆரம்பிக்கும் ஒரு கதை கூறும் முறை அதில் உள்ளது. மிகையே இல்லாமல் மிக, மிக மென்மையாக அது வாழ்க்கையைப் பற்றி பேசுகிறது. ஆகவே அது முக்கியமான இலக்கிய ஆக்கம். உணர்ச்சிகளை ஆரவாரமே இல்லாமல் சொல்லும் அதன் போக்கு நமக்கு முக்கியமான ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்தது.

Count down from Solomon இலக்கிய விமரிசன நூல் என்ற முறையில் தமிழில் மிக, மிக முக்கியமானது. இன்னும் இது தமிழில் பேசப் படவில்லை. இது வரை தமிழிலக்கிய வரலாறு ஒருவகை அதிகார நோக்கில்தான் எழுதப் பட்டுள்ளது. ரசனை மற்றும் அற மதிப்பீடுகளின் அடிப்படையில் ஆக்கப் பட்ட வரலாறு இது. இந்நூலை முன்னிறுத்தி சில கூட்டங்களை நடத்தும் நோக்கம் சொல் புதிதுக்கு உண்டு. ஹெப்சிபா அவர்களின் ஆத்மார்த்தமான இலக்கிய பணிக்கு கிடைத்துள்ள இந்த இலக்கிய விருது முக்கியமானது' என்றார்.

ஏற்புரை வழங்கிய ஹெப்சிபா ஜேசுதாசன் தன் வாழ்க்கையின் சில நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். பேராசிரியரை திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சியைப் பற்றி அழகான முறையில் சொன்னார். மாப்பிள்ளை தேடும் போது பெண்ணின் கருத்தைக் கேட்கும் வழக்கம் அன்றில்லை. ஆனால் ஹெப்சிபாவின் மனதில் ஒரு குரல் நீ பேசவேண்டும் என்று சொன்னது. அவர் தன் தந்தையிடம் தனக்கு எது முக்கியம் என்று சொன்னார். விரும்பியவரையே மணம் செய்தும் கொண்டார். அதைப் போல எழுதும் தூண்டுதலும் தனக்கு கனவில் ஒரு பேனா கிடைத்தது போலவே வந்தது என்றார். எல்லா தருணத்திலும் தன் அந்தரங்கமான குரலைத் தொடர்ந்தே தான் சென்றதாக அவர் சொன்னார். அக்குரல் எப்போதுமே அச்சமில்லாததாக, முற்போக்கானதாக, மனிதாபிமானம் கொண்டதாக இருந்தது என்பது முக்கியமான ஒன்றாக இருந்தது. தன் கணவர் தனக்கு ஆசிரியராகவும், நண்பராகவும் இருந்தார் என்றார் ஹெப்சிபா. தமிழிலக்கியம் குறித்து ஆங்கிலத்தில் எழுத வேண்டுமென்ற கனவு பேராசிரியர்

ஜேசுதாசனுக்கு திருமணத்துக்கு முன்பே இருந்தது. அதை எழுபது வயதுக்குப் பிறகே நிறைவேற்றி வைக்க முடிந்தது. நூலின் இறுதிப் பகுதியை எழுதிவிட்டேன்; இனி மரணம் ஒரு பொருட்டே அல்ல என்றார் ஹெப்சிபா ஜேசுதாசன். முடிந்தால் ஆங்கிலத்தில் ஒரு சுயசரிதையை எழுதும் நோக்கம் தனக்கு உண்டு என்றார். கிராம வழக்கில் இயல்பாக அமைந்த அவரது தன்னுரை அழகான அனுபவமாக அமைந்தது.

சிறந்த முறையில் கூட்டத்தை அமைத்திருந்த தமிழ்ச் சங்கத் தலைவர் வினாயகப் பெருமாள் பாராட்டுக்குரியவர்.

டிசம்பர் 30, 2002

4. இளமுருகு எழுதிய ‘பாத்ரூம்’ பற்றிய கட்டுரை பற்றி

இளமுருகு எழுதிய கட்டுரை மிக முக்கியமான ஒன்று. இந்தியர்களில் பெரும்பாலோருக்கு சுகாதார உணர்வு இல்லை. ஏன்? அதற்கான காரணங்கள் பல. அவை இந்திய சமூக அமைப்பு மற்றும் தட்பவெப்ப நிலை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக இந்தியர்கள் உடலை மிக, மிக சுத்தமாக வைத்துக் கொள்பவர்கள் என்பதில் ஐயமில்லை. பெரும்பாலானோர் எளிய முறையிலானாலும் வீட்டையும் சுத்தமாக வைத்திருப்பவர்கள்தான். ஆனால் சுற்றுப்புறச் சூழலை அசுத்தமாக வைத்திருக்கிறார்கள். இதற்கு காரணம் தட்ப வெப்ப நிலை. சூரியன் சுட்டெரிக்கும் இந்த தேசத்தில் குப்பைகள், அழுக்குகள் ஆகியவை எளிதாக காய்ந்து மட்கிப் போகின்றன. இன்றுகூட நமது பெருநகரங்கள் மனிதர்கள் சாகாமல் வாழும் இடங்களாக இருப்பது கணிசமான மனிதக் கழிவுகளை வெயில் காய வைத்து விடுவதனால்தான். ஆனால் மக்கள் தொகை குறைவாக இருக்கும் போது தான் வெயில் சரிப்படும். நவீன கும்பல் கலாசாரத்தில் அது சரிப் படாது. இரண்டாவதாக இங்குள்ள சமூக அமைப்பு. நமக்கு ஒரு சிவில் சமூக கற்பனை உருவானதே நூறு வருடத்துக்குள் தான். அதற்கு முன்பு சில திருவிழாக்கள் தவிர மற்ற நாட்களில் சாதி சாதியாக, சாதிக்கு ஒரு தெருவாக நாம் பிரிந்து வாழ்ந்தோம்.

நமக்கு கும்பல் உணர்வு உருவானதே ஒழிய சமூக உணர்வு உருவாக வில்லை. இப்போது கூட எந்த ஒரு விஷயத்துக்கும் (குடிதண்ணீர் உதாரணம்) ஒரு சாதி அல்லது ஒரு தெரு கும்பலாக இறங்குமே ஒழிய ஒரு சமூகமே திரண்டு மெல்ல அணி வகுத்து நீண்டகால போராட்டத்தில் ஈடுபடுவது இங்கு கிடையாது. இது சுகாதார விஷயத்தில் அப்பட்டமாகத் தெரிய வருகிறது. பொது இடத்தில் அசிங்கம் செய்துவிட்டு உடனே அவ்விடத்தை விட்டு நகர்ந்துவிட்டால் போதும். பிறகு வருபவன் அவனது வேலையை கவனிக்கட்டும் என்ற உணர்வு வருவது இப்படித் தான். இது எல்லா விஷயங்களிலும் நம்மிடம் உள்ளது. மூன்றாவதாக துப்புரவு என்பது இழிவான தொழில், அசிங்கத்தில் வாழ்வது அதை விடமேல் என்ற எண்ணம். இது நமது சாதி மன நிலையிலிருந்து உருவாவது. நமது பெரும்பாலான வீடுகள் அலுவலகங்களில், கழிப்பறைகளை அதைப் பயன்படுத்துவோர் துப்புரவு செய்வது இல்லை. துப்புரவு என்பதே தெரியாத சூழலில் வாழும் எளிய மக்கள் தான் செய்கிறார்கள். (இதைப் பற்றி அருமையான கட்டுரையை ஒருவர் ‘மருதம்’ இதழுக்கு அனுப்பியுள்ளார். வெளியாகப் போகிறது.)

இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட்ட கடைசி தலைவர் காந்தி என்றால் உடனே ஒரு கும்பல் என்னை வசை பாட கிளம்பி விடும். ஆனால் அது உண்மை. தன் செய்திகளில் முக்கியமானதாக காந்தி பொது சுகாதாரம் என்ற அம்சத்தை கொண்டிருந்தார். சர்க்கா போலவே ஒரு கக்கூஸையும் போகுமிடமெல்லாம் கொண்டு சென்றார். துப்புரவைத் தானே நிகழ்த்துவதன் அருமையை நமது உயர் சாதியினருக்கு ஓயாமல் எடுத்துச் சொன்னார். தானே பொது கழிப்பிடங்களை தொடர்ந்து சுத்தம் செய்தார். இதை நாராயண குருவிலும் காணலாம். ஆனால் அதன் பிறகு நமக்கு வந்த தலைவர்கள் சந்தன மணம் கமழும் கக்கூஸ்களையே கண்டு வளர்ந்தவர்கள். அவர்கள் நம் சுத்தத்தை பொருட்படுத்த வில்லை. (செல்வி ஜெ ஒரு முறை பர்கூர் போகும் வழியில் ஒருமுறை கழிப்பிடம் போகலாம் என்பதற்காக தர்மபுரி அரசு பேருந்து நிலையத்தில் 30 லட்ச ரூபாய் செலவில் கக்கூஸ் கட்டப்பட்டது) இது தான் நமது தேசம். காந்தியை மனித விரோதியாக காட்ட வேண்டியது இன்று நமது அரசியல்

தரப்புகளுக்கெல்லாம் அவசியத் தேவை. அந்த வேகத்தில் துப்புரவையும் விட்டு விட்டார்கள். நான் சில தருணங்களில் இதைப் பற்றி பேசப் போக சுத்தம் அசுத்தம் என்றெல்லாம் சூத்திரங்களை போட்டு பின் நவீனத்துவ விளக்கம் அளித்து அசுத்தமாக இருப்பது உரிமை, எதிர்ப்பு, வர்க்க குணம் என்று விளக்கி நான் சொல்வது சாதிவாதம் என்று சொல்லிவிட்டார்கள். இளமுருகு கட்டுரையும் தமிழ் நாட்டில் உயர் சாதி கண்ணோட்டமாகக் கருதப் படும். நாம் முதலில் இதைப் பற்றி மீண்டும், மீண்டும் பேச ஆரம்பிக்கலாம். ஆனால் இதைப் பற்றி பேசுவதே கொடுமை என்கிறார்கள் அறிவுஜீவிகள். 1997ல் சில தருமபுரி கிராமங்களில் சுகாதார முகாம்களில் பங்கு கொண்டேன். மக்களை சென்றடைய முடியும் என்ற எண்ணத்தை அவை ஏற்படுத்தின. ஆனால் அது ஒரு இயக்கமாக நடக்க வேண்டும்.

ஜனவரி 12, 2003

[5. ஒவ்வாத மனிதர் (எழுத்தாளர் கோபிகிருஷ்ணனுக்கு அஞ்சலி)]

எழுத்தாளர் கோபிகிருஷ்ணன் 10.05.2003 அன்று சென்னையில் மரணமடைந்தார். ஐம்பத்து மூன்று வயதானவர். ஏற்கனவே பல வகையான உடல்நலப்பிரச்சினைகளினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். இறுதிநாட்களில் நண்பர்களின் சிறு உதவிகளால் வாழ நேர்ந்தது.

கோபிகிருஷ்ணன் எனக்கு எழுத்தாளராக அறிமுகமானது பதினாறு வருடங்களுக்குமுன்பு அவரது 'ஒவ்வாத உணர்வுகள்' என்ற சிறுகதை தொகுப்பு வெளிவந்தபோது. அப்போது அவர் க்ரியா ராமகிருஷ்ணனிடம் டைப்பிஸ்டாக வேலை பார்த்து வந்தார். அவரை முன்னரே தெரியும் என்றாலும் அவர் சிறுகதை எழுதுவார் என்பது அப்போது தான் தெரியவந்ததாகவும் அவருக்கு ஒரு பாராட்டுக்கடிதம் எழுதியதாகவும் சுந்தர ராமசாமி சொன்னார். ஒவ்வாத உணர்வுகள் நூலையும் தந்தார்.

ஒவ்வாத உணர்வுகள் அப்போதைய ரசனைக்கு மிக புதியதாக இருந்தது. கதை என ஏதுமில்லை. ஒட்டாத மனப்போக்குள்ள ஒருவன் அலுப்புடனும் சலிப்புடனும் தன்னைச்சுற்றி நிகழும் வாழ்க்கையை பார்க்கும் கோணம் அதில் இருந்தது. அதை இலக்கிய படைப்பாக ஆக்கியது அதன் அங்கதம்தான். நகுலனின் நாவல்களையும் ஆதவனின் உலகத்தையும் கலந்து உருவாக்கிய ஓர் தளமாக அது பட்டது.

பிற்பாடு கோபிகிருஷ்ணன் எழுதிய ஆக்கங்களில் பல்வேறுவகை மனநிலை பிறழ்வின் சித்திரங்களை அளிக்கும். 'உள்ளேயிருந்து சில குரல்கள்' தவிர எல்லா படைப்புகளும் இப்படி தன்னுடைய ஒவ்வாமையை அங்கதமாக வெளிப்படுத்துபவையாகவே இருந்தன. 'மொழி அதிர்ச்சி' 'தூயோன்' போன்ற சில அற்புதமான நகைச்சுவைக் கதைகளை அவர் எழுதியுள்ளார். எளிமையான நடையில், ஒவ்வொரு வரியிலும் ஆசிரியரின் குரல் கேட்க, எழுதும் பாணி அவருடையது.

கோபிகிருஷ்ணனின் அங்கதம் அபூர்வமானதுதான், காரணம் அப்படி சிரிப்பதற்குரிய வாழ்க்கை அவருக்கு அமையவில்லை. அவர் உளவியல் பயின்றவர். நல்ல ஆங்கில ஞானம் கொண்டவர். பல தளங்களில் அவர் பிரகாசித்திருக்கமுடியும். ஆனால் உரிய தருணங்களில் அவருக்கு போதிய ஏன் குறைந்தபட்ச வருமானம் கிடைக்கும் வேலை அமையவில்லை. வாழ்க்கையின் அடித்தளங்களை மிகவும் கண்டவர். தீர யோசிக்காமல் மதம் மாறி செய்துகொண்ட முதல் திருமணம் பல்வேறு விரும்பத்தகாத பிரச்சினைகளுக்குப் பிறகு முறிவு அடைந்தது. மொத்த விளைவாக அவரே ஒரு மனநோயாளி என்ற நிலையை அடைந்தார். அதன் சிகிச்சைக்காக அவர் பயன்படுத்திய மாத்திரைகளே அவரை மரணம் நோக்கி கொண்டுசென்றன என்றால் அது மிகையல்ல. இந்தியாவில் மனநல சிகிச்சை என்ற பேரில் மனிதர்களை நிரந்தரமான நரம்பு மாத்திரைகளுக்கு அடிமையாக்கும் செயல்தான் நடைபெற்று வருகிறது.

சி.மோகன் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் வேலைபார்த்தபோது கோபிகிருஷ்ணன் சில மொழிபெயர்ப்பு வேலைகளுக்காக வந்திருந்தார். அப்போதுதான் அவரை நேரில்பார்த்தது. அதற்கு முன் அவரது கதைகள் பற்றி கடிதங்கள் எழுதி பதில் பெற்றிருக்கிறேன். அச்சில் சில குறிப்புகளும் அவரைப்பற்றி எழுதியிருக்கிறேன். நேரில்

முதலில் சந்தித்தபோது உற்சாகமான சந்திப்பாக அமையவில்லை. அவருக்கு மனிதர்களுடன் பழகத் தடை இருந்தது. மேலும் மாத்திரைகளின் பின்விளைவாக அவர் சில சொற்றொடர்களைப் பேசியதுமே குரல் தழுதழுக்க ஆரம்பித்துவிடும். தலையும் உடலும் நடுங்கும். இருவரும் சேர்ந்து சோடா சாப்பிட்டு பிரிந்தோம்.

பிற்பாடு கோபிகிருஷ்ணனிடம் சில தடவை உரையாடியிருக்கிறேன். அவர் ஓர் உளவியலாளராக இருந்ததே அவரது பிரச்சினை என்று சொல்லியிருக்கிறேன். பக்தி, பாசம் போன்ற எளிய நம்பிக்கைகள் மூலம் தீரக்கூடிய மனச்சிக்கல்களை அவர் உளவியல் புதிர்களாக மாற்றி பிறகு நோயாக ஆக்கி மாத்திரைகளைக் கொண்டு சிகிச்சை செய்ய முனைந்து அம்மாத்திரைகளின் அடிமையானார். அவர் எம்.வி.வெங்கட் ராமின் ‘காதுகள்’ நாவலுக்கு ஒரு மதிப்புரைக் கடிதம் எழுதினார். அதில் எம்.வி.வி. ‘கேட்ட’ முருகனின் குரல் எல்லாமே மனநோயின் அம்சங்கள், அவற்றை சிகிச்சைமூலம் சரிப்படுத்தமுடியும் என எழுதினார். அவருக்கு நான் எழுதிய கடிதத்தில் முருகனாக மனநோயை மாற்றிக்கொண்டது எம்.வி.வி.யின் வெற்றி, இல்லையேல் நமது மருத்துவர்கள் அவரை முருகன் அடிமையாவதற்கு பதில் மாத்திரையடிமை ஆக மாற்றிவிட்டிருப்பார்கள் என்றேன். பல வருடங்களுக்குப் பிறகு அதை நினைவுகூர்ந்த கோபிகிருஷ்ணன் நான் சொன்னது சரிதான் என்றும், தனக்கு ஒரு முருகன் கிடைக்கவில்லை என்பதே தன் பிரச்சினை என்றும் சொன்னார்.

கடைசியாக அவரை ‘தமிழினி’ அலுவலகத்தில் வைத்துப் பார்த்தேன். அப்போதும் அவர் மாத்திரைகள் தனக்களித்து வரும் சிக்கல்களைப் பற்றியே பேசினார். முக்கியமாக தூக்கமின்மை. ஆகவே பகலில் எதையுமே கவனமாக செய்ய முடியாத நிலை. தொடர்ந்து தன் கட்டுப்பாடின்றி பெருகி ஓடும் அர்த்தமற்ற உதிரிச் சிந்தனைகள். பேசும்போதே தழுதழுத்து கண்ணீரை துடைத்தார். நரம்பு சிக்கல்களை தவிர்த்தால்கூட அவருக்கு பல ஆளுமை சிக்கல்கள் இருந்தன. தனக்குப் பிடிக்காத எதனுடனும் அவரால் சமரசமே செய்துகொள்ள முடியவில்லை. ஒரு வகை தாழ்வு மனப்பான்மையும் அவரிடமிருந்தது. தன் ஆங்கில அறிவைக் கொண்டு வேலை பார்த்த இடங்களில் உள்ள மேலதிகாரிகளை சற்று மட்டம் தட்டுவார் என்று அவரே சொல்லியிருக்கிறார். அவரது தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை என்பதை எங்கு போனாலும் வாழவும் சாகவும் விடாத சம்பளம் அளிக்கப்படுவதை அவர் எழுதியுள்ளார். சில சேவை நிறுவனங்களில் வேலை பார்த்தார். அங்கே நிகழும் அப்பட்டமான சுரண்டல்களை அவரால் ஏற்க முடியவில்லை. நக்கீரன் உள்ளிட்ட இதழ்களில் பிழை திருத்தும் பணி செய்தார். அவரால் உட்கார்ந்து வேலைசெய்ய முடியவில்லை.

கோபி கிருஷ்ணனின் சுய வரலாற்றுப் பேட்டி ஒன்று மழை முதல் இதழில் யூமா வாசுகியால் எடுக்கப்பட்டுள்ளது. அதை வைத்து பார்த்தால் அவரது சிறுகதைகள் அனைத்துமே சுயசரிதைத் துளிகள் என்று சொல்ல முடியும். அவரது ஆரம்பகால ஆக்கங்கள் முறையாக நூலாகவில்லை. பிற்கால ஆக்கங்கள் அவரது நண்பரான தமிழினி வசந்தகுமாரால் அழகிய நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. ‘இடாகினிப்பேய்களும்…’ ‘தூயோன்’ ‘மானுட வாழ்வு தரும் ஆனந்தம்’ முதலியவை முக்கிய ஆக்கங்கள். நண்பருக்கு அஞ்சலி.

மே 18, 2003

[6. வையாபுரிப்பிள்ளையின் மரணமின்மை]

பி.கே. சிவக்குமார் எஸ். வையாபுரிப்பிள்ளையைப்பற்றி எழுதும் தொடர் கட்டுரைகள் மிகுந்த முக்கியத்துவம் உள்ளவை. வையாபுரிப்பிள்ளை எந்த அரசியல் அமைப்பின் பின்பலமும் இல்லாதவர். திராவிட இயக்கத்தில் கடும் எதிர்ப்புக்கு அவர் ஆளானார். அதே சமயம் காங்கிரஸின் ஆதரவினைப் பெற அவர் முயலவுமில்லை. வேளாளச்சாதியினராக இருந்தும் அச்சாதியின் குரலை புறக்கணித்தமையால் ஒதுக்கப்பட்டார். அன்றைய தமிழ் அரசியல்சூழல் உருவாக்கிய மரபு சார்ந்த போலிப் பெருமிதங்களை ஆய்வடிப்படையில் ஏற்க மறுத்தமையால் நிராகரிக்கப்பட்டு வசைபாடப்பட்டவர் அவர். அவரை இன்று நினைவுகூர்கையில் சிலவிஷயங்களை வகுத்துச் சொல்லலாம் என்று படுகிறது.

1. கல்தோன்றி மண்தோன்றா காலத்துக்கு தமிழின் தொன்மையை கொண்டுசென்றவர்களை மறுத்து தொல்பொருள் மற்றும் ஒப்பிலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் தமிழிலக்கியங்களின் காலக்கணக்கை வகுக்க முயன்றார். ஒருவேளை அவரது கணிப்புகள் பிறரால் இன்றும் இனிமேலும் நிராகரிக்கப்படலாம். ஆனால் அவரது முறைமை மிகவும் மதிக்கத் தக்கது. ஆங்கில மொழியறிவும் ஐரோப்பிய ஆய்வுமுறைமையும் தேவை என்பதே அவரது கருத்து. அப்படிப்பட்ட அறிவியல் சார்ந்த முறைமை பிற தமிழறிஞர்கள் ஆய்வாளர்கள் பலரிடம் இல்லை என்பது இன்று தெளிவாகிப்போன விஷயம். ஆனால் இன்றும் ஆய்வாளர்கள் தனிப்பேச்சில் வையாபுரிப்பிள்ளையின் முறைமையை சிலாகிப்பார்களேயொழிய எழுத்தில் சங்கடகரமான மௌனத்தையே சாதிப்பார்கள்.

2. தமிழ்பண்பாடு ஆரம்பம் முதலே எப்படி சமஸ்கிருத மரபைச் சார்ந்துள்ளது என்று விளக்கிய வையாபுரிப்பிள்ளை தமிழ்பண்பாட்டை சமஸ்கிருதக் கல்வி இன்றி முழுக்க புரிந்துகொள்ள இயலாதென்றார். தமிழின் தனித்துவத்தை அங்கீகரித்தவர் அவர். தமிழாய்வுக்கு சமஸ்கிருதக் கல்வியை வலியுறுத்தியதோடு சமஸ்கிருதம் என்ற வளம் மிக்க மொழிமீது தமிழர்களுக்குள் உருவாக்கப்பட்ட வெறுப்பு ஆபத்தானது என்று வாதிட்டார். ஆகவே அவர் பிராமண ஆதரவாளர் என்று சொல்லப்பட்டார். ஆனால் மொத்தமாகப் பார்க்கையில் மனோன்மணியம் சுந்தரனார் வழிவந்த வையாபுரிப்பிள்ளையிடம் பிரமாண நிராகரிப்பு நோக்கே விஞ்சி நின்றது என இன்று காணமுடிகிறது.

3. வையாபுரிப்பிள்ளை தனித்தமிழ்வாதம் செயற்கையான உரைநடையையும் பழமைநோக்கையும் உருவாக்கி தமிழில் வளர்ச்சியை தடைசெய்கிறதோ என்று ஐயுற்றார். திசைச்சொற்களை ஏற்க தமிழில் இலக்கண அனுமதி உள்ளபோது அடிப்படைவாத நோக்கை கடைப்பிடிப்பது மூடத்தனம் என்றார். நவீன இலக்கியத்தை பண்டிதர்கள் முற்றாகப் புறக்கணிப்பதை கண்டித்தார். அவர்மட்டுமே புதுமைப்பித்தனை அங்கீகரித்த சமகால பெரும்புலவர். நாவல் (ராஜம்) ஒன்றையும் அவர் எழுதியுள்ளார்.

இந்நோக்குகளுக்காக அவர் மீது அன்று எழுந்த வசைகளை பலரால் கற்பனையே செய்ய முடியாது. சமீபத்தில் அன்றைய சில தனித்தமிழ் மற்றும் திராவிட இயக்க இதழ்களை நோக்கியபோது அவ்வசைகளின் ‘கனம்’ கண்டு அரண்டே போனேன். அவரை ‘பொய்யாபுரியார்’ என்று சொல்லி எழுதிய அறிஞர்களே அதிகம். பேராசிரியர் சி.ஜேசுதாசன் மட்டுமே அவரை அங்கீகரித்து அவருக்காகப் பேசிய முக்கிய தமிழறிஞர்.

இந்த அழுக்காறு காரணமாக வையாபுரிப்பிள்ளையின் சாதனைகள்கூட தமிழில் புறக்கணிக்கப்பட்டன. வையாபுரிப்பிள்ளை ஆசிரியராக இருந்து சென்னைப் பல்கலையால் 1924 முதல் 1936 வரை வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரகராதி (1982ல் இது மறு அச்சாகி இப்போது வாங்கக் கிடைக்கிறது) தமிழ் மொழிவளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாகும். முதன்முதலில் ஒரு பேரகராதியை தொகுப்பதில் உள்ள சிக்கல்களும் தேவைப்படும் உழைப்பும் என்ன என்று இப்போது ஊகிக்க முடியும். (துணை ஆசிரியர்கள் வி. நாராயண அய்யர், மு. ராகவையங்கார், வி.எம். கோபாலகிருஷ்ண ஆச்சாரியார், சோமசுந்தர தேசிகர், மீனாட்சிசுந்தர முதலியார்) அதன் பிறகு வந்த அத்தனை அகராதிகளும் இந்நூலில் இருந்து முளைத்தவையே. இந்நூலின் முக்கிய குறைபாடுகள் இந்த முக்கால் நூற்றாண்டில் களையப்படவும் இல்லை. சமீபத்தில் காலச்சுவடு இதழில் செம்மொழியாதல் குறித்த விவாதத்தில் திராவிடச் சார்புள்ள தமிழறிஞரும் ஆய்வாளருமான முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி தமிழ்ப்பேரகராதியின் சாதனை இன்னும் விஞ்சப்படவில்லை என்று சொல்கிறார்.

ஆனால் இந்நூல் வெளிவந்த காலத்தில் தேவநேயப்பாவாணர், பெருஞ்சித்திரனார் தொடங்கி அன்றைய திராவிட இயக்க தமிழறிஞர்கள் என்ன எழுதினார்கள் என்பது இன்னும் அக்கால இதழ்களில் உள்ளது. தமிழுக்கு வையாபுரிப்பிள்ளை பெரும் துரோகம் இழைத்துவிட்டதாகவும், தமிழை அழிக்கும் ஆரியச்சதியின் ஒருபகுதியாகவே இந்த பேரகராதி தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் எழுதித்தள்ளினார்கள். தமிழர் ஆட்சி வரும்போது இவ்வகராதி வங்கக் கடலில் வீசப்பட்டு சரியான அகராதி தொகுக்கப்படும் என்றனர். வையாபுரிப்பிள்ளை அதிகமான வசை கேட்டது இந்த அகராதிக்காகத்தான்.

இரண்டு அடிப்படைகளில் வசைகள் இருந்தன. சமஸ்கிருதம் என்று திராவிட இயக்கத்தினர் கருதிய பல சொற்களை (அவை அன்றும் இன்றும் மக்கள் வழக்கில் உள்ளவை) அகராதியில் சேர்த்தமையால். (பிற்பாடு அச்சொற்களை பகுப்பாய்வு செய்து அவை தமிழ்ச் சொற்களே என்று அதே தேவநேயப்பாவாணர் தன் சொற்பிறப்பியல் அகரமுதலியில் எழுதினார்) இரண்டு சாதி குறித்த சில சொற்களுக்காக. உதாரணமாக முதலி என்ற சொல்லை சேர்த்தமைக்கு பெரும் எதிர்ப்பு எழுந்தது. முதலியார் என்று மட்டுமே சேர்க்கவேண்டும் என்று வாதிடப்பட்டது. அப்போது சென்னையிலேயே பல முதலி தெருக்கள் இருந்தன. பெயர்கள் முதலி என்றே சொல்லப்பட்டன. வையாபுரிப்பிள்ளை முதலி என்ற சொல்லை சேர்த்து பார்க்க முதலியார் என்று கொடுத்திருந்தார். இது சாதிவெறி என்று முத்திரைகுத்தப்பட்டது.

தன் அகராதி நினைவுகளை வையாபுரிப்பிள்ளை தொகுத்து எழுதியுள்ளார். அவரை அறிய அது முக்கியமான நூலாகும். டாக்டர் அ.கா. பெருமாள் வையாபுரிப்பிள்ளையின் காலக்கணிப்பு குறித்து எழுதிய நூலும் முக்கியமானது. எனினும் அவரது நடையழகை அறிய 'தமிழ்ச் சுடர்மணிகள் ' நூலே முக்கியமானது. அதில் கம்பராமாயண அரங்கேற்றத்தை அவர் விவரித்துள்ள பகுதி தமிழிலக்கியத்தின் சிறந்த உரைநடைச் சித்திரங்களுள் ஒன்று.

உண்மையை தன் ஆயுதமாகக் கொண்ட ஆய்வாளன் அழிவதில்லை, அவனை மீண்டும் மீண்டும் தலைமுறைகள் அடையாளம் காணும் என்று காட்டும் ஆதாரங்களுள் ஒன்று சிவக்குமார் தன்னிச்சையான ரசனை மூலம் வையாபுரிப்பிள்ளையைக் கண்டடைந்தமை.

நவம்பர் 11, 2004

7. அய்யப்ப பணிக்கருக்கு அஞ்சலி

அய்யப்ப பணிக்கரை நான் முதலில் கண்டது 1986ல் சுந்தர ராமசாமியின் வீட்டில். சற்று தர்மசங்கடமான நிலை. உடல்நலமில்லாமலிருந்த அவரை வற்புறுத்தி ஏ.ஸி கார் வைத்து ஒரு பேருரைக்காக கூட்டிக் கொண்டு சென்ற மதுரை கல்லூரி ஒன்று கூட்டம் முடிந்ததும் அம்போ என்று விட்டுவிட்டது. பலவிதமாக சிரமப்பட்டு திரும்பும் வழியில் நாகர்கோயில் வந்து சுந்தர ராமசாமி வீட்டு மாடியில் தங்கியிருந்தார். சுந்தர ராமசாமி நான் அவர் வீட்டு கேட்டைத் தாண்டும்போதே எழுந்துவந்து 'பணிக்கர் வந்திருக்கார்!' என்று மகிழ்ச்சியுடன் கூவினார். 'மாடியில இருக்கார். மாடிக்கு போங்கோ. நீங்க அவரைச் சந்திக்கிறது ஒரு பெரிய விஷயம்.'

நான் மாடிக்குச் சென்றபோது அய்யப்ப பணிக்கர் ஒரு சிறிய பெட்டியைத் திறந்து அதிலிருந்த சிறு சிலைகளுக்கோ அல்லது படங்களுக்கோ – நான் சரியாகப் பார்க்கவில்லை – பூஜை செய்து கொண்டிருந்தார். பையை வெளியே வைத்துவிட்டு காத்திருந்தேன். மீண்டும் எட்டிப்பார்த்தபோது மூக்கைப் பிடித்தபடி பிராணாயாமம் செய்து கொண்டிருந்தார். நான் கீழே வந்து சுந்தர ராமசாமியிடம் அவர் வழிபாடு செய்வதைச் சொன்னேன். சுந்தர ராமசாமி வாய்விட்டு சிரித்தார்.'பாரீஸ்ல நாங்க ரெண்டுபேரும் ஒரே ரூம்ல தங்கியிருந்தோம். இவர் பெட்டியைத் திறந்து பூஜை செய்திட்டு கொஞ்சம் விபூதியை நெத்தியில போட்டுண்டார். கூட்டிண்டு போக வந்த பிரெஞ்சு அம்மாவுக்கு அவர் ஒரு அசல் இந்தியனாகவும் நான் அவ்வளவு சரியில்லைன்னும் தோணிடுத்து. அதுக்கப்புறம் எல்லாத்தையும் அவரைப் பாத்துதான் சொல்வாள்.'

அய்யப்ப பணிக்கர் கீழே இறங்கி வந்ததும் நான் மேலே போய் குளித்துவிட்டு வந்தேன். பணிக்கர் மிகவும் ஒல்லியாக இருப்பதாக எனக்கு பட்டது. வழுக்கை இல்லாத தலையில் பாதி நரைத்த முடி. அழகான தாடி. நல்ல பல்வரிசையுடன் அழகிய சிரிப்பு. கிட்டத்தட்ட ஜே.ஜே.சில குறிப்புகளின் அரவிந்தாட்ச மேனன் போன்ற உடலமைப்பு, பெண்மை கொண்ட உடல் மொழி, நிதானமான மென்மையான குரல். அதை பிறகு சுந்தர ராமசாமியிடம் சொன்னபோது அவர் மிகவும் ரசித்தார். அன்று நான் பணிக்கரிடம் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை, சிறு அறிமுகம் சிரிப்பு, அவ்வளவுதான். சுந்தர ராமசாமியிடம் அவர் அவர்களுடைய நண்பர் நாராயணபிள்ளையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். நான் முன்னறைக்குப் போய்விட்டேன். அவர் ஒருமணிநேரம் கழித்து கிளம்பிச்சென்றார். பிறகு நான் அய்யப்ப பணிக்கரை நேரில் பார்க்கவே வாய்ப்பு கிடைக்கவில்லை.

சுந்தர ராமசாமி வாழ்வில் பிற்காலத்தில் அடிக்கடி சந்திக்காவிட்டாலும் மிக நேசித்த நண்பர்களில் ஒருவர் அய்யப்ப பணிக்கர். இருவரும் ஏறத்தாழ சம வயதினரானாலும் ஒருவரை ஒருவர் மிகுந்த மரியாதையுடன் தான் அழைப்பார்கள். சுந்தர ராமசாமி 'பணிக்கர்' என்பார். அய்யப்ப பணிக்கர் 'ஸ்வாமி' என்பார். பணிக்கர் திருவனந்தபுரம். சுந்தர ராமசாமி நாகர்கோயில். காரில் ஒருமணி நேர பயணம். ஆனால் அவர்கள் பார்த்துக்கொள்வது குறைவு. காரணம் அய்யப்ப பணிக்கர் உலகப்பயணி. 'ப்யூனஸ் அயேர்ஸிலே இருந்து நடு ராத்திரி கூப்பிட்டு உங்கள நினைச்சுண்டேன் பார்' என்றார் சுந்தர ராமசாமி.

ஆனால் திருவனந்தபுரம் மையமாக்கி ஒரு இலக்கிய ஜமா இருந்திருக்கிறது. எழுபதுகளின் இறுதியில் அய்யப்ப பணிக்கர் திருவனந்தபுரம் பல்கலைக் கழக கல்லூரியில் வேலை

பார்த்தார். அங்கேயே பேராசிரியர் ஜேசுதாசனும் வேலை பார்த்தார். நகுலன், நீல பத்மநாபன், காசியபன், ஷண்முக சுப்பையா, மா தட்சிணாமூர்த்தி ஆகியோரும் திருவனந்தபுரத்தில் இருந்தனர். ஜேசுதாசன் அறையிலோ வெளியிலோ அவர்கள் மாதத்தில் ஒருமுறை கூடும் வழக்கம் இருந்தது. தமிழில் உருவாகிவந்த நவீனத்துவம் வேரூன்றுவதற்கான கோட்பாட்டு அடித்தளம் அப்போது அவர்களின் உரையாடல் மூலம் உருவாயிற்று. அதன் விளைவாகவே நகுலனின் 'குருஷேத்ரம்' என்ற கவிதையை மொழிபெயர்த்து அதை தலைப்பாகக் கொண்டு நவீனத்துவப் படைப்புகளின் ஒரு தொகைநூலை வெளியிட்டார். நவீனத்துவ அழகியல் சார்பாக பெரிதும் விவாதிக்கப்பட்ட அந்நூலை ஒரு திருப்புமுனையாகவே சொல்வதுண்டு.

மலையாள இலக்கியத்தில் அய்யப்ப பணிக்கரின் இடம் தமிழில் க.நா.சுவின் இடத்துக்கு நிகரானது. மலையாள நவீனத்துவத்தின் முதல் பெருங்குரல் அவர்தான். அவரது குருஷேத்ரம் டி.எஸ்.எலியட்டின் தரிசு நிலத்தில் இருந்து உந்துதல் பெற்ற நீள் கவிதை. தொடர்ந்து பணிக்கர் பல உத்திகளில் நவீனத்துவக் கவிதைகளை எழுதியுள்ளார். தொடக்க காலத்தில் அவரது கவிதைகள் புறக்கணிப்புக்கு உள்ளாயின. குருஷேத்ரம் பல முக்கிய இதழ்களால் நிராகரிக்கப்பட்ட பின்னர் எம்.கோவிந்தனின் 'சமீக்ஷா' என்ற சிற்றிதழில்தான் வெளியாயிற்று. மரபான அழகியலை நிராகரித்த அய்யப்ப பணிக்கரின் அங்கதக் கவிதைகள் பல கசப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாயின. சொல்லப்போனால் அந்த கசப்பு இன்றும் அங்கு உண்டு. நவீனக் கவிதையை ஏற்றுக்கொள்ளாத பெரும்பாலான வாசகர்கள் இருக்கும் ஒரே இந்திய மொழி மலையாளம்தானோ என்ற ஐயம் எனக்கு உண்டு. மெல்ல அய்யப்ப பணிக்கரை முன்னோடியாகக் கொண்ட நவீனத்துவக் கவிஞர்களின் வரிசை ஒன்று உருவாயிற்று. அவர்களில் பலர் பணிக்கரின் நண்பர்கள். சம வயதினர். என்.என்.கக்காடு, ஆர்.ராமச்சந்திரன்,ஆற்றூர் ரவிவர்மா, கெ.பாலூர், சுகத குமாரி போன்றவர்கள் முக்கியமானவர்கள். எம்.கங்காதரன் போல நவீனக்கவிதைக்காக வாதிடும் விமரிசகர்கள் உருவானார்கள். நவீனக்கவிதைக்காக 'கேரள கவிதா' என்ற சிற்றிதழை பிடிவாதமாக பலகாலமாக நடத்தினார் அய்யப்ப பணிக்கர். நான்கூட அதில் இரண்டு கவிதைகளை எழுதியிருக்கிறேன்.

எண்பதுகளில்தான் நவீனக் கவிதை மலையாளத்தில் மெல்ல ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்காக அது வடிவில் பெரிய சமரசங்களைச் செய்ய நேர்ந்தது, அதாவது யாப்பை சற்றே விலக்கிக் கொண்டு இசைத்தன்மை கொண்ட நெகிழ்வான பாடல்வடிவை அது தக்கவைத்துக் கொண்டது. படிமங்களில் மட்டுமே நவீனக் கவிதையாக அது இருந்தது. மலையாள நவீனக் கவிதைக்கு உரிய இந்த தனித்தன்மை இன்றும் அங்கே பெருமளவில் தொடர்கிறது. அதற்குக் காரணமாக அமைந்தவரும் அய்யப்ப பணிக்கர்தான். அவரது 'சந்தியை' (அந்தி என்ற பேரில் இது என்னால் மொழியாக்கம் செய்யப்பட்டு தற்கால மலையாளக் கவிதைகள் நூலில் உள்ளது.) இதற்கு வழியமைத்தது. கற்பனாவாதப் பண்பு மிகுந்த இக்கவிதை அங்கே பொது வாசகர் மத்தியில் பெரும்புகழ் கொண்ட ஒன்று. அய்யப்ப பணிக்கர் என்றால் சராசரி மலையாளி நினைவுகூர்வதும் இப்பாடல்தான். லெனின் ராஜேந்திரன் இயக்கிய 'வேனல்' என்ற படத்தில் இதை நெடுமுடி வேணு சிறப்பாக பாடியிருக்கிறார். பிற்காலத்தில் அய்யப்ப பணிக்கர் நீளமான 'குடும்ப புராணம்', 'கோத்ராயனம்' போன்ற கவிதைகளை எழுதினார். கோத்ராயனம் நீல.பத்மநாபனால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தனி நூலாக வந்துள்ளது.

கவிஞர் என்பதுடன் அய்யப்ப பணிக்கர் ஓர் இலக்கிய ஆளுமையும்கூட. அங்கதம் நிரம்பிய பேச்சு, நட்பார்ந்த பழகும் முறை ஆகியவை காரணமாக அவருக்கு விரிவான நண்பர் வட்டம் இருந்தது. சர்வதேசக் கருத்தரங்குகளில் இந்திய இலக்கியத்தை பிரதிநிதிகரித்துச் செல்லும் மிகச்சிலரில் ஒருவராக ஆகி உலகை வலம்வந்துகொண்டிருந்தார். அவரது இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் – குறிப்பாக தகழி சிவசங்கரப்பிள்ளை மற்றும் நவீனக் கவிதை பற்றியவை முக்கியமானவை. இந்திய இலக்கியம் பற்றி கேந்திர சாகித்ய அக்காதமி பிரசுரித்த

நூல்வரிசையின் பொது ஆசிரியராக இருந்தார். அவரது ஆசிரியத்துவத்தில் வந்த தொகைநூல்கள், அவர் முன்னிலை வகித்த கருத்தரங்குகள், அவர் மையவிசையாக இருந்த விருதுக்குழுக்கள் பற்பல. அவர் மலையாள இலக்கியத்தின் ஓயாத உள் இயந்திரங்களுள் ஒன்றாக செயல்பட்டார்.

கடைசிக் காலத்தில் தமிழ் (திராவிட) அழகியலை அடிப்படையாகக் கொண்டு நவீனத் திறனாய்வுமுறையை உருவாக்க முயன்றார் அய்யப்ப பணிக்கர். தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் குறித்த அவரது கட்டுரைகள் சர்வதேச அளவில் மிகவும் விவாதிக்கப்பட்டவை.

1931 ல் கேரளத்தில் காவாலம் என்ற ஊரில் பற்பல ராஜதந்திரிகளும், இலக்கியவாதிகளும், அரசியல்வாதிகளும் பிறந்த மிகப்புகழ்பெற்ற செல்வந்த நாயர் குடும்பத்தில் அய்யப்ப பணிக்கர் பிறந்தார். பணிக்கர் என்பது மகாராஜாவால் குடும்பத்துக்கு அளிக்கப்பட்ட விருதுப்பெயர். அந்தக் குடும்பப் பின்புலத்தை எள்ளி நகையாடி 'குடும்ப புராணம்' என்ற நீள்கவிதையை எழுதினார். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்றபின் அமெரிக்கா சென்று இண்டியானா பல்கலையில் எம்.ஏ,பி.எச்.டி பட்டம் பெற்றார். கேரளத்தின் பல கல்லூரிகளில் பேராசிரியராக வேலை பார்த்தார். கேந்திர சாகித்ய அகாதமி விருது, சரஸ்வதி சம்மான் விருது, கபீர் விருது உட்பட முக்கியமான பல விருதுகளைப் பெற்ற அய்யப்ப பணிக்கர் கேரளத்தின் முக்கியமான விருதான வயலார் விருதை அவ்விருது சமீபகாலமாக சில தகுதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டமையால் நிராகரித்து விவாதத்துக்கு உள்ளானார்.

நோயுற்றிருந்த அய்யப்ப பணிக்கர் 23-8-2006 அன்று திருவனந்தபுரத்தில் காலமானார். அவரது சடலம் அவரது சொந்த ஊருக்கு கொண்டுசெல்லப்பட்டு முழு அரசுமரியாதையுடன் சிதையேற்றப்படும். மலர்வளையம் வைப்பது, பொதுப்பார்வைக்கு வைப்பது போன்றவற்றை உயில் மூலம் விலக்கியிருந்தார்.

அங்கணத்தின் ஒளி கண்ணாடிச்சில்லுகளிலும் முன்னந்தலை நரைமயிரிலும் விழ அய்யப்ப பணிக்கர் சுந்தர ராமசாமியிடம் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்கும் காட்சி நினைவுக்கு வருகிறது. ஒரு காலகட்டம் மெல்ல பின்னகர்வதை உணர முடிகிறது.

குதிரை நடனம்

நான்கு பெரும் குதிரைகள்

அலங்கரித்து வந்தன

ஒன்று வெள்ளை ஒன்று சிவப்பு

ஒன்று கருமை ஒன்றுக்கு தவிட்டு நிறம்

ஒன்றுக்கு நான்கு கால்

மூன்று கால்

மூன்றாவதற்கு இரண்டுகால்

நாலாவது ஒற்றைக்கால்

ஒற்றைக்கால் குதிரை சொன்னது

மற்றவர்களிடம்

நடனத்துக்கு நேரமாகிவிட்டது நண்பர்களே

நாம் ஒற்றைக்கால் நடனம் ஆடுவோமாக!

நடனம் தொடங்கியது

நான்குகால் குதிரை நடுங்கி விழுந்தது
மூன்றுகால் குதிரை மூர்ச்சையாகியது
இரண்டுகால் குதிரை நொண்டித் தவித்தது
ஒற்றைக்கால் குதிரை மட்டும்
ஆடிக்கொண்டே இருந்தது

(நன்றி: தற்கால மலையாளக் கவிதைகள் 1991)

ஜனவரி 23, 2006

8. அஞ்சலி: சிரிக்கத் தெரிந்த மார்க்ஸியர்: சோதிப்பிரகாசம்

*மா*ர்க்ஸியத்தை எடுத்துக்கொண்டு அதிகாரம் கருத்தியல் அறம் ஆகியவற்றின் உள்ளோட்டமான தொடர்புகளை ஆராயும் எனது நாவலான ‘பின்தொடரும் நிழலின் குரலு’க்கு ஆய்வுரைகளோ மதிப்புரைகளோ அதிகம் வரவில்லை, ஏராளமான வசையுரைகள் மட்டுமே வந்தன, வந்துகொண்டும் இருக்கின்றன. ஐந்து வருடங்களுக்கு முன்பு எனக்கு தபாலில் ஒரு நீளமான ஆய்வுரை வந்துசேர்ந்தது. அது என்னை மிகவும் கடுமையாக மறுத்து நாவலை நிராகரிக்கும் மதிப்பீடு. ஆனால் நாவலை முழுக்க கணக்கில் எடுத்துக் கொண்டு, விரிவாக ஆராய்ந்து, எழுதப்பட்டிருந்தது. அதை எழுதியவர் சோதிப்பிரகாசம்.அந்தக் கட்டுரைக்கு நான் ஒரு மிக நீளமான பதில் எழுதியிருந்தேன். அதில் சோதிப்பிரகாசத்தை முற்றாக மறுத்திருந்தேன். ‘நான் ஸ்டாலினியத்தை மார்க்ஸியமாக மயங்குகிறேன், மார்க்ஸியம் ஒரு தரிசனமோ தத்துவமோ அல்ல. அது ஓர் அறிவியல், அதை நான் அறிவியல் ரீதியாகக் கற்க வேண்டும்’ என்று சோதிப்பிரகாசம் வாதிட்டிருந்தார். அக்கட்டுரை அவரது ‘வரலாற்றின் முரணியக்கம்’ என்ற நூலில் பின்னிணைப்பாக உள்ளது. நான் எழுதிய பதிலில் என் நாவலில் மார்க்ஸியக் கோட்பாட்டை விமரிசனமேதும் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்நாவல் முழுக்க முழுக்க இடதுசாரி அரசியலானது கருத்தியலை எப்படி ஓர் அடக்குமுறை அதிகார ஆயுதமாக பயன்படுத்தியது என்பதையும் எல்லா கருத்தியல்களுக்கும் அப்படி ஒரு முகம் உண்டு என்பதையும் மட்டுமே விரிவாகப்பேசுகிறது. அப்படி பயன்படுத்தப்பட்ட கருத்தியல் என்ற அளவில் மார்க்ஸியம் விவாதிக்கப்படுகிறது. அந்நாவலில் மார்க்ஸியத்தின் தத்துவார்த்தமான வரலாற்றாய்வுமுறையும் அதன் மனிதாபிமான நோக்கும் அதன் அறவியலும் மிக விரிவாக விளக்கவும் பட்டுள்ளன. ஆனால் மார்க்ஸியம் உருவாகி முக்கால் நூற்றாண்டுக்காலம் கழிந்தும் அது பல நாடுகளில் பலவகையில் விளக்கப்பட்டு அதனடிப்படையில் அதிகாரம் கையாளப்பட்ட பின்னரும் ‘தூய மார்க்ஸியம்’ ஒன்று உண்டு அது மட்டுமே உகந்தது என்று சொல்வது ஒருவகை மதவாதமே என்று வாதிட்டிருந்தேன். இஸ்லாமிய மதவாதிகள் ஒரு இஸ்லாமிய அரசு எல்லா சிக்கல்களுக்கும் தீர்வு காணும் என்று வாதிட்டு மதத்தைப் பரப்புவார்கள். ஏற்கனவே இருக்கும் இஸ்லாமிய நாடுகளை சுட்டிக்காட்டினால் அவையெல்லாம் இஸ்லாமியக் கோட்பாட்டை முழுக்க கடைப்பிடிக்கவில்லை என்பார்கள். அதாவது மண்ணுக்கு மேல் நிற்கும் ஒரு ‘தூய’ தத்துவத்தை சுட்டிக்காட்டும் ஆழ்ந்த நம்பிக்கை மட்டும்தான் இது.

அதற்கு சோதிப்பிரகாசம் பதில் எழுதியிருந்தார். பல கடிதங்களுக்குப் பின்னர் தொலைபேசியில் உரையாடினோம். என்றும் நான் ஏங்கும் ஒரு உறவுக்கான தொடக்கமாக இருந்தது அது – முழுமையான கருத்து மாறுபாட்டுடனேயே நெருக்கமான நட்பு நிலவும் உறவு. சோதிப்பிரகாசம் உறுதியான கருத்துகள் கொண்டவர். அவற்றை மிக ஆவேசமாக வாதிட்டு நிறுவ முயல்பவர். ஆனால் ஒருபோதும் மாற்றுக்கருத்தாளரை மட்டம் தட்டி புண்படுத்தமாட்டார்.

அவர்களின் தனிப்பட்ட பலவீனங்களை தொட்டுக் காட்டமாட்டார். அனைத்துக்கும் மேலாக எதிர் தரப்பின் வாதங்களை அவற்றின் சிறந்த நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டு வாதிடுவார். அவரது சிரிப்பே அலாதியானது. எந்த விமரிசனத்துக்கும் எந்த விவாதத்துக்கும் சிரிப்பு பின்னணியாக ஒலிக்கும். என் நண்பர்களில் அவரளவுக்கு நகைச்சுவையுணர்வு

கொண்டவர் வேறு இல்லை. எப்போதும் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்தபடியேதான் பேசிக்கொள்வோம். கடிதங்கள்கூட அப்படித்தான். ஒருமுறை ஒரு நண்பருடனான உறவில் உருவான சிக்கல்களைப்பற்றி என்னிடம் வருத்தப்பட்டார். நான் 'மார்க்ஸியக் கோட்பாட்டின்படி நீங்கள் நேராக அருகே இருக்கும் கட்சி அலுவலகத்துக்குச் சென்று அங்கிருக்கும் முழுநேர ஊழியர் முன்னால் மூலதனத்தை தொட்டுக்கொண்டு மண்டியிட்டு அமர்ந்து பாவமன்னிப்பு கோரவேண்டும். இல்லாவிட்டால் சமத்துவ சொர்க்கத்தில் பிரவேசனமில்லை' என்று சொன்னேன். 'செய்யலாம்தான். ஆனால் அந்த கிழவன் தப்பிவிட்டான். அவனை அப்போதே பிடித்து சிலுவையில் அறைந்திருந்தால் ஒரு நல்ல மதம் கிடைத்திருக்கும்' என்று அவர் சிரித்தார்.

மார்க்ஸிய நம்பிக்கை சோதிப்பிரகாசத்துக்கு ஆழமாக நெஞ்சில் ஊறிய ஒன்று. அதை அவர் உறுதியாக நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மை என்றே எண்ணினார். அவ்வுண்மையின் திரிபுகளே ஸ்டாலினியம் மட்டுமல்லாது லெனினியமும் மாவோவியமும். மார்க்ஸியத்தின் சாரம் தேசிய இனங்களின் விடுதலையில் உள்ளது என்ற முடிவுக்கு பிற்பாடு சோதிப்பிரகாசம் வந்துசேர்ந்தார். தேசிய இனங்களை அடக்கி ஒன்றாக்கி பெருந்தேசியங்களை கட்டி எழுப்ப லெனினும் ஸ்டாலினும் மாவோவும் முயன்றார்கள். ஆகவேதான் அங்கே பேரரசுக்கனவுகள் உருவாயின. அடக்குமுறை உருவாயிற்று. தன் வாழ்நாளின் பிற்பகுதியில் சோதிப்பிரகாசம் தமிழ்த் தேசிய இன விடுதலை சார்ந்து ஆழமான ஆர்வம் கொண்டிருந்தார். தமிழின் தனித்தன்மை, தொன்மை ஆகியவற்றை நிறுவும் ஆழமான ஆய்வுநூல்களை எழுதி வெளியிட்டார். அவரது 'திராவிடர் வரலாறு,' 'ஆரியர் வரலாறு' ஆகிய இரண்டு நூல்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு அருகே பிறந்த சோதிப்பிரகாசம் சென்னைக்கு தன் சொந்தக்காரரின் மளிகைக்கடையில் வேலைபார்க்கும்பொருட்டு வந்தார். பின்னர் ஒரு மில் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கினார். சிவபூஷணம் என்ற தொழிலாளரால் மார்க்ஸிய அறிமுகம் பெற்றார். ஆர்.குசேலர், ஏ.எம்.கோதண்டராமன் போன்ற தொழ்ச்சங்க முன்னோடிகளுடன் அறிமுகம்பெற்றார். தோழர் எஸ்கே என்று அழைக்கப்படும் எஸ்.கிருஷ்ணமூர்த்தியால் வலுவாக ஈர்க்கப்பட்டு தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டார். எஸ்கே சென்னை நகர மேயராக இருந்தபோது அவருடன் நெருங்கிப்பழக வாய்ப்பு கிடைத்தது. (வரலாற்றின் முரணியக்கம் நூலில் கோவை ஈஸ்வரன் எழுதிய எஸ்கே பற்றிய அழகிய நினைவுக்கட்டுரை ஒன்று முன்னுரையாக அளிக்கப்பட்டுள்ளது. பற்பல சாதாரண மனிதர்கள் வரலாற்றில் தூக்கிப்பிடிக்கப்படும்போது மாமனிதர்கள் எப்படி மறைந்துபோகிறார்கள் என்ற ஏக்கத்தை உருவாக்கும் கட்டுரை அது) சோதிப்பிரகாசம் பல தொழிற்சங்கங்களின் தலைமைப்பொறுப்பேற்று நெடுநாட்கள் பணியாற்றினார்.

நான் அவருடன் பழகிய நாட்களில் ஒன்று கவனித்திருக்கிறேன், சோதிப்பிரகாசம் தன் வாழ்க்கையைப்பற்றி சொல்வதை அறவே தவிர்ப்பவர். தன்னை ஒரு எளிய மனிதனாகவே குறிப்பிட்டு முன்னோடி தலைவர்களைப்பற்றி மட்டுமே சொல்வார். அதிலும் தன்னை விலக்கியே விவரிப்பார். பல தருணங்களில் அவ்வப்போது கிடைத்த தகவல்கள் வழியாகவே அவரது வாழ்க்கையின் பல தளங்களை நான் உத்தேசமாக அறிய முடிந்தது. இப்போதும் அவரைப்பற்றி நான் அறிந்தது மிகக் கொஞ்சமே. அவர் மக்கள் உரிமை மன்றம் என்ற பேரில் சத்யா ஸ்டுடியோ அருகில் ஒரு அமைப்பை நிறுவி அதை முற்போக்கு கலைகளை வளர்க்க பயன்படுத்தியிருக்கிறார். அப்போது பி. ஆர். பரமேஸ்வரன், என். ராம் போன்ற பலர் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். கூவம் கரையின் குடிசைப்பகுதியில் மிக மோசமான சூழல்களில் சோதிப்பிரகாசம் வசித்து வந்ததைப்பற்றி அவரது நண்பர்கள் பலர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். கொசுக் கடியிலிருந்து தப்பும்பொருட்டு ஏதோ ஒரு தொழிற்சாலைக்கழிவை உடலில் பூசிக்கொண்டு தூங்குவதைப்பற்றி அவர் வேடிக்கையாக ஒருமுறை சொன்னார்.

அதன் பின் தோழர் ஏ.எம்.கோதண்டராமன் உறவால் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு இடதுசாரி தீவிர இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றிய சோதிப்பிரகாசம் தலைமறைவாக நெடுங்காலம் இருந்திருக்கிறார். அவருக்கு ஏ.எம்.கேயுடன் இருந்த உறவைப்பற்றி அவரது நண்பர் சொ.கண்ணன் எழுதியிருக்கிறார். எவருடனும் ஓயாமல் விவாதிக்கும் குணம்கொண்ட சோதிப்பிரகாசம் மார்க்ஸிய முன்னோடிகள் பலர் முறைப்படி மார்க்ஸியம் கற்காமல் அதன் மனிதாபிமான அடிப்படையை மட்டுமே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணினார். எனவே மார்க்ஸியத்தை முறைப்படி முழுமையாகப் பயில பதினைந்து வருடங்களை முழுமூச்சாகச் செலவிட்டார். அதில் அவரது மொழித்திறனும் கல்வித்திறனும் வளர்ந்தன.

1978ல் பிரகடனம் என்ற சிறு பத்திரிகையை சோதிப்பிரகாசம் வெளியிட்டார். நான்கு இதழ்களுடன் அது நின்றுவிட்டது. அதன் பின்னர் வாழ்க்கையின் கேள்விகள் என்ற நூலையும் கார்ல் மார்க்ஸின் டாஸ் காபிடலின் முதல் அத்தியாயத்தையும் வெளியிட்டார். இக்காலகட்டத்தில்தான் சோதிப்பிரகாசத்துக்கு பண்டைய தமிழிலக்கியத்தில் ஆழமான ஆர்வம் ஏற்பட்டது. எனக்குத்தெரிந்து பழந்தமிழ் இலக்கியங்களில் மிக ஆழ்ந்த புலமைகொண்ட மிகச்சிலரில் ஒருவர் அவர். அந்தப்புலமை அவரை தமிழ்த்தேசியம் பக்கமாகக் கொண்டுசென்றது என்று படுகிறது.

மார்க்ஸிய விவாதங்களில் சோதிப்பிரகாசம் அவர்களின் பங்களிப்பை இன்னும் பலர் புரிந்துகொள்ளவில்லை. பல கலைச்சொற்களை அவர் மாற்றியமைத்தார் உதாரணம் டைலடிக்ஸ் என்ற சொல் 'இயங்கியல்' என்றும் பூர்ஷ்வா என்ற சொல் முதலாளி என்றும்தான் மொழியாக்கம் செய்யப்பட்டு வந்தது. சோதிப்பிரகாசம் அதை முரணியக்கம் என்றும் முதலாளர் என்றும் மாற்றி அச்சொற்கள் வழக்கத்துக்கு வந்துவிட்டன. பல கலைச்சொற்கள் சோதிப்பிரகாசத்தால் உருவாக்கப்பட்டவை. தத்துவ விவாதங்களை தூயதமிழிலேயே நடத்தவேண்டுமென்ற அவரது ஆர்வத்தின் விளைவு அது. அவரது நூல்களின் பெரிய கலைச்சொல்லடைவுகள் முக்கியமானவை.

என் வாழ்க்கையில் என்னை மாற்றியமைத்த நண்பர்களில் சோதிப்பிரகாசம் முக்கியமானவர். மார்க்ஸிய வரலாற்றாய்வு நோக்கு மீது எனக்கிருந்த ஈர்ப்பை வலுப்படுத்தி விரிவாக்கம் செய்தவர் அவர். அவரது தமிழியக்க ஆர்வமும் என்னைத் தொற்றிக் கொண்டது. அதன் விளைவே 'கொற்றவை' என்ற தனித்தமிழ் புதுக்காப்பியம். இலக்கியம் என்பது போதை என்ற எண்ணம் கொண்ட சோதிப்பிரகாசம் என் நாவல்கள் அனைத்தையும் கூர்ந்து படித்து அழுத்தமான கருத்துகளை பதிவுசெய்திருக்கிறார். கொற்றவையை அவர் படித்த காலத்தில் அனேகமாக தினம் ஒரு கடிதம் வீதம் எனக்கு எழுதியிருக்கிறார்.

சோதிப்பிரகாசம் சுயமாகவே கற்றவர். முதுகலைப்படிப்புக்குப் பின்னர் சட்டம் படித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞரானார். அவரது அலுவலகத்தில் அவரை கடுமையாக விமரிசிக்கும் தோழர்களின் கூட்டத்துடன் அமர்ந்து அரட்டையடிப்பவராகவே அவரை பலமுறை சந்தித்திருக்கிறேன். சோதிப்பிரகாசம் நட்பும் தோழமையும் அதன் உச்சநிலைகளில் திகழ்ந்த ஒரு இடதுசாரிப் பொற்காலத்தின் பிரதிநிதி. எத்தனையோ நண்பர்களுக்கு அவர்கள் வாழ்க்கையின் ஒளியாகவே அவர் இருந்திருப்பார் என்று படுகிறது.

ஒருமுறை நான் விகடனில் தருமபுரி நக்சல்பாரியினர் அப்பு, பாலன் இருவரின் நினைவகத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். சோதிப்பிரகாசம் எழுதிய கடிதத்தில் 'இறந்தவன் கல்லறையில் முளரியை வைத்து கண்ணீர் உகுக்கும் கற்பனைவாதத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. இறப்பு மனிதர்களுக்கானாலும் கருத்துகளுக்கானாலும் இயக்கங்களுக்கானாலும் மிக இயல்பான ஒன்றே. வாழ்க்கை முன்னால் நகரட்டும்' என்று எழுதியிருந்தார்.

ஆனால் நான் முளரியும் கையுமாக நிற்கும் எளிய கற்பனாவாதிதான்.

நவம்பர் 11, 2007

9. பயணம்

ஈரோட்டில் 'பசுமை பாரதம்' என்ற அமைப்பை நடத்திவரும் கிருஷ்ணன், சிவா, பாபு, செந்தில் முதலியவர்கள் சில வருடங்களாக நண்பர்கள். இருமாதங்களுக்கு ஒருமுறை ஒரு வனவலம் என்பது திட்டம். குறைந்த செலவில் கடுமையான பயணம் என்பது எங்கள் வழிமுறை. இம்முறை நான் பேருந்தில் ஈரோடு போனேன். அன்று பகலில் ஈரோட்டு வாசகர்களைச் சந்தித்தேன். பேருந்தில் வீரக்குமார் என்ற வாசகர் தற்செயலாக அறிமுகமானார். நண்பர்களுடன் ஈரோடு அருகே உள்ள ஒரு சிற்றூருக்குச் செல்வது வழக்கம். அது அமைதியான செழிப்பான கொங்குவட்டாரக் கிராமம். அங்குள்ள ஒரு சிறு டீக்கடையில் ஏற்கனவே சொன்னால் நல்ல சிற்றுண்டி செய்து தருவார்கள். அங்கே நடைசென்றபடி உரையாடினோம். இம்முறை இந்திய சிந்தனை மரபில் கீதை பற்றியும் லா.ச.ரா பற்றியும்.

கொங்கு வட்டார அரசியல்வாதிகளான சுப்பராயன், சி.சே.சு.ராஜன், சி. சுப்ரமணியம் ஆகியோர் அம்மக்களுக்கு மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றியிருக்கிறார்கள். அம்மாதிரி அதிருஷ்டம் சிவகாசி, விருதுநகர்காரர்களுக்கு காமராஜ் மூலம் ஓரளவு கிடைத்தது. பிற எந்தப்பகுதி அரசியல்வாதிகளும் தங்கள் மக்களுக்காக அந்த அளவுக்கு உழைக்கவில்லை. அமராவதி, பவானி, பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுகள் மூலம் கொங்குமண்டலம் தமிழ்நாட்டிலேயே வளமான மண்ணாக உள்ளது. எங்குபார்த்தாலும் வளர்ச்சியையும் செழிப்பையும் காணமுடிகிறது. வறுமையே கண்ணில் படாமல் இன்று நாம் சுற்றக்கூடிய ஒரே தமிழகப் பகுதி இதுதான்.

இன்னொரு விஷயமும் சொல்லத் தோன்றுகிறது. தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு சாதி மேலாதிக்கத்துடன் இருக்கும். அப்பகுதியின் வளர்ச்சியில் அச்சாதியின் குணாதிசயம் முக்கியமான பங்கு வகிக்கும். அப்படிப் பார்த்தால் கொங்கு மண்டலத்தின் சாதியான கொங்கு கவுண்டர்கள் மிகக் மிக கடுமையான உழைப்பாளிகளாகவும் ஒற்றுமை கொண்டவர்களாகவும் இருக்கும் அதேநேரத்தில் பிற்சாதியினரிடம் மிக இணக்கமானவர்களாகவும் பண்பானவர்களாகவும் இருக்கிறார்கள். தமிழகச் சாதிகளிலேயே 'நோபிள்' என நான் கொங்குக் கவுண்டர்களை மட்டுமே சொல்லத் துணிவேன்.

இரவில் கிளம்பி நேராக சாலக்குடி வழியாக ஆதிரப்பள்ளி நீர் வீழ்ச்சிக்குப் போனோம். குற்றாலம் பெரிய அருவியை விட இரு மடங்கு உயரம். இருமடங்கு நீர். ஆனால் அருகே நெருங்கவே முடியாது. மணிரத்தினத்தின் ஆஸ்தான நீர்வீழ்ச்சி. கடைசியாக ஐஸ்வரியா ராய் நனைந்து ஆடியிருக்கிறார் (குரு). சுற்றிலும் எந்த கட்டுமானங்களும் இல்லாமல் பசுமைக்காடாக மட்டுமே இருப்பதுதான் காரணம். அங்கே ஒரு ரிஸார்ட்டில் தங்கினோம்.

பிறகு காட்டுச்சாலை வழியாக நேராக வால்பாறை. 90 கிலோமீட்டர் தூரத்தை நான்குமணிநேரத்தில் கடந்தோம். அப்படிப்பட்ட சாலை.வரும் வழியில் அனேகமாக ஊர்களே இல்லை. இருமுறை காட்டுக்குள் ஓடிய ஆற்றுக்குள் இறங்கி நீராடினோம். வால்பாறை வந்து பச்சைக்கடல் ஒன்று புயலில் கொந்தளித்து அப்படியே உறைந்திருந்தது போலக்கிடந்த புல்வெளிகளைப் பார்த்துவிட்டு ஆனைமலைக்கு வந்தோம்.

ஆனைமலையில் தங்க உருப்படியான விடுதி மாசாணியம்மன் கோயிலருகே உள்ள மாசாணி என்ற ஓட்டல். இந்த தெய்வம் கடந்த 5 வருடத்தில் திடீர் புகழடைந்து பணம் அள்ளிக்

கொண்டு இருக்கிறது. ஊர் இன்னும் சிலவருடங்களில் பெரிய சுற்றுலா மையமாகிவிடலாம். எங்கும் கட்டுமானப்பணிகள். இது ஒரு குடும்பத்துக்குச் சொந்தமான சிறு தெய்வம். பிரசவத்தில் இறந்த ஒரு பெண். அவளை கிடந்த வாக்கில் பெரிய சிலையாக வழிபடுகிறார்கள். மண்சிலை. சிலைக்கு வற்றல் மிளகாயை அரைத்து பூசினால் செய்வினை சரியாகுமென ஒரு நம்பிக்கை.

ஆனைமலையில் சாப்பிட்ட ஓட்டலில் ஒரு கரிய பெண்ணைப்பார்த்தேன். பிளாஸ்டிக் கருமை! கோயில் சிலை போன்ற முகம். பெரிய மூக்குத்திகள். பதினாறு பதினெட்டு இருக்கும். மிக மிக ஏழை என்பது தெரிந்தது. அனேகமாக அவளது முதல் வெளியூர் பயணமாக இருக்கும். அப்படியே பூரித்து பொங்கி உடம்பே சிரிப்பாக அமர்ந்திருந்தாள். எல்லாவற்றுக்குமே வாயைப்பொத்தி குலுங்கினாள். அவளது வாழ்க்கையின் பொற்கணங்கள் அவை என்பதை அவளே அறிந்திருப்பாளா என்று தெரியவில்லை.

காலையில் டாப் ஸ்லிப் போனோம். காதுகளில் வியர்வையின் ஆவி அடிக்கும்படி ஒரு கானுலா. எட்டு கிலோமீட்டர்.. திரும்பி வந்து சற்று ஓய்வு, பிறகு மீண்டும் இன்னொரு கானுலா. இரவில் காரிலேயே காட்டுக்குள் சென்றோம். ஒரு இடத்தில் முயல் சாலையைக் கடந்தது. ‘பின்னால் புலி வந்திருக்கும்’ என்றார் கிருஷ்ணன் வேடிக்கையாக. மேலும் சென்று வழியில் காட்டெருதுக் கூட்டத்தைப் பார்த்தபின் மேலே சென்று மான்களைக் கண்டு திரும்பும் வழியில் இன்னொரு வண்டி வந்துகொண்டிருந்தது. ‘என்ன பார்த்தீர்கள்?’ என்று கேட்டார்கள். ‘காட்டெருமையைப் பார்த்தோமே நீங்கள் பார்க்கவில்லையா?’ என்றோம். ‘இல்லையே சார், சாணிதான் கிடந்தது’ என்றார்கள். ‘எல்லாவற்றுக்கும் யோகம் வேணும் சார்!’ என்று சொல்லி நாங்கள் வந்துவிட்டோம்.

ஆனால் அவர்கள் அரைமணிநேரத்தில் பதற்றத்துடன் வந்தார்கள். ‘சிறுத்தை சார்! சிறுத்தையைப் பாத்தோம்! ரோடு கிராஸ் பண்ணிச்சு... வீடியோ எடுத்தோம்’ என்று காட்டினார்கள். நாங்கள் முயலைப் பார்த்த அதே இடம். முயலுக்குப் பின்னால் அது வந்து நாங்கள் பேசுவதைக் கேட்டு புதருக்குள் இருந்திருக்கிறது.

டாப் ஸ்லிப்பில் யானை டாக்டர் என அழைக்கப்பட்ட மறைந்த கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நினைவாக ஒரு புகைப்படக் கண்காட்சி உள்ளது. 40 வருடம் டாப் ஸ்லிப்பில் யானைகளுக்காகவே வாழ்ந்த மாமனிதர். 300 யானைகளுக்கு பிரசவம் பார்த்திருக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள், காட்டுவிலங்குகள்!

மறுநாள் பறம்பிக்குளம் சரணாலயத்துக்குப் போனோம். தமிழகப் பகுதியைவிட சட்டங்களும் கண்காணிப்பும் அதிகம். காட்டில் நீர்வளமும் செழிப்பும் அதிகம். மான்கூட்டங்கள் காட்டெருதுக் கூட்டங்களை தொடர்ச்சியாகப் பார்த்தோம். நான் இதுவரை கண்ட சரணாலயங்களில் சிறப்பாகப் பேணப்படுவது அதுவே.

காடு எனக்குள் எப்போதும் உள்ளது. அதை அவ்வப்போது வெளியே பிரதிபலித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியுள்ளது.

டிசம்பர் 4, 2007

10. ஒரு இலக்கிய நிகழ்ச்சியின் கதை

இன்று காலை எழுந்ததுமே சைதன்யாவை நோக்கிச் சென்றேன், பிறந்தநாள் முத்தம் கொடுப்பதற்காக. அதற்குள் அவள் எழுந்து பல்தேய்த்துக் கொண்டிருந்தாள். ஹேப்பி பர்த் டே சொன்னபோது பொறுப்பைச் சுமக்கும் குடும்பத் தலைவிகளுக்குரிய அலட்சியத்துடன் உதட்டைச் சுழித்து அதைப் பெற்றுக் கொண்டு, 'கேக் எடுத்து வச்சிரு' என்றாள். நான் போய் அஜிதனை எழுப்பினேன். எழுந்ததுமே '...இன்னைக்கு பாப்புவோட பர்த்டே இல்ல?' என்றான்.

ஏழுமணிக்கு கேக் வெட்டினோம். சைதன்யா புதிய மஞ்சள் சுடிதார் அணிந்து பதினொன்று என எழுதிய மெழுகுவத்தியை ஊதி அணைத்தாள். அஜிதன் அவனுடைய உடைந்து பலசில்லுகளாக ஆன குரலில், 'ஹேப்பி பர்த் டே டூ யூ..' பாடியபோது ஏராளமானவர்கள் நிகழ்ச்சியில் பங்குகொண்ட நிறைவு எற்பட்டது. கேக்கை வெட்டி அருண்மொழிக்கும் எனக்கும் அஜிதனுக்கும் டெட்டிக்கும் ஹீரோவுக்கும் ஊட்டியபின் பக்கத்து வீடுகளுக்குக் கொடுக்கச் சென்றார்கள்.

ஒன்பதுமணிக்குள் நாஞ்சில்நாடன் கூப்பிட்டு வாழ்த்துச்சொன்னார். பிறகு வரிசையாக முக்கியஸ்தர்களின் வாழ்த்துகள். சுரேஷ் கண்ணன், ஷாஜி... இரவு ஒன்பது மணிவரை வாழ்த்துகள் வந்தன. விஜயராகவன் என்ற வாசக நண்பர் ஈரோட்டிலிருந்து கூப்பிட்டார். அவற்றை அம்மணி பெற்றுக்கொண்ட முறை புரட்சித்தலைவியருக்கே உரியது.

ஒன்பதுமணிக்கு கிளம்பி நாகராஜா கோயில் சென்றேன். அப்போது தேவதேவன் வந்து பேருந்துநிலையத்தில் நிற்பதாக ஃபோன் வந்தது. வழக்கம்போல நிற்குமிடத்தை தப்பாகச் சொல்லி கவலையில்லாமல் வேடிக்கை பார்த்து நின்ற அவரை முழுப் பேருந்துநிலையத்தையும் ஆளுக்கொரு பாகமாகப் பிரித்துக் கொண்டு நானும் குழந்தைகளும் தேடிக் கண்டுபிடித்து ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு வசந்தம் ஒட்டல் சேர்த்தோம். அங்கே தங்கியிருந்த எம்.கோபாலகிருஷ்ணன், மோகனரங்கன் ஆகியோர் வெளியே சிறு சுற்றுப்பயணமாகச் சென்றிருந்தார்கள். தேவதேவன் குளித்தபின் திரும்பிவந்து அவரையும் கூட்டிச்செல்வதாகச் சொன்னார்கள்.

கோயில் சென்றாக வேண்டுமென்ற சைதன்யாவின் கட்டாயத்துக்கு ஆட்பட்டு நாகராஜா கோயில் சென்றோம். அது புராதனமான சமண கோயில். பார்ஸ்வநாதர் ஆலயம். புடைப்புச் சிற்பங்களில் இப்போதும் தீர்த்தங்காரர்களைக் காணலாம். பார்ஸ்வநாதர் இப்போது அனந்தகிருஷ்ணனாக வழிபடப்படுகிறார். பக்கத்தில் ஓலைக் கூரையிடப்பட்ட புற்றுதான் நாகத்தின் கோயில் கருவறை. கோயிலைச் சுற்றிவந்து தீர்த்தங்காரரிடம் வேண்டிக் கொண்டபின் அஜிதனை அருகே இருந்த சதுப்புக்குளத்துக்கு, பறவைகளை நோக்க கூட்டிச் சென்றபின் வீடு திரும்பினேன்.

மெல்ல மெல்ல பதற்றம் ஏற ஆரம்பித்தது. மாலையில் 'நாஞ்சில் நாடன் அறுபது' நூல் வெளியீட்டுவிழா. நேற்று மாலை வீட்டு விழாவுக்குச் சென்றபின் மாலை போய் இரு மலர்மாலைகளுக்குச் சொல்லி முன்பணம் கொடுத்தேன். அப்போது அருண்மொழி கூப்பிட்டு, 'பேனரை எங்கே வைத்திருக்கிறாய்?' என்றாள்.

'என்ன பேனர்?'

‘ஜெயன், ஒரு மீட்டிங்னா பின்னணியில அதைப்பத்தி எழுதி வைக்கணும்ல?’

எனக்கு ஒன்றும் ஓடவில்லை. என்ன செய்வதென்று புரியாமல் நடுத்தெருவில் நின்றேன்.

‘பக்கத்திலே இருக்கிற பெரிய வினைல் போர்டை பாரு. அதிலே அட்ரஸ் நம்பர் எல்லாம் கண்டிப்பா இருக்கும். கூப்பிட்டு செஞ்சு குடுக்கமுடியுமா கேளு,’ என்றாள்.

‘அதுக்கு இனி எங்க நேரம்?’ என்றேன்.

‘வினைல் போர்டெல்லாம் ஒருமணிநேரத்திலே ரெடியாயிரும்னு சொல்றாங்க.’

பக்கத்திலேயே நாலாள் உயர ஸ்டாலின் படத்துக்குக் கீழே விலாசமும் எண்ணும் இருந்தது. கூப்பிட்டுக் கேட்டபோது அரைமணி நேரத்தில் கிடைக்கும் என்றார்கள். நேராக வசந்தம் ஓட்டல் சென்று கோபாலகிருஷ்ணனையும் தர்மராஜனையும் கூட்டிக் கொண்டு அங்கே போய் பேனருக்கு எழுத்துகள் எழுதிக்கொடுத்தோம். கோபாலகிருஷ்ணன் அமர்ந்து வண்ணமும் வடிவமும் சொன்னார். அரைமணிநேரம் கழித்து வரச்சொன்னார்கள்.

ஏ.பி.என் பிளாசாவுக்கு வந்து ஹாலைப் பார்த்தோம். அங்கிருந்த வாட்ச்மேன், ‘சார் இன்னைக்கு குடும்ப விழாவுக்கு எம்பிட்டுப் பேர் வந்தாக?’ என்றார்.

‘நூறுபேரைத்தான் எதிர்பார்த்தாங்க. முந்நூறுபேர் வந்தாங்க’ என்றேன்.

‘அதிலே பாதி வந்தாக்கூட இந்த ஹால் தாங்காது சார். இங்க எம்பது பேர்தான் இருக்க முடியும். ஏஸி ஹால் ஆனதனால தெறந்து போடவும் முடியாது. ஆளை வெளியே விட்டா நல்லா இருக்காது…’ என்றார்.

‘என்ன செய்றது?’ என்றேன்.

‘பக்கத்து ஹால் கான்சலாயிட்டுது. அதை சரி செஞ்சு தாறோம். சகாயமா பாத்துசெய்யலாம்…’ என்றார்.

கீழே வந்து ஹாலை மாற்றச் சொல்லி கேட்டபோது மேனேஜர் இரண்டாயிரம் ரூபாய் ஆகும் என்றார். எண்ணூறு ரூபாய் அதிகம்.

‘இது இலக்கியக் கூட்டம். எனக்குக் கட்டுபடியாகாது… தனியாளா செய்றோம்’ என்றேன்.

‘என்ன கூட்டம் சார்?’ என்றார். விஷயத்தைச் சொன்னேன்.

‘பெரிய ரைட்டரா சார்?’

‘ஆமா,’ என்றேன்.

யோசித்துவிட்டு ‘சரி. கடசீல மாத்தினா நீங்க என்ன செய்வீங்க? குடுக்கிறத குடுங்க.’

‘ஆயிரத்தி ஐநூறு குடுங்க சார்’ என்றார் வாட்ச்மேன். மேனேஜர் தலையாட்டினார். மேலதிக முன்பணம் கொடுத்து உறுதிசெய்துவிட்டு மீண்டும்போய் பேனரை வாங்கிவிட்டு நள்ளிரவில் வீடுதிரும்பினேன்.

புத்தகங்கள் இருபத்தியெட்டாம் தேதிதான் தயாராகின. வசந்தகுமார் இரு வழிகளிலாக அனுப்பியிருந்தார். ‘ரதிமீனா’ பஸ்ஸில் ஒன்று. புரஃபஷனல் கூரியரில் ஒன்று. பதினொரு மணிக்கு கூரியர் வரும் என்றார்கள். வரவில்லை. பன்னிரண்டுமணிக்கு ஒரு வண்டி நிறைய தபால் வந்ததில் நூல்கட்டு இல்லை. ஒரு மணிக்கு அடுத்த வண்டி. அதிலும் பொதி இல்லை என இந்துக்கல்லூரி பேராசிரியரும் ‘பத்ரகாளியின் புத்திரர்கள்’ ஆசிரியருமான ஜெகதீசன் கூப்பிட்டுச் சொன்னார். இனி வண்டி இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

ரதிமீனா பஸ் இரண்டுமணிக்கு வரும். பதற்றத்துடன் வீட்டில் படுத்துக் கொண்டு ஃபோனில் மாறி மாறி கூப்பிட்டேன். சென்னையில் இருந்து பொதிகள் கிளம்பிவிட்டன என்றார்

வசந்தகுமார். ஃபோனில்பேசி சலித்தபோது சுரேஷ் கண்ணனைக் கூப்பிட்டு புலம்பினேன். இரண்டரை மணிக்கு ரதிமீனா பஸ் வந்தது. அதிலும் பொதி வந்து சேரவில்லை. ஆக புத்தகம் இல்லாமல் புத்தக வெளியீட்டுவிழா. மீண்டும் சுரேஷிடம் புலம்பல். வசந்தகுமாரை கூப்பிட்டு கோபத்துடன், 'நீங்க ஒருநாள் முன்னாடி அனுப்பியிருக்கணும்' என்று திட்டினேன்.

'ஜெயன் இருபத்தி ரெண்டாம் தேதி நீங்க மேட்டர் அனுப்பி எனக்கு இருபத்தி மூணாம் தேதி கிடைச்சிருக்கு. ஒரு புக் அடிக்க நாலுநாளாவது வேண்டாமா?' 'என்றார்.

எனக்குப் புரியவில்லை. நாலு நாளில் எழுதிய நூலை ஏன் மூன்று நாளில் அச்சிட முடியாது? சோர்ந்து படுத்துவிட்டேன்.

அருண்மொழி போஸ்டாபீஸில் இருந்து வந்தாள்.

'சரி இப்ப என்ன? ஒரு வாழ்த்துக்கூட்டம் நடத்துவோம்... புக்ஸ் அப்றமா வரட்டும்,' என்றாள். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. 'இது என்ன சின்ன விஷயம். இதுக்கு போயா அப்செட் ஆறது. புக் ஒண்ணும் இப்ப முக்கியமில்லை. நாஞ்சில்நாடனுக்கு நாம ஒரு மரியாதை செய்றோம்.. அதான் முக்கியம்...'

அப்போது ஃபோன் வந்தது. புரஃபஷனல் கூரியரில் புத்தகம் வந்துவிட்டது. தவறுதலாக வேறு ஒரு இடத்துக்குப் போய்விட்டதை மடக்கி எடுத்திருக்கிறார்கள். கார்களும் ஆட்களுமாக வந்து கேட்டதில் பதற்றம் அடைந்த நிர்வாகி ஒரு டாக்ஸி பிடித்து, கொண்டுவந்து சேர்த்துவிட்டார். பத்து பிரதிகள். உற்சாகமடைந்து குளித்து உடைமாற்றக் கிளம்பினேன். மூளையில் இருந்து ரத்தம் வடிந்து காலியாகும் நிம்மதி. சுரேஷுக்கு ஃபோன்செய்து விஷயத்தைச் சொன்னேன்.

நானும் அஜிதனும் கடைக்குப்போய் பூமாலைகளை வாங்கிக் கொண்டு ஏபிஎன் பிளாஸாவுக்குச் சென்றோம். ஹாலை நன்றாக அமைத்திருந்தார்கள். வழக்கமாக இலக்கியக் கூட்டங்கள் மலிவாகக் கிடைக்கும் பள்ளிக்கூட அறைகளில் அல்லது பொதுக்கூடங்களில்தான் நடக்கும். அந்த தரித்திரச் சாயலே இல்லாத அழகிய இடம். அதுவே உற்சாகமாக இருந்தது. கீழே சென்று டீக்கு ஏற்பாடுசெய்தேன். அருண்மொழியும் சைதன்யாவும் வந்து மேஜைவிரிப்பு போட்டு அலங்காரம் செய்தார்கள்.

நண்பர்கள் வரத்தொடங்கினார்கள். நிகழ்ச்சி தொடங்கும் ஐந்தரை மணிக்கு வெறும் இருபதுபேர். ஆறுமணி வரை காத்தோம். மேலும் ஐந்துபேர். எனக்கு மீண்டும் ரத்தம் தலைக்கு ஏறியது. அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. கீழே இறங்கிவந்து நின்றேன். நிற்கவும் முடியவில்லை. மீண்டும் மாடிப்படி ஏறினேன். மீண்டும் இறங்கினேன்.

ஆறுமணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. ஆனால் ஆறரை மணிக்குள் அரங்கு நிறைந்தது. சற்றுநேரத்தில் உபரி நாற்காலிகளைப் போட்டோம். கடைசியில் அவையும் போதாமலாயின. மேலும் ஆள்வந்துவிடுமோ என்ற பதற்றம் ஆரம்பமாகியது. நிறைந்த முழு அரங்கு– நூற்றி நாற்பத்து மூன்றுபேர். நாகர்கோயிலில் அது ஒரு பெருங்கூட்டம்.

நிகழ்ச்சி முழுக்க பதற்றமாகவே இருந்தேன். அஜிதனும் சைதன்யாவும் கூட்டத்தில் ஊடுருவி டீயும் பிஸ்கெட்டும் கொடுப்பதைப் பார்த்து நிற்க முடியவில்லை. எதையோ கீழேபோட்டுவிடப் போகிறார்கள் என்ற ஐயம். இருபது முறையாவது நான்கு மாடிகளையும் ஏறி இறங்கியிருப்பேன். ஜேம்ஸ் ஆர். டேனியல் தாமதமாக வந்தார், கல்லூரி நிகழ்ச்சி ஒன்றை முடித்துவிட்டு. அவர் வருவாரா என்ற பதற்றம். வந்தபின் நூல் வெளியீடு. கடைசிவரை ரதிமீனா பொதி வருமா என்ற எதிர்பார்ப்பு. அது வரவேயில்லை.

சுரேஷுக்கும் வசந்தகுமாருக்கும் ஃபோன்செய்து நிகழ்ச்சி சிறப்பாக நடப்பதைச் சொன்னேன். கூட்டத்தில் சென்று அமர முடியவில்லை. பக்கத்து இருளறைக்குள் போய் அமர்ந்துதான் பேச்சுகளைக் கேட்க முடிந்தது. நாலைந்து டீ குடித்தேன்.

நிகழ்ச்சி சரியாக எட்டுமணிக்கு நாஞ்சில்நாடனின் உணர்ச்சிகரமான பேருரையுடன் முடிந்தது. ஒவ்வொருவராகச் சொல்லிக்கொண்டு விடைபெற்றார்கள். ஒன்பதுமணிவரை நாஞ்சில்நாடன், பெர்னாண்ட் சந்திரா, அ.கா.பெருமாள், வேதசகாய குமார் குடும்பங்களுடன் வராந்தாவில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். ஒன்பதரை மணிக்கு அருண்மொழிக்கும் குழந்தைகளுக்கும் ஓட்டலில் சாப்பாடு வாங்கிக் கொடுத்து ஆட்டோவில் அனுப்பிவிட்டு தேவதேவனைப் பார்க்க அவர் தங்கியிருந்த வசந்தம் ஓட்டலுக்குப் போனேன். அவரை நலம் விசாரித்து மறுநாள் அவர் ஊருக்குச்செல்ல ஏற்பாடு செய்துவிட்டு பதினொரு மணிக்கு நாஞ்சில்நாடனிடம் ஃபோனில் பேசியபடியே வீடு திரும்பினேன்.

‘நல்லா நிறைவா இருக்கு ஜெயமோகன். நமக்கும் இவ்வளவு ஆளிருக்குன்னா ஒரு தெம்பா இருக்கு... இன்னும் நெறைய ஓடலாம்னு தோணுது.’

வீட்டில் அருண்மொழி, ‘நல்லபடியா எல்லாம் முடிஞ்சாச்சு... பிரமாதமான நிகழ்ச்சின்னு எல்லாரும் சொல்றாங்க... இனிமேலாவது டென்ஷன் இல்லாம இரு,’ என்றாள்.

‘அப்டியா? டென்ஷனாவா இருக்கேன்?’ என்றேன். முகச்சதைகள் அந்த வெளிப்பாட்டுக்கு பழகிவிட்டிருந்தன. கண்ணாடியில் பார்த்து முகம் கழுவி புன்னகைத்து மீண்டேன்.

டிசம்பர் 29, 2007

11. நாஞ்சில் 60 நிறைவு: நூல் வெளியீட்டுவிழா

இன்று, 29-12-2007ல் நாஞ்சில் நாடன் அறுபது நிறைவு, நூல் வெளியீட்டுவிழா. நாகர்கோயில் ஏபிஎன் பிளாசா அரங்கில் ஆறுமணிக்குத் தொடங்கியது. தலைமை வகித்த எம்.எஸ்., 'கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக எனக்கு இலக்கிய உலகோடு பரிச்சயம் உண்டு. ஒரு இலக்கிய நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குவது இதுதான் முதல் தடவை. இது எனக்கு ஒரு பெரிய கௌரவம். அதிலும் நான் என் தம்பியைப்போல எண்ணிவரும் நாஞ்சில் நாடனுக்கு அறுபதாண்டு நிறைவு விழாவில் இந்த வாய்ப்பைப் பெறுவது நெகிழ்ச்சியை அளிக்கிறது,' என்றார். 'ஏறத்தாழ முப்பதாண்டுகளாக எனக்கும் நாஞ்சில் நாடனுக்கும் நெருக்கமான உறவு உண்டு. நிறைய பேசியிருக்கிறோம். அவரது நாவல்களை நான் கைப்பிரதியைப் படித்து ஆலோசனைகள் சொல்லியிருக்கிறேன். இந்தத் தருணத்தில் நிறைய நினைவுகள் வருகின்றன. அவரை மனமார வாழ்த்துகிறேன்' என்றார்.

அறிமுக உரை நிகழ்த்திய நெய்தல் கிருஷ்ணன், 'எனக்கும் நாஞ்சில் நாடனுக்கும் முக்கியமான பொது அம்சம் உண்டு. நாங்கள் ஆற அமர ருசித்துச் சாப்பிடுபவர்கள். என் ஆகிருதியே அதற்குச் சான்று' என்றார். நாஞ்சில் நாடனின் எழுத்துகளையும் அவரது இலக்கியப் பங்களிப்பையும் விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின் தேவதேவன் வெளியிட நாஞ்சில் நாடனின் 'சூடிய பூ சூடற்க' சிறுகதைத் தொகுதியை நாவலாசிரியர் எம்.கோபாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார். நாஞ்சில் நாடனுக்கு எம்.எஸ் மலர்மாலை அணிவித்து வாழ்த்தினார். திருமதி சந்தியா நாஞ்சில் நாடனுக்கு வேதசகாயகுமாரின் மனைவி வான்மதி கௌசல்யா மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கோபாலகிருஷ்ணன் பேசும்போது, 'நாஞ்சில் நாடனின் முக்கியமான சிறப்பு, அவர் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் நின்றுவிட்டவரல்ல என்பது. அவர் அவருக்கு அடுத்த தலைமுறையினருடன் நெருக்கமான தொடர்புள்ளவர். இளம் எழுத்தாளனாக நான் இருந்தபோது என் முதல் சிறுகதைத் தொகுதியான 'பிறிதொரு நதிக்கரை'யை அவர்தான் வெளியிட ஏற்பாடு செய்தார். இந்த அம்சத்தை அவரது படைப்புலகிலும் காணலாம். அவரது சமகால படைப்பாளிகள் தங்கள் காலத்துடன் நின்றுவிட்டபோது நாஞ்சில் நாடன் இளம்படைப்பாளிகளுக்கு நிகராக அவர்களின் உலகுக்கு வந்து தன்னை முழுமையாகப் புதுப்பித்துக் கொண்டார். இன்றைய நாஞ்சி நாடன் படைப்புகளில் அவரது நடை மேலும் செறிவானதாக மாறியுள்ளது,' என்றார்.

தொடர்ந்துபேசிய விமரிசகரும் கவிஞருமான க.மோகனரங்கன், 'நான் இலக்கிய உலகுக்கு வந்த காலத்தில் தமிழில் பின்நவீனத்துவம், பின்அமைப்பியல் மாய யதார்த்தம் போன்றவை பேசப்பட்டன. வடிவச் சோதனை செய்யாத படைப்புகளை பிற்பட்டவையாக அலட்சியம் செய்யும் மனநிலை இருந்தது. நானும் அவ்வகைப்பட்ட எழுத்துகளை கூர்ந்து படித்தபடி நாஞ்சில் நாடனை 'வெறும்' யதார்த்தவாதி என புறக்கணித்தபடி இருந்தேன். ஆனால் வாழ்க்கை முதிர அனுபவங்கள் உருவாகி வந்தபோது இலக்கியம் என்பது ஆத்மார்த்தமாக வாழ்க்கையைச் சொல்லும்போதுமட்டுமே உருவாக முடியும் என உணர்ந்துகொண்டேன். அப்போது எனக்கு நாஞ்சில் நாடன் முக்கியமானவராக ஆனார்,' என்றார்.

அதன்பின்னர் அ.கா.பெருமாள் பேசினார். நாட்டாரியலாளர்களுக்குரிய நகைச்சுவையுடன்

குமரித்தமிழில் நாஞ்சில் நாடனுடனான தன் நினைவுகளை பகிர்ந்துகொண்டார். குமரி மாவட்டத்தின் தனித்தன்மையான ருசிகளையும் மொழி நுட்பங்களையும் நாஞ்சில் நாடன் எப்படி தன் ஆக்கங்களில் கொண்டுவந்திருக்கிறார் என்றார்.

நாகர்கோயில் ஸ்காட் கிறித்தவக் கல்லூரி முதல்வரும் சுந்தர ராமசாமியின் காகங்கள் குழுவின் தீவிர உறுப்பினராக இருந்தவருமான ஜேம்ஸ் ஆர்.டேனியல், ஜெயமோகன் எழுதிய 'கமண்டலநதி –நாஞ்சில் நாடனின் புனைவுலகம்' என்ற நூலை வெளியிட வேத சகாய குமார் பெற்றுக் கொண்டார். ஜேம்ஸ் ஆர்.டேனியல், 'நாஞ்சில் நாடனைப் பற்றி என் கல்லூரியில் இதுவரை பதினொரு மாணவர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர். அக்கட்டுரைகளை சமீபத்தில் எடுத்து படித்தேன். அக்கதைகள் வெளிவந்த காலத்தில் ஆர்வமும் ஆவேசமுமாக அவற்றை வாசித்ததை நினைவுகூர்ந்தேன். நாஞ்சில் நாடன் போன்ற படைப்பாளிகள் நம் மண்ணின் கலாசாரத் தூதுவர்கள். இலக்கியத்தில் குமரிமாவட்டத்துக்கு அழியாத இடத்தை உருவாக்கியளித்தவர்கள். அது குறித்து நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். பலவருடங்களாக நான் நாஞ்சில் நாடனை அறிவேன். அவரது தன்னியல்பான எளிமை என்றுமே என்னை வியப்பும் நெகிழ்ச்சியும் கொள்ளச் செய்கிறது. அது மேதைகளுக்குரிய குணம். அவரது படைப்பூக்கம் மேலும் தீவிரமாக வெளிப்படட்டுமென அவரை வாழ்த்துகிறேன்,' என்றார்.

எம்.வேதசகாயகுமார் நீண்ட உரையில் நாஞ்சில் நாடனுடன் அவருக்கிருந்த நெடுங்கால உறவை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்தார். 'நாஞ்சில் நாடனின் ஆரம்பகால நாவல்கள் என்னைக் கவர்ந்தன. ஆனால் எங்கள் குருவாக அன்று விளங்கிய சுந்தர ராமசாமி அவை வடிவத்திலும் மொழியிலும் கச்சிதமான வெளிப்பாட்டமைதியைக் கொண்டிருக்கவில்லை என்று எண்ணினார். இறுதிவரை அவருக்கு நாஞ்சில் நாடன் பற்றி அவ்வெண்ணமே இருந்தது. அன்று எனக்கும் அந்நாவல்கள் குறித்து அதே கருத்தே இருந்தது. அதை முன்வைத்து நான் நாஞ்சில் நாடனுடன் விரிவாக கடுமையாக விவாதிப்பேன். ஆனால் எங்கள் நட்பு அதற்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருந்தது. நாஞ்சில் நாடன் நாகர்கோயிலில் இருந்தால் அவர் போகும்வரை நான் அவருடன் மட்டுமே இருப்பேன். பேருந்தில் ஏற்றிவிட்டபிறகே வீடு திரும்புவேன். இந்த, கால்நூற்றாண்டுகால நட்பில் ஒருமுறைகூட ஒரு சிறு பிசிறுகூட உருவானதில்லை. எத்தனையோ உவகைகளை ஆவேசத்துடன் பரிமாறிக் கொண்டிருக்கிறோம்... எத்தனையோ அந்தரங்கமான துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு கண்ணீர் சிந்தியிருக்கிறோம்.

...இன்று என் பார்வைகள் மாறிவிட்டன. மொழியிலும் வடிவிலும் கச்சிதத்தைத் தொடுவதல்ல கலைஞனின் இலக்கு என நான் இன்று நம்புகிறேன். நல்ல இலக்கியவாதிக்கு இலக்கியம் முக்கியமே அல்ல. வாழ்க்கைதான் முக்கியம். வாழ்க்கையை அந்தரங்க சுத்தியுடன் தீவிரமாக அவன் எதிர்கொண்டாலே போதுமானது. அப்போது நடை சற்று பிசகலாம். வடிவம் கைவிட்டுப் போகலாம். சத்தியம் கைகூடினாலே போதுமானது. வாழ்க்கையின் சாரமாக நாம் உணரும் அந்த சத்தியமே இலக்கியத்தின் சாரம். எந்த தத்துவமும் அல்ல. இன்று நாஞ்சில் நாடனின் எழுத்தை நான் மேலும் நெருங்கியிருக்கிறேன். அதற்காக என் குருவிடமிருந்து வெகுவாக விலகி வந்திருக்கிறேன்...

...யோசிக்கும்போது இலக்கியம்கூட எனக்குப் பெரிதாகப்படவில்லை. எங்கள் இருவருக்குமே குழந்தைகள் பற்றி பெரிய பிரியம் உண்டு. நாளெல்லாம் எங்கள் குழந்தைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருப்போம். இதோ எங்கள் குழந்தைகள் அருமையானவர்களாக வளர்ந்து வந்திருக்கிறார்கள். நாஞ்சில் நாடனின் குழந்தைகளை எண்ணும்போது எனக்கு ஏற்படும் பரவசமும் என் குழந்தைகளுக்கு அவரை நினைக்கும்போது வரும் நெகிழ்ச்சியுமே முக்கியமானவை. எங்கள் குழந்தைகள் பிற்காலத்தில் எங்களைப்பற்றி எண்ணும்போது எங்கள் நட்பைப்பற்றி நினைவுகூர்ந்தால் அதுவே போதுமானது...'

இறுதியாக தேவதேவன் பேசினார். ‘நெடுங்காலமாக இலக்கியவாதிகளுக்கு இருந்த புறக்கணிப்பு இப்போது விலகி வருகின்றது. அவனை பாராட்டவும் மதிக்கவும் சிலர் இருக்கிறார்கள் என்ற நிலை உருவாகிவருகிறது. இது அவனை அவனது குடும்பத்தினர் கண்களில், குழந்தைகள் கண்களில் முக்கியமானவனாக ஆக்குகின்றது. இன்று நடக்கும் முக்கியமான மாற்றம் இது...’ என்றார் தேவதேவன்.

‘நாஞ்சில் நாடன் மிகமிகப் பிரியமானவர். என் பெண் கோவையில் பொறியியல் படித்தபோது அவர்தான் உள்ளூர் காப்பாளராக இருந்தார். அவ்வகையில் அவர் அவளுக்கு தந்தையைப் போன்றவர். நாஞ்சில் நாடனின் எழுத்துமுறை மிகவும் யதார்த்தமானது. யதார்த்தவாதத்தில்தான் அன்பு சிறப்பாக வெளிப்படும். ஏனெனில் அன்பு கற்பனை சார்ந்த ஒன்று அல்ல, அது மிகவும் யதார்த்தமானது...’

ஏற்புரையில் நாஞ்சில் நாடன் உணர்ச்சிகரமாகப் பேசினார். ‘இந்த அவையில் என் வழிகாட்டிகள் நண்பர்கள் உறவினர்கள் இளவல்கள் அமர்ந்திருக்கிறார்கள். படைப்பில் ஒரு சிறு தகவல்கூட தவறாக அமையலாகாது என்னும் எண்ணம் கொண்டவன் நான். என் ஐயங்களை எப்போதும் அ.கா.பெருமாளிடம்தான் கேட்பேன். என் ஆன்மீக வழிகாட்டியான சௌந்தர் அண்ணா இங்கிருக்கிறார். இத்தனைபேர் என்பொருட்டு இங்கே கூடி எனக்கு வாழ்த்துரைப்பது ஒரு பெரும் ஊக்கசக்தியாக உள்ளது. நெடுந்தூரம் ஓடிக்களைத்தவனுக்கு அளிக்கப்பட்ட குளிர்மோர் போல...

.....எழுத்தாளன் தன் காலகட்டத்தின் நஞ்சை, தான் உண்பவன்; தன் தொண்டையில் அதைத் தேக்கிவைப்பவன்; தன் படைப்புக்குள் அந்த நஞ்சை வெளிப்படுத்துபவன்; ஆகவே அவனுக்கு படைப்புச்செயல் துன்பமானதாக இருக்கிறது. அவன் பொருட்டு அவன் குடும்பத்தினர் தியாகங்கள் செய்ய நேர்கிறது. ஆனாலும் அது அவன் பணி. அதற்காகவே அவன் பிறந்திருக்கிறான்.

இந்த விழா இன்னும் பதினைந்து வருடமாவது இதே வேகத்துடன் என்னால் செயல்படமுடியும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறது. அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.’

நாஞ்சில் நாடனின் ஏற்புரையுடன் கூட்டம் முடிவடைந்தது. கூட்டம் முற்றாக பேச்சில் ஈடுபட்டு அசைவற்றிருக்கும் அபூர்வமான தருணங்களில் ஒன்றாக இருந்தது இந்நிகழ்ச்சி.

டிசம்பர் 29, 2007

12. ‘இயல்’ விருதின் மரணம்

சில வருடங்களுக்கு முன்னால் ஒரு கல்லூரிக்குச் சென்றிருந்தபோது கண்ட காட்சி. கல்லூரியின் உயர்தர வரவேற்பறைக்குள் பேராசிரியர்கள் கால்மேல் கால்போட்டு அமர்ந்து ஆங்கிலத்தில் நாட்டார் கலைகளைப்பற்றி உரையாடிக் கொண்டு உயர்தர விருந்தை உண்டுகொண்டிருந்தார்கள். வெளியே மண்தரையில் அமர்ந்து நாட்டுப்புறக்கலைஞர்கள் புளிசாதப் பொட்டலங்களை வாங்கி பரப்பிவைத்து தின்றுகொண்டிருந்தார்கள். பல லட்சம் செலவில் நடந்த அந்நிகழ்ச்சியே அக்கலைஞர்களைப்பற்றி ஆராயும்பொருட்டுதான்.

தமிழ் இலக்கியத்திலும் எப்போதும் இந்நிலைதான். வாழ்க்கையின் ஆழத்திலிருந்து வேர்விட்டு எழுந்துவந்து அசலான கலைப்படைப்புகளைப் படைக்கும் கலைஞன் இங்கு எங்கும் கைகட்டி கூசி அரங்குக்கு வெளியே நிற்கவேண்டும். காரணம் அவனுக்குப் படிப்போ பதவியோ ஆங்கில ஞானமோ பெரிய இடங்களில் தொடர்போ இருப்பதில்லை. எல்லார் கண்ணிலும் அவன் எளியோன். ஏன், அவனே தன்னைப்பற்றி தாழ்வான எண்ணம்தான் கொண்டிருப்பான்.

ஆனால் அவன் எழுத்தைப் பற்றி ஆராய்பவர்கள், மொழிபெயர்ப்புசெய்பவர்கள், கற்பிப்பவர்கள் அவனுடைய எஜமானர்களாக கால்மேல் கால்போட்டு அமர்ந்து அவனை அதட்டுவார்கள். அவனுக்கு ஆலோசனைகள் சொல்வார்கள். காரணம் பணம், பதவி, அனைத்தையும் விட மேலாக ஆங்கிலம். அனைத்தையும் விட மேலாக எழுத்தாளனுக்கு என ஏதேனும் விருதோ, கௌரவமோ, பரிசோ உண்டு என்றால் அதுவும் இந்த எஜமானர்களுக்கே சென்றுசேரும். அவர்கள் தங்களுக்குள் அதைப் பிரித்துக் கொள்வார்கள். இந்நிலை வேறு இந்திய மொழிகளில் உண்டா எனத் தெரியவில்லை.

இவ்வருடத்தின் ‘இயல்’ விருது மொழிபெயர்ப்பாளர் லட்சுமி ஹாம்ஸ்டாமுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழிலக்கியத்துக்கு ஆற்றிய வாழ்நாள் சாதனைக்காக! கனடிய தமிழ் இலக்கிய தேட்டமும் டொரொண்டோ பல்கலைக்கழகத்தின் தென்னாசிய கழகமும் இணைந்து அளிக்கும் விருது இது. இதன் முதல் விருது சுந்தர ராமசாமிக்கு வழங்கப்பட்டது. அதனாலேயே இதற்கு ஒரு தனி கௌரவமும் பரவலான கவனமும் கிடைத்தது. அதன்பின்னர் வெங்கட் சாமிநாதன் போன்று பொதுப்பண்பாட்டால் அங்கீகரிக்கப்படாத ஆனால் நீண்டநாள் இலக்கியப் பங்களிப்பாற்றிய முன்னோடிகளுக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான எல்லா இலக்கிய விருதுகளும் அதிகாரத்தரகர்களால் கையகப்படுத்தப்பட்ட நிலையில் என்போன்றவர்களுக்கு ‘இயல்’ விருது பெரும் நம்பிக்கையை அளித்தது. என் வணக்கத்திற்குரிய இலக்கிய முன்னோடிகள் புறக்கணிப்பின் இருளில் கிடப்பதைக் கண்டு என்றுமே மனக்குமுறல் கொண்டிருப்பவன் நான். என் மிகமிக எளிய வருமானத்தின் எல்லையை மீறியே அவர்களை கௌரவிக்க இன்றுவரை தொடர்ந்து முயற்சிகள் செய்து வருபவன். ‘இயல்’ விருது அவ்வகையில் ஒரு நல்வாய்ப்பாக அமையுமென எண்ணினேன்.

ஆனால் சென்ற சில வருடங்களாகவே இவ்விருது பற்றிய ஆழமான ஐயம் உருவாகி வந்தது. விருதுக்கு ஒரு கௌரவத்தையும் கவனத்தையும் உருவாக்கும்பொருட்டு தந்திரமாக முதலில் சில இலக்கிய முன்னோடிகள் தேர்வுசெய்யப்பட்டனரோ என்ற எண்ணம் ஏற்பட்டது.

சமீபமாக இவ்விருது பெற்றவர்களின் இலக்கியப்பங்களிப்பு என்ன என்பதை என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

சென்றவருடம் ஜார்ஜ்.எல்.ஹார்ட்டுக்கு இவ்விருது அளிக்கப்பட்டபோது ஆழமான அதிர்ச்சி எனக்கு ஏற்பட்டது. தமிழ்பண்பாடு குறித்து சில மேலோட்டமான ஆய்வுகளைச் செய்தவர் ஜார்ஜ்.எல்.ஹார்ட். அமெரிக்க நவீன ஆய்வுமுறையின் சில கருவிகளை அவர் கையாண்டார் என்பதனால் அவ்வாய்வுகளுக்கு ஒரு ஆரம்பகட்ட முக்கியத்துவமும் உண்டு. ஆனால் தமிழ் பண்பாட்டின் உள்ளிருந்துகொண்டு பேராசிரியர் ராஜ்கௌதமன், பேராசிரியர் அ.கா.பெருமாள் போன்றவர்கள் செய்துள்ள அசலான ஆய்வுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு தமிழ் வாசகனுக்கும் ஆய்வாளனுக்கும் ஜார்ஜ்.எல்.ஹார்ட்டின் ஆய்வுகள் எவ்வகையிலும் முக்கியமல்ல.

ஜார்ஜ்.எல்.ஹார்ட் தமிழ்பண்பாட்டின் நுட்பங்களை புரிந்துகொண்டவரே அல்ல. அவருக்கு விருது என்றால் அதேபோல நூறு ஆய்வாளர்களையாவது சொல்லமுடியும். அவை மேலைநாட்டினர் தமிழகத்தை தங்கள் தேவைக்கும் நோக்கத்துக்கும் ஏற்ப புரிந்துகொள்ள செய்யும் சில முயற்சிகள் மட்டுமே. நம்மை நாம் நமது ஆய்வுகள் மூலமே புரிந்துகொள்ள முடியும். நமது படைப்புகள் மூலமே உணர்ந்துகொள்ளவும் இயலும்.

ஆனால் நமக்கு ஆங்கிலம் என்றாலே மெய்ஞானம். அதில் எழுதப்பட்டது தமிழில் எழுதப்பட்ட ஒன்றைவிட எட்டுமடங்கு எடை உடையது. உலகமே அதன் வழியாக நம்மைக் கவனிக்கிறது என்று ஒரு அசட்டுப்பிரமை. ராஜ் கௌதமனோ அ.கா.பெருமாளோ பெறமுடியாத கௌரவத்தை ஜார்ஜ். எல். ஹார்ட் பெறுவது இப்படித்தான்.

இந்த வருடத்தின் விருதுபெறும் லட்சுமி ஹாம்ஸ்டாமை நான் ஒருமுறை சந்தித்து உரையாடியிருக்கிறேன். சுந்தர ராமசாமியின் வீட்டில். அவரது நாவலை அந்த அம்மையார் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். எனக்கு இரு விஷயங்கள் தோன்றின. ஒன்று அவருக்கு எந்த இலக்கியம் பற்றியும் சொல்லும்படியான ரசனையோ புலமையோ இல்லை. மிக மேலோட்டமான ஒரு வாசகி. இரண்டு அவருக்கு தமிழ் பண்பாடு பற்றி அடிப்படை ஞானம் கூட இல்லை.

‘இந்த அம்மையார் லண்டனில் இருப்பதனால் ஒருசரளமான பொது ஆங்கிலம் இவரிடம் உள்ளது. அதற்குமேல் இவருக்கு எந்த தகுதியும் இல்லை. இவர் உங்கள் நூலை மொழிபெயர்க்கத்தான் வேண்டுமா?’என்று சுந்தர ராமசாமியிடம் வாதிட்டேன்.

‘அவரது நடை ஆங்கில வாசகனை கவர்வதாக இருக்கிறது. நம்மூர் மொழிபெயர்ப்பாளர்களிடம் அது இல்லை’ என்றார் சுந்தர ராமசாமி. ‘சார், இவர் அங்குள்ள சராசரி நடைக்கு எல்லா படைப்புகளையும் மாற்றுவார். சிவசங்கரி ஹெமிங்வேயை இங்கே மொழிபெயர்த்தால் எப்படி இருக்குமோ அப்படி. எல்லா நுட்பங்களையும் மழுங்கடித்துவிடுவார். இங்குள்ள ஆங்கிலப் பேராசிரிய மொழிபெயர்ப்பாளர்கள் குறைந்தது நம்மிடம் உள்ள பண்பாட்டு நுட்பங்களை மொழியாக்கம்செய்ய முயற்சியாவது செய்வார்கள். அதன் மூலம் அவர்கள் நடை வெளிநாட்டு வாசகர்களுக்கு அன்னியமாக இருக்கலாம். ஆனால் அது நேர்மையான செயல்...’ என்றேன்.

ஆனால் சுந்தர ராமசாமிக்கு லட்சுமி ஹாம்ஸ்டாம் மூலம் தனக்கு உலகப்புகழ் தேடிவரும் என்ற கனவு இருந்தது. இந்த அம்மையாரின் மொழிபெயர்ப்புகளை பின்னர் படித்தபோது என் மதிப்பீடு அப்படியே உறுதியாயிற்று. அவற்றினூடாக அந்த தமிழ் படைப்புகளின் எளிய நிழல்களையே காணமுடியும். உலக இலக்கியமறிந்த எந்த வாசகனும் அவற்றை பொருட்படுத்தமாட்டான். அவற்றுடன் ஒப்பிடுகையில் இங்குள்ள சம்பிரதாயமான மொழிபெயர்ப்புகளுக்கு ஒருவகை ஆவண மதிப்பாவது உள்ளது.

லட்சுமி நல்ல மொழிபெயர்ப்பாளர் என்றே இருக்கட்டும். முன்னோடிப்படைப்பாளிகள்

புறக்கணிப்பில் புழுங்கும் ஒரு மொழியில் மொழிபெயர்ப்பாளருக்கா விருது? நாளை மெய்ப்பு திருத்தியமைக்காக விருது கொடுப்பார்களா?

யோசித்துப்பாருங்கள், நவீனத்தமிழிலக்கியத்தை தீர்மானித்த முன்னோடிப் படைப்பாளிகளான லா.ச.ராமாமிருதமோ, ஆ.மாதவனோ, நீல. பத்மநாபனோ, அசோகமித்திரனோ, ஞானக்கூத்தனோ, நாஞ்சில்நாடனோ, வண்ணதாசனோ, அபியோ, தேவதேவனோ பொருட்படுத்தப்படாமல் ஜார்ஜ்.எல்.ஹார்ட்டும், லட்சுமி ஆம்ஸ்டமும் தமிழின் பெரும் பங்களிப்பாளர்களாக எப்படிப் படுகிறார்கள் இவ்விருதுக்குழுவின் கண்களுக்கு? இலக்கியமல்லாத துறைகள் என்றாலும் கூட தொடர்ச்சியாக பங்களிப்பாற்றியவர்கள் ந.முத்துசாமி, தியோடர் பாஸ்கரன் என எத்தனைபேரைச் சொல்லமுடியும். இத்தேர்வின் பின்னால் உள்ள அளவுகோல் என்ன? எந்த மனிதனுக்கும் தெரியும் எளிமையான விடைதான். பெறுபவர்களும் கொடுப்பவர்களும் பல்கலைக் கழகம் சார்ந்தவர்கள். பதவிகளில் இருப்பவர்கள். கொடுப்பவர்களுக்கு பதில் கொடை செய்யும் இடத்தில் இருப்பவர்கள் விருதுபெறுகிறார்கள்.

ஒரு பல்கலைக் கழகக் குழு தங்கள் அந்தரங்க நோக்கங்களுக்காக பரிசைக் கொடுப்பதும் பெறுவதும் அவர்களின் விருப்பம். ஆனால் அதை தமிழிலக்கியத்துக்கான ‘வாழ்நாள் சாதனை’ விருது என்று சொல்வதன் மூலம் தங்கள் ரத்தம் மூலமும் கண்ணீர் மூலமும் இலக்கியத்தை உருவாக்கிய நம் பெரும்படைப்பாளிகளை அவமானப்படுத்தவும் சிறுமைப்படுத்தவும் அவர்களுக்கு உரிமை இல்லை. நாளைக்கு தஞ்சாவூர் கோபுரத்தை புகைப்படம் எடுத்தார் என ஏதாவது வெள்ளைக்காரிக்கு தமிழ்பண்பாட்டுக்கு வாழ்நாள் பங்களிப்பாற்றிய விருதை இவர்கள் கொடுக்கலாம். ஆனால் இலக்கியப் பங்களிப்புகளை மதிப்பிட ஆயிரம் தீவிர வாசகர்களாவது தமிழில் இருக்கிறார்கள் என்பதை இவர்கள் மறக்கக் கூடாது.

இவ்விருதுக்கான நடுவர்களாக ஆ.இரா.வேங்கடாசலபதி, எம்.ஏ.நுஃமான், மு. பொன்னம்பலம் மற்றும் வ.ந.கிரிதரன் ஆகியோர் இருந்துள்ளனர். முதல் இருவரும் முற்றிலும் தங்கள் கல்வித்துறை சார்ந்த சுயமேம்பாட்டுக்கு அப்பால் சிந்திக்காதவர்கள் என்றே நான் எண்ணுகிறேன். இவ்விருதை அவர்கள் அதற்குத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்றகாலங்களில் இவர்கள் கருத்தரங்குகளுக்கும் பிறவற்றுக்கும் அந்த அம்மையாரை எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். இது ஒரு கீழ்த்தரமான கொடுக்கல் வாங்கல். அதிகாரமும் புகழும் இல்லாத முன்னோடித் தமிழ் படைப்பாளிக்கு இவ்விருதை அளிப்பதன்மூலம் இந்த விருதுக்குழுவினர் அடைவது ஒன்றுமில்லை.

என்னுடைய எப்போதுமுள்ள ஐயம் இது. அது எந்த விருதாக இருந்தாலும், இங்குள்ள சாகித்ய அகாதமியோ பப்பாஸி விருதோ அல்லது புலம்பெயர்ந்த இயல் விருதோ முதல்தர எழுத்தாளர்களை, தமிழுக்கு தன்னைத் தந்து சாதனை புரிந்த படைப்பாளிகளை கவனமாக தவிர்க்கும் மனநிலை எப்படி ஒவ்வொரு முறையும் சரியாக உருவாகிவிடுகிறது? எப்படி அதற்கான மனநிலை கொண்ட தொழில்முறையாளர்கள் தவறாமல் உள்ளே நுழைந்துவிடுகின்றன?

‘இயல்’ விருது இனிமேல் அவ்வப்போது உண்மையான இலக்கியவாதிகளுக்கும் கொடுக்கப்படலாம். இலக்கிய தரகர்களால் கைப்பற்றப்பட்ட அமைப்புகள் எல்லாம் செய்வதுதான் இது. தொடர்ந்து கீழ்த்தர அரசியல் மூலம் விருதுகள் கொடுக்கப்படும்போது விருதின் மரியாதை சரிகையில் ஒரு இலக்கியவாதியை தெரிவுசெய்தல் ஒரு தப்பிக்கும் வழிமுறை. ஆனால் ஒரு இலக்கிய விருது என்றமுறையில் ‘இயல்’ விருது செத்துவிட்டது.

தமிழில் இது இயல்புதான். இங்குள்ள எல்லா முன்முயற்சிகளும் வெற்றிகரமாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்டிருப்பதனால் இயல்

விருது பற்றிய ஒரு நம்பிக்கை இருந்தது. ஆனால் அது மூன்றுவருடம் கூட உயிர்வாழவில்லை. அடுத்த இயல் விருதை குஷ்புவுக்குக் கொடுத்தால்கூட ஆச்சரியப்படமாட்டேன்.

டிசம்பர் 30, 2007

[13. ஆதிமூலம்]

ஆதிமூலத்தின் கோட்டு ஓவியங்களைப்பற்றிய என் அறிமுகம் சுமுகமானதாக இருக்கவில்லை. நுண்கலைகளில் நான் ரொம்பவும் நுண்மையானவன் – இருப்பதே தெரியாது. சுந்தர ராமசாமியின் 'நடுநிசி நாய்கள்' தொகுப்பின் (முதல் பதிப்பு, க்ரியா) வடிவமைப்பு பற்றி என் கருத்தை சொன்னேன். 'அட்டையிலே எழுத்துக்களை அச்சடிச்சதில தப்பு வந்திட்டுது சார். லெட்டர்ஸ் கோணலா இருக்கு. பிளேட் சரியா போடல்லை'.

சுந்தர ராமசாமி ஞானிகளுக்கே உரிய புன்னகையுடன் 'அது ஆதிமூலம் போட்டது' என்றார்.

நான் 'பாவம் அவருக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கும், இதைப் பாத்தா' என்றேன்.

அந்நூலின் பின்னட்டையில் சுந்தர ராமசாமியின் ஒரு கோட்டுச்சித்திரம் இருந்தது. அது சுந்தர ராமசாமி என்று கண்டுபிடித்ததும் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அதில் அவருக்குக் கண்கள் இல்லை. கண்ணாடிச் சட்டம் மட்டும்தான். 'எதுக்கு சார் இப்படி வரைஞ்சிருக்காங்க?' என்றேன்.

'அது ஒரு எஃபக்டை குடுக்குதுல்ல? மாடர்ன் ஆர்ட்னா அதுதான்.'

'கைமறதியாய் எங்கே வைத்தேன் என் கண்களை?'ங்கிற கவிதைக்கு வரைஞ்சிருப்பாரோ' என்றேன்.

சுந்தர ராமசாமி கோபம் கொண்டு 'தெரியாத ஒண்ணை கிண்டலடிக்கிறது முட்டாள்தனம்' என்று சீறிவிட்டு நவீன ஓவியம் என்றால் என்ன என்று எனக்கு எளிய அறிமுகம் ஒன்றை அளித்தார்.

சுந்தர ராமசாமி வழியாக ஆதிமூலத்தைப்பற்றி நிறையவே அறிந்தேன். அவரது கோடுகளில் இருக்கும் நிச்சயமான சுழற்றல்கள், அவர் காட்சிகளைப்பார்க்கும் கோணங்கள், அவருக்கு சிற்றிதழ் சார்ந்த இலக்கியத்துடன் இருந்த நெடுநாள் உறவு... அப்போது அவர் மீது ஒரு பிரியம் ஏற்பட்டது. மேலும் ஒருவருடம் கழித்து சுந்தர ராமசாமியின் வீட்டில் ஆதிமூலத்தை நேரில் சந்தித்தேன். 'பாக்க சா.கந்தசாமி மாதிரி இருக்கீங்க சார்' என்றேன். 'அப்டி பலபேர் சொல்றதுண்டு. அவர் உங்க தம்பியான்னுகூட கேப்பாங்க... தம்பி மாதிரின்னு சொல்லிருவேன்' என்று மெல்லிய குரலில் சொல்லி புன்னகை செய்தார். அப்போதும் அவரது ஓவியங்களைப் பற்றிய ஒரு மனப்பதிவு என்னிடம் இருக்கவில்லை.

தற்செயலாக சுந்தர ராமசாமியின் தொகுப்பில் இருந்த அவரது காந்தி கோட்டோவியங்களைப் பார்த்தேன். காந்திமீது என் மதிப்பு உருவாகிக் கொண்டிருந்த நேரம். காந்தியைப்பற்றி நானும் சுந்தர ராமசாமியும் ஆழமாக பேசிக் கொண்டிருந்த காலகட்டம். காந்தியின் உடலசைவுகளை அக்கோடுகளில் பார்க்க முடியுமென்ற பிரமை எனக்கு ஏற்பட்டது. மீண்டும் மீண்டும் அந்தக் கோட்டுச் சித்திரங்களை அடங்காத தாகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். எந்த புகைப்படமும், எந்த திரைப்படமும் அளிக்காத சித்திரங்கள். காந்தியின் அபாரமான தனிமை. அவர் தன்னுள் ஆழ்ந்து இருக்கும் நிலைகள். இப்போதுகூட என் படிப்பறைச்சுவரில் இரு படங்கள்தான் இருக்கின்றன. அசோகமித்திரனின் படம் ஒன்று, ஆதிமூலம் வரைந்த காந்தியின் கோட்டோவியம் ஒன்று.

நவீன ஓவிய உலகில் எனது அறிமுகமே ஆதிமூலம் வழியாகத்தான் என்று சொல்லலாம். அதிகதூரம் நான் செல்லவில்லை. எண்பதுகளில் ஏராளமான ரூபாய்க்கு ஓவிய நூல்களை வாங்கி சேர்த்தேன். ஓவியம் குறித்து படித்தேன். ஓவிய அரங்குகளுக்குச் சென்று வந்தேன். பின்னர் அந்த வேகம் அடங்கியது. ஓவியநூல்களை அன்று நாடோடிபோல வாழ்ந்த என்னால் பாதுகாக்க இயலவில்லை. சுந்தர ராமசாமிக்கு கொடுத்து பணம் வாங்கிக் கொண்டேன். இன்றும் தொடரும் ஓவிய ரசனையை இசை ரசனையைப்போல என் அந்தரங்க களிப்பாக மட்டுமே வைத்திருக்கிறேன். கருத்துகள் சொல்வதில்லை.

ஆதிமூலத்தை அதன்பின் இருமுறை பார்த்தேன். ஒருமுறை சேலத்தில் தமிழ்ச்சங்க கூட்டம் ஒன்றில். அவரிடம் பொதுவாகப்பேசிக் கொண்டிருந்தேன். அன்று அவர் அரூப ஓவியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார், எனக்கு அவை பெரிய ஈர்ப்பை உருவாக்கவில்லை. நான் அன்றுமின்றும் கோட்டோவியங்கள் மற்றும் பதிவிய (இம்பிரஷனிஸ்ட்) ஓவியங்களின் ரசிகன். ஆதிமூலம் அன்று என்னுடைய நல்ல வாசகராக தன்னைச் சொன்னார். என் கதைகளை மிக நுட்பமாகப் படித்திருந்தார்.

பேசும்போது ஆதிமூலம் பூனைகளைப்பற்றி நிறையச் சொன்னார். ‘உங்களுக்கு பூனைகளை பிடிக்காதா, உங்கள் படைப்புகளில் பூனைகளின் சித்திரமே இல்லையே?’

நான் ‘எனக்கு பன்றிக்குட்டிகளை ரொம்ப பிடிக்கும். அவற்றின் சுறுசுறுப்பும் துடிப்பும் அபூர்வமான அழகுகள். என் பிள்ளைகளைக்கூட பன்னிக்குட்டி என்றுதான் கொஞ்சுவேன்’ என்றேன். ‘ஏன் ஓவியர்கள் பன்றிகளை வரைவதில்லை?’

‘நான் காகங்களை விரும்பி வரைந்திருக்கிறேன்’ என்றார் ஆதிமூலம். ‘...பூனைகள் காகங்கள் எல்லாம் நெளிவுகள் உள்ள உடலசைவு கொண்டவை. அவற்றின் மனநிலைகள் உடல் நெளிவுகளில் வெளிப்படுகின்றன. பன்றி அப்படி அல்ல. மொத்தையான ஒரு வடிவம். அதில் வெளிப்படும் உணர்வை நீங்கள் மனதால் உணர்ந்து மொழியால் சொல்லலாம். கண்ணால் பார்த்து ஓவியமாக்க முடியாது. ஓவியத்தின் எல்லை அங்கேதான்...’ என்றார்.

வெட்கத்துடனும் சிந்தனையுடனும் பேசுவார் ஆதிமூலம். மென்மையாக சிரிக்கும்போது நமக்கு எப்படியோ எஸ்.வி.ரங்கராவ் நினைவுக்கு வருவார். சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் இருவர் மேலும் ஆழமான பிரியம் கொண்டவர். கடைசியாக நான் அவரை சென்னையில் ஒரு கூட்டத்தில் சந்தித்தபோது ‘சொல் புதிது’ அட்டையில் ஜெயகாந்தன் படம் போட்டதைப்பற்றி சில சொற்கள் பேசினோம். சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் உறவு பற்றி பேச்சு வந்தது. ‘அவங்களுக்கு அவங்க ரெண்டுபேரு. நமக்கு அவங்க ரெண்டுபேரும் ஒரே ஆளுதான்...’என்றார். என்ன சொன்னார் என்று சரியாகப் புரியவில்லை. ஆதிமூலம் தெளிவாகப் பேசக்கூடியவரல்ல.

அவர்கள் இருவரையும் ஒரே ஆளுமையாக உள்வாங்கும் ஒரு தளம் அவரது அகத்தில் எங்கோ இருந்திருக்கிறது.

ஜனவரி 16, 2008

14. மூன்று சிறுத்தைகளும் ஒரு புலியும்

வியாழக்கிழமை மாலை நாகர்கோயிலில் இருந்து கிளம்பி இரவு எட்டுமணிக்கு திருநெல்வேலி சென்றேன். சுரேஷ் கண்ணன் அவரது நண்பர் குஞ்சரமணியிடம் சொல்லி அங்கே நயினார் ஓட்டலில் அறை ஏற்பாடு செய்திருந்தார். அவருடன் அளவளாவி அனைத்து மனக்கட்டுப்பாடுகளையும் கணநேரத்தில் இழந்து மட்டன் சுக்கா தொட்டுக்கொண்டு சிக்கன் வறுத்ததை சாப்பிட்டுவிட்டு மாயையை வியந்தபடி அறைதிரும்பி பன்னிரண்டுமணிவரை பேசிக் கொண்டிருந்தேன். சுரேஷ் கண்ணனைப் பற்றித்தான். பொதுவான நண்பரைப்பற்றி மனக்குறைபட்டுக் கொள்வதுதான் எத்தனை இனிதானது!

குஞ்சரமணி போன பிறகு தூங்க முயன்று புது இடம் மனதுக்கு பழகும்பொருட்டு கொஞ்ச நேரம் தொலைக்காட்சி பார்த்தேன். ‘நீ வருவாய் என நான் காத்திருந்தேன்..’ அழகிய பாட்டு. புரட்சித்தலைவி தன் பிற்கால அரசியல் வாழ்க்கைக்கு பயிற்சி எடுக்கும் முகமாக போலீஸ் புடைசூழ சூட்கேஸுடன் வருகிறார். சூட்கேஸை எப்படி சிவாஜி விட்டெறிந்தாலும் பாய்ந்து பிடிக்கிறார். காவலுக்கு போலீஸ்காரர்கள் வேடிக்கை பார்த்து நிற்கிறார்கள்.

கொஞ்சமாக தூங்கி வந்தபோதே செல்பேசியில் செய்தி. ஈரோடு நண்பர்கள் இரவு ஏழு மணிக்கே கிளம்பி நெல்லைக்குள் நுழைந்துவிட்டிருந்தார்கள். மணி மூன்றரை. பயணமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று தோன்றும் மயக்கநிலை. வேறு வழியில்லை. ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும். அதற்குள் வாசலில் தட்டும் ஒலி. வந்தே விட்டார்கள். கிருஷ்ணன், சிவா ஆகியோருடன் புதிய நண்பர் விஜய ராகவன். (வக்கீல் அல்லாத) செந்திலும் சிவாவின் மனைவியின் அண்ணா பாபுவும் கீழே இருந்தார்கள். வழக்கமாக காட்டுக்குள் கொண்டுபோகும் அதே மாருதி ஆம்னி. பெயர் காவியா. உரிமையாளர் செந்தில். ஓட்டுவதும் பெரும்பாலும் அவரே.

முகம் கழுவிவிட்டு உடனே கிளம்பினோம். உள்ளே அமர்ந்ததுமே நேரத்தை வீணாக்காமல் கிருஷ்ணன் இலக்கிய, தத்துவ ஐயங்களை கிளப்ப ஆரம்பித்தார். மாஞ்சோலை குதிரைவட்டி போக வேண்டும். விடிகாலையில் அம்பாசமுத்திரம் போய் தேடி நண்பரைக் கண்டுபிடித்தோம். அனுமதி பெற்றுத்தருவதாகச் சொல்லியிருந்த நண்பர் முண்டந்துறைக்கு மட்டுமே அனுமதி பெற்றிருந்தார். ஆகவே நேராக முண்டந்துறை.

போய்ச்சேர்ந்தபோது அங்கே வனவிடுதி காலியாகவில்லை. ஆகவே சிறிய அறையில் பெட்டிகளைப் போட்டுவிட்டு பாணதீர்த்தம் அருவிக்குப் போனோம். போகும்வழியிலேயே காணிக்கார குடியிருப்பிலிருந்த மாதா ஓட்டலில் காலை உணவுக்குச் சொல்லிவிட்டு அணையைத்தாண்டிச் சென்று ஏரிக்குள் இறங்கி படகில் பயணம் செய்து அருவிக்குச் சென்றோம். அவ்வளவு தூரம் ஏறி மூன்று வயோதிகப்பெண்கள் அடங்கிய ஒரு குழு வந்து அருவியில் இறங்கி குளித்தது வியப்பூட்டுவதாக இருந்தது. அவர்கள் அடிக்கடி பயணம் போகிறவர்கள் என்று பேச்சில் தெரிந்தது என்றார் கிருஷ்ணன். அந்தமான் லட்சத்தீவு பயணங்களைப்பற்றி கூட பேசிக் கொண்டார்களாம்.

பாண தீர்த்தம் அருவியை ஏரியில் படகிலிருந்தே முதலில் பார்ப்பது ஒரு சிறந்த அனுபவம். உயரமில்லாத அருவி என்றாலும் நுரைத்து உற்சாகமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறது. திரும்பிவந்து காலையுணவு உண்டபின் காட்டுக்குள் ஒரு நடை. மதியத் தூக்கம். பின்னர்

மீண்டும் ஒரு கானுலா. காட்டுக்குள் நுழையவேண்டாம் என்ற அறிவிப்புகள் பல இடங்களில் இருந்தமையால் அவை இல்லாத இடத்தை தெரிவுசெய்து யானைப்புல் இடுப்பளவு வளர்ந்திருந்த பாதையில்லா இடைவெளி வழியாக உள்ளே சென்று நடந்து காட்டுக்குள் வழிதவறும் பதற்றத்தை அனுபவித்தோம்.

ஏழரை மணிக்கு வனக்காவலர் ஒருவர் சுட்டுவிளக்குடன் வந்தார். எங்கள் வண்டியிலேயே அவரை ஏற்றிக் கொண்டு காட்டுக்குள் சாலை வழியாகச் சென்றோம். விளக்கொளியில் காட்டுமரங்களின் செறிவுக்குள் நிழல்கள் ஓடி உருவாகும் அசைவுகளும், பூச்சிகளின் ஒலிகள் உள்ளே சுழலும் காட்டின் பெருமௌனமும் மனக்கிளர்ச்சியூட்டுகின்றன. அதைவிட உற்றுக் கவனித்தபடி ஒவ்வொரு கணமும் அபூர்வமான ஒன்றை எதிர்பார்த்தபடி காத்திருப்பது.

நெடுநேரம் எதுவும் கண்ணில்படவில்லை. அப்போது உருவாகும் மனச்சோர்வும் ஆனால் கூடவே எஞ்சியிருக்கும் எதிர்பார்ப்பும் விசித்திரமான உணர்வுக்கலவை. மின்நிலையம் வரை போய்விட்டு திரும்பி வரும் வழியில் இருளில் அசைவைக் கண்டு சிவா ‘நிப்பாட்டுங்க!’ என்றார். ஒரு பெரிய மிளா (சாம்பர் மான்) புதருக்குள் நின்றபடி வெளிச்சத்தில் விழித்துப் பார்த்தது. சற்றுநேரம் கழித்து சுதாரித்து தலையைக் குலுக்கி மீன் நீரில் அமிழ்வதுபோல புதருக்குள் மறைந்தது.

‘போதும் இன்னைக்கு வந்த வேலை முடிஞ்சாச்சு!’ என்றார் கிருஷ்ணன். அனைவருக்கும் ஒரு நிறைவும் திரும்பும் உணர்வும் ஏற்பட்டது. ஆனால் சட்டென்று சிவா ‘சிறுத்தை...!!’ என்று கூவினார். விளக்கொளியில் சிறுத்தை பாய்ந்து புதருக்குள் மறைவதைக் கண்டேன். அக்கணத்தில் உருவாகும் சிலிர்ப்பு, மனம் உறைந்து எண்ணங்களை இழந்து நின்று பின் உயிர்பெறும் வேகம், அதுவே வன அனுபவத்தின் உச்சம்.

காட்டில் சிறுத்தையைக் காண்பதென்பது பொதுவாக மிக அபூர்வமானது. பல ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து சிறுத்தையையே பாராதவர்கள் இருக்கக் கூடும். பல சதுர மைல்களுக்கு ஒன்றுதான் சிறுத்தை இருக்கும். மிக மிக கவனமான மிருகம். வெளிச்சத்தையும் திறந்தவெளியையும் நாடாது. கற்பனைக்கு அப்பாற்பட்ட வேகம் கொண்டது. காட்டில் அதை ஒரு மின்னலாக மட்டுமே காண முடியும். ஒரே குழுவைச் சேர்ந்தவர்களில் பாதிப்பேர் அதைப் பார்க்காமல் போவது அடிக்கடி நிகழும். புதருக்குள் அது இருந்தால் நாலடி இடைவெளியில் நாம் காணாமல் போகக்கூடும். காட்டில் சிறுத்தையைப் பார்ப்பதென்பது லாட்டரி விழுவதைப்போல ஒரு மாபெரும் தற்செயல் மட்டுமே. புலியைப் பார்ப்பது உலக லாட்டரி.

ஆனால் நான் சற்று யோகக்காரன். இந்த வருடத்தில் மட்டுமே மூன்றுமுறை சிறுத்தை எங்கள் பாதையை கடந்திருக்கிறது. ஒருமுறை புலி! எங்கள் ஈரோட்டுக் குழு (பசுமை பாரதம்) இரண்டுமாதங்களுக்கு ஒரு வனவலம் செல்வது வழக்கம். முதல்முறையாக கேரளத்தில் திருநெல்லி செல்லும் வழியில் யானைகள் சரணாலயத்தில் சாலையோரமாகவே புலியைப் பார்த்தோம். ஒரு மதகருகே அமர்ந்திருந்தது. சிவாதான் அதைப்பார்த்து ‘மதகருகே புலி !!’ என்று கூவினார். காரைப் பின்னால் கொண்டுவந்து பார்த்தோம். அவசரமேதும் இல்லாமல் எழுந்து வாலைத் தூக்கியபடி கம்பீரமாக நடந்து புதருக்குள் சென்றது. சிவா உள்ளிட்ட மூன்று நண்பர்கள் முகத்தைப் பார்த்தார்கள். நான் பின்பக்கத்தையே பார்த்தேன். வெகுநேரம் நீளமான வாலை.

அதன்பின் சென்ற டிசம்பர் 24, 25, 26 தேதிகளில் பரம்பிக்குளம் வனத்தில் நானும் அருண்மொழியும் குழந்தைகளும் தங்கியிருந்தபோது சிறுத்தையைப் பார்த்தோம். பரம்பிக்குளத்தில் புள்ளிமான்கள் எந்நேரமும் சாதாரணமாக கண்ணில் படும். மாலையானால் காட்டெருதுகள் (Gaur) மேய்வதைக் காணலாம். காட்டெருதுகள் மிக கம்பீரமானவை. குறிப்பாக திமிலும் முன்தொடைகளும் சேர்ந்து கனத்து உருண்டிருப்பதன் அழகு எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காதது. 24 ஆம் தேதி மாலை ஏழரைக்கு காட்டுக்குள் சென்றபோது மான்கள் காட்டெருதுகளுடன் காட்டில் மிக அபாயகரமான மிருகமான காட்டுநாய்களை

(சிவப்பாக நாட்டுநாய்களைப்போல. காது சற்று பெரிது) கண்டோம். ஒரு கேழைமானைக் கண்டோம். (சிறிய வைக்கோல்நிற மான். தன்னந்தனியாகவே வாழ்வது.)

திரும்பி வரும் வழியில் வனக்குடில்களை நெருங்கும்போது மான் ஒன்று குறுக்கே ஓடியது. அதைத் தொடர்ந்துவந்த சிறுத்தை கார் ஒளி கண்டு பயந்து பின்னால் தாவி மறைந்தது. ஓரிரு கணங்கள். ஆனால் விளக்கை திறமையாக அதன்மேலேயே அடித்த வனக்காவலர் சசி உதவியால் நன்றாகவே காணமுடிந்தது.

அதன் பின்னர் 26 ஆம்தேதி காலையில் பரம்பிக்குளம் அணைக்கட்டுக்கான சுரங்கவழிக்கு காரில் சென்றபோது நடுச்சாலையில் சிறுத்தை கிடந்தது. பனிசொட்டுவதைத் தவிர்க்க அப்படி படுக்கும் வழக்கம் அதற்கு உண்டு. அருண்மொழிதான் முதலில் பார்த்தாள். அவள் இடம்சொல்லி கத்தியிருக்க வேண்டும். பதறி குழறி ‘புலி இல்ல சிறுத்தையம்மா!’ என்றெல்லாம் கூவ நாங்கள் ஆளுக்கொரு திசையை நோக்க வண்டியை ஓட்டிய நண்பர் செந்திலும் வனக்காவலரும் மட்டுமே அதைப் பார்த்தார்கள். நான் கண்டது புதரசைவை மட்டுமே.

முண்டந்துறை விடுதிக்கு திரும்பி சாப்பிட்டுவிட்டு இன்னும் பிரகாசமான விளக்குடன் மீண்டும் காட்டுக்குள் சென்றோம். ஒரு அபூர்வ விலங்கை பார்த்துவிட்டால் பிறகு எங்கும் அதைப்பார்க்க முடியும் என்ற நம்பிக்கை உருவாவது கானுலாவின் மடமைகளில் ஒன்று. ஆனால் மிருகங்களைப் பார்க்க முடியவில்லை.

போகும் வழியில் சாலையை ஒரு கண்ணாடிவிரியன் கடப்பதைக் கண்டோம். மிக நிதானமாக ஒரு பாதரசக் கோடு போல், அது கார் ஒளியில் சுடர்ந்தபடி வழிந்து ஓடியது. சாரை, நாகப்பாம்பு போல சரசரவென வளைந்தோடுவதில்லை. புழு போன்ற அசைவு அலையலையாக உடலில் ஓட மெல்ல செல்லும். தலை உடலைப் போலவே இருக்கும். சேனைத்தண்டன் என்று எங்களூர் பெயர். கட்டுவிரியனை அணலி என்பார்கள். நரம்புகளைத் தாக்கும் கடும் விஷம் கொண்டது. செத்தைகளுக்குள் பதுங்கிக் கிடக்கும்.

முண்டந்துறை உயரம் குறைவான, குளிரில்லாத காடு ஆகையால் பாம்புகள் — குறிப்பாக கண்ணாடி விரியன் மிக அதிகம் என்றார் காவலர். அதுவே அக்காட்டின் ஆபத்தான உயிரினம். காட்டுக்குள் செல்லக்கூடாதெனச் சொல்வது அதனாலேயே. நாங்கள் காட்டுக்குள் போன நடை பற்றி அப்போதுதான் அஞ்சி குதம் கூசினோம்.

மறுநாள் அதிகாலையில் அதே பகுதிகளில் மீண்டும் ஒரு சுற்று வந்தோம். பனிசொட்டும் காட்டை மட்டுமே பார்த்தோம். மிருகங்கள் இல்லை. ஒரே ஒரு மான்கூட்டம் தவிர. யானைகள் காட்டெருதுகள் போன்றவற்றை விடிகாலையில் பார்க்க வாய்ப்பு அதிகம். முண்டந்துறையில் இப்பருவத்தில் அவை அதிகம் இருப்பதில்லை.

ஒன்பது மணிக்கு கிளம்பி மணிமுத்தாறு வந்தோம். அங்கே நூறு ரூபாய்க்கு நான்கு அறைகள் கொண்ட புதிய குடில் தங்கக் கிடைத்தது. காரிலேயே மணிமுத்தாறு அருவிக்குப் போய் குளித்துவிட்டு மேலே ஏறி மாஞ்சோலை எல்லைவரை போய் காரை விட்டு இறங்கி காடுவழியாக எட்டு கிலோமீட்டர் நடந்து வந்தோம். குளிரும் பசுமையும் காற்றும் சலிப்பில்லாமல் நடக்கச்செய்தன, மௌனமாக உறைந்த உயரமான மலைமுடிகள் நடுவே நடக்கையில் ஒரு விடுதலை உணர்வு மனதை சிறகடிக்க வைக்கும்.

மூன்றரை மணிக்கு மதிய உணவு. ஓய்வுக்குப் பின்னர் மணிமுத்தாறு அணை அருகே உள்ள ஒரு குன்றில் பாறைகள் வழியாக புதர்களைப் பிடித்து தொற்றி ஏறி உச்சிப்பாறையை வியர்த்து வழிய அடைந்து அங்கே அமர்ந்திருந்தோம். இருட்டிய பின் இறங்கிவந்து மணிமுத்தாறு பெரிய வாய்க்காலில் இருளில் நட்சத்திரங்களைப் பார்த்தபடி நீந்திக் குளித்தோம். உடம்பெல்லாம் மலைப்புல் கீறிய எரிச்சல் தணிந்தது.

அதிகாலையில் மீண்டும் வாய்க்கால் சென்று அதன் கரையோரமாகவே காட்டுக்குள் நடந்து

சூரிய உதயம் கண்டோம். வாய்க்காலுக்கு அப்பால் காடு ஆயிரக்கணக்கான பறவைகள் குரலெழுப்ப துயிலெழுந்தது. எட்டுமணிக்கு திரும்பினோம். காலையுணவுக்குப் பின் கிளம்பினோம். என்னை திருநெல்வேலியில் இறக்கிவிட்டு அவர்கள் ஈரோடு சென்றார்கள். நான் அருண்மொழிக்கு ஃபோன் செய்து என் சிறுத்தையோகம் பற்றி சொல்ல ஆரம்பித்தேன்.

ஜனவரி 27, 2008

15. கனிமொழி வணக்கம்

பதினைந்து வருடங்களுக்கு முன்பு ‘சுபமங்களா’ இதழில் கனிமொழி கருணாநிதி என்ற பெயரில் ஒரு கவிதை வெளிவந்தபோது நான் கோமல் சாமிநாதனை அழைத்து ஒரே விஷயத்தைக் கேட்டேன். தன் பெயருடன் தந்தை பெயரை இணைத்துத்தான் கனிமொழி அக்கவிதையை அனுப்பினாரா என. ஆம் என்றார். அது ஒரு கவிஞர் ஒருபோதும் செய்யக்கூடிய செயலல்ல. தன் மொழியின் படைப்புத்திறனின் திறனால் மட்டுமே கவனிக்கப்பட விரும்புதலே படைப்பாளிகளின் அடிப்படை இயல்பு. பிற அடையாளங்கள் வைத்து அங்கீகாரம் பெற அவர்கள் விரும்ப மாட்டார்கள். எழுத ஆரம்பித்து இருபது வருடம் வரை தான் கே.வி.புட்டப்பாவின் (குவெம்பு) மகன் என்பதை பூர்ண சந்திர தேஜஸ்வி மறைத்திருந்தார் என்பார்கள்.

எதிர்பார்த்ததுபோலவே எந்தக் கவிஞருக்கும் இல்லாத அளவுக்கு கனிமொழிக்கு புகழாரங்கள் குவிந்தன. சுஜாதா முதல் வெங்கட் சாமிநாதன் வரை. சாரு நிவேதிதா முதல் கல்யாண்ஜி வரை... பாரதிக்குப் பின் இந்த அளவுக்கு பாராட்டு பெற்ற கவிஞரே இல்லை. எதிர்மறைக் கருத்துகள் இன்றுவரை எதுவுமே பதிவானது இல்லை.

சிலகாலம் முன்பு ஒருமுறை ஒரு புத்தக வெளியீட்டாளர் நண்பர் தொலைபேசியில் அழைத்து கனிமொழியின் கவிதைகளை மலையாளத்தில் மொழியாக்கம் செய்ய இயலுமா என என்னிடம் கேட்கச் சொன்னதாகச் சொன்னார். நான், அவர் இன்று வரை ஒரு நல்ல கவிதை எழுதவில்லை என்பதே என் மதிப்பீடு என்றும், இலக்கியத்தில் அவருக்கு உண்மையான ஆர்வம் இருக்கும் பட்சத்தில் அவர் செல்ல வேண்டிய தூரம் மிக அதிகம் என்றும், அதற்கு தொடர் வாசிப்பும் சலியாத இலக்கிய முயற்சியும் தேவை என்றும், சுயநலம் கருதும் போலிப்பாராட்டுக்களை ஏற்று மயங்கவேண்டாம் என்றும் சொல்லும்படி சொன்னேன். அப்படியே சொல்லி விடுவதாக அந்நண்பரும் சொன்னார்.

அரசியல் பதவிக்கு முன்னோட்டமாக கவிஞர் என்ற அடையாளம் தேடவே கனிமொழி களத்திலிருக்கிறார், இலக்கிய நோக்கமேதும் அவருக்கு இல்லை என நான் தொடர்ந்து சொல்லிவந்தபோது கடுமையாக மறுத்த நண்பர்கள் பலர் உண்டு. இப்போது அவர்கள் மறுப்பு சொல்வதில்லை. இப்போது தமிழச்சியும் அதேபாதையில் இருக்கிறார்.

தமிழ்ச் சிற்றிதழ்கள் க.நா.சு முதல் சுந்தர ராமசாமி வழியாக ஐம்பதாண்டுக்காலமாக உருவாக்கி வந்த எல்லா இலக்கிய மதிப்பீடுகளையும் கைவிட்டு இவ்விருவரையும் தமிழின் முதன்மையான படைப்பாளிகளாக, எல்லா முன்னோடிகளுக்கும் முன்னோடிகளாக, ஏன் சிற்றிதழிலக்கியத்தின் பதாகைகளாக முன்னிறுத்த முயன்று கொண்டிருக்கின்றன. மறுபக்கம் இந்த ஆட்சியில் கிராம நூலக அமைப்பே நிதியில்லாமல் செயலற்றுக் கிடக்கிறது என்ற மனப்புழுக்கங்கள். இரண்டு வருடங்களாக நூலகத்திற்கு புத்தகம் வாங்குவதே ஒத்தி போடப்பட்டு பதிப்பகங்கள் விழி பிதுங்கி நிற்கின்றன என்ற மனக்குறைகள். அவற்றை வெளியே சொல்லக்கூட அஞ்சி மேடைகளில் ‘இலக்கிய விடிவெள்ளியே’ என்று பசப்புகிறார்கள்.

இந்தப் புத்தகக் கண்காட்சியில் எங்கு நோக்கினாலும் கனிமொழி படம். தமிழின் முதன்மையான சீரிய பதிப்பகங்கள் இரண்டுமே அவரையே முன்னிறுத்தின. தமிழச்சியையும்.

‘உயிர்மை’ இதழைப் பொறுத்தவரை அவர்கள் இவ்வருடம் வெளியிட்ட முக்கியமான நூல் தமிழச்சியின் கவிதைகள்தான் என மாபெரும் வண்ணத்தட்டி மூலம் அறிந்துகொண்டேன். சமீபத்திய ‘உயிர்மை’ இதழில் அட்டையில் கனிமொழி. ஏன்? உள்ளே சாருநிவேதிதா புகழ்ந்து நாலுவரி எழுதியிருக்கிறார். ‘காலச்சுவடு’ அவரது வரலாற்றுச்சிறப்புமிக்க முதல் உரையை வெளியிடுகிறது.

இப்போது கோ.ராஜாராம், பி.கே.சிவகுமார் உள்ளிட்ட நண்பர்கள் ஒரு சிற்றிதழ் தொடங்கும்போது, இன்னும் பெயரே போடப்படாத நிலையில், முதல் வணக்கங்களை போட்டு விடுகிறார்கள். அவர்களின் ‘ஸ்டார்’ எழுத்தாளர் தமிழச்சி, சல்மா. முதல் இதழ் அட்டையில் கனிமொழி படம் இருக்குமோ தெரியவில்லை. இந்த அளவுக்கு போவதற்கு ஏதாவது லாபம் உண்டா? இல்லை, பயப்படுகிறார்களா? ஒன்றும் புரியவில்லை.

ஒரு நண்பர் சொன்னார், கனிமொழி தனிப்பட்ட முறையில் மிகவும் பண்பானவர், சந்திக்க வருபவர்களை அவர் உட்காரச் சொல்கிறார். தவழ்ந்தால் அவர் மேலும் மகிழ்ச்சி அடையக்கூடுமென்று இவர்கள் நினைத்துக் கொண்டால் அவர் என்ன செய்வார் என. உண்மையாக இருக்கலாம். தமிழ் மனோபாவமே எப்போதும் அப்படிப்பட்டது. இதில் விதிவிலக்காக எழுத்தாளர்களில் சிலரே கண்ணில் படுகிறார்கள். மற்றபடி வரிசை மிக நீளமாக இருக்கிறது.

ஆகவே ஒன்றைமட்டும் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். நணபர்களே, நான் இவ்வரிசையில் இல்லை. இவர்களுடனும் இல்லை. எனக்கு என் சிறிய வாழ்க்கையில் பெரிய தொடர்புகளைப் பேணிக்கொள்ள முடியவும் முடியாது. எதையுமே அடையாமல் சிற்றிதழ்களைச் சார்ந்து எழுதி வரும் ஒரு சின்னக்குழு எப்போதும் உண்டு. என் இடம் அங்குதான். அவர்கள் மேலும் சிறு இதழ்களை நாடிப்போயாக வேண்டிய நிலை உருவாகிவிட்டிருக்கிறது இன்று.

ஜனவரி 16, 2008

16. தமிழ் சினிமா: தொழில்நோக்கு தேவை

தமிழ் சினிமாவில் இது ஒரு பொற்காலம். பொற்காலம் என்றால் வருடத்தில் ஐந்து படங்களாவது யதார்த்தமாகவும் ரசிக்கக் கூடியனவாகவும் அமைவது. இதற்கு முக்கியமான காரணம் இன்று ஒரு நல்ல திரைக்கரு அதற்கான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. தொடர்ச்சியாக இளம் இயக்குநர்கள் உள்ளே வர முடிகிறது. இரண்டு வருடங்களுக்குள் தமிழ்த் திரைப்படத்தின் அமைப்பிலும் நோக்கிலும் ஏதேனும் ஒரு மாறுதல் நிகழ்ந்து விடுகிறது என்பதை இதற்கான ஆதாரமாகச் சொல்லலாம்.

இதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுவது திரையுலகில் பொது முதல் நிறுவனங்கள் வருகை. நேற்றுவரை ஒரு நல்ல கரு படமாவதற்கு முக்கிய தடையாக இருந்தது அதைத் தயாரிக்க முனைபவரால் முதலீட்டைப் புரட்ட முடியாதென்ற நிலைதான். பொது முதல் நிறுவனங்களுக்கு அந்தச் சிக்கல் இல்லை.

ஆனால் இப்போதும் நல்ல படங்கள் திரையுலகில் உள்ள பல தடைகளைத் தாண்டி அப்படைப்பாளியின் தனிப்பட்ட தீவிரம் காரணமாக உருவாக்கப்பட்டவையாகவே உள்ளன. நல்ல படங்கள் உருவாகும் பிற மொழிச் சூழல்களில் உள்ள இன்றியமையாத பலவிதமான அமைப்புகள் நம்மிடையே இல்லை. குறிப்பாக தமிழ்த் திரையுலகில் எழுத்தாளனுக்கு பங்கே இல்லை.

மலையாள இயக்குநர் ஒருவர் என்னிடம் சொன்னார், இயக்குநர் கதை எழுதுபவராக இருந்தால்கூட தான் இயக்கும் படங்களுக்கு தானே எழுதக்கூடாது என்று. தன் கதையை புறவயமாக நோக்க அவரால் இயலாது. அதன் குறைகள் அவர் கண்ணில் படாது. அனைத்தையும் விட மேலாக அவர் அக்குறைகளை நியாயப்படுத்தும் விதமாகவே திரைக்கதை அமைப்பார். அதற்கு ஏராளமான உதாரணங்களைச் சொன்னார் அவர். இயக்குநர் தன் படத்தின் அனைத்து கூறுகளையும் வெளியே நின்று விமரிசனத்துடன் நோக்கி தனக்கு வேண்டியதைக் கொள்ளும் நிலையில் இருக்கவேண்டும் என்றார்.

கதை எழுதும் கலை வேறு, காட்சிப்படுத்தும் கலை வேறு. மலையாளத்தின் மாபெரும் இயக்குநர்கள் எவருமே கதை எழுதியவர்கள் அல்ல. அங்குள்ள மாபெரும் திரைக்கதாசிரியர்கள் நல்ல இயக்குநர்களாக மாறவும் இயலவில்லை. ஒளிப்பதிவுபோல, இசைபோல, கலையமைப்பு போல இயக்குநர் வெளியே இருந்து பெற்றுக்கொள்ளும் ஒரு கலைக்கூறாகவே கதையும் இருக்கவேண்டும். இயக்குநருக்கு அதில் முழுமையான புறவய நோக்கு இருக்க வேண்டும். உலகமெங்கும் இந்நிலைதான் உள்ளது.

இயக்குநர் ஒளிப்பதிவு உள்ளிட்ட பிற துறைகள் மேல் எந்த அளவுக்கு ‘கருணையற்ற’ கறார் நோக்கைக் கொண்டிருக்கிறாரோ அப்படியே அவர் கதையையும் அணுக வேண்டும். அவர் அந்தக் கதையை சொல் வடிவிலிருந்து காட்சிக்கலையாக மாற்ற வேண்டும். எந்நிலையிலும் ஒரு படம் அதன் இயக்குநரின் ஆக்கமேயாகும்.

தமிழில் ‘கதை, திரைக்கதை, வசனம்’ என்று தலைப்பில் பெயர் வரவேண்டுமென்ற இயக்குநர்களின் ஆசையிலிருந்து தமிழ்ப்படங்களின் இன்றைய நிலை தொடங்குகிறது. அதற்கு பிறமொழி உரிமை போன்ற வணிகக் காரணங்களும் உள்ளன. இதன் விளைவாக நன்றாக இயக்கப்பட்ட பல படங்கள் அர்த்தமில்லாமல் அலையும் திரைக்கதை கொண்டிருக்கின்றன.

சிறந்த கதை கொண்டிருக்கும் பல படங்கள் முதிர்ச்சியில்லாமல் இயக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நல்ல கதையை உருவாக்க முடிந்தால் இயக்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்பது துரதிருஷ்டவசமாக இன்று தமிழில் உள்ள நிலைமை. இயக்கப் பயிற்சி இல்லாதவர் வெறுமே கதையை மட்டும் தமிழில் திரைக்கு அளிக்க வாய்ப்பே இல்லை. ஆகவே பயில்முறை இயக்குநர்கள் உருவாக்கும் கதைகளுக்கு மட்டுமே தமிழ்த் திரையுலகம் வழி திறந்திருக்கிறது. இதேபோல தமிழில் இசையமைப்பையும் இயக்குநரே செய்ய ஆரம்பித்தால் பாடலின் தரம் என்ன ஆகும்?

உணர்ச்சிகரமாகக் கதை ‘சொல்ல’த் தெரிந்தவர் இயக்க முடியும் என்ற நம்பிக்கை இங்கு உள்ளது. கதைகள் எழுதப்படுவதுகூட இல்லை. சொல்லப்பட்ட கதைக்கு கடைசி வடிவம் இல்லை. அதன் நீளம், உணர்ச்சிகளின் சரிவிகிதம், தொடர்ச்சி எதையும் முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது. சொல்லும்போது சீரான ஓட்டம் இருக்கும். எழுதிப்பார்த்தால் துண்டுகளாக நிற்கும். ஏன், அதன் செலவைக்கூட கணக்கிட முடியாது.

உலகமெங்கும் திரைப்படத் தயாரிப்பில் உள்ள முறைமை என்பது முதலில் கதையை வாங்குதல், அதன்பின் இயக்குநரை அமர்த்துதல், அதன்பின் உரிய நடிகர்களை தேர்வுசெய்தல் என்பதாகும். இங்கு இது தலைகீழாக உள்ளது. இங்கே இயக்குநர் சொல்லும் கதையை காட்சிகளாக ஆக்க மட்டுமே அபூர்வமாக எழுத்தாளன் அழைக்கப்படுகிறான்.

இன்று திரையுலகுக்குள் வந்திருக்கும் பொதுமுதல் நிறுவனங்கள் உலகமெங்கும் உள்ள திரைவழக்கத்தை அப்படியே பின்பற்றவேண்டும் என்று சொல்லப்போனால் அது அதிக எதிர்பார்ப்பு ஆகிவிடும். ஆனால் குறைந்தது இதையாவது கருத்தில் கொள்ளலாம். ஒரு திரைப்படம் அடிப்படையில் எழுத்தாளனின் கற்பனையால் தொடங்கப்படுவது. எழுத்தில், தாளில் தீர்மானிக்கப்படுவது. இயக்குநரால் முழுமை செய்யப்படுவது.

அந்தப் புரிதல் ஏற்பட்டால் தமிழ் சினிமாவில் இன்னும் நிறைய எதிர்பார்க்கலாம்.

(சண்டே இண்டியன், பிப்ரவரி 2008, சினிமா சிறப்பிதழில் வெளியான கட்டுரை)

பிப்ரவரி 7, 2008

17. திருவாரூர் பயணம் – அரசுப் பேருந்து

திருவாரூரில் என் மாமனார் உயர்திரு சற்குணம்பிள்ளை அவர்கள் புதுவீடு கட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே பட்டுக்கோட்டையில் இருந்த வீட்டை விற்றுவிட்டு. என் மனைவி மூன்றுநாள் முன்னதாகவே போய்விட்டாள். நானும் பையனும் ஒன்பதாம் தேதி போய் பத்தாம் தேதி இறங்கினோம்.

போகும்போது யூனிவர்சல் நிறுவனத்தின் தனியார் பேருந்து. நாகர்கோயிலில் இருந்து வேளாங்கண்ணிக்குப் போவது. பெரிய காற்றணைப் பேருந்து. ஆகவே கட்டணம் இரு மடங்கு. ஆனால் வண்டி அரைமணிநேரம் ஓடியதுமே அஜிதன் ‘அப்பா கைகால் அரிக்கிறது’ என ஆரம்பித்துவிட்டான். என் கைகளும் தோளும் அரித்தன. சில நிமிடங்களுக்குள் பையனின் கைகளில் தடிப்புகள். பார்த்தபோது பேருந்தின் இருக்கைக்கு உள்ளே உள்ள நுரை ரப்பரில் வாழும் சிறிய உளுப்பன்பூச்சிகள்தான் காரணம் என்று தெரிந்தது. பலவருடங்களாக வெயில்படாமல், பூச்சிமருந்தும் அடிக்காமல் இருந்த நுரைரப்பர் உளுத்து விட்டது. ஒன்றும்செய்வதற்கில்லை. தூங்கு தூங்கு என்று சொல்லி சமாதானம் செய்தேன். சிம்பு நடித்த மன்மதன் என்ற ‘பலான’ படம் போட்டார்கள்.

அங்கே சென்று இறங்கியபோதுதான் தெரிந்தது சைதன்யாவுக்கு அதே சிக்கல் ஏற்பட்டு கைகளில் தடிப்புகள் வந்து மருத்துவரைக் காட்டி மருந்து போட்ட தகவல். திரும்பி வருவதற்கு யூனிவர்சல் பேருந்தில் சீட்டு எடுக்க முயன்றால் எல்லா இருக்கைகளும் நிரம்பிவிட்டன. ஞாயிறு மாலையானதனால் இருக்கலாம். அரசுப்பேருந்து உண்டு என்றார்கள். அதுவும் காற்றணைப்பேருந்து. கட்டணம் 30 சதவீதம் குறைவு.

ஏழு மணிக்கு திருவாரூருக்கு வரவேண்டிய வேளாங்கண்ணி களியக்காவிளை ‘சூப்பர் டீலக்ஸ்’ பேருந்து அரைமணிநேரம் தாமதமாக வந்தது. நல்ல இருக்கைகள். வண்டி கிளம்பியதுமே அருண்மொழி சொன்னாள், ‘நல்ல பஸ். பணமும் குறைவு. ஆனா பாதிகூட நிரம்பல்ல பாத்தியா?’

எனக்கும் அது புதிராகவே இருந்தது. கடைசி இருக்கைகளில் கூவிக்கூவி தஞ்சாவூருக்கு ஆள் ஏற்றிக் கொண்டார்கள். தஞ்சைக்குப் போய்ச் சேர்வதற்குள் நெடுநேரம் ஆகிவிட்டது. தஞ்சைக்கு வெளியே ஒரு சாலையோரக் குடிசைக்கடைமுன் வண்டியை நிறுத்தினார்கள். அந்தக் கடையைச்சுற்றி முட்டைஓடுகள் கோழி இறகுகள் குவிந்து மட்கி நாறிக் கொண்டிருந்தன. நெடுஞ்சாலை. ஆகவே சிறுநீர் கழிக்க வசதி இல்லை. பெண்கள் ஒரு குழுவாக திரண்டு முள்காடு வழியாகத் தாண்டி சிறுநீர் கழிக்கச் சென்றார்கள்.

தண்ணீர் வாங்கலாம் என்று அந்தக் கடைக்குச் சென்றால் ஓட்டுநரும் நடத்துநரும் இலவச பரோட்டா சிக்கனைச் சாப்பிட்டுக் கொண்டிருக்க சில பயணிகளும் சாப்பிட்டனர். மீண்டும் பேருந்து எடுக்கப்பட்டதும் ஒன்று தெரிந்தது, ஓட்டுநர், நடத்துநர் ஒரு உதவியாளர் பையன் மூவருமே மது அருந்தியிருந்தார்கள். அந்தக்கடையில் கள்ளச்சாராயமும் விற்றார்கள்.

அதன்பின் பேருந்து ஓடிய விதத்தைப்பற்றி நாவல்தான் எழுதவேண்டும். எதிரே வந்த வாகனங்களின் ஓட்டுநர்கள் உரக்க வசைபாடினர். பாதசாரிகள் கெட்டவார்த்தை கூவி கல்லை விட்டெறிய ஓட்டுநரும் நடத்துநரும் திருப்பி வசைபாடி சிரித்தார்கள். மரங்களை நோக்கி பாய்ந்து சென்ற வண்டி பயங்கரமாகக் கிரீச்சிட்டு கூவி நின்றுதிரும்பியது. குழிகளில் விழுந்து

எம்பியது.

தஞ்சை தாண்டியதும் சாலையில் வைத்து நடத்துநர் ஒரு கும்பலை ஏற்றிக் கொண்டார். அவர்கள் உள்ளே வந்து வண்டிக்குள் இடமில்லை என்று கண்டதும் கூச்சல் போட ஆரம்பித்தார்கள். ‘சீட் இருக்குன்னு சொன்னியேய்யா.’ நடத்துநர் வேறு ஒரு தர்க்கநிலையில் இருந்தார். ‘சீட் இருக்கு... ஆனா அதிலே ஆள் இருக்கு’ ‘இறக்கிவிடு’என்று அந்தக்கும்பல். ‘இனிமே அடுத்த ஸ்டாப் புதுக்கோட்டைதான்’என்று ஓட்டுநர். ஏறிய கும்பலும் முழுப்போதை. பணம் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் கூச்சலிட்டார்கள். நடத்துநரால் எழ முடியாது. ஆட்டம் – வண்டிக்கும் அவருக்கும்.

ஒருகட்டத்தில் பொறுமை இழந்த பயணிகள் எழுந்து கூச்சலிட ஆரம்பிக்க வேறுவழியில்லாமல் வண்டி நின்றது. போதைக்காரர்கள் இறக்கி விடப்பட்டார்கள். வண்டி கிளம்பியதுமே நடத்துநர் எழுந்து உள்ளே வந்து ‘...குடிச்சிருக்கேன்னா சொல்லுதே? ...யளி என்னைய ஒருத்தனும் ஆட்டிகிட முடியாது... அப்டித்தான் குடிப்பேன்...’ என்று சவால் விட்டார். நிற்க முடியாமையால் அவரால் சவாலை வெகுநேரம் நீட்டிக்க முடியவில்லை. போய் உடனே தூங்கிவிட்டார். ஓட்டுநரும் ஓரளவு தூங்க வண்டி அதன் வேகத்தில் பல இடங்களில் ஓலமிட்டும் கதறியும் ஓடியது.

வந்து சேர்வதற்கே முடியாமல் ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டாலும் மெல்ல காலையில் நாகர்கோயில் வந்து சேர்ந்தோம். வழியில் குறைந்தது இருபது முறை விபத்துக்கள் மயிரிழையில் தவிர்க்கப்பட்டன. இறங்கும்போது அப்படி ஒரு நிம்மதி. முழு தூரமும் வந்தவர்கள் சிலரே. விஷயமறியாத கடற்கரைவாசிகள் அவர்கள்.

SETC பல உயர்தர பேருந்துகளை பல ஊர்களுக்கு விட்டிருக்கிறது தமிழ்நாட்டில். தனியார் பேருந்துகளில் இருக்கைகள் கிடைப்பதில்லை. ஆனால் SETC பேருந்துகள் பாதி காலியாகவே ஓடுகின்றன. ஆகவே ஊர் ஊராக நின்று கூவிக்கூவி ஆள் ஏற்றுகிறார்கள். தனியார் பேருந்துகளில் எல்லா இருக்கைகளும் விலாசம் தந்து முன்பதிவுசெய்த பயணிகளால் நிறைந்திருப்பதனால் அவை விரைவாகவே செல்கின்றன. பாதுகாப்பும் உண்டு. ஒவ்வொரு ஊரிலும் போதையில் ஏறி இறங்கும் கும்பலால் அரசுப் பேருந்துகள் தாமதமாகின்றன. பாதுகாப்பு முற்றிலும் இல்லை.

‘லாங் ரூட் டிராவல்னா என்னைக்குமே கவர்மெண்ட் பஸ்ஸிலே ஏறப்பிடாது சார். இது சின்னக்குழந்தைக்கும் தெரியும். இல்லேன்னா சார்ஜ் குறைவா இருக்கிறதனால நம்மாளுக ஏறி அம்மிர மாட்டானுகளா? அதிலையும் நைட் டிராவல்னா ஏறவே கூடாது. ரொம்ப ரிஸ்க்...’ என்றார் நண்பர். ஆம், பூச்சி கடித்தாலும் இனி தனியார் பேருந்துதான். உயிருக்காவது உறுதி அளிக்கிறார்களே!

பிப்ரவரி 11, 2008

18. ஆனந்த விகடனின் அவதூறு

ஆனந்த விகடன் இந்தவார இதழில் அட்டைப்பட முக்கியத்துவமளித்து என் இணையதளம் பற்றி செய்தி வெளியிட்டிருக்கிறது. ‘எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் ஆகியோரை ஜெயமோகன் இழிவுபடுத்துகிறாரா?’ என்ற தலைப்புடன். ஊரெங்கும் சுவரொட்டிகள் வேறு.

இந்த இணையதளத்தைப் படிப்பவர்களுக்கு தெரியும் இதன் நகைச்சுவைப்பகுதியில் அப்படி இழிவுபடுத்தும் நோக்கம் ஏதும் இல்லை என்று. என் சாதி, மதம், தெய்வங்கள், என் குடும்பம், சிற்றிதழ்கள், மதிப்பிற்குரிய இலக்கிய மூதாதையர் , என் வணக்கத்திற்குரிய இலக்கிய ஆசிரியர்கள் ஆகிய அனைத்தையுமே வேடிக்கையாக அணுகும் பகுதி இது. இன்றைய இலக்கியத்தில் இத்தகைய பகடி மிக முக்கியமான ஒரு அம்சம்.

இதில் சில பகுதிகளை மட்டும் பெயர்த்தெடுத்து உள்நோக்கம் கற்பித்து நுண்ணுணர்வோ நகைச்சுவையுணர்வோ இல்லாத கும்பலை வன்முறை நோக்கி தூண்டி விடும்படியாக ‘ஆனந்த விகடன்’ வெளியிட்டுள்ள இந்தக் கட்டுரை சற்று எதிர்பாராத ஒன்று. விகடன் பொதுவாக இம்மாதிரி சிண்டுமுடியும் வேலைகளைச் செய்வதில்லை. இதன் பின்னால் வன்மம் கொண்ட நோக்கம் உள்ளது.

ஆனால் எதிர்பார்க்கத்தக்க விஷயம், கருத்துச் சுதந்திரம், புனித பிம்பங்களைக் கட்டுடைத்தல், அங்கதம் என்றெல்லாம் பேசி வரும் தமிழ் சிற்றிதழாளர்களிடமிருந்து சிறு எதிர்ப்போ கண்டனமோகூட இம்மாதிரி ஒரு வெளிப்படையான தூண்டிவிடுதலுக்கு எதிராகக் கிளம்பாது என்பது. வன்முறை நிகழ்ந்தால்கூட அதைக் கொண்டாடவே செய்வார்கள்.

முற்றிலும் எதிர்பார்க்க முடியாத விஷயம் விகடன் என் மறுப்பை பிரசுரிக்கும் என்பது. பிரசுரித்தால்கூட ஒருசில சம்பந்தமில்லாத வரிகளை படத்துடன் அச்சிட்டு வைப்பார்கள்.

ஆகவே விகடனுக்கு நான் அனுப்பிய கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

மதிப்பிற்குரிய ஆனந்த விகடன் ஆசிரியருக்கு,

விகடன் பிப் 1421 இதழில் என் இணையதளம் பற்றி வெளியாகியிருக்கும் கட்டுரை படித்தேன்.

என் இணையதளத்தில் வெளியாகியிருக்கும் இருபதுக்கும் மேற்பட்ட நகைச்சுவைக் கட்டுரைகளில் நமது பண்பாட்டுக்கூறுகள் அனைத்தையுமே அங்கதமாக விமரிசனம் செய்திருக்கிறேன். என் இலக்கிய ஆசிரியர்கள், தீவிர இலக்கியம், இலக்கிய முன்னோடிகள், சக படைப்பாளிகள், என் சாதி, மதம், குடும்பம் என எதுவுமே அதிலிருந்து தப்பவில்லை – அப்படித்தான் திரைப்படமும். இது இன்றைய எழுத்தின் ஒரு இயல்பாகும். இன்று இந்த அம்சம் திரைப்படங்கள் வரை வந்துள்ளது – இந்திப்படமான ‘ஓம் சாந்தி ஓம்’ ஓர் உதாரணம். அது அங்கே ஒரு மாபெரும் வெற்றிப்படம்.

இதை எதையுமே பொருட்படுத்தாமல் சில பகுதிகளை பிய்த்துப்போட்டு உள்நோக்கம் கற்பித்து எழுதப்பட்டுள்ள தங்கள் கட்டுரை, வன்முறையைத் தூண்டும் உள்நோக்கம் கொண்டது. ஆபத்தானது.

கருத்து சுதந்திரத்துக்காக சிறைசென்ற வரலாறுள்ள ஆசியரைக் கொண்டிருந்த ஓர் இதழ் இதைச்செய்திருப்பதை எப்படி புரிந்து

கொள்வதென்றே தெரியவில்லை.

அன்புடன்

ஜெயமோகன்

பிப்ரவரி 14, 2008

19 .ஆதிமூலம் நினைவிதழ்

தமிழ் சிற்றிதழுலகில் சுந்தர ராமசாமிக்கு உரிய இடம் ஆதிமூலத்துக்கும் ஒருவகையில் உண்டு. எழுபதுகளில் சிற்றிதழ்கள் தொடர்ந்து வெளிவந்து அவை மட்டுமே அறிவார்ந்த செயல்பாடுகளுக்கு உரிய ஒரே தளம் என்ற நிலை இருந்தபோது அவற்றின் முன்னுதாரணர்களாக இருவரும் இருந்தார்கள் என்று சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவரை இன்னொருவர் எப்போதும் நினைவுறுத்திக் கொண்டே இருந்திருக்கிறார்கள். சிற்றிதழ்சார்ந்து வாசிக்க ஆரம்பிக்கும் ஓர் இளம் வாசகன் எழுபதுகளில் சந்திக்க விரும்பும் இரு ஆளுமைகளாக அவர்கள் இருந்தார்கள்.

நிமிர்வான தோற்றமும், கவனமான பேச்சுமுறையும், நிதானமான அணுகுமுறையும், எவரையுமே புறக்கணிக்காமல் சமானமாக நடத்தும் குணமும் இருவருக்கும் பொதுவாக இருந்தன. அவை அவர்கள் தங்கள் இடதுசாரிக் கடந்தகாலம் மூலம் பெற்றுக் கொண்ட பண்புகள். இருவருக்குமான பொதுக்கூறாக அவர்கள் தங்கள் உடல்நிலையை எதிர்கொண்ட விதத்தையே சொல்லலாம். சுந்தர ராமசாமி ஒரு பிறவி நோயாளி என அவரை நன்கறிந்தவர்கள் கூட அறிந்திருக்க மாட்டார்கள். ஆதிமூலம் ஐந்துவருடங்களாக ரத்தப்புற்றுநோயால் மரணம்நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் என நெருக்கமான நண்பர்கள் கூட அறியவில்லை.

ஆகவேதான் சுந்தர ராமசாமியின் மரணம்போலவே சிற்றிதழாளர் நடுவே ஆதிமூலத்தின் மரணமும் அழுத்தமான வெற்றிடத்தை விட்டுச்சென்றிருக்கிறது. தமிழ் சிற்றிதழ் தடத்தில் பணியாற்றும் கணிசமானவர்களுக்கு ஆதிமூலத்துடன் நெருக்கமான தனிப்பட்ட தொடர்பு இருந்திருக்கிறது. அவரது தனிப்பட்ட பண்புநலன்கள் அவர்களை கவர்ந்திருக்கின்றன. பலருக்கு தனிவாழ்க்கையில் அவர் பெரிய உதவிகள் செய்திருக்கிறார். ஏராளமானவர்களுக்கு அவர்களுடைய முதிராவயதில் எழுச்சியூட்டும் முன்னுதாரணமாக திகழ்ந்திருக்கிறார்.

ஆதிமூலம் சிற்றிதழியக்கத்தின் முகமாக திகழ்ந்தாரென்பதை இப்போது ஒரு சிற்றிதழ் கண்காட்சியைப் பார்க்கும்போது எவரும் உணரலாம். சிற்றிதழ்களுக்கே உரிய எழுத்துருமுறை ஒன்றை அவர் உருவாக்கியளித்திருக்கிறார் – பழைய கல்வெட்டுகளில் இருந்து எடுத்துக் கொண்டது அது. பெரும்பாலான சிற்றிதழ்களில் அவரது கோட்டோவியங்களே அட்டைப்படங்களாக இருக்கின்றன. பெரும்பாலான கவிதை நூல்களில் அவரது கோட்டோவியங்கள் அட்டையையும் உள்ளையும் நிறைத்திருக்கின்றன. கைப்பணம் செலவழித்து ஒரு ஆர்வத்துடன் தொடங்கி ஒரே இதழில் நின்றுபோகும் சிற்றிதழ்களுக்கெல்லாம் அவர் தயங்காமல் வரைந்திருக்கிறார். அதன் மூலம் ஓர் ஓவியராக அவரது துறையில் அவருக்கு எந்த லாபமும் இல்லை. ஓவியராகப் பார்த்தால் முற்றிலும் நேர விரயம்தான். அது சிற்றிதழியக்கம் மேல் ஆதிமூலத்துக்கு இருந்த நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் காட்டுவதாகும்.

அந்தச் சிற்றிதழ் முன்னோடிக்கு சிற்றிதழ்கள் சார்பில் செய்யப்பட்ட தகுந்த மரியாதை என 'மணா' தொகுத்து 'உயிர்எழுத்து' வெளியிட்டுள்ள 'ஆதிமூலம் அழியாக்கோடுகள்' என்ற நூலை சொல்ல முடியும். ஆதிமூலத்தின் நெடுநாள் நண்பரும் தமிழ் சிற்றிதழ் இயக்கத்தின் தூண்களில் ஒருவருமான எஸ்.வி.ராஜதுரை எழுதிய அணிந்துரை 'ஆதிக்கு ஒரு

மலர்வளையம்' நேர்த்தியான மொழியில் நெகிழ்ச்சியுடன் எழுதப்பட்டுள்ளது.

'மனப்பதிவுகள்' என்ற தலைப்பில் ஆதிமூலத்தின் விரிவான பேட்டி, அவரது வாழ்க்கைபற்றி அவரே சொன்னவை, யூமா வாசுகியின் ரத்த உறவு நாவலுக்கு அவர் எழுதிய விமரிசனக்குறிப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. அத்துடன் ஈழக் கலைவிமரிசகரான த.சனாதனன், தமிழகக் கலைவிமரிசகர் இந்திரன் ஆகியோர் ஆதிமூலத்தின் கலைபற்றி எழுதிய விரிவான விளக்கக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆதிமூலத்தின் பலமுகம் கொண்ட ரசனைகள், அவரது கலைநோக்கு ஆகியவற்றைப்பற்றிய நுண்ணிய பதிவு இப்பகுதி.

இரண்டாம் பகுதி 'உறவின் குரல்'. பொதுவாக இத்தகைய அஞ்சலி நூல்களில் வராத ஒன்று. ஆதிமூலம் பற்றி அவரது சகோதரர்கள் க.எம்.ரங்கசாமி, பங்காரு, க.எம்.சோமசுந்தரம், ஆதிமூலத்தின் பிள்ளைகள் அபனீந்திரன், அபராஜிதன் மற்றும் நண்பர்கள், அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆகியோரின் நினைவுகள் பதிவாகியுள்ளன.

மூன்றாம் பகுதி தூரிகை நேசங்கள். தமிழக கலையிலக்கியச் சூழலில் இருந்து ஆதிமூலத்துடன் தொடர்புகொண்டிருந்த ஓவியர்கள் கவிஞர்கள் சிற்றிதழாளர்கள் ஆகியோரின் நினைவுகள். ஏறத்தாழ நூலின் பாதிப்பங்கு இதுவே. பெரும்பாலான நினைவுகள் நட்பின் நெகிழ்ச்சியுடனும் மதிப்புடனும் ஆத்மார்த்தமாக எழுதப்பட்டவை. 'கசடதபற' இதழுடன் ஆதிமூலம் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். அவ்விதழை நடத்திய ஞானக்கூத்தன், சா.கந்தசாமி, ந.முத்துசாமி, கி.ஆ.சச்சிதானந்தம் போன்றவர்களின் நினைவுகள் நெருக்கமும் நட்பும் இழைபவை.

ஆனால் செழியன், கவிஞர் சுகுமாரன், கி.ராஜநாராயணன் ஆகியோரின் குறிப்புகளில் மட்டுமே ஆதிமூலத்தின் தனிப்பட்ட ஆளுமை, அவரது வசிப்பிடம் பற்றிய கலைபூர்வமான சில சித்திரங்கள் உள்ளன. மற்றவை பொதுவான அஞ்சலிக்குறிப்புகள். இத்தகைய ஒரு நூலில், இத்தனை படைப்பாளிகள் பங்குகொண்டிருந்தும்கூட, மறைந்த ஆளுமையின் ஒரு நல்ல சொற்சித்திரம் காணக்கிடைக்கவில்லை என்பது குறையே.

நான்காம் பகுதி 'ஆதிமூலம் கோடுகளில் இருந்து வண்ணத்துக்கு' ஆதிமூலத்தின் கலையின் பரிணாமத்தைக் காட்டும் சித்திரங்கள் அடங்கியது. கோட்டுச்சித்திரங்களில் தொடங்கியவர் அரூப ஓவியங்களுக்கு வந்த வழியை இதில் காண முடிகிறது.

ஆதிமூலத்தின் அபூர்வமான புகைப்படங்களுடன் மிக அழகாக பக்கங்கள் வடிவமைக்கப்பட்ட இந்நூல் அவருக்குச் செலுத்தப்பட்ட முக்கியமான அஞ்சலி.

('ஆதிமூலம் அழியாக்கோடுகள்', தொகுப்பு மணா. வெளியீடு: உயிர்எழுத்து)

பிப்ரவரி 16, 2008

20. விகடனை எண்ணும்போது...

அன்புள்ள ஜெயமோகன்,

விகடன் செய்தியின் விளைவுகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? எப்படி உணர்கிறீர்கள்?

ராஜேந்திரபிரசாத்

அன்புள்ள ராஜேந்திரபிரசாத்,

இதுவரை கிட்டத்தட்ட முந்நூறு மின்னஞ்சல்கள் வந்துள்ளன. தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. சாதாரணமாக ஒருநாள் ஆயிரம்பேர் பார்க்கும் இந்த தளத்தின் பார்வையாளர் எண்ணிக்கை ஆறுமடங்கு பெருகியிருக்கிறது. நேற்று மட்டும் 5613. இன்று மதியம் ஒருமணி வரை 3148.

பெரும்பாலும் எல்லா வாசகர்களும் ஆனந்தவிகடன் இதழ் செய்திருக்கும் பொறுப்பற்ற செயல் பற்றிய வருத்தத்தையே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களில் பலர் விகடனில் வெளியான எனது 'சங்கச்சித்திரங்கள்' மூலம் என்னை அறியவந்தவர்கள். விகடனின் நெடிய வரலாற்றில் இத்தகைய ஒரு 'ஆள்காட்டி' கட்டுரை இதுவே முதல் முறை என்ற வருத்தம் பலருக்கு இருக்கிறது. எனக்கும்.

சிலர் எழுதிய கடிதங்களில் பொதுவாக எழுந்துவந்த சில ஐயங்களை மட்டும் இப்போது உங்கள் வினாவுக்கான பதிலுடன் இணைத்துக் கொள்கிறேன்.

*

சிவாஜி அல்லது எம்.ஜி.ஆர் அல்லது இந்த இணையதளத்தில் பகடிசெய்யப்பட்டிருக்கும் பிற எவரையும் இழிவுசெய்யும் நோக்கம் எனக்கு இல்லை. இவர்களில் பலர் என் நண்பர்கள், மதிப்பிற்குரிய ஆசிரியர்கள். இது ஓர் இலக்கிய வகைமை. தமிழில் சிற்றிதழ் சார்ந்து எழுதப்படும் தீவிர இலக்கியத்தில் எப்போதுமே இந்த அம்சம் இருந்திருக்கிறது.

விகடனின் இன்றைய நட்சத்திர எழுத்தாளரான சுஜாதா நாற்பது வருடம் முன்பு திருவிளையாடல் படம் குறித்து கணையாழியில் எழுதியவைக்குக் கூடுதலாக ஒன்றும் என் கட்டுரையில் எழுதப்படவில்லை. சுந்தர ராமசாமி உள்பட எல்லா எழுத்தாளர்களும் இப்படி எழுதியிருக்கிறார்கள். சமீபத்திய சிறந்த உதாரணம் பி.ஏ.கிருஷ்ணனின் 'புலிநகக் கொன்றை' (காலச்சுவடு பதிப்பகம்) பெங்குவின் பதிப்பக வெளியீடாக ஆங்கிலத்தில் வெளிவந்து உலகெலாம் படிக்கப்பட்டு ஒரு கிளாசிக் என புகழப்பட்ட Tiger Claw Tree *நாவலின் இந்த தமிழாக்கத்தில் எம்.ஜி.ஆர். சிவாஜி குறித்து வெளிவந்தவற்றுக்கு ஒரு படி குறைவாகவே என் கட்டுரைகள் உள்ளன என்று நீங்கள் வாசித்தால் காணலாம். காந்தியைப்பற்றியும் நேருவைப்பற்றியும் இதைவிட பல மடங்கு உக்கிரமான பகடிகளை எழுதிய வி.எஸ்.நைபாலுக்குத்தான் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்திய அரசால் அவர் கௌரவிக்கப்பட்டார்.*

ஆம், இலக்கியத்தில் இல்லாத ஒன்றை, தேவையற்ற ஒன்றை நான் எழுதிவிடவில்லை. அங்கதம் இலக்கியத்தின் அடிப்படை இயல்புகளில் ஒன்று. அதிகார அமைப்பை, புனிதங்கள்

என்று கருதப்படுவனவற்றை, எல்லாராலும் ஏற்கப்பட்டுவிட்ட ஒன்றைத்தான் எப்போதும் அங்கத இலக்கியம் தன் குறியாகக் கொள்கிறது. அதை தன் நகைச்சுவை மூலம் தலைகீழாக்கிப் பார்க்கிறது. சாதி, மதம், தெய்வம், அரசாங்கம் அனைத்தையும் நகைச்சுவையாக ஆக்கும் உரிமை இலக்கியத்துக்கு உண்டு என்று உலகமெங்கும் உள்ள நாகரீக சமூகங்கள் அங்கீகரித்துள்ளன.

நமது அண்டைமாநிலமாகிய கேரளத்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மட்டும் பாருங்கள். கடுமையான கிண்டலுக்கு உள்ளாக்கப்படாத எவராவது உள்ளனரா என்று தேடுங்கள். மம்மூட்டியை தலைவராகக் கொண்டதும், கம்யூனிஸ்டுக் கட்சியால் நடத்தப்படுவதுமான 'கைரளி' டிவியில் மம்மூட்டியையும், கம்யூனிஸ்டு தலைவர்களையும் சகட்டுமேனிக்கு கிண்டல்செய்து ஒவ்வொருநாளும் நிகழ்ச்சிகள் வெளியாகின்றன.

'ஏசியாநெட்' தொலைக்காட்சியில் 'சினிமாலா' என்று ஒரு நிகழ்ச்சி. அதில் வாரந்தோறும் தலைவர்களை கிண்டல் செய்வார்கள். தலைவர்களைப்போல வேடமிட்டுவந்து வந்து அவர்களைப்போலவே குரலால் பேசி அவர்களின் உடலசைவு, பேச்சுமுறை எல்லாவற்றையும் சேட்டைகளாக மாற்றி பகடி செய்வார்கள். எப்போதுமே அதன் முக்கிய இலக்கு கேரளத் தலைவர் கே.கருணாகரன். காரணம் அவரது முதுமை காரணமாக அவர் பேசுவது இயல்பாகவே சற்றுக் குளறலாக இருக்கும். அந்நிகழ்ச்சியின் நாநூறாவது நாள் நிறைவுக்கு சிறப்பு விருந்தினராக வந்து அக்கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கியவர், கே.கருணாகரனேதான்.

அத்தகைய அறிவார்ந்த தரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் தமிழ்நாட்டில் எதிர்பார்க்க இயலாது என்று நான் அறிவேன். எதற்கெடுத்தாலும் மிகையாக உணர்ச்சிவசப்படுவதும், மனிதர்களைப் புகழ்ந்து புகழ்ந்து கடவுள் நிலைக்கு உயர்த்துவதும், மாற்றுக்கருத்தை வன்முறைமூலம் எதிர்கொள்வதும் இங்கு ஒரு பண்பாடாகவே வளர்க்கப்பட்டுள்ளது. ஆகவே இன்று பிரபல இதழ், தொலைக்காட்சி உள்பட நமது பொது ஊடகங்களில் பகடியும் அங்கதமும் சாத்தியமே இல்லை. மாறி மாறிப் புகழ் பாடுவதற்கு மட்டுமே இடமுள்ளது.

ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளுக்கு தீவிரஇலக்கியம் ஒத்துப்போகவேண்டுமென்று எதிர்பார்ப்பது இலக்கியம் மீதான ஒடுக்குமுறையாகவே எஞ்சும். அதன் பின் புதுமைப்பித்தனோ, ப.சிங்காரமோ தமிழில் இருக்க முடியாது. நவீன இலக்கியமே இருக்க முடியாது.

என்னுடைய கட்டுரைகள் இலக்கியத்திற்குரிய அரங்கில் மட்டுமே முன்வைக்கப்பட்டவை. இலக்கியத்தில் பகடியின் இடத்தை அறிந்த சிலர், ஏற்கனவே புதுமைப்பித்தன் முதல் பி.ஏ.கிருஷ்ணன் வரையிலான எழுத்தாளர்களைப் படித்தவர்கள் மட்டுமே அதைப் படித்தார்கள். இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் இருந்தால் அதை இலக்கிய வாசகர்கள் அல்லாத பொது வாசகர்கள் படிக்கும் பெரிய ஊடகங்களில் எழுதியிருப்பேன். உண்மையில் இக்கட்டுரைகளை மறுபிரசுரம் செய்ய பிரபல இதழ்கள் விரும்பிக் கேட்டன. நான் மறுத்துவிட்டேன். பிரபல இதழ்களில் உள்ள பொதுவான வாசகர்களுக்குப் புரியக்கூடியவற்றை எழுதித்தருகிறேன் என்றே சொன்னேன்.

அப்படியானால் இந்த ஆளுமைகளை இழிவுபடுத்தியது யார்? இவற்றை என் அனுமதி இல்லாமலேயே எடுத்து மறுபிரசுரம் செய்த 'ஆனந்த விகடன்'தான். உண்மையில் இக்கட்டுரைகளை விகடனில் பிரசுரம் செய்ய ஒரு குறுக்கு வழியையே அவர்கள் தேடியிருக்கிறார்கள். கட்டுரைகளை அப்படியே எடுத்துப் போட்டால் அது சட்டவிரோதமாகும். உடைத்து மேற்கோளாகக் காட்டினால் சட்டப்படி சரி. கட்டுரையையும் மறுபிரசுரம் செய்யலாம், எந்தப் பொறுப்பும் கிடையாது என்று எண்ணியிருக்கிறார்கள்.

ஒரு தரமான இலக்கியச் சூழலில் அதற்கான ஒருசில வாசகர் நடுவே இலக்கிய நோக்குடன்

மட்டுமே வாசிக்கப்பட்ட இக்கட்டுரைகளை இலக்கியம் பற்றி அறியாத வாசகர்கள் நடுவே கொண்டுசென்று வேறுவகையாக வாசிக்கச்செய்தது வழியாக எம்.ஜி.ஆர், சிவாஜி இருவரையும் இழிவுபடுத்தியது விகடன்தான். மிக துரதிருஷ்டவசமானது இது.

எம்.ஜி.ஆரின் பேச்சுமுறையைக் கிண்டல் செய்யலாமா என்ற வினா. உடல்ஊனத்தைப் பழிப்பது ஒழுக்கமல்ல. ஒருபோதும் நான் என் தனிவாழ்விலும் எழுத்திலும் அதைச் செய்ததில்லை.

ஆனால் இலக்கியத்தில் இதற்கு இடமிருக்கிறது. பின்நவீனத்துவ காலத்து இலக்கியம் அங்கதத்தை 'கவிழ்ப்பாக்கம்' [subversive writing] என்றே குறிப்பிடுகிறது. ஒன்றை நேர் தலைகீழாக்கிப் பார்த்தல். நமது புராணங்களை அப்படி தலைகீழாக்கிப் பார்க்கும் பல நூல்கள் தமிழிலேயே வெளிவந்துள்ளன. அவற்றுக்கு நாகரீக எல்லைகளோ, ஒழுக்க எல்லைகளோ இல்லை. ஏனென்றால் நாகரீகம், ஒழுக்கம் என்று வரையறைசெய்து அதிகாரமாக ஆக்கியிருக்கும் விஷயங்களைத்தான் அவை தலைகீழாக்குகின்றன. உதாரணமாக நம் மரபில் முதியவர்களை நாம் மதிப்பாகவே நடத்துவோம். இது தொன்மையான பிதா வழிபாட்டின் ஒரு வடிவம் மட்டுமே என்றும் எந்த மனிதனையும் அவனது இயல்புகளுக்காக மட்டுமே மதிக்கவேண்டுமன்றி வயதுக்காக அல்ல என்றும் ஓர் எழுத்தாளன் எண்ணக் கூடாதா என்ன? அதை அவன் செய்யும்போது அது முறையல்ல என்று ஒழுக்க விதியை போட முடியுமா? ஒழுக்கத்தை மீறும்பொருட்டுதானே அவன் அதை எழுதுகிறான்?

மேலும் ஒரு புகழ்மிக்க மனிதரின் பேச்சுமுறை என்பது அவரது அடையாளம் மட்டுமே. அவரது குறை அல்ல அது. அப்படிப்பட்ட அடையாளங்களை மட்டுமே அங்கத இலக்கியம் எடுத்துக் கொள்ள முடியும். நானறிந்தவரை நாற்பது வருடங்களாக இ.எம்.எஸ்.நம்பூதிரிப்பாடு அவர்களின் திக்குவாய் கிண்டலடிக்கப்படுகிறது. 'நம்பூதிரிப்பாடு பேருரையாற்றினார். திக்கலைத் தவிர்த்தால் அது ஒரு சிறு குறிப்புதான்' – எழுதியவர் புகழ்பெற்ற கேரள எழுத்தாளர் வைக்கம் முகமது பஷீர்.

மீண்டும் அதைத்தான் சொல்கிறேன். தமிழின் பொதுச்சூழலில் இலக்கியம் பற்றிய அறிதலே இல்லை. ஆகவே இத்தகைய விஷயங்களை நாம் பொதுவாசகர்களிடையே கொண்டு செல்ல முடியாது. திட்டமிட்டு அப்படிக் கொண்டுசென்றது ஆனந்தவிகடன் செய்த பிழை. இதன்மூலம் அந்த இதழ் அவ்விரு ஆளுமைகளையும் பொதுமக்கள் முன் இழிவுபடுத்தியிருக்கிறது.

இதை விகடன் செய்வதற்கு தனிப்பட்ட காரணமும் உண்டு. திடமான ஆதாரம் இல்லாமல் அதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இத்தகைய தனிப்பட்ட காழ்ப்புகளை சமூகப் பிரச்சினைகளாக ஆக்குவது மிக மிகப் பிழையான ஒன்று என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் செயல் மூலம் ஆனந்த விகடன் ஒரு பெரிய சவாலை இலக்கியவாதிகளுக்கு விடுத்துள்ளது. தமிழில் இன்றுவரை ஓர் எழுத்துச் சுதந்திரம் உள்ளது. கலை, அரசியல், பண்பாடு குறித்து எழுத்தாளர்கள் சுதந்திரமாக எழுதி வருகிறார்கள். அந்த எழுத்தைப் புரிந்துகொள்ள முடியாத ஒரு பெரிய வட்டம் நவீன இலக்கியத்தைச் சூழ்ந்து உள்ளது. அவ்வட்டத்துக்கு இவ்வெழுத்துக்களை போட்டுக் கொடுப்பது மூலம் எழுத்தாளர்களை முற்றிலும் பாதுகாப்பற்றவர்களாக ஆக்கிவிடலாம். மிக ஆபத்தான ஒரு மிரட்டலை விகடன் இலக்கியவாதிகளுக்கு விடுத்துள்ளது. நாளை இதை யாரும் செய்யலாம். மதவாதிகள், அரசியல்வாதிகள். இங்கும் தஸ்லீமா நஸ்ரின் மீது நடந்தது போன்ற அடக்குமுறைகளும் அத்துமீறல்களும் நடக்கலாம். அதற்குத்தான் விகடன் வழிகாட்டியிருக்கிறது.

நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட இதழ் வந்துசேர்ந்திருக்கும் இடம் என்று நினைக்கும்போது ஏற்படும் வருத்தமே அனைத்திலும் மேலாக உள்ளது.

பிப்ரவரி 17, 2008

[21. தேனியில்...]()

'நான் கடவுள்' படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. 'வாங்க, வந்து ஒரு நாலுநாள் ஜாலியா இருந்துட்டுப் போங்க' என்றார் பாலா. இரண்டு மலைகளில் கோயில் அரங்குகளை கிருஷ்ணமூர்த்தி அமைத்திருக்கிறார். எது கல்மண்டபம் எது தக்கை என்று கண்டுபிடிக்க முடியாது. கல் என நினைத்து சாய்வது தக்கையாக இருப்பதும் தக்கை என ஓங்கி குட்டி கல்லில் கை வீங்குவதும் அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருந்தது.

நான் நேராக அறைக்குப் போய் குளித்துக் கொண்டிருக்கும் போது பாலா காலையிலேயே குளித்து உடைமாற்றி என் அறைக்கு வந்து என்னைப் பார்த்ததுமே சிரிக்க ஆரம்பித்தார். 'சரி குளிச்சிட்டு வாங்க. என்ன ஒரு மாதிரி முழிக்கிறீங்க? பிரச்சினையெல்லாம் சரியாயிரும், எதுவா இருந்தாலும் பாத்திருவோம். பயப்படாதீங்க' 'அதில்ல பாலா. நீங்க காலையிலேயே எந்திருச்சிருக்கீங்க இதில ஏதாவது புதுசா பிரச்சினை கௌம்புமோன்னு பயமா இருக்கு..' என்றேன்.

பெரியகுளம் படப்பிடிப்பு இடத்துக்குப் போனதுமே காரவானுக்குள் நுழைந்தேன். ஆர்யா முகமெங்கும் தாடியுடன் நரசிம்மம் போல அமர்ந்து மடிக்கணினியில் ஏதோ தட்டிக் கொண்டிருந்தார். 'வாங்க சார்... சீட்டுக்கு அடியிலே ஒளிஞ்சுக்கிறீங்களா?' 'இல்ல வேண்டாம் நிக்கிறேனே.' '...இல்ல இப்பல்லாம் நீங்க அப்டித்தான் உக்காந்து பேசறதா சொன்னாங்க?' அருகே கறுப்பான ஒரு பெண் உட்கார்ந்திருக்க 'இவளைப் பாத்தீங்கள்ல? இந்த உருவத்துக்குள்ள பூஜா இருக்கா' என்றார்.

உண்மையிலேயே பூஜாவைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. இத்தனை சின்னப்பெண் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஓரம்போவில் புடவையெல்லாம் கட்டி உயரமாக இருந்தது போலிருந்தது. 'கொடுமை பண்ணிட்டார் பாலா' என்றேன். 'வால்க்கையிலே எதாவது ஸிரப்பா பன்னனும் இல்ல ஐயா? நெடிக்க வெந்தாச்சு...' என்றார் பூஜா. இயக்குநர் சீமானின் நட்பால் தூயதமிழுக்கு கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு மூச்சுப்பிடித்து பேசிக் கொண்டிருக்கிறார் என்றார் ஆர்யா. சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் 'யனது புக்கைப்படம்' என்று சொல்லப்போய் நிகழ்ச்சி தொகுப்பாளினி விழிபிதுங்கியதை ஆர்யா சொன்னார். ஆர்யா சென்னைத்தமிழ் உட்பட எல்லா செந்தமிழிலும் விற்பன்னர்.

பாலா தீவிரமாக சண்டைக்காட்சியை படமாக்கிக் கொண்டிருந்தார். ஸ்டண்ட் சிவாவின் உதவியாளர்கள் கோட்டியும் ராஜேந்திரனும் கட்டிப்புரண்டு கத்தி அடித்து செய்துகாட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தாலே வயிற்றைக் கலக்கியது. பொதுவாக நான் தீவிரமான சண்டைக்காட்சிகளைக்காண பயப்படுவேன். ஜாக்கிசான் என்றால் பிடிக்கும். பாலாவின் படங்களில் சண்டைக்காட்சிகள் கிட்டத்தட்ட உண்மையான சண்டைகள். காசியில் ஒவ்வொருநாளும் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். மூர்க்கமான அடிகள் உதைகள்.

அதிலும் ஆர்யா ஏற்கனவே ஒரு படத்தில் திரைப்படச் சண்டைக்காட்சி உதவியாளர் வேடத்தில் நடிப்பதற்கான இரண்டுவருடம் முறையாக பயிற்சி எடுத்திருந்தார். (அப்படத்தில் வேறு யாரோ நடித்தார்களாம்) ஆகவே சண்டைக்காட்சிகள் சமரசங்களே இல்லாமல் நேரடியாகவே படமாக்கப்பட்டன.

மலைமீது ஏறுவதுதான் மொத்தத்தில் கஷ்டம். பேசியபடியே ஏறும்போது பத்தடிக்கு ஒருமுறை ஆர்தர் வில்சன் நின்று தீவிரமாக, 'சார் இப்ப இந்த சென் பௌத்தம்னா அதிலே யோகா உண்டா?' என்பது போன்ற ஆழமான ஐயங்களைக் கேட்பதற்குக் காரணம் மூச்சுவாங்குவதுதான் என்பது தெரிந்தது. எங்கெங்கும் கூட்டம். துணைநடிகர்கள், ஏராளமான விளிம்புநிலை மக்கள். சித்திரக்குள்ளர்கள், விசித்திரமான உடல் கொண்டவர்கள், சாமியார்கள்.

சினிமாப்படப்பிடிப்பில் உள்ள மாயக்கவர்ச்சி என்பது ஒரு பெரிய கூட்டமே சேர்ந்து ஒரு விஷயத்தில் ஈடுபடும்போது ஏற்படும் குடும்ப உணர்வும் உற்சாகமும்தான். அது ஒரு கலைச்செயல்பாடும்கூட, ஈடுபடுபவர்கள் பலவகையான கலைஞர்கள் என்னும்போது அந்தக்கொண்டாட்டம் பலமடங்கு அதிகரிக்கிறது. இத்தகைய ஒரு கலைஞர்களின் கூடல் வேறு எந்த தளத்திலும் இப்போது நிகழ்வதில்லை. சிற்பிகள், தச்சர்கள், ஓவியர்கள், புகைப்பட நிபுணர்கள்... படப்பிடிப்பு முடியும்போது இந்தக் கூட்டு அப்படியே மறைந்து இல்லாமலாகிறது. அத்தனைபேரும் வேறு கூட்டுகளுக்குச் சென்றுவிடுவதனால் இது மறந்தும் போகிறது. அந்த ஒரே படத்தில் வேலைசெய்தவர்களுக்கு மட்டும் அது ஓர் இனிய கனவாக வெகுகாலம் நீடிக்கும்.

இப்படத்தில் நடிக்கும் பிச்சை எடுக்கும் மக்களுக்கும் சாமியார்களுக்கும் இது ஒரு பெரிய திருவிழாக்காலம். ஒருவேளை இதுவே அவர்கள் வாழ்வின் உச்ச தருணம். இந்தப்படம் இத்தனை நீண்டதே அவர்களின் பிரார்த்தனையின் விளைவோ என்னவோ? இந்த வசதிகள் அதைவிட மதிப்பும் முக்கியத்துவமும் வேறு எங்கே கிடைக்கும் அவர்களுக்கு? பல முகங்கள். சற்று கண்பழகிய பிறகு அவர்களில் பலரிடம் இருக்கும் குழந்தைத்தன்மை மிக ஆழமானதாக தோன்ற ஆரம்பித்தது. குறிப்பாக இதில் நடிக்கும் அரவானி ஒருவர். நான் ஊர்சுற்றிய நாட்களில் அரவானிகளுடன் பழக்கம் இருந்தது. ஆனால் இவரளவுக்கு அழகான எவரையும் கண்டதில்லை. பெண்மையும் ஆண்மையும் கலந்த ஒரு நளினம். அவர் சிரிப்பது நடப்பது எல்லாமே அழகாக இருந்தது. மனித அழகுகளுக்கு எல்லைகளே இல்லை.

இடைவேளையில் முத்துக்குமார் என்ற இரண்டடி உயரமான பத்துவயதுப் பையனை இடுப்பில் எடுத்துவைத்துக் கொண்டு அவன் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தார் ஆர்தர் வில்சன். மானிட்டர் பக்கத்தில் பாலாவின் இருக்கையைச் சுற்றி நாலைந்து குள்ளமான விசித்திரக் குழந்தைகள். அவர்களுக்குள் சண்டைகள். 'சார் அவன் அடிக்கிறான் சார்'. 'சார் அவன் போட்டுக்குடுக்கிற ஆளு சார்,நம்பாதீங்க' என்பதுபோன்ற புகார்களை பாலாவே பஞ்சாயத்து செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு பலவண்ண மூக்குக்கண்ணாடிகளை கொடுத்து அமைதி நிலவச்செய்தார்.

இதில் இவர்களுக்கு கல்விகற்பிக்கும் பொறுப்பையும் பாலா ஏற்றிதருப்பதாகத் தெரிகிறது. 'வாரத்திலே மூணுநாள் ஸ்கூல் போயிடுவான். முட்டை போடுற எடம்னு சொல்றான் ஸ்கூலை டேய் எழுதுரா ...முட்டை எழுது'. தாளும் பேனாவும் கொடுக்கப்பட்டபோது பையன் மூச்சுப்பிடித்து 'கூமுட்ட' என்று எழுதிக் காட்டினான். 'ஸ்கூலிலே போய் எழுதினா இன்னும் ரெண்டு முட்ட ஜாஸ்தி கெடைக்கும்னு சொல்லியிருக்கு' என்றார் பாலா.

பிச்சை எடுத்திருந்த மூன்றடி உயரமான முருகேஸ்வரி ஆர்யாவை நோக்கி 'ன்னா சார், சோறு துண்ணியா?' என்று சகநடிகர் பாவனையில் கேட்கவைக்கும் சினிமாவைவிட சக்தியான ஒன்றையும் காண நேர்ந்தது. லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கும் ஆர்யா சண்டைக்குப்பின் மூச்சிரைக்க வந்து அரையடி உயரம் கூட இல்லாமல் உட்கார்ந்திருக்கும் ஒருவரிடம் 'ஸ்கோர் என்ன முத்து?' என்று கேட்க அவர் சலித்தபடியே சொல்ல இருவரும் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் பற்றி இணைந்து கவலைகொள்வதைக் கண்டேன். கிரிக்கெட் பல்லாயிரம் சினிமாவுக்குச் சமம்போலும்.

பிப்ரவரி 25, 2008

22. விகடன் பற்றி இறுதியாக....

'புலிநகக் கொன்றை' ஆசிரியர் பி.ஏ.கிருஷ்ணன் பயனீர் ஆங்கில இதழில் எழுதியிருக்கும் கட்டுரை (P.A.Krishnan on Jeyamohan: I wish the writer good luck Slaps and sticks for calling 'em slapstick) ஒன்றை நண்பர் அனுப்பியிருந்தார்.

என்னுடைய எண்ணம் இதிலிருந்து சற்றே மாறுபட்டது. இதுவரை வசைகளும் கண்டனங்களும் பல வந்துள்ள போதிலும் பொதுவாக நம் சூழலில் இருந்து வந்த எதிர்வினை மிகவும் ஜனநாயகபூர்வமாகவே இருந்தது என்றே படுகிறது. திரைத்துறையும் சரி பல்வேறு ரசிகர் அமைப்புகளும் சரி, நிதானமாகவே இப்பிரச்சினையைக் கையாண்டார்கள்.

பிரச்சினை நம் ஊடகங்களிலேயே என்பது மீண்டும் உறுதியாகிவிட்டது. நம் மக்களை மூளையில்லாத கும்பலாக அணுகவே அவை ஆசைப்படுகின்றன. விகடனின் எதிர்பார்ப்பும் கட்டுரையின் தொனியும் அதையே காட்டுகின்றன.

பொதுவாக இதழ்களின் தலையங்கம் அவ்விதழின் இதயம் என்பார்கள். நம் இதழ்களின் இதயங்கள் ஜனநாயகம் மனிதாபிமானம் என்ற லப்டப் ஒலியில் இயங்குகின்றன. விகடனுக்கு இரட்டை இதயம்.

ஆனால் விகடன் அதன் செயலைக் கண்டித்து வந்த எந்த கடிதத்தையுமே பிரசுரிக்கவில்லை என்பதை அதன் இணைய பக்கத்தை பார்த்தவர்களே உணரலாம். அவர்களின் பொறுப்பின்மையால் பாதிக்கப்பட்ட நான் எழுதிய நியாயமான மறுப்பைக்கூட பிரசுரிக்கவில்லை. சில வரிகளே இருந்தது அது. இவர்களை எனக்கு நன்றாகவே தெரியும். நீண்ட கடிதம் போட்டால் அதில் இருந்து சம்பந்தமில்லாத வரியை பிடுங்கிப்போட்டு இடமில்லாத காரணத்தால் சுருக்கினோம் என்பார்கள். அதை விட எழுத்தாளர்கள் சேர்ந்து அனுப்பிய கடிதத்தையும் போடவில்லை. அந்தக் கடிதம் திண்ணை இணைய தளத்தில் உள்ளது.

விகடனின் ஜனநாயகம் இதுவே. இத்தகைய ஊடகங்களால்தான் நம் கலாசாரச் சூழல் சிறுமைப்படுகிறது. சினிமாவால் அல்ல. அரசியலாலும் அல்ல என்று படுகிறது.

பிப்ரவரி 25, 2008

23. பேராசிரியர் மௌனகுரு

ஈழ நாடகப் பேராசிரியர் மௌனகுரு மட்டக்களப்பிலிருந்து சென்னைக்கு வந்து கேரளம் சென்று திருவனந்தபுரம் வழியாக என் வீட்டுக்கு வந்திருந்தார். இரண்டுநாள் என்னுடன் தங்கினார். குழந்தைகளுடன் சட்டென்று இணைந்துவிடும் பழக்கம் கொண்ட உற்சாகமான மனிதர் சில கணங்களிலேயே என் பிள்ளைகளுக்குப் பிடித்தமானவராக ஆனார். ‘இவரா? நீ பேரைச்சொன்னப்போ யாரோ சாமியார் வருவார்னுல்ல நினைச்சேன்?’ என்றான் அஜிதன். பேராசிரியர் சிறுவயதில் நடனமாடுவார் என்ற தகவலின் வியப்பிலிருந்து சைதன்யாவால் எளிதில் வெளிவர முடியவில்லை.

மாலை பேராசிரியரை அழைத்துக் கொண்டு நாஞ்சில்நாடனைப் பார்க்கச் சென்றேன். வடிவீஸ்வரத்தில் தம்பிவீட்டில் தங்கியிருந்தார். குடும்பத்தின் நட்சத்திரமாக இருந்த ஒரு தம்பியை சமீபத்தில் இழந்த துயரம். அவரிடம் பேசிவிட்டு வடிவீஸ்வரம் வடிவுடையம்மன் கோயிலுக்குச் சென்றோம். திரும்பிவந்து இரவு பன்னிரண்டு மணிவரை மட்டக்களப்பு கூத்து மற்றும் நாடகம் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். ஈழத்தமிழ் கேட்க அருண்மொழிக்கு மிகவும் பிடிக்கும். பேராசிரியர் பல ஊர் பழகி அதை பெரிதும் இழந்துவிட்டிருந்தாலும் ‘எங்கட’ நாட்டை பற்றிப் பேசும்போது கண்ணில் வரும் ஒளி அதை ஈழப்பேச்சாக மாற்றிவிடுகிறது.

மறுநாள் காலையிலேயே நான் அவரை அழைத்துக் கொண்டு திருவட்டாறு கோயிலுக்குச் சென்றேன். எங்களூரின் பசுமை பேராசிரியருக்கு மனநிறைவை அளித்தது. ‘எங்கட ஊர் மாதிரி கெடக்கு’ என்றார். ‘கனக்க’ தண்ணீர் ஓடும் தன் ஊர் ஆறு பற்றியும் அதன் அழிமுகத்து மென்மணலில் புரண்டு நீராடுவது பற்றியும் சொன்னார்.

திருவட்டாறு பற்றி அ.கா.பெருமாள் எழுதிய நூலை (ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் – திருவட்டாறு கோவில் வரலாறு, தமிழினி) நான் சுருக்கமாகச் சொன்னேன். மாடங்கள் சூழ்ந்த வாட்டாற்று நகரில் என் குடும்ப வீட்டையும் காட்டினேன். அந்தக் கால மாடவீட்டை வளர்ந்த இக்காலம் குள்ளமாக ஆகிவிட்டிருந்தது. கோயிலின் உயரமும் கேரள பாணி நாலம்பல கோபுர முகடும் பேராசிரியரை பிரமிக்கச் செய்தன. உள்ளே சென்று நாயக்கர் கால சிற்பங்களையும் அகன்ற பிராகாரத்தையும் நுண்மரச்சிற்பங்கள் செறிந்த பலிமண்டபத்தையும் காட்டினேன். மூன்று கருவறை நிறைத்து படுத்திருந்த கன்னங்கரிய திருமேனியை கண்ட கலையுள்ளம் கொண்டவர் எவரும் சில கணங்கள் மெய்மறக்காமலிருந்ததில்லை.

பின்னர் திற்பரப்பு. பேராசிரியர் அன்று வரை அருவியில் குளித்ததில்லை. ‘இதிலே குளிக்கலாம் என்ன?’ என்றார். தயங்கி நீர் அருகே வந்தவரை நான் பிடித்து உள்ளே இழுத்து உள்ளே நிறுத்திக் கொண்டேன். சிரித்து குதூகலித்து, ‘தியான அனுபவம் மாதிரி இருக்கு’என்றார். திரும்பும் வழியில் என் சொந்த ஊர் திருவரம்பு வழியாக திருவட்டாறு போய் சாப்பிட்டுவிட்டு பத்மநாபபுரம். என் இப்போதைய நாவலின் களம் அது என்றேன். உள்ளே சென்று அரண்மனையின் எளிமையையும் கலையழகையும் விரிவையும் காணக் காண இப்போதுதான் தனக்கு பழைய தமிழ் அரண்மனைகளைப்பற்றிய சித்திரமே வருகிறது என்றார்.

இரவு திரும்பி வந்தோம். அன்றுதான் விகடனில் என்னைப்பற்றிய ‘போட்டுக்கொடுக்கும்’ கட்டுரை வந்திருந்தது. அதன் சிறு பதற்றம் இருந்துகொண்டே இருந்தது. இரவில் கிளம்பி

விவேகானந்த கேந்திரம் சென்று அங்கே தங்கினோம். ஈரோடு நண்பர் சிவா வந்திருந்தார். கன்யாகுமரி முனையிலிருந்து வெகுவாக தள்ளி, தோட்டங்கள் நடுவே, கடலோரமாக அழகிய விடுதி.

இரவு கன்யாகுமரி கடலில் ஒரு சிற்றோடை கலக்கும் பொழியில் மெல்லிய நிலவின் ஒளியில் நின்று சாம்பல்நீலத்தின் பல்வேறு தீற்றல்களால் வரையப்பட்ட அருவ ஓவியம் போல கொந்தளித்த கடல் வானத்தையும் கருமை பளபளத்து நெளியும் ஓடையையும் பார்த்து நின்றோம். கடலின் ஓசைக்குள் ஓடையின் கிளுகிளுப்பு கேட்டுக் கொண்டே இருந்தது. பேராசிரியர் ஏக்கமும் பரவசமுமாக தன் பழைய யாழ்ப்பாண நாட்களைப்பற்றி, நண்பர்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

மறுநாள் காலை கன்யாகுமரி முனைக்குச் சென்றோம். ஏற்கனவே குமரிமுனையின் அழுக்கு, சந்தடி, கும்பல் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி வைத்திருந்தமையால் அவருக்கு ஏமாற்றம் இல்லை. பல ஈழ நண்பர்கள் ஆசையாக கன்யாகுமரிக்குச் சென்று ‘அய்யய்யோ’ என்று பதறுவார்கள். கன்யாகுமரி உலகிலேயே மிக மோசமாக ‘பேண’ப்படும் கடற்கரை. ஆனால் கன்யாகுமரிக்குப் போகாமல் குமரிப்பயணம் நிறைவுறுவதுமில்லை.

பேராசிரியர் கன்யாகுமரி அம்மனை தரிசனம் செய்துவிட்டு பரவசமாக வந்தார். ‘சின்ன பெண்ணு நிக்கிற மாதிரி இருக்கு...’ என்றார். கன்யாகுமரி அம்மனுக்கு நம் இன்றைய மத மரபில் வேர்களே இல்லை. அம்மன் அருள் பாலிப்பதில்லை, சும்மா சிற்றாடைகட்டி கை தொங்கவிட்டு நிற்கிறாள். எந்த விதமான இறைச்சின்னஙகளும் இல்லை. அம்மனின் இன்றைய கதை பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அது என்ன தெய்வம் என்பதே வியப்புக்குரியதுதான்.

மதியம் காலச்சுவடுக்குப் போய் கண்ணனையும் அ.கா.பெருமாளையும் சந்தித்து மீண்டார் பேராசிரியர். அன்றுமாலை ஐந்து மணிக்கு நாகர்கோயில் ரயில்நிலையம் சென்று அவரை கன்யாகுமரி எக்ஸ்பிரஸ்ஸில் ஏற்றிவிட்டார். ‘சமாதானம் வாறப்ப நீங்க எங்கட நாட்டுக்கு வரவேண்டும்’ என்றார். பதினைந்து வருடங்களாக எத்தனையோ ஈழ நண்பர்கள் கண்களிலும் உதடுகளிலும் நெகிழ்ச்சி தெரிய இதைச் சொல்லிவிட்டார்கள். காலம்தான் சென்றுகொண்டே இருக்கிறது.

24. சுஜாதா: மறைந்த முன்னோடி

ஒன்பதுமணி வாக்கில் மனுஷ்யபுத்திரனிடம் தொலைபேசியில் உரையாடினேன். கடுமையான மனச்சோர்வுடன், ‘இப்பதான் ஆஸ்பத்திரியிலேருந்து வரேன். சுஜாதா ரொம்ப சிக்கலான நெலைமையிலே இருக்கார்’ என்றார். ஏற்கனவே ஒருமாதம் முன்பு நுரையீரலில் நீர் கோர்த்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்து மெல்லமெல்ல மீண்டு வீடு திரும்பிவிட்டார் என்றார்கள். சென்னை சென்றால் போய் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆசைகூட எனக்கு இருந்தது. அதிர்ச்சியுடன் ‘மறுபடியுமா?’ என்றேன். இம்முறை தப்புவது கஷ்டம் என்றார் மனுஷ்ய புத்திரன். இப்போது செய்தி வந்திருக்கிறது. சுஜாதா மரணம் அடைந்திருக்கிறார்.

என் தலைமுறையைச்சேர்ந்தவர்கள் இலக்கியத்தில் நடை என்ற ஒன்றின் தனித்த வசீகரத்தை சுஜாதா மூலமே துல்லியமாக உணர்ந்திருப்பார்கள். அன்று சாண்டில்யன், பிவிஆர், அகிலன், நா.பார்த்தசாரதி போல பல நட்சத்திர எழுத்தாளர்கள் இருந்தாலும் அவர்களெல்லாம் நிகழ்ச்சிகளாலும் கதைமாந்தர்களாலும்தான் வாசகர்களைக் கவர்ந்தார்கள். மொழியின் நுண்ணிய விளையாட்டுகளாலேயே முற்றிலும் மனதைக் கவர்ந்தவர் சுஜாதா.

என் பள்ளிநாட்களில் குமுதத்தில் தொடராக வந்த ‘அனிதா இளம்மனைவி’ நாவலை மீண்டும் மீண்டும் வாசித்தது இப்போதும் நினைவுக்கு வருகிறது. பாலு என்பவர் வரைந்த நீளமுகம் கொண்ட கணேஷ்! (அப்போது வசந்த் இல்லை). அக்கதையின் சித்தரிப்புமுறை அளித்த வசீகரத்தை இப்போதுகூட அதே உணர்வுடன் மீட்ட முடிகிறது. அதேபோல என்னை அப்போது கவர்ந்த இன்னொரு படைப்பாளி அசோகமித்திரன். ‘நானும் ராமகிருஷ்ண ராஜுவும் சேர்ந்து எடுத்த சினிமாப்படம் ‘இலாரியா’ போன்ற கதைகளை குமுதத்தில் பலமுறை வாசித்து அந்த நுண்ணிய எளிய மொழியின் புதுமையில் மயங்கினேன். ஆனால் பெயர் நினைவில் இல்லை. பத்துவருடம் கழித்து அசோகமித்திரனைப் படிக்கும்போது அக்கதைகளின் வரிகள் எல்லாமே அப்படியே நினைவில் இருப்பதை உணர்ந்தேன். அவரா இவர் என்று பிரமித்தேன்.

அனிதா இளம் மனைவியை பதினைந்து வருடம் கழித்து மீண்டும்படித்தபோதும் சுஜாதாவின் நடை அதே துள்ளலுடன் இருந்ததை உணர்ந்தேன். அதில் நான் கவனித்த நுட்பங்களை இளமையிலேயே ரசித்திருந்தேன். கணேஷ் முதன் முதலாக அனிதாவைச் சந்திக்கும் கணம். ஒரு விசித்திரமான மௌன இடைவெளியை சொல்லாலேயே உருவாக்கி ‘..இவ்வளவு அழகான பெண்ணா?’ என்ற வரி வழியாகவே வர்ணித்து முடித்திருந்தார். அதில் மோனிகா அறிமுகமாகும் காட்சியில் அவளுடைய குணச்சித்திரம் ஏழெட்டு வரிகளுக்குள்ளாகவே உருவாகி வரும் மாயம் !

சுஜாதா அன்றும் இன்றும் என் பிரியத்துக்குரிய எழுத்தாளர். அவரது எழுத்துக்கு ஆழம் இல்லை என்று இன்று எனக்குத்தெரியும். அது முற்றிலும் மேற்தளத்திலேயே நிகழ்ந்துமுடியும் எழுத்து. அதன் இலக்கியத்தன்மை அதில் உள்ள அபாரமான சித்தரிப்புத்திறனால் மட்டுமே உருவாவது. மொழியால் புறவுலகை உருவாக்க முயலும் எந்தப் படைப்பாளியும் புறக்கணித்துவிட முடியாத முன்னோடி சுஜாதா. அவரிடமிருந்து நான் கற்றவை ஏராளம். ஆகவேதான் என் முதல் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் (திசைகளின் நடுவே) என்

முன்னோடிகளாக அசோகமித்திரன், சுந்தர ராமசாமி ஆகியோருடன் சுஜாதாவையும் சொல்லியிருந்தேன். சிற்றிதழ்புனிதங்கள் கறாராகப் பேணப்பட்ட அன்று அது ஒரு விவாதமாக ஆகியது. என் 'விசும்பு' அறிவியல் புனைகதைகள் நூலை அவருக்குத்தான் சமர்ப்பணம்செய்திருந்தேன்.

சுஜாதாவின் முதல் கட்ட சாதனை அவரது நாடகங்களே. புகழ்பெற்ற அமெரிக்க யதார்த்த நாடகங்களுக்கு பலவகையிலும் நிகரானவை அவை. தமிழில் குறைவாகவே கவனிக்கப்பட்ட அவரது எழுத்து நாடகங்கள்தான். யதார்த்த நாடகங்களுக்கு உரையாடலே உயிர். சுஜாதா உரையாடல் விற்பன்னர். மேலும் நாடகங்களில் அவர் தனக்கு மிக அந்தரங்கமான ஒரு தளத்தையே எடுத்துக் கொள்கிறார். மத்தியதர வைணவ பிராமண குடும்பம். அதன் தர்மசங்கடங்கள், தடுமாற்றங்கள்.

சுஜாதாவை தமிழின் மிகச்சிறந்த சிறுகதையாசிரியர்களின் வரிசையிலேயே நான் என்றும் வைத்திருக்கிறேன். அனைத்தையும் சுருக்கிச் சொல்லும் அவரது பாணியும் காட்சிசித்தரிப்பின் ஜாலமும் சிறுகதைக்கு சரியாகப் பொருந்திவருபவை. சிறுகதையின் செவ்வியல் வடிவம் சரியாக உருவாகி வந்த சிறுகதைகள் அவை. அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். 'குதிரை' போன்று சிறந்த நகைச்சுவைப்படைப்புகள் ஒருவகை. 'எல்டொராடோ', 'மாஞ்சு' போல நடுத்தர வர்க்கத்தின் அன்றாடவாழ்க்கையின் ஒரு தருணத்தை முன்வைக்கும் துல்லியமான யதார்த்தக்கதைகள் இன்னொருவகை.

ஆனாலும் சுஜாதாவின் நடையே அவர் தமிழுக்கு அளித்த முதல்பெரும் கொடை. தமிழ் இலக்கியவரலாற்றில் அவரை நிலைநாட்டும் அம்சமும் அதுவே. சொல்லப்போனால் தமிழ் உரைநடையில் புதுமைப்பித்தனுக்குப் பின் நிகழ்ந்த முக்கியமான அடுத்த பாய்ச்சல் என்று அதையே சொல்லவேண்டும். அது ஒருவகை முன்னோடிவகைமை – 'டிரெண்ட் செட்டர்'.

சுஜாதாவைப் பற்றிய இலக்கிய உரையாடல் அவரது நடையில் இருந்து தொடங்கப்பட்டு நடையிலேயே முடித்துக்கொள்ளப்படலாம். அதைப்பற்றி விரிவாகவே ஆராயவேண்டும். அவரது சமகால படைப்பாளிகள் மட்டுமல்ல அடுத்த தலைமுறைப் படைப்பாளிகள் கூட பழமை கொண்டபோதும் சுஜாதா புதியவராகவே இருந்தார். சுஜாதாவின் மூன்று அடிப்படை இயல்புகளே அதற்குக் காரணம். பிரமிப்பூட்டும் அவதானிப்புத்திறன் கொண்டவர் அவர். ஒன்று, புறவாழ்க்கையின் நுண்ணிய தகவல்களை அவரது புனைவுலகில் காண்பதுபோல தமிழில் அதிகம்பேரின் ஆக்கங்களில் காண முடியாது. உதாரணமாக ஒரு தொலைதூரப்பேருந்தில் லுங்கிகட்டிய ஓட்டுநர் அந்த சுதந்திரத்தால் கால்களை நன்றாக அகற்றிவைத்திருக்கிற காட்சி ஒரேவரியில் கடந்துசெல்கிறது ஒரு கதையில்.

இரண்டு, மொழியின் அனைத்து சாத்தியங்களையும் இயல்பாகத் தொட்டுவிடும் தேர்ச்சி அவருக்கு இருந்தது. மொழிமீது அவருக்கு இருந்த மோகமே அவரது பெரும் வலிமை. கடைசிக்காலக் கதைகளில் ஒன்றில் இன்றைய இளைஞர்களின் எஸ்.எம்.எஸ் மொழியை அப்படியே எழுதியிருந்தார். முழுக்கமுழுக்க விளம்பர தேய்வழக்குகளினாலான ஒரு கட்டுரையை ஒருமுறை எழுதியிருக்கிறார்.

மூன்றாவதாக அவரது கூரிய மூளைத்திறன். எழுதும் ஒவ்வொரு வரியிலும் அவரது 'சவரநுனி'க் கூர்மை கொண்ட மூளையின் பங்களிப்பு இருக்கும். அதுவே அவரது பலவீனமும் கூட. அவருடைய படைப்புலகில் அவரை மீறி நிகழும் எதுவும் இல்லை. நெகிழ்ச்சிகள் கவித்துவ எழுச்சிகள் எதுவுமே இல்லை. ஆழ்மனம் நோக்கிய பயணமே இல்லை. 'எனக்கு எழுத்துமேலே இமோஷனல் ஈடுபாடு கெடையாது' என்று ஒருமுறை சொன்னார். ஆனால் அங்கதத்துக்கு அந்த மூளைத்திறன் பெரும் பலம்.

நான் நாலைந்துமுறையே அவரைச் சந்தித்திருக்கிறேன். பொதுவாக அதிகம் பேசாதவர். ஆனால் முசுடு அல்ல. பேசும்தருணம் வாய்த்தால் பேசிக் கோண்டே இருப்பார்.

வண்ணதாசன் மகளுக்கு திருமணம் நடந்தநாளில் மண்டபத்தில் அவர் என்னிடம் வைணவம் பற்றி விரிவாகப் பேசியதை நினைவுகூர்கிறேன். 1997 ல் விஷ்ணுபுரம் எழுதிய பின் அதை நவீன இலக்கியம் அறிந்த வைணவ அறிஞர் ஒருவரிடம் காட்டவேண்டுமென்று தோன்றியதும் அவரை அணுகினேன். அதைப்பற்றி நிறையவே பேசியிருக்கிறோம். திருவட்டாறு கோயிலுக்கு ஒருமுறை வர விரும்பியதாகச் சொன்னார். இலக்கிய முன்னோடிகள் வரிசையில் ஆதவன், சுஜாதா, இந்திரா பார்த்த சாரதி ஆகியோரைப்பற்றி எழுத திட்டமிட்டிருந்தேன்.

சுஜாதாவின் முகங்கள் பல. உள்வாங்கும் குணம் கொண்ட, அனுபவவாத அறிவியல் நோக்கு கொண்ட, தொழில்நுட்பக் காதலரான மனிதர். நவீன அறிவியல் மட்டுமே உலகை மீட்கும் என்ற எண்ணம் கொண்டவர். நான் அறிந்தவரை சாதிமத நோக்குகளுக்கு அப்பாற்பட்டவர், குடும்பமும் அப்படியே. அதற்கு அப்பால் அரங்கன் மீது மட்டும் உணர்வு ரீதியான, அவராலேயே விளக்க முடியாத, ஆழ்ந்த பிரேமை இருந்தது. அதற்கு அவருடைய இளமைப்பருவம், ஆழ்வார்களின் தமிழ் மீது அவருக்கிருந்த அடங்காத காதல் போன்றவை காரணம்.

அவரைப் புரிந்துகொள்ள முக்கியமான ஒரு நிகழ்வு உதவும். திருச்சிபக்கம் பின்தங்கிய வணிக ஊர் ஒன்றில் போலியோவால் கால்களை இழந்து, கல்விகற்பிக்கக்கூடப் பொருட்படுத்தப்படாமல், முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, சுயநம்பிக்கையே இல்லாமல் தனக்குள் சுருண்டு வாழ்ந்த முஸ்லீம் இளைஞன் ஒருவனின் சில கவிதை வரிகள் வழியாக அவனைக் கண்டுபிடித்தார் அவர். இருண்ட உள்ளறைக்குள் நாள்கணக்கில் வாரக்கணக்கில் அவன் வாழ்ந்த அந்த உயரமான பிசுக்கு படிந்த பழங்காலக் கட்டிலை நான் கண்டிருக்கிறேன். அவன் அறியாத ஓர் உலகிலிருந்து சுஜாதா அவனை நோக்கி கையை நீட்டினார். அவனுக்கு தன்னம்பிக்கையை அளித்தார். அவன் வெளியுலகைப் பார்க்கச்செய்தார். வெளியுலகம் அவனைப் பார்க்கும்படி செய்தார். படிப்படியாக அவனை ஒரு முக்கியமான கலாசாரச் சக்தியாக தமிழ்ச்சூழலில் நிலை நாட்டினார். மனுஷ்யபுத்திரன் சுஜாதா தமிழுக்கு அளித்த கொடை. அவரது எழுத்தில் அதிகம் தெரியாத அவரது அகம் எத்தகையது என்பதற்கான முக்கியமான ஆதாரம்.

முன்பொருமுறை எழுதிய கடிதத்தில் கீதைபற்றிய என் கேள்விக்குப்பதிலாக, விவாதத்தை முடிக்கும் முகமாக சுஜாதா 'அறிதலின் எல்லைகளை உணர ஒரு வயது இருக்கிறது. இந்த புரோட்டீன் காலிஃப்ளவர் சலித்துக் கொள்ள ஆரம்பிக்கிறது. அப்போதுதான் அது அதை மீறி எதையாவது அறிய ஆரம்பிக்கிறது' என்று எழுதினார்.

எல்லையில் ஞானத்தன் ஞானமஃதே கொண்டு

எல்லா கருமங்களும் செய்து

எல்லையில் மாயனைக் கண்ணனைத்தாள்பற்றி

யானோர் துக்கமும் இலனே.

பிப்ரவரி 25, 2008

[25. விவாதிப்பவர்களைப் பற்றி]

அன்புள்ள ஜெயமோகன்,

உங்களுடன் உரையாடுவதற்கு ஒரு தகுதி வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள். அது ஒரு அகங்காரத்தின் குரலாக எனக்கு தோன்றியது. பொதுக்கருத்துக்களை சொல்பவர்கள் இப்படி சொல்வது முறையா? நாம் நம்மை பொருட்படுத்துபவர்களை பொருட்படுத்துவது தானே முறை?

முரளி கணேஷ்

அன்புள்ள முரளி,

'கல்வெட்டு பேசுகிறது' பிப்ரவரி மாத இதழில் ஒரு செய்தி. பிரமிளுக்கான அஞ்சலிக்கூட்டத்தில் ஒரு முற்போக்கு எழுத்தாளர் அவரைக் கண்டித்துவிட்டு 'செத்தபாம்பு என்பதனால் மேற்கொண்டு அடிக்காமல் விடுகிறேன்' என்றாராம். இதில் வியப்படைய ஏதுமில்லை. நவீன இலக்கியத்தின் ஒரு முன்னோடியான நகுலன் இறந்தபோது ஐந்து சிற்றிதழ்கள் அவரைப்பற்றி செய்தி வெளியிட்டன என்று, ஒரு முற்போக்கு இதழ் செத்த பிணத்தை தூக்கிவைத்து அலைகிறார்கள் என்று தலையங்கம் எழுதியது. முற்போக்கு முகாமைச் சேர்ந்த தோழர்கள் இறந்தால் வருடக்கணக்கில் அவர்களுக்காக கூட்டங்கள் போட்டு மலர்கள் பிரசுரித்து இலக்கியப்போட்டிகள் வைத்து கௌரவிக்கும் அவர்களின் நகுலனைப்பற்றிய நோக்கு இது.

இலக்கியவாதிகளைப்பற்றிய வசைகள் தமிழ்நாட்டில் புதிது அல்ல. வசைகளுக்கு அப்பாற்பட்ட நல்ல எழுத்தாளர் எவருமில்லை. சமீபத்திய உதாரணங்களையே பார்ப்போம். எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய ஒரு வரி தன்னைப்பற்றியது என்று குட்டி ரேவதி என்ற கவிஞருக்குத் தோன்ற, அவரை அவரது தோழிகள் கண்டிக்கிறார்கள். அதற்கு ஒரு கண்டனக் கூட்டம். பேசியவர்கள் பெரும்பாலும் பெண்ணியம்போன்ற எதனுடனும் தொடர்பில்லாதவர்கள். ராமகிருஷ்ணனை நாய் என்று சொல்லி வசைபாடினார்கள். அவர் எழுத்தாளரே அல்ல என்றார்கள். அவரை இனிமேல் தமிழில் எழுதவிடக்கூடாது என்றார்கள். அதேகூட்டத்தில் யுவன் சந்திரசேகரும் அதேபோல வசைபாடப்பட்டார்.

அதற்கு சிலநாட்கள் முன்புதான் அசோகமித்திரன் அவர் ஆங்கில இதழில் சொன்ன ஒரு கருத்துகாக அனைத்து எல்லைகளையும் கடந்து வசைபாடப்பட்டார். அதற்கு சில மாதங்களுக்கு முன்னர் சுந்தர ராமசாமி 'பிள்ளைகெடுத்தாள்விளை' கதைக்காக வசைபாடப்பட்டார். அதற்கு முன் ஜெயகாந்தன் தமிழ் பற்றி அவர் சொல்லிய கருத்து ஊடகங்களால் திரிக்கப்பட்டு, ஊர் ஊராக நாய் என்றும் பேய் என்றும் வசைபாடப்பட்டார். அதற்கு முன்னர் சுஜாதா. ஒன்று கவனிக்கலாம். இதில் எல்லாம் வசைபாடியவர்கள் அனேகமாக ஒரே நபர்கள்!

வசைகளின்போதெல்லாம் இப்படைப்பாளிகள் தமிழுக்கு அளித்த கொடை, இவர்களின் இலக்கிய ஆளுமை ஒரு கணம்கூட நினைக்கப்படவில்லை. மாறாக அவர்களின் படைப்புகளும் சேர்த்து வசைபாடப்பட்டன. அவற்றையும் சேர்த்து குப்பையில்போடவேண்டும் என்ற குரல்

எழுந்தது. அவர்களை எழுதவிடக்கூடாது என்ற கோரிக்கை எழுந்தது.

நான் இவர்களை எதிர்கொண்டது என் இருபத்தெட்டாம் வயதில் ‘ரப்பர்’ வெளிவந்தபோது. அதன் பரிசளிப்புவிழாக் கூட்டத்தில் நான் பேசும்போது தமிழ் நாவல்கள் நாவல் என்ற விரிவும் விவாதத்தன்மையும் கொண்ட வடிவத்தை அடையவில்லை என்று சொல்லி என் நாவல் அதற்கான ஒரு முயற்சி என்று சொன்னேன். அதில் வெற்றிபெற்றதாக எண்ணவில்லை என்றும் ஆனால் எவருமே புறக்கணிக்க முடியாத வெற்றியை எதிர்காலத்தில் பெறுவேன் என்றும் சொன்னேன். தமிழில் படிக்க ஏதுமில்லை என்று நான் சொன்னதாக அது திரிக்கப்பட்டு அச்சாக, விவாதங்கள் தொடங்கின.

அதன் வழியாக வந்த வசைக்குரல்கள் என்னை வேதனையுற வைத்தன. பெரும்பகுதி நான் தமிழில் எழுதக்கூடாது, எழுதினாலும் பிரசுரிக்கக் கூடாது என்ற வகை தாக்குதல்கள். சுந்தரராமசாமியிடம் என் வருத்தத்தைச் சொன்னேன். ‘நான் எழுதிய நாவலின் சிலபகுதிகளிலேனும் சிறந்த படைப்பூக்கம் உள்ளதே, அதை இவர்கள் ஏன் பொருட்படுத்தவில்லை’ என்றேன். ‘உங்கள் மீது இலக்கியக் கவனம் குவிகிறது என்பது மட்டுமே இதற்குப் பொருள். இவர்களில் பெரும்பாலானவர்கள் உங்கள் எழுத்து எதையுமே படிக்காதவர்கள். படித்தாலும் திறந்தமனத்துடன் அணுகாதவர்கள். இவர்களின் குரலை நீங்கள் பொருட்படுத்தக் கூடாது’ என்றார் ராமசாமி.

சுந்தர ராமசாமி எக்காரணத்தாலும் படைப்பாளி அவற்றைப் படிக்கக்கூடாது என்று சொன்னார். படித்தால் மானசீகமாக எதிர்வினையாற்ற ஆரம்பித்துவிடுவோம். அது மெல்லமெல்ல நம் மனநிலையை எதிர்மறையாக பாதித்து நம் படைப்புநிலையைக்கூட மாற்றியமைக்கும். ‘முக்கியமான கருத்துகள் இருந்தால்?’ என்றேன். ‘அவை முக்கியமான கருத்துகள் என்றால் எப்படியும் நம்மைத்தேடி வந்துவிடும்’ என்றார் ராமசாமி. பலவருடங்கள் கழித்து சொல்புதிதுக்காக ஜெயகாந்தனிடம் ஒரு பேட்டி எடுத்தேன். அதில் இக்கேள்விக்கு இதேபதிலை ஜெயகாந்தனும் சொன்னார்.

குரோதமும் உள்நோக்கமும்கொண்ட கருத்துகள் எழுத்தாளனை மானசீகமாகத் தளர்த்தும் நோக்கம் மட்டுமே கொண்டவை. அவன் சூழலில் தீவிரமாகச் செயல்படும்தோறும் அவை மேலும் மேலும் உக்கிரமாக ஒலிக்கும். வசைகள், மூர்க்கமான தாக்குதல்கள் அவற்றில் நிறைந்திருக்கும். அவற்றின் அபத்தத்தை ஒரு பொதுவாசகன் எளிதில் உணரலாம். ஜெயகாந்தன், ‘ஒருவர் தமிழ்வெறியுடன் செயல்படுவது நாய் தன்னைத்தானே நக்குவதுபோல’ என்று சொன்னார் என்று கேள்விப்பட்டு ‘எப்படி அப்படிச் சொல்லலாம்’ என பொங்கி எழுந்தவர்கள் அவரைப்பற்றி நூற்றுக்கணக்கான கட்டுரைகளில் நாய் நாய் என்று திட்டினார்கள், கவிதைகள் எழுதினார்கள்.

நான் கண்டுவரும் ஒன்று உண்டு. நான் ஒரு விமரிசனக்கருத்தை அழுத்தமாகச் சொல்லும்போது சிலர் பொங்கி எழுவார்கள் ‘இவன் எப்படி அப்படிச் சொல்லலாம்? சொல்வதற்கு இவன் யார்? தன்னை அதிகமாக எண்ணிக்கொள்கிறான்’ என்றெல்லாம் சொல்லி வசைகளும் முன்முடிவுகளும் கலந்து ‘தூக்கிவீசும்’ கட்டுரைகளை எழுதித்தள்ளுகிறார்கள். பொருட்படுத்தத்தக்க எந்தப் பங்களிப்பும் இல்லாத தாங்கள் இந்த அளவுக்கு அழுத்தமாக முடிவான கருத்துகளையும் தீர்ப்புகளையும் சொல்லலாம் என்றால் இருபதுவருடம் தர்க்கபூர்வமாக இலக்கியவிமரிசனத்தை எழுதிவரும் நான் ஏன் ஒருகருத்தை திடமாகச் சொல்லக்கூடாது என்று இவர்கள் யோசிக்கமாட்டார்கள்.

இவர்கள் பெரும்பாலும் எழுத்தாளனின் எழுத்தின் தீவிரத்தையும் நுட்பங்களையும் அறியாதவர்கள். அதனால் அவனுக்கு வரும் முக்கியத்துவத்தை மட்டும் கண்டு காழ்ப்பு கொள்கிறார்கள். அக்காழ்ப்பை வெளிப்படுத்த மூன்று வழிகளை தமிழில் தெரிவுசெய்கிறார்கள். ஒன்று தன்னை ஒரு அதிதீவிர முற்போக்காக காட்டிக் கொள்வது. எழுத்தாளன் முற்போக்குக்கு எதிரான எதையாவது சொல்லிவிட்டான் என்று எடுத்துக்

கொண்டு ‘சமூகக் கோபத்துடன்’ அவனை கீழிறங்கிச் சாடுவது. இரண்டு, ஏதாவது கோட்பாடுகளை எடுத்துக்கொண்டு அதை வைத்துக்கொண்டு வசைபாடுவது, நகையாடுவது. மூன்று, அதீதவாசகனாக தன்னை உருவகம் செய்துகொண்டு ‘மேலை’ நாட்டில் தான் வாசித்த பெரும்படைப்புகளை வைத்து எழுத்தாளனை எள்ளவும் வசைபாடவும் முயல்வது.

அத்துடன் என் எழுத்துக்களை வாசிக்காதவர்கள் மத்தியில் நான் உயர்சாதி, இந்துமத நோக்கு உள்ளவன் என்ற சித்திரம் உருவாக்கப்பட்டிருப்பதனால் என்னைப்பற்றிய வசைகளில் எப்போதும் சாதி, மதவெறிக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. வேறு பல காரணங்கள் வெளியே ஒலிக்கும், உள்ளே கீழ்த்தர மதவெறியும் சாதிவெறியும் மட்டும் நுரைத்துக் கொண்டிருக்கும்.

சமீபத்தில் இணையம் ஒரு பொதுவெளியாக ஆனபின் இத்தகைய எழுத்துக்கள் பலமடங்கு பெருகியுள்ளன. ஒரு எழுத்தாளன் வசைபாடப்பட்டால் உடனே வந்துசேர்ந்துகொண்டு என்ன ஆனந்தமாக கும்மியடித்து மகிழ்கிறார்கள்! யார் இவர்கள்? இவர்களை ஏன் பொருட்படுத்த வேண்டும்? இவை எழுதப்பட்ட சில மாதங்களிலேயே சருகுகள் போல உதிர்ந்து மறைகின்றன. என் இலக்கிய வாழ்க்கையில் இப்படி எத்தனையோ சருகுப்புயல்களை கடந்துவந்திருக்கிறேன். அவற்றை எழுதியவர்கள்கூட பலர் இன்று மறக்கப்பட்டுவிட்டார்கள்.

தன் எழுத்தை பொருட்படுத்தி, அது உருவாக்கும் அறிவார்ந்த தளத்திற்குள் வந்து, நேர்மையுடன் சொல்லப்படும் கருத்து அல்லாத எதையுமே பொருட்படுத்தக்கூடாது என்றுதான் எனக்குச் சொல்லப்பட்டது. அதையே இன்று எழுதவரும் ஓர் இளம் எழுத்தாளனுக்கும் சொல்வேன். அவனும் தன் வாழ்நாள் முழுக்க இத்தகைய வசைகளையும் எக்காளங்களையும் தன்னைச்சுற்றி கேட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டும். தன் எழுத்தைப்பற்றி ஆழமான ஒரு கருத்தையேனும் சொன்ன ஒருவர் சொல்லும் விமரிசனங்களை, அல்லது அவர் மேற்கோள் காட்டும் விமரிசனங்களை மட்டும் அவன் பொருட்படுத்தினால் போதும்.

நீங்கள் எழுதக்கூடியவரென்றால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். என்னிடம் எல்லா மூத்த எழுத்தாளர்களும் சொன்னது இது. உங்கள் முக்கியத்துவத்தைப் பற்றிய உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் எழுதியவை சார்ந்து மட்டுமல்ல, எழுதப்போகும் படைப்புகள் சார்ந்தும் உங்களுக்கு ஓர் அடிப்படைப் பெருமிதம் இருக்க வேண்டும். அதுவே எழுத்தாளனின் ஆற்றலின் ஊற்றுக்கண். அந்த தன்னம்பிக்கையை தகர்க்கவே சூழ ஒலிக்கும் இக்குரல்கள் தொடர்ந்து முயல்கின்றன. அவற்றுக்குச் செவிகொடுக்கும் கணமே உங்கள் ஆற்றல் நுரையடங்குவதைப்போல சரிவதை உணர்வீர்கள்.

எந்த ஒரு எழுத்தாளனும் மனநிலையின் இரு உச்சங்களிலேயே இருக்க இயலும். ஒன்று மனச்சோர்வு. இன்னொன்று மன எழுச்சி. இரண்டுநிலைகளுக்கும் மாறிமாறி அலைவது அவன் வழக்கம். ஒருவகையில் இது எளியவகை மனநோய்போல. அவன் மனஎழுச்சி சார்ந்து தன்னை வைத்துக்கொள்ள எப்போதும் முயலாவிடில் சோர்வுக்குத் தள்ளப்பட்டு அழிவான். சமகால எழுத்தாளர்கள் பலரும் மனச்சோர்வின் மடிப்புகளுக்குள் புதைந்துபோகும் கணங்களையே மீண்டும் மீண்டும் என்னிடம் பகிர்ந்துகொள்கிறார்கள். நம்மைச் சூழ்ந்துள்ள இக்குரல்கள் நம்மை அங்கே கொண்டுசென்று அடைக்க முயல்கின்றன. அவற்றுடன் போராடி படைப்பூக்கத்துடன் இருக்க ஒரேவழி நம்மில் ஊறும் சுய உணர்வை வலுப்படுத்துவதே. ‘நான் படைப்பாளி , நான் காலத்தின் குழந்தை’ என்ற உணர்வை. (இணையான வரிகளை ஜே.ஜே.சிலகுறிப்புகளில் காணலாம்.) ஒரு எழுத்தாளன் என்ற நிலை மிக அபூர்வமானது, அங்கிருந்து கொண்டு நாம் பொருட்படுத்தத்தக்கவை சிலவே.

என்னைப்பொறுத்தவரை ஒன்று ஒருவர் ஏதேனும் ஒரு தமிழ்படைப்பைப்பற்றி ஒரு நல்ல கட்டுரையேனும் எழுதியிருக்க வேண்டும். அல்லது ஒரு நல்ல கதையாவது எழுதியிருக்க வேண்டும். அவரது எல்லா கருத்துகளும் எனக்கு முக்கியமே. என்னை ஒவ்வொரு வரிக்கும் கடுமையாக விமரிசிக்கும் அ.மார்க்ஸின் ஒருவரியைக்கூட நான் வாசிக்காமல் விட்டதில்லை.

என் விமரிசகர்களான பொ.வேல்சாமி போன்றவர்களிடம் நட்பும் மதிப்பும் இருந்து வருகிறது. அல்லது நேர்மையான ஆர்வத்துடன் என் இலக்கிய உலகுக்குள் நுழையும் எந்த வாசகனும் எனக்கு முக்கியமானவனே. அவர்களின் ஐயங்களும் விமரிசனங்களும் நிராகரிப்புகளும்கூட. இன்று தமிழில் எழுதிவரும் பலர் அப்படி என்னுடன் எதிர்த்து உரையாடி வந்தவர்கள்தான்.

கருத்துச் சுதந்திரம் இருக்கிறது. யாரும் எழுதலாம். அவற்றைப் பொருட்படுத்தமாட்டேன் என்று சொல்வதற்கும் கருத்துச் சுதந்திரம் உண்டல்லவா? விமரிசனம் எழுதுபவர்கள் தங்கள் எழுத்துக்களை எழுத்தாளன் புறக்கணிக்கவே முடியாதென்ற தரத்துடன் எழுதலாமே.

பிப்ரவரி 27, 2008

[26. ஸ்டெல்லாபுரூஸ் என்ற காளிதாஸ்]

ஸ்டெல்லா புரூஸ் என்ற பெயரில் எழுதிய ராம் மோகனை சிற்றிதழ் சூழலில் காளிதாஸ் என்றபெயரில்தான் அறிவார்கள். 'கசடதபற' இதழுக்குப் பின்னர் எழுத வந்தவர்களில் காளிதாஸ், கனகதாரா என்று ஒரு தனி வரிசை உண்டு. சிறிதளவு காலமே எழுதி அதிகம் கவனிக்கப்படாது போனவர்கள். காளிதாஸ் பின்பு ஸ்டெல்லா புரூஸ் என்ற பேரில் கதைகள் எழுத ஆரம்பித்தார். குமுதத்தில் விசித்திர முடிவுகள் கொண்ட சில காதல்கதைகள் முதலில் கவனிக்க வைத்தன. பின்னர் ஆனந்த விகடனில் அது ஒரு கனாக்காலம் போன்ற புகழ்பெற்ற தொடர்கதைகளை எழுதினார்.

ஸ்டெல்லா புரூஸின் சில கதைகளை அவற்றின் இயல்பை தெரிந்துகொள்ள வேண்டுமென்ற இயல்பான ஆர்வத்துடன் படித்திருக்கிறேன். பாலகுமாரன் சுஜாதா இரண்டும் கலந்த கலவை. கொஞ்சம் ஜே.கிருஷ்ணமூர்த்தி. பொழுதுபோக்கு எழுத்துக்களைப் படிக்கும் வளரிளம்பருவ வாசகர்களை மிகவும் கவரும் இளமைத்துடிப்பு கொண்ட ஆக்கங்கள்.

இரு மாயவலைகளில் சிக்கி அழிந்தவர் என்று காளிதாஸ் பற்றி எனக்கு மனச்சித்திரம் இருக்கிறது. 'பின் தொடரும் நிழலின் குரல்' தவிர என் பிற நாவல்களை விரும்பிப்படித்து கடிதங்கள் அனுப்பியிருக்கிறார். இருமுறை அந்தரங்கமாக பேசியிருக்கிறேன். அவருக்கு ஒரு குறிப்பிட்ட வயதில் திரைப்பட ஆசை இருந்திருக்கிறது. தமிழ்நாட்டில் தன்னை புத்திசாலிகள் என நினைக்கும் பலருக்கும் இருக்கும் ஆசை. அதுவே அவரை குடும்பத்தொழிலில் இருந்து பிரித்து சென்னையில் அல்லாடச் செய்தது.

ஆனால் சினிமா அவருடைய இயல்புக்கு ஒத்துவருவதல்ல. வசதியான குடியில் பிறந்தவராதலால் நாசூக்கானவர். போராடி தன் இடத்தை அடையும் முனைப்பு இல்லாதவர். அத்துடன் எளிதில் புண்படும் மனமும் கொண்டவர். சினிமா அவரை பயன்படுத்திக் கொண்டு தூக்கிப்போட்டது. புகழ்பெற்ற சில படங்களில் அவரது முக்கியமான பங்களிப்பு உண்டு என்று சொல்லியிருக்கிறார். கதை விவாதங்களுக்கு கூப்பிட்டு அமரச்செய்து சிலநூறுகளை கையில் வைத்து அனுப்பிவிடுவார்கள். படமே அவர் சொல்லும் சில கருத்துகளின் பலத்தால் நிற்கும், ஆனால் படத்தில் பணியாற்றிய எடுபிடிப்பையனுக்குக் கூட அதிக ஊதியம் கிடைத்திருக்கும்.

இரண்டாவது மாயை லாபம் மட்டுமே நோக்கமாகக் கொண்ட நவீன மருத்துவம். உயிர்தப்ப வாய்ப்பில்லாத ஒரு நோயாளியை சிலநாட்கள் மேலும் வாழச்செய்வதற்காக அவரது சுற்றத்தின் வாழ்நாள் சேமிப்பை அது உறிஞ்சி விடுகிறது. அதன்பொருட்டு அவர்களுக்கு ஆசையையும் நம்பிக்கையையும் கொடுத்தபடியே இருக்கிறது. காளிதாஸின் மனைவியின் சிகிச்சை அவரை தீராக்கடனாளியாக்கியது. வயோதிகநிலையில் அவரால் மீளமுடியாத மனச்சோர்வில் தள்ளியது.

காளிதாஸ் ஜே.கிருஷ்ணமூர்த்தி மற்றும் பாண்டிச்சேரி அன்னையின் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவர். அவற்றைப்பற்றி நீண்டகடிதங்கள் எழுதுபவர். எனக்கும் எழுதியிருக்கிறார். நான் ஒருமுறை அவருக்கு 'எழுத்தாளனுக்கு தத்துவம் உதவாது' என்று எழுதினேன். அதுவே உண்மையாகியிருக்கிறது.

துயரம் மிக்க ஒரு முடிவு. ஆனால் வேறு வழியில்லாத ஒன்று என்றும் படுகிறது. வாழும்

முனைப்பையும் காரணத்தையும் அவர் இழந்துவிட்டபின் என்ன செய்வது?

மார்ச் 1, 2008

[27. பேருந்தில் தோப்பில் முகமது மீரான்]

இன்று பேருந்தில் சென்றுகொண்டிருக்கும்போது காலி இருக்கை நோக்கிச் செல்லும்போது தோப்பில் முகமது மீரான் ஐ பார்த்தேன். அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. 'தோப்பில் தானே?' என்றேன். 'தம்பி! என்ன வயசாயிப்போயிட்டே?' என்றபடி அணைத்து அமரச்சொன்னார்.

நெடுநாட்களுக்குப் பின் அண்ணாச்சியைப் பார்த்ததில் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதிலும் பக்கவாதம் வந்து தளர்ந்துபோன வடிவிலேயே அவரைக் கண்டிருந்தேன். இப்போது நன்றாக உடல்நலம் தேறி புத்துணர்ச்சியுடன் இருக்கிறார் என்பது உள்ளூர ஆழமான பரவசத்தை அளித்தது. அவரைப் பார்க்கவே பிடித்திருந்தது.

'எங்க யாத்திரை?' என்றேன்.

'களியிக்காவெளைக்கு, ஏவாரம் சின்ன அளவிலே இருக்கு...'

உடல்நலம் குன்றியபோது வத்தல்மிளகாய் மொத்த வியாபாரத்தை நிறுத்தியிருந்தார். 'வலிய அளவில ஒண்ணும் இல்ல பாத்துக்கோ. சும்மா எம்பிடுண்ணு வீட்டில இருக்கது? பத்து நாப்பது வருசம் அலைஞ்சு அலைஞ்சு ஜீவிச்சதாக்கும். சும்மா இருந்தா சகல ரோகமும் வந்து கேறும். அதனால் இப்பம் இப்பிடி போறது. முன்னே ஏவாரத்துக்காக யாத்திரை. இப்பம் யாத்திரைக்காக ஏவாரம். போற வாற செலவுக்கு சம்பாதிச்சா போரும்...'

'பிள்ளைய எங்க? ஒருத்தன் மலேசியால இருந்தான்லியா?'

'அவன் இப்பம் துபாய்ல. இன்னொருத்தன் இங்க. ரண்டாளும் நல்ல நெலைமையில இருக்கானுவ. வீட்டில நானும் வைஃபும் மட்டுமாக்கும்.'

'உடம்பு நல்லா இருக்குல்ல?'

'ஒண்ணு ரெண்டு குளிகை உண்டும். இப்பம் ஊரு சுத்த தொடங்கின பின்ன தேகம் நல்லா இருக்கு...'

நீல. பத்மநாபனுக்கு நான் நாகர்கோயிலில் ஒரு பாராட்டுக்கூட்டம் ஏற்பாடு செய்ததைப் பற்றிச் சொன்னேன். 'நானும் விளிச்சேன். சந்தோசமாட்டு பேசினாரு. எப்பமோ கிட்டவேண்டிய பிரைஸுல்லா? தலைமொறைகள் போட்டு, அப்பம் சின்ன வயசு. பள்ளிகொண்டபுரம் வந்தப்பம் குடுத்திருக்கணும்...'

'அப்பமும் சின்ன வயசுல்லா?'

'புனத்தில் குஞ்ஞப்துல்லா எப்பம் வாங்கினாரு? எம்.டி.வாசுதேவன் நாயரு நாலுகெட்டு நாவலுக்கு பிரைஸ் வாங்கும்பம் இருபத்தியஞ்சு வயசு. எனக்கு ஒப்பம் டோக்ரி மொழிக்காட்டு சாகித்ய அக்காதமி பிரைஸ் வாங்கினவன் ஒரு சின்ன பய. இருபத்தி ஒண்ணு வயசு... அதெல்லாம் இங்க உள்ளவனுக உண்டாக்குத ஒரோ ஏற்பாடுகள். சத்தியம் சொல்லப்போனா சுந்தர ராமசாமி, நீலபத்மநாபன், மாதவன் அண்ணாச்சி இருக்கும்பம் எனக்கு பிரைஸ் கிட்டினதில ஒரு சம்மல் எனக்கு உண்டும் பாத்துக்கோ...'

'உங்கமேலே யாருக்கும் கோவம் இல்லல்லா?' என்றேன். 'நாவல் வருதுன்னு சொன்னாங்க...

ஏதோ முஸ்லீம் பத்திரிகையில தொடரா வந்ததுன்னு..'

'ஆமா. கிருஷிக்க கிட்ட வாசிக்க குடுத்திருக்கு. அவரு வாசிச்சு திருத்தி எடுத்து குடுக்கணும். நமக்கு எளுதினதை மறுக்கா வாசிக்கதுக்கு உண்டான பொறுமை இல்லை. மாசாமாசம் எளுதினதுல்லா? இப்பம் வந்த நாவலுகள் என்ன வாசிச்சே? ஆழிசூழ் உலகு கொள்ளாம் நல்ல பெரிய நாவலாக்கும். ஆனா மீனவ பாசை வேற...'

'அது வேற எடமுல்லா?'

'என்ன வேற? கடல்வழியா முப்பது கிலோமீட்டர் போகணும்... ஆனா பாசை சாப்பாடு சாதி எல்லாம் மாறியாச்சு... நல்லா விரிவாட்டு எளுதியிருக்காரு... பின்ன நம்ம இவனுக்க கூகை... நல்ல நாவலாக்கும்.... சோ.தருமன்...'

பேசிமுடிப்பதற்குள் நான் இறங்கும் இடம் வந்தது. புதிய வீட்டு முகவரி தந்தார். 'அப்பம் பாக்கிலாம். சந்தோசம்...' என்றார். இறங்கிக் கொண்டேன்.

மார்ச் 4, 2008

28. சிதம்பரம் நாட்டியாஞ்சலி

மார்ச் ஆறாம் தேதி முதல் மூன்றுநாள் சிதம்பரம் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியைப் பார்த்தேன். கேரளக் கவிஞர் கல்பற்றா நாராயணன் நிகழ்ச்சிக்குச் செல்வதற்காக விரும்பி என்னிடம் உதவி கேட்டார். ஒரு கட்டத்தில் எனக்கும் நண்பர்களுக்கும் ஆர்வம் ஏற்பட்டது. போய்த்தான் பார்ப்போமே என்ற வகை ஆர்வம்தான். எனக்கு நடனக்கலையில் பெரிய ஈடுபாடு எப்போதுமே இருந்தது இல்லை.

ஈரோட்டிலிருந்து நண்பர் விஜயராகவனும் வழக்கறிஞர் கிருஷ்ணனும் நேரடியாக சிதம்பரம் வந்தார்கள். கல்பற்றா நாராயணன் ஐந்தாம்தேதியே வந்து இறங்கி அங்கே தங்கியிருந்தார். நான் சென்று சேர்ந்தது ஆறாம் தேதி காலை. சிதம்பரத்தில் நகைத்தொழில் செய்துவரும் நண்பர் கார்த்திகேயன் (மீனாட்சி ஜுவெல்லர்ஸ்) தங்குமிடம் ஏற்பாடு செய்து உபசரித்தார்.

காலையில் நேராக பிச்சாவரம் சென்றோம். அலையாத்திக் காடுகளைப் பற்றி நிறையவே படித்திருந்தாலும் நேரில் கண்டது அதுவே முதல் முறை. ஆழம் குறைந்த உட்கடலுக்குள் வேர்பரப்பி செழித்திருந்த காடுகளின் தழைப்புக்கு அடியில் நீர்மீது பச்சைநிழல் பரவிய சுரங்கத்துக்குள் படகில் சென்றது இனிய அனுபவமாக இருந்தது. துள்ளி துள்ளி விழும் மீன்களில் நீர் திடுக்கிட்டுக் கொள்வதையும் நாரைகள் வெண்மலர்கள் போல அடர்ந்த குட்டைமரங்களையும் நீளக்கால்களை நீரில் ஊன்றி கழுத்தை நீட்டி நின்ற கூழக்கடாக்களையும் கண்டுகொண்டு செவ்வியல் கலைகளைப் பற்றி பேசியபடி சென்றோம்.

மாலை ஐந்தரை மணிக்கு நிகழ்ச்சி தொடக்கம். நண்பர் கார்த்திகேயனின் தந்தையார் எங்களை சிதம்பரம் ஆலயத்திற்குள் அழைத்துச் சென்று தரிசனம் செய்ய வைத்தமையால் சற்றுத் தாமதமாகவே நிகழ்ச்சிக்குச் செல்ல முடிந்தது. பல அடுக்குகளாக வரலாறும் கலையும் படிந்துகிடக்கும் மாபெரும் ஆலயம் அது. அன்று சிவராத்திரி ஆனதனால் பெரும் கூட்டம். கல்பெருகி நிறைந்த பேராலயங்களில் மக்கள் நிறைந்து ஒரே உணர்வுக்கு ஆள்படுகையில் ஒருவிதமான காலமின்மை கைகூடுவதை உணரலாம். அக்கணம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் பல்லக்கிலேறி வந்தால்கூட அதிர்ச்சி கொள்ள வேண்டியதில்லை.

முக்கிய விருந்தினர் அனுமதிச்சீட்டு பெற்று முன் வரிசையிலேயே எங்களை அமரச்செய்தார் நண்பரின் தந்தை. நடன நிகழ்ச்சியை மிகுந்த உதாசீனத்துடன்தான் நான் கவனிக்க ஆரம்பித்தேன். கல்பற்றா நாராயணன் தவிர பிற நண்பர்களும் அப்படித்தான்... அதிலும் முதல் நிகழ்ச்சி பத்மினி துரைராஜன் தன் மாணவிகளுடன் ஆடிய பரதம். வீட்டிலிருந்து கிளம்புகையில் 'அழகிகளின் ஆடலை கண்டு வருகிறேன்' என்று அருண்மொழியிடம் விடைபெற்றபோது 'போ போ எல்லாம் பல்லுபோன கெழவிகளா இருப்பாங்க' என்று ஆசியளித்திருந்தாள். அதற்கேற்ப நாற்பதை ஒட்டிய வயதுடன் அப்பெண்மணி வந்து நின்றபோது ஒரு மனச்சுளிப்பு உருவாயிற்று.

ஆனால் வெறும் ஐந்து நிமிடம்தான். புத்தம் புதிதான ஓர் உலகத்தை பெரும் பரவசத்துடன் கண்டு கொண்டேன். அந்த மேடையில் நின்ற மனித உடலின் வயதோ தோற்றமோ என் முன்னாலிருந்து முற்றிலும் மறைந்தது. மொழிபோல, வண்ணங்கள் போல, ஒலி போல மனித உடலும் ஒரு மாபெரும் கலை ஊடகம் என்பதைக் கண்டேன். அதனூடாக அழியாத பேரின்பத்தை நிகழ்த்த முடியும் என்று அறிந்தேன்.

அப்போது தெரிந்தது, நான் அன்றுவரை கண்டதெல்லாம் பரதங்களே அல்ல. நம் நாட்டில் ஆங்காங்கே பரதநாட்டிய நிகழ்ச்சி நடந்தபடியே இருக்கிறது. அவற்றில் மிகப்பெரும்பகுதி ஒரு வகை சபலத்துக்காக கொஞ்சநாள் நடனம் பயின்றுவிட்டு கௌரவத்துக்காக அரங்கேற்றப்படுபவை. பெரும்பாலும் சிறுமிகள். அவர்களது பெற்றோரும் சுற்றமும் ரசிப்பார்கள். நம்மையும் மாட்டிவிடுவார்கள். நான் பார்த்தவை எல்லாமே அவ்வகைதான். பல நிகழ்ச்சிகளில் தாங்க முடியாமல் நான் எழுந்து ஓடி வந்தது உண்டு.

பரதம் மேல் இளக்காரமான எண்ணம் ஏற்படுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு என்று பட்டது. அது தொலைக்காட்சிகளில் பரதத்தைப் பார்ப்பது. நடனத்தை கண்முன் ஒரு மனித உடலில் அது நிகழும்போதே பார்க்கவேண்டும். அதன் காட்சித்தொகுப்பு ஒருபோதும் நடனம் அல்ல. அதைவிட திரைப்படங்களில் பயிற்சி இல்லாத நடிகைகள் செய்யும் முரட்டுத்தனமாக பரத நாட்டிய அசைவுகள். அந்த உடையைக் கண்டாலே அருவருப்பு கொள்ளும் நிலைக்கு என்னைக் கொண்டுசென்றவை இவையே.

எல்லா செவ்வியல் கலைகளையும்போல பரதமும் மிகக் கடுமையான நீண்டநாள் பயிற்சியால் கைகூடும் வரம். அப்படிப்பட்ட பயிற்சிக்கு ஒவ்வொரு நாளும் வளரும் ஆர்வமும், தணியாத தேடலும் தேவை. அர்ப்பணிப்பு இன்றி கலையே இல்லை. நான் அப்போது மேடையில் பார்த்தது அப்படிப்பட்ட ஒரு கலைநிகழ்வு. வியப்புடன் ஒன்றைக் கண்டு கொண்டேன், கதகளி கண்டு வளர்ந்த எனக்கு நடனமுத்திரைகள் எங்கோ மறந்தவைபோல எளிதில் நினைவுக்கு வந்தன. பாவங்களையும் அசைவுகளையும் என்னால் துல்லியமாகவே பின்தொடர முடிந்தது. அத்துடன் நெடுநாட்களாக தாகம் மிகுந்து நான் தேடித்தேடிப்பார்த்த இந்தியச் சிற்பக்கலை நடனத்தின் ஒவ்வொரு கணத்திலும் கரைந்திருக்கக் கண்டேன். குறிப்பாக பரதம் என்பது மனித உடல் வழியாக சிற்பங்கள் கடந்துசெல்லும் ஒரு மாயம்.

என் நண்பர்களின் நிலையும் அதுவே. கிருஷ்ணன் ‘ஒரு நிமிஷம் என் காதெல்லாம் சூடாகிவிட்டது’ என்றார். ‘ரஷ்ய நாவல்களின் உலகுக்கு அறிமுகமாகும்போது அப்படி ஒரு பரவசம் இருந்தது. ஒரு புதிய கலையுலகுக்குள் கொண்டுசெல்லும் வாசல் திறந்தது போல உணர்ந்தேன்’ என்றார். பின்னர் செல்பேசியில் ஈரோடு சிவாவையும், சென்னை வழக்கறிஞர் செந்திலையும் அழைத்து ‘ஒரு பெரிய தொடக்கம் இது. ஒரு கலை நம்மை கண்டுபிடிச்சிருக்கு’ என்றார் கிருஷ்ணன். எங்களுடன் எல்லா பயணங்களுக்கும் வரும் அவர்கள் நடனமாவது பார்ப்பதாவது என்று தவிர்த்து விட்டிருந்தார்கள்.

தொடர்ந்து வெவ்வேறு இந்தியக் கலைவடிவங்கள். ஒவ்வொரு ஆடலும் இருபத்தைந்து நிமிடம் முதல் அரைமணிநேரம் வரை. ஷால்லு ஜிண்டாலின் குச்சிபுடி. பார்சி போன்ற முகம் கோண்ட மெலிந்த பெண். பரத நாட்டியத்தின் அசைவுகளில் ஒரு இருபக்கச் சமன் இருப்பது போல தோன்றியபோது குச்சிபுடி கைகளை வீசிவீசிப் பறக்க முயல்வது போல ஓர் அடிப்படை அசைவுமொழி கொண்டிருந்தது. ஆனால் முத்திரைகளும் பாவங்களும் பரதத்தை பெரிதும் நிகர்த்திருந்தன.

அதன் பின் மோகினியாட்டம் டாக்டர். நீனாபிரசாத். மென்மையான அசைவுகள் மட்டுமே கொண்ட மோகினியாட்டம் அந்த மென்மையினால் மட்டுமே பரதம், குச்சிபுடி ஆகியவற்றிலிருந்து வேறுபடுகிறது. கதகளிக்குரிய முக, விழி அபிநயம் கொண்டது. ஆனால் கதகளியின் அசைவுகள் வேறுவகையானவை. ஒன்றுமேல் ஒன்றாக தன்னுள்ளேயே ததும்பும் மூன்று உருளைகளின் ஆட்டம் போன்றது கதகளி. மோகினியாட்டம் தன்னுள் மயங்கிய பெண்ணின் கனவுநிகர்த்த அசைவுகள் கொண்டது. லாஸ்ய நிருத்யம் என்றழைக்கப்பட்ட இவ்வாட்டத்தை மோகினியாட்டமாக ஆக்கியவர் வள்ளத்தோள் நாராயண மேனனின் கலாமண்டலத்தைச் சேர்ந்த கல்யாணிக்குட்டியம்மா. கேரளத்தில்கூட சமீப காலத்தில் இதற்கிணையான ஒரு மோகினியாட்டத்தைக் கண்டதில்லை என்றார் கல்பற்றா நாராயணன்.

புகழ்பெற்ற நர்த்தகி நடராஜின் நடனமும் எளிய ரசிகனுக்கு முதல் தயக்கத்தை உருவாக்கக்

கூடியதே. திருநங்கையான அவர் உடலில் ஆண்மையின் இறுக்கம் இருக்கத்தான் செய்தது. ஆனால் சிதம்பரம் ரசிகர்கள் அவரை நன்கறிந்தவர்கள் என்று பட்டது. ஆர்வம் மிக்க வரவேற்பு மட்டுமே அவருக்குக் கிடைத்தது. சில கணங்களில் நர்த்தகி நடராஜ் உருவாக்கிய உணர்வுலகைப் பற்றி விரிவாகவே எழுத வேண்டும். ஒரே மனித உடலில் பற்பல மனிதர்கள் பலவகைப்பட்ட உணர்ச்சிகளுடன் உருவாகி வளர்வதை எப்படி விவரிப்பது! ஒரே மனித உடல் இறைவனாகவும் பக்தனாகவும் படைப்புலகமாகவும் மாறும் கலையின் அற்புதம். நீனா பிரசாத்தில் மிக மென்மையாகவும் நளினமாகவும் வெளிப்பட்ட உணர்ச்சிகள் நர்த்தகி நடராஜில் பெரும் கொந்தளிப்பாக நிகழ்ந்தன. 'அன்பே சிவமென்பது ஆரும் அறிகிலார்' என்ற திருமந்திர வரிகளுக்கு நர்த்தகி நடராஜ் அளித்த விரிவான அபிநயம் நினைவை விட்டு அகலாதது.

அன்று திரும்பும்போது நர்த்தகியைப் பற்றியே பேச்சு வந்தது. நம் இதழுலகில் இன்றுவரை ஒரு திருநங்கை இல்லை. இலக்கிய உலகில் இப்போதுதான் வந்திருக்கிறார்கள். ஆனால் கலையில் எப்போதோ ஒரு பெருங்கலைஞர் வந்து தன்னை நிறுவிக் கொண்டுவிட்டார். அவரை ஆசாரவாதியான ஒரு குரு ஏற்றுக்கொண்டு தன்னுடனேயே வைத்திருந்து கற்பித்திருக்கிறார். அறிவையும் விட கலை எளிதில் திறமையைக் கண்டடைகிறதா என்ன?

சென்னை கிருஷ்ணா சிதம்பரத்தின் பரதமும், ஸிவாங்கி அனந்தானியின் பரதமும், பிரணிதா காமத்தின் பரதமும் அமுதா தண்டபாணியின் மாணவிகளின் நடனநாடகமும் தொடர்ந்து ஒரு பரவச நிலையிலேயே இருக்கச் செய்தன. இவற்றை விமரிசனபூர்வமாக ஆராயவோ மதிப்பிடவோ பயிற்சியும் பழக்கமும் இல்லையானாலும் அவற்றின் நுண்ணிய அசைவுகளின் ஒத்திசைவை கை, விழி முத்திரைகளின் துல்லியத்தை வியந்து பாராட்ட முடிந்தது.

மறுநாள் தூங்கி எழுந்ததுமே காரில் சீர்காழி, திருவெண்காடு கோயில்களுக்குச் சென்று வந்தோம். பொதுவாக இந்த தஞ்சை மாவட்ட கோயில்கள் சிற்பங்கள் இல்லாமல் விரிந்த பெரும்பரப்புடன் உள்ளன. என் நோக்கில் தென்பாண்டி நாட்டுச் சிற்பங்களின் முழுமையை இங்குள்ள சிற்பங்களில் காணவும் முடிவதில்லை. (ஆனால் தி.ஜானகிராமன் நேர் மாறாக எண்ணுகிறார். தென்பாண்டி நாட்டு நாயக்கர் காலச் சிற்பங்களை வெறும் கல்பூதங்கள் என பல இடங்களில் எழுதியிருக்கிறார். ஸ்ரீவில்லிபுதூர், நான்குநேரி, ஸ்ரீவைகுண்டம், கிருஷ்ணாபுரம், நெல்லையப்பர் லயம், சுசீந்திரம், திருவட்டார் ஆலயச் சிற்பங்களை மாபெரும் கலைச்சின்னங்களாகவே எந்த ரசிகனும் எண்ணுவான்.)

ஐந்தரை மணிக்கே அரங்குக்குச் சென்றிருந்தோம். அரங்கேற்ற மாணவிகளின் நடனம். திரும்பவும் அதே உணர்வு. கலை என்பது ஒரு எளிய பயிற்சி மட்டுமல்ல என்று உணராத மக்கள் தங்கள் பிள்ளைகளை மேடையேற்றி புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஏழு மணிக்கு ஹைதராபாத் ஸ்மிதா மாதாவின் நடனம்தான் உண்மையான கலைநிகழ்ச்சி தொடங்கிவிட்டது என்பதைக் காட்டியது. பெங்களூர் தீபா ராகவனின் பரதமும் நுண்ணிய சிற்ப நுட்பங்களுடன் விழிவிருந்து.

மும்பை தக்ஷநூ மஷ்ருவாலாவும் மாணவிகளும் ஆடிய ஒடிஸி இந்த மூன்றுநாள் நிகழ்ச்சியின் சிகரங்களில் ஒன்று. ஒடிஸி நடனத்தில் கிழக்கு ஆசிய மரபு நடனத்தின் சாயல் இருந்தது. தலை அலங்காரம், தலையசைவு, இடை நெளிவு முதலியவற்றில் தீபச்சுடர் போல தொடர்ந்து நெளிந்து கொண்டே இருக்கும் உடலசைவு ஒடிஸியின் சிறப்பம்சம். தக்ஷன் மஷ்ருவாலா நாற்பதுக்கும் மேற்பட்ட வயதுள்ளவர். அவரது மாணவிகளின் தேர்ந்த நடன அசைவுகள் அவர்கள் பெரும் நடனக்கலைஞர்கள் என்று காட்டின. ஆனால் தக்ஷன் அருகே அவர்களால் நெருங்க இயலவில்லை. மேதமையை திறமைகளே அடையாளம் காட்டுகின்றன.

அன்றைய நடனத்தில் கீதோபதேச நடனத்தை நான் கண்ட மாபெரும் மேடைக்கலைநிகழ்வுகளில் ஒன்றாகச் சொல்வேன். கிருஷ்ணன் விஸ்வரூபம் கொள்ளும்போது கணம் ஒன்றுவீதம் அத்தனை தெய்வங்களும் தக்ஷன் உடலில் நிகழ்ந்து மறைய அதைக் கண்ட

பார்த்தன் கொள்ளும் அச்சமும் பிரமிப்பும் நெகிழ்வும் மெய்ஞானமும் அவரது தோழியின் முகம் வழியாக வெளிப்பட்ட கணங்கள் அற்புதமானவை.

சுதாராணி ரகுபதியின் மாணவிகள் பிரியாமுரளி, அருணா சுப்பையா, டி.எம்.ஸ்ரீதேவி ஆகியோரின் அங்கயற்கண்ணி வர்ணம் அடுத்து தொடர்ந்தபோது கிருஷ்ணன் 'முதல் நிகழ்ச்சியின் வீச்சிலிருந்து மீள முடியாமல் இந்த நடனத்தை சரியாக ரசிக்க முடியவில்லை' என்று சொன்னார். ஆனால் என்னால் சில நிமிடங்களிலேயே தேவியின் பல முகங்களை ஒத்திசைவுள்ள அசைவுகளுடன் சித்தரித்த அந்நிகழ்ச்சிக்குள் செல்ல முடிந்தது.

ஹரீஷ் கங்கானி நிகழ்த்திய கதக் அதுவரையிலான நிகழ்ச்சிகளில் இருந்து வேறுபட்டிருந்தது. பாவங்கள் கொப்பளிக்கும் உணர்ச்சிவெளிப்பாடுகளுக்குப் பதிலாக அது ஒரு திறன் விளக்கம் போலிருந்தது. அவரது அசைவுகள் மிகச் சரளமானவை. கதக் சுழன்று கொண்டே இருக்கும் மனித உடலில் கூடும் நடனநிலை. ஹரீஷ் ஒவ்வொரு முறையும் மைக் அருகே வந்து கதக் பற்றி பேசி ஆடிக்காட்டினார். சரோடும் தபலாவும் துரித கதியில் துடிக்க கூடவே சரியான தாளத்தில் சலங்கை ஒலிக்க துள்ளும் அவரது கால்களில் இருந்து கண்களை எடுப்பது கஷ்டம். சவால் ஜவாப் என்று ஒரு நிகழ்ச்சி. தபலாக்கலைஞருக்கும் ஹரீஷின் சலங்கைக்குமான போட்டி அது.

கலாக்ஷேத்ரா (சென்னை) குழுவினரின் பரதம். அதன் பின் சென்னை ஜனரஞ்சனி திவ்யா ரஞ்சனியின் பரதம். சித்ரா விஸ்வேஸ்வரனின் மாணவி வி.எம் சுப்ரியாவின் பரதம் என தொடர்ந்து நிகழ்ச்சிகள். என்றாவது ஒருநாள் தேர்ந்த ரசிகனின் கண்களுடன் இந்நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதுவேன் என்று சொல்லிக் கொண்டேன். ஆனால் இன்று எளிய பாமரனாக இக்கலைகள் எனக்களித்த உவகை அன்று இருக்குமா தெரியவில்லை.

மறுநாள் ரவிக்குமார் எம்.எல்.ஏவாக இருக்கும் காட்டுமன்னார்கோயில் வழியாக கங்கை கொண்ட சோழபுரம் சென்றோம். பசுமையான வயல்வெளிகளுடன் சிறிய பாதை. கங்கை கொண்ட சோழபுரம் அதிகம் பயணிகள் வராத அமைதியான இடம். தஞ்சை கோயிலின் சாயல்கொண்ட பேராலயம். சுற்றிலும் புல் வெளி. அங்கே அமர்ந்து கோயில்கோபுரத்தைப் பார்த்தபடி நடன நிகழ்ச்சியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம்.

அருண்மொழியின் கிண்டலைப்பற்றிச் சொன்னேன். முதியவர்கள் ஆடுவது பற்றி சுப்புடு ஒருமுறை கிண்டலாகச் சொன்னதை நான் சுந்தர ராமசாமியிடம் சொன்னேன். 'அவருக்கு ஒண்ணும் தெரியாது, இடக்குப்பேர்வழி' என்றார் ராமசாமி.' அலர்மேல்வள்ளி சுத்தமா அழகி இல்லை. செப்பு மாதிரி சின்ன உருவம். அவ மேடைக்கு வர்ரதைப்பார்த்தா ஏமாற்றமாகி எந்திரிச்சு வீட்டுக்குப் போயிடலாம்னு தோணிடும். ஆனா மேடையில ஒரு பதினஞ்சு மினிட் தாண்டியாச்சுன்னா நம்ம பேரழகிகளையெல்லாம் கொண்டுட்டுபோயி அழகா இருக்கறது எப்டின்னு இவகிட்டே ஒருவருஷம் டியூஷன் எடுக்கச் சொல்லணும்னு தோணிடும்' என்றார்.' ...ஆனா அலர்மேல்வள்ளியே பாலசரஸ்வதியிடம் போயி ஆறுமாசம் டியூஷன் எடுக்கலாம். நான் அந்த அம்மாளோட ஆட்டத்தைப் பார்க்கிறப்ப அவருக்கு அறுபது வயசு பக்கத்திலே இருக்கும்...'

எந்தக் கலைக்கும் தேர்ச்சியிலிருந்து முதிர்ச்சிக்குப் போக ஒரு கால அளவு தேவையாகிறது. இருபது வருடம் பயின்ற பின்னரே பரதம்போன்ற கலைகளில் முழுமை கைகூடுகிறதுபோலும். அப்போது இயல்பாகவே வயதாகிவிட்டிருக்கிறது. ஆனால் இசை என்பது குரலைப் பொருட்படுத்தாதது போலவே நடனக்கலை உடலையும் பொருட்படுத்தாது என்று படுகிறது என்றேன். கலை எப்போதுமே ரசிகனின் கற்பனையில் நிகழ்கிறது. குரல் என்பதும் உடல் என்பதும் அக்கற்பனையை தூண்டும் ஊடகங்கள் மட்டுமே.

'அழகிகளுக்கு மேலே ஒன்றும் வேண்டியதில்லை. அழகற்றவர்களுக்கு வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. அந்த தூரத்தையெல்லாம் அவர்கள் கலையால் நிரப்பிக்

கொள்கிறார்கள். அழகை தியானித்து தியானித்து அழகை அடைந்து, அப்படியே அழகையும் தாண்டி அப்பால் சென்றுவிடுகிறார்கள்' என்றார் கல்பற்றா நாராயணன்.

மறுநாள் பெங்களூர் பிரேமா ஸ்ரீதரின் பரதம் முதல் தொடக்கம். இந்த நாட்டியாஞ்சலியில் பெண்களைப் பார்ப்பதும் கண்டிப்பாக ஒரு ஆனந்தமே. முந்தைய நாள் சென்னை பரதாலயாவின் நடனத்தில் நட்டுவாங்கம் செய்த கரிய பெண் பேரழகி. நடனத்தை அவரது கண்கள் தொடர்ந்து கவனிப்பதும் புன்னகைப்பதும் தலையசைப்பதும் மனம் கவர்ந்தது. பிரேமா ஸ்ரீதர் கன்னடப்பெண்களுக்குரிய கண்கள் கொண்டவர். சற்று புடைத்து, கீழிமை கனத்து இருப்பது போன்ற கண்கள். தமிழ்ப்பெண்களுக்குரிய மான்விழிகள் அல்ல. அவற்றில் வரும் பாவங்கள் முற்றிலும் வேறுவகையானவை.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உஷாந்தினி ஸ்ரீபத்மநாபனின் நடனத்தில் பாவங்களை தீவிரமாகவும் நளினமாகவும் அவர் வெளிப்படுத்திய விதம் நன்றாக இருந்தாலும் பாடலைப் பாடியவர் உற்சாகமே இல்லாமல் பாடியதாகப் பட்டது. ரமணி ரஞ்சன் ஜேனாவின் குழு (அவரது மகனும் மகளும்) நிகழ்த்திய ஒடிஸி நடனம் முந்தையநாள் ஒடிஸிக்கு நிகரான அனுபவமாக இருந்தது. குறிப்பாக 'லலித லவங்க லதா பரிசீலன' என்ற ஜயதேவரின் அஷ்டபதிக்கு இருவர் ஆடிய ராதாமாதவ நடனம். ஒடிஸியின் அசைவுகளின் நளினம் பிருந்தாவன லீலைக்கு மிகப்பொருத்தமாக அமைந்தது என்று பட்டது. பாடலும் மிகச்சிறப்பாக ஒலித்தது.

தொடர்ந்து லீனா மலாக்கர், பூர்ணிமா ராய் இருவரும் ஆடிய கதக். இயல்பான அசைவுகளும் சுழற்சியும் கொண்ட கதக் ஒரு வசந்தகால நடனம் என்ற எண்ணமே ஏற்பட்டது. மற்ற நடனங்களில் நடனப்பெண் பெண்ணல்லாமலாகி அசையும் சிலைகளின் வரிசையாக தென்படுகிறாள். துல்லியமான நிலைகள் அல்லாமல் ஒரு கணமும் இல்லை. கதக்கில் வேகமாக ஆடும்போது கையால் பாவாடையை தூக்கிக் கொள்கிறார்கள். சிரிக்கிறார்கள். ஒருவருடன் ஒருவர் பேசவும்செய்கிறார்கள். நடனம் நடுவே கூந்தலிழையை இயல்பாக ஒதுக்கி காதில்செருகும் அசைவும் ஒரு நடனமாக ஆகிறது.

ஒன்று கவனித்தேன். பரதத்தை ஒப்பிடும்போது கதக்கிலும் ஒடிஸியிலும் பாடல் நன்றாக இருக்கிறது. அதிலும் லீனா மலாக்கருக்குப் பாடிய பாடகர் அபாரமான கற்பனை வளமும் குரல் வளமும் கொண்ட இளைஞர். கதக்கில் பாடிய பாடகர்கள் அனைவருமே இஸ்லாமியர் என்பதற்கும் ஏதேனும் கலாசாரக் காரணம் இருக்க வேண்டும். பரதநாட்டியத்தில் முதல்தரப் பாடகர்கள் பாடுவதில்லை போலும்.

திரைநடிகை சொர்ணமால்யா நன்றாகப் பெருத்த உடலுடன் வந்து ஆட ஆரம்பித்தபோது கிளம்புவோம் என்று கல்பற்றா நாராயணன் சொன்னார். அந்தப் பெண்மணிக்கு பரதத்துக்கான பயிற்சியும் இல்லை, அவரது மனம் அதில் நிற்கவும் இல்லை. முழுக்க முழுக்க தேர்ந்த கலைஞர்கள் மட்டுமே ஆடிய ஒரு விழாவில் அவர் ஆடமுடிந்தது அவரது திரைப்புகழினால்தான். திரைப்படத்தின் தீங்கு சென்று தொடாத இடமே இல்லை.

மார்ச் ஒன்பது பத்து இரு நாட்களிலும் மேலும் நடன அஞ்சலி உண்டு. பல முக்கியமான கலைஞர்கள் ஆடுகிறார்கள் என்று தெரிந்தது. ஆனால் திரும்ப வருவதற்கான கட்டாயங்கள். இந்நிகழ்ச்சி இப்படி ஒரு அனுபவமாக இருக்கும் என எதிர்பார்க்கவேயில்லை. அடுத்த முறை இன்னும் திட்டமிட்டு வரவேண்டும்.

மூன்றுநாட்களிலும் பத்தாயிரம் பேர் கொண்ட பெருங்கூட்டம் கலையாமல் நின்று நடன நிகழ்ச்சிகளை ரசித்ததைக் கவனித்தேன். முதல்நாள் சிவராத்திரி அதனால் கூட்டம் என்று நினைத்தேன். ஆனால் மறுநாளும் அதே கூட்டம். அத்துடன் சிதம்பரம் ரசிகர்கள் நுண்ணிய தருணங்களுக்கு இயல்பாக அளித்த கைத்தட்டலும் மற்ற நேரங்களில் கூரிய கவனத்துடன் அமைதி காத்ததும் வியப்பளித்தது.

இருபது வருடங்களுக்கும் மேலாக இந்த அஞ்சலி நிகழ்ச்சி நடைபெறுவதனால் கண்டு வளர்ந்த ஒரு தலைமுறை உருவாகி விட்டிருக்கிறது என்றார் நண்பர்.

கடலூர் வாசக நண்பர் சீனு வந்து வெகுநேரம் அருகே அமர்ந்திருந்த பின் நடன இடைவெளியில் மெல்ல குனிந்து நான் சீனு கடலூர் என்றார். மகிழ்ச்சியாக இருந்தது. பல வருடங்களாக தொலைபேசியில் பேசி அறிந்த வாசகரான அவரை நேரில் சந்தித்தது அப்போதுதான்.

பேருந்தில் அரைத்தூக்கத்தில் வந்துகொண்டிருந்தபோது கனவுகளிலும் ஒலித்தபடி இருந்த ஜதிஸ்வரங்கள் உள்ளூர எங்கோ பரதமும் ஒடிஸியும் கதக்கும் குடியேறிவிட்டிருந்தன என்பதற்கான சான்று.

மார்ச் 11, 2008

29. கத்தாழ கண்ணாலே

ஒரு குத்துப்பாட்டு கேட்டேன். 'கத்தாழ கண்ணாலே குத்தாதே நீ என்னெ...' நல்ல பாடல். அதன் வரிகள் குத்துப்பாடல்களுக்கு உண்டான வழக்கமான வார்த்தைகளினால் உருவானவை. ஆனால் அதன் மெட்டமைப்பிலும் இசைச்சேர்ப்பிலும் ஒலிப்பதிவிலும் உள்ள நுட்பம் மீண்டும் மீண்டும் அதைக் கேட்கவைத்தது. மூன்று மெட்டுகள் ஒன்றுடன் ஒன்று தழுவிச்செல்லும் பாடல் இது. பாடலின் மெட்டுக்கு அப்பால் ஷெனாய் ஒலி ஒரு மெட்டு, பெண்குரலின் மெல்லிய ஹம்மிங் இன்னொரு மெட்டு. ஒரு குத்துப்பாட்டில் இத்தகைய நுட்பமான கற்பனையும் கடும் உழைப்பும் இருப்பது வியப்புக்குரியது.

இதே இசையமைப்பாளரின் 'வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்' இதேபோல நுட்பமான ஒரு நல்ல பாடல். இப்பாடல்களை படமாக்கிய விதமும் நன்று. நிர்வாணமோ ரசாபாசமோ அதிகமில்லாமல் அசிங்கமான அசைவுகள் இல்லாமல் நளினமான துள்ளலான அசைவுகளினாலான நடனம்.

பொதுவாக 'நல்ல' படம் பார்க்கிறவர்கள் நடுவே குத்துப்பாடல்கள் 'கெட்டவை' என்று ஒரு எண்ணம் இருக்கின்றது. திரைப்பட இயக்குநர்களுக்கே கூட அப்படி ஓர் எண்ணம் உண்டு. குத்துப் பாட்டு இல்லாத படம் என்ற விளம்பரங்களை நாம் அதிகம் கண்டிருக்கிறோம். வெளிநாட்டு குத்துப்பாடல்களை ரசிப்பது உயர் கலாசாரமாகவும் உள்நாட்டு குத்துப் பாடல்களை ரசிப்பது கீழ்க் கலாசாரமாகவும் நம் சூழலில் கருதப்படுகிறது.

குத்துப்பாடல்கள் ஒரு பண்பாட்டின் தவிர்க்க முடியாத அம்சம். மக்களுக்கு உற்சாகமும் களியாட்டமும் எப்போதும் தேவையாகின்றன. நேரடியாக சாத்தியமில்லாவிட்டால் கூட கற்பனையில் தேவைப்படுகிறது. அதன் முக்கியமான கருவி குத்துப்பாட்டு. தெம்மாங்குப் பாட்டுகள், பைலோ பாட்டுகள் அன்றைய குத்துப்பாட்டுகளே. கேரளத்தில் பலவகையான குத்துப்பாட்டுகள் உண்டு. குத்துப்பாட்டு என்றால் 'போகத்தை நினைவுறுத்துவதும் நடனத்தன்மை கொண்டதுமான இசைப்பாடல்' என்று சொல்லலாம்.

ஒன்று கவனித்திருக்கிறேன். நல்ல குத்துப்பாட்டில் இனிய மெல்லிசை (மெலொடி) ஒன்று இருக்கும். அது வேகமான தாளத்தால் சூழப்பட்டு அதிர்ந்து கொண்டிருக்கும். சொல்லப்போனால் நல்ல குத்துப்பாட்டில் ஒரு சோக மனநிலையும் எப்படியோ இழையோடுகிறது, அது அந்த மெல்லிசைமெட்டின் விளைவு. 'கத்தாழ கண்ணாலே' ஓர் இனிய மெட்டு. அதை அப்படியே இன்னிசைப்பாடலாக போட்டுவிடலாம்.

இளையராஜா அவரது புகழ்பெற்ற 'நிலா அது வானத்து மேலே' பாடலை முதலில் தாலாட்டு மெட்டாகப் போட்டதாகவும் பின்னர் வேறு மெட்டில் தாலாட்டு (தென்பாண்டி சீமையிலே) அமைந்துவிட்டதனால் இதை குத்துப்பாட்டாக ஆக்கியதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

குத்துப்பாட்டுகளை நான் எப்போதுமே கவனித்து வந்திருக்கிறேன். என் உற்சாகமான மனநிலைகளில் அவை பிணைந்திருக்கின்றன. வாயில் அப்பாடல்கள் ஒலிப்பது என் இயல்பு. என் மனைவிதான் என்னை எச்சரித்தபடியே இருப்பாள். என்னை சந்திக்க வரும் வாசகர்களும் நண்பர்களும் என்னைப்பற்றி தப்பான எண்ணத்தை கொண்டுவிடுவார்கள் என. என்னை 'சீரியஸ்' ஆன ஆள் என்று எண்ணி வரும் வாசகர்களே அதிகம். என் வாழ்நாளில் அதிகபட்சம் மொத்தம் பத்துமணி நேரம் 'சீரியஸ்' ஆக இருந்திருக்க மாட்டேன். என் நெருக்கமான

நண்பர்களுக்கு நான் குத்துப்பாட்டு முனகாமலிருந்தால்தான் ஆச்சரியம் ஏற்படும்.

குத்துப்பாட்டு நம்மை ஒருநாள் முழுக்க உற்சாகமான மனநிலையில் வைத்திருக்கிறது. அதில் உள்ள போகம் பற்றிய வரிகளைப் பற்றி மிதமிஞ்சி கவலைப்படுவதும் கொதிப்பதும் தேவையில்லை என்பதே என் கருத்து. போகம் எப்போதுமே பாட்டில் அடியோட்டமாக ஓடிக் கொண்டிருக்கும் சரடு. நம் நாட்டுப்புறப்பாடல்களில் உள்ள அளவுக்கு காமம் இன்னும் பிரபலக் கலையில் வரவில்லை. அது ஒருவகை அக வெளிப்பாடு. அதில் பெண்ணடிமைக் கருத்துகள் இருந்தால் கண்டிப்பது நல்ல காரியம், அவ்வளவுதான்.

எனினும் அப்பாடல்களைப் பற்றி தகவல்கள் சேகரிப்பதும் நினைவில் வைத்திருப்பதும் என் வழக்கம் அல்ல. அவை அப்படியே என் வழியாக கடந்து போய்விடும். இனிமேல் கொஞ்சநாள் ‘கத்தாழ கண்ணாலே’ தான்.

நினைவில் தங்கிய நல்ல குத்துப்பாடல்கள் சில. பிறவற்றை நண்பர்கள் சொன்னால் நினைவுபடுத்தி ரசிக்கலாம்.

1. மாமா மாமா மாமா! ஏம்மா ஏம்மா ஏம்மா..
2. ஓ... ரசிக்கும் சீமானே வா...
3. குல்லாபோட்ட நவாப்பு செல்லாதுங்க ஜவாப்பு
4. சின்னக்குட்டி நாத்தனா சில்லறய மாத்துனா
5. சித்தாட கட்டிகிட்டு...
6. என்னடி ராக்கம்மா புல்லாக்கு நெளிப்பு
7. இன்னாடி முனியம்மா உன் கண்ணுல மையி
8. தேன்கூடு நல்ல தேன்கூடு...
9. நினைத்தாலே இனிக்கும் சுகமே
10. ஆட்டமா தேரோட்டமா?
11. ஆசை அதிகம் வச்சு...
12. ஆசைய காத்துல தூது விட்டு...
13. பொன்மேனி உருகுதே
14. நிலா அது வானத்து மேலே
15. ஆலகால விஷம் சிவனே...
16. குன்றத்துல கோயிலைக் கட்டி
17. வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்
18. கத்தாழ கண்ணாலே குத்தாதே நீ என்னை

மார்ச் 18, 2008

[30. அஞ்சலி: மலையாளக் கவிஞர் கடம்மனிட்ட ராமகிருஷ்ணன்]

கடம்மனிட்ட என்று மலையாளிகளால் பிரியமாக அழைக்கப்பட்ட மலையாளக் கவிஞர் கடம்மனிட்ட ராமகிருஷ்ணன் மார்ச் 31, 2008 அன்று கேரளத்தில் பத்தனம்திட்டாவில் காலமானார்.

பத்தனம்திட்டா அருகே கடம்மனிட்டா என்ற கிராமத்தில் மார்ச் 22, 1935ல் பிறந்தவர் ராமகிருஷ்ண பணிக்கர் என்ற கடம்மனிட்ட ராமகிருஷ்ணன். அப்பகுதி தமிழ்நாட்டுப் பண்பாட்டுடன் நெருக்கமான உறவுள்ளது. படையணிப்பாடல் போன்ற பல நாட்டார் பாடல்முறைகளால் செழுமைகொண்டது. அம்மரபில் பிறந்து வளர்ந்தவர் கடம்மனிட்ட. கடைசிவரை அந்த கிராமிய இயல்பு அவரிடம் இருந்தது.

இளமைக்காலம் முதல் கடைசி வரைக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராகவும் செயலாளியாகவும் கடம்மனிட்டா இருந்தார். இளமையில் மாணவர்சங்கத்தில் பொறுப்பிலிருந்தார். தொழிற்சங்கப்பணி ஆற்றியிருக்கிறார். 1992ல் கேரள புரோகமன சாகித்ய சங்கம் (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். 2002 ல் அதன் தலைவராக ஆனார். 1996ல் ஆறன்முள தொகுதியிலிருந்து மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளராக சட்டசபைக்கு தேர்வுசெய்யப்பட்டார். 1982ல் அவருக்கு கேரள சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

1960களில் கடம்மனிட்ட ராமகிருஷ்ணன் சென்னையில் அக்கவுண்ட் ஜெனரல் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றினார். அபோது மார்க்ஸியர்களுக்கு எதிரான சக்தியாக விளங்கியவரும் எம்.என்.ராயின் மாணவருமான எம்.கோவிந்தனின் தொடர்பு கிடைத்தது. அது அவரை நவீன இலக்கியத்தின்பக்கம் கொண்டுவந்து சேர்த்தது. முரண்பாடுகளுடன் அவர் கோவிந்தனின் நெருக்கமான மாணவராகவும் இருந்தார். கேரளத்தில் புதுக்கவிதையை கொண்டுவந்த முன்னோடிகளில் ஒருவர் கடம்மனிட்டா. முன்னோடிகள் அனைவருமே எம்.கோவிந்தனுடன் நெருக்கமான தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது (கெ.அய்யப்ப பணிக்கர், கெ.பாலூர், என்.என்.கக்காடு, ஆற்றூர் ரவிவர்மா, கெ.சச்சிதானந்தன், சுகத குமாரி, ஆர்.ராமசந்திரன் ஆகியோர் பிறர்.)

ஆனால் கடம்மனிட்டாவின் பங்களிப்பு கேரளக் கவிதையில் அவர் கொண்டுவந்த ஆவேசமான நாட்டார்தன்மைதான். படையணிப்பாடல் போன்ற நாட்டார் மெட்டுகளுள்ள அவரது ஆக்ரோஷமான கவிதைகள் எழுபதுகளின் இடதுசாரி எழுச்சிகளின் முகப்புக்குரலாக மாறின. கடம்மனிட்ட கனத்த குரலும் தாளக்கட்டுள்ள பாடும் முறையும் கொண்டவர். ஒருவகையில் இன்று ஆந்திராவில் புகழ்பெற்றிருந்த கத்தாருக்கு முன்னோடி அவரே. மேடையில் மிக உக்கிரமாக அவற்றை அவர் வெளிப்படுத்துவார். எழுபதுகளில் அவரது கவிநிகழ்ச்சிகளுக்கு பத்தாயிரம்பேர் கூடுவது சாதாரணமாக இருந்தது. அவரது கவிதைவெளிப்பாட்டு நிகழ்ச்சி மங்கட ரவிவர்மா இயக்கிய நோக்குகுத்தி என்ற படத்தில் உள்ளது. ஞெரளத்து ராமப்பொதுவாளின் இடைக்காவுடன் இணைந்து அதில் அவர் பாடுகிறார்.

அங்கதம் கொண்ட வசன கவிதைகளையும் கடம்மனிட்டா எழுதியிருந்தாலும் அவரது இசைக்கவிதைகளுக்குக் கிடைத்த பெரும் வரவேற்பு அங்கே நவீனக் கவிதை வசனநடைக்கு

வர முடியாமல் ஆக்கியது. மாற்றம் தொண்ணூறுகளில்தான் நிகழ்ந்தது.

கடம்மனிட்டாவின் நல்ல கவிதைகள் அப்போதே தமிழில் வெளிவந்தன. வானம்பாடி இதழ் அவரது கவிதைகளுக்காக ஒரு சிறப்புமலர் வெளியிட்டது. அவரது குறத்தி போன்ற கவிதைகளை சிற்பி மொழியாக்கம் செய்திருந்தார். கண்ணூர் கோட்டை முதலிய கவிதைகளை சுகுமாரன் மொழியாக்கம் செய்திருக்கிறார். என்னுடைய 'தற்கால மலையாளக் கவிதைகள்' நூலில் அவரது முக்கியமான கவிதைகள் உள்ளன.

மிக எளிமையான நாட்டுப்புறத்துக்காரரைப்போல பிரியமாகப் பேசக்கூடியவர் கடம்மனிட்டா. நான் ஒருமுறை அவரை சந்தித்திருக்கிறேன். எல்லா தரப்பினருக்கும் விருப்பமானவராக இருந்தார். அவர் கேரளக் கவிதையில் ஒரு காலகட்டத்தின் முகம்.

காட்டாளன்

வேங்கைப்புலி காத்துகிடக்கும்
ஈரக்கண்கள் திறந்தும்,
கருநாகம் நுனியில் நெளியும்
புருவம் பாதி வளைத்தும்,
கருகியதோர் காட்டின் நடுவே
நிற்பான் காட்டாளன்!
நெஞ்சில் ஒரு பந்தம் நட்டு
நிற்பான் காட்டாளன்!
ஆகாயத்தில் அப்பன் செத்து
கிடப்பதுகண்டு நடுங்கி,
மலையோரத்தில் அம்மை இருந்து
தகிப்பது கண்டு கலங்கி,
முலைபாதி அறுத்தவள் ஆற்றின்
கரையில் கனலாய் அழைக்க,
கனலின்குரல் வீசுளிபோலே
நெஞ்சில்பாய்ந்து துளைக்க,
கணையேற்ற கரும்புலி போல
பிளந்துசரியும் பெருமலைபோல
உலகெல்லாம் நடுங்கும்வண்ணம்
அலறினான் காட்டாளன்!
ஒருகணம் விம்மியமுதிடும்
சாதகப்பறவையைபோல
மனைநீர் கேட்டு வானம் நோக்கி
நின்றான் காட்டாளன்!

வானுக்கோ மௌனம் வெறிக்
காதலுக்கு தாகம் பெருக
மாந்தோப்புகள் உருகும் மண்ணில்
அமர்ந்தான் காட்டாளன்!
கருமேகம் செத்துகிடக்கும்
கடும்விஷக் கடலோ வானம்?
கருமரணம் காவலிருக்கும்
சுடுநோவின் கோட்டையிலாநான்?
எங்கென்றன் கனவுகள் பாவிய
இடிமின்னல் பூக்கும் வானம்?
எங்கென்றன் துளசிக்காடுகள்?
ஈரக்கூந்தல் ஆற்றிய அந்திகள்?
பச்சைப்புழு துள்ளி நடக்கும்
இஞ்சிப்புல் வெளிகள் இன்று எங்கே?
அருகம்புல் நுனியில் அம்புலி
படமெழுதிப் பாடிய இரவுகள்?
காட்டின் கைவளைகள் ஒலிக்க,
காட்டாற்றின் சதங்கைகள் கொஞ்ச,
காடத்திகள் சோலைமரத்தின்
நிழலில் குதித்தாட;
கருவீட்டி அழகுடல் நெளிய,
கண்ணிமைக் காடுகள் விரிய,
பூங்கூந்தல் கட்டுகள் அவிழ,
உடலசைய, மெல்லிடையசைய,
முலையசைய, கார்முடிசிதற,
காடத்திகள் சோலைமரத்தின்
நிழலில் குதித்தாட;
மூங்கிற்குழல் தளும்பும் மதுவை
ஒரேமூச்சில் உண்டு அப்போதையில்
மரத்தடியில் தாளம் தட்டித்
தலையாட்டிய நான் இன்று எங்கே?
எங்கு மறைந்தனர்? என்றன் மகவுகள்?
தேன்கூடு தேடிப்போன

ஆண்குழந்தைகள், என் மைந்தர்கள்?
பூக்கூடை நிறைக்கப்போன
என் கண்கள், பெண் குழந்தைகள்?
தாய்ப்பால் உதட்டில் மணக்கும்
ஆம்பல்பூ மொட்டுகள் எங்கே?
குருத்தெலும்புகள் கருகும் நெடியோ
அறைகிறதென் நாசிகளில்?
வேங்கைப்புலி உறுமும் கண்ணில்
ஊறி வரும் ஒரு தீச்சொட்டு!
காட்டாளன் தன் நெஞ்சுள் உடைந்த
முதுகெலும்பு நிமிர்த்து எழுந்தான்!
தரையுதைத்து எழுந்த விசையில்
தூசுத்திரைகள் பொங்கியெழுந்தன.
வேட்டைக்காரர் கைகளையெல்லாம்
வெட்டுவேன் இக்கல்மழுவேந்தி!
மதந்தீண்டி அசுத்தம் செய்தவர்
தலையறுந்து மிதப்பார் ஆற்றில்!
மரம் வெட்டி அழித்தவர், எந்தன்
குலம் முழுதுமழித்தவர், அவர்கள்
குடல்மாலைகளால் இந்நிலத்தில்
தோரணங்கள் சமைப்பேன்!
குடலுருவியெடுப்பேன், நான் என்
குழலூதி விளிப்பேன் மீண்டும்
மதம் கொண்ட பாகதர் குழுக்கள்
வரும் என் வில் நாணேற!
வில்லுக்கு என் ஜீவ நரம்புகள்
முறுக்கிக்கட்டி ஒரு நாணேற்றிடுவேன்!
இடிமின்னல் ஒடித்து அம்பு! அக்கினி
அலையலையாய் கருமுகிலில் சென்று
உரசும்! பொறி பேய்மழையெனப்
பொழியும்! சிறு வேர்கள் போலப்
படரும்! முளைவிட்டுத் தழைக்கும்
கதிர்கள்!!!

ஒரு சூரியன் உதிக்கும்!

நிழல்போல் அம்புலி வளரும்!

கானகப்பொலிவுகள் எங்கும் விரியும்!

வனவேகத்தில் என் துயரம் தெளியும்!

நான் அன்று சிரிப்பேன்!

கருகித்தோர் காட்டின் நடுவில்

நிற்பான் காட்டாளன்!

நெஞ்சில் ஒரு பந்தம் நட்டு

நிற்பான் காட்டாளன்!

குறிப்பு: மூலப்பெயர் ‘கிராத விருத்தம்’

காட்டாளன் என்ற பழைய சொல் காட்டை ஆள்பவன் என்றும் காட்டுமனிதன் என்றும் பொருள் தருகிறது.

மார்ச் 31, 2008

31. சுஜாதா, இரு வம்புகள்

'உயிர்மை' சுஜாதா அஞ்சலி மலரில் மாலன் எழுதிய அஞ்சலிக் குறிப்பில் மாலனின் வழக்கமான புகை தவறாமல் வெளிப்படுகிறது. சுஜாதாவை இலக்கியவாதியாக கருதாமல் அவருக்கு அங்கீகாரம் கிடைக்காமல் பார்த்துக் கொண்டவர்கள், சுஜாதாவின் படைப்புகளை பதிப்பித்த மனுஷ்யபுத்திரனை எழுத்து வியாபாரி என்று அழைத்தவர்கள் (அனைவரும் ஒருவரா என்ன?) இப்போது சுஜாதாவை ஒரு மாபெரும் இலக்கியவாதி என்று சொல்லி அஞ்சலிக் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்களாம். எழுதிச் சாதிக்காததை சுஜாதா மரணம் மூலம் சாதித்துவிட்டாராம். மாலன் சொல்கிறார்.

இலக்கிய வாசகன் ஆர்வத்துடன் கேட்கக் கூடும் யார் அவர்கள் என்று. நானும் அதையே கேட்க விரும்புகிறேன். யார் அவர்கள்?

'உயிர்மை' இதழ் சுஜாதாவை கரையின்றி புகழ்ந்திருக்கிறது. அது இயல்பு, அவ்விதழின் பின்புல வலிமையாக இருந்தவர் அவர். வைரமுத்து கனிமொழி உள்பட பிரபலங்கள் புகழ்ந்திருக்கிறார்கள். காரணம் அவர் இன்னொரு பிரபலம். நான் உட்பட சில இலக்கியவாதிகள் புகழ்ந்திருக்கிறோம். ஆனால் நாங்கள் எழுதவரும்போதே சுஜாதா பெயரைச் சொல்லிக் கொண்டுதான் வந்தோம்.

சுஜாதாவை இலக்கியவாதியாக அங்கீகரிக்காதவர்கள் பலர் உண்டு. அவர்களில் முக்கியமான படைப்பாளிகள் உண்டு, நாஞ்சில்நாடனைப் போல. விமரிசகர்கள் உண்டு வெங்கட் சாமிநாதன், வேதசகாய குமார் போல. பெரும்பாலான சிற்றிதழ்களுக்கு அவர் மீது கடும் விமரிசனம் கலந்த நோக்கே உள்ளது. அதற்கான நியாயங்கள் அவர்களுக்கு உள்ளன. அத்தகைய வலுவான தரப்புகளால்தான் இலக்கியம் தன் பன்மைத்தன்மையை உருவாக்கிக் கொள்கிறது, வளர்கிறது. அவர்களுடன் நாம் விவாதிக்கலாம். அவர்களை நிராகரிக்கவும் செய்யலாம்.

நான் வாசித்தவரை 'உயிர்மை' தவிர எல்லா சிற்றிதழ்களும் அவரது அஞ்சலியிலும் கறாரான மதிப்பீட்டை முன்வைத்து விமரிசித்த பின்னர்தான் அஞ்சலி செலுத்தியிருக்கின்றன. எந்த இலக்கியவாதியும் அவருக்கு கூட்டம்போட்டதாக தெரியவில்லை – கூட்டம் போடுவது அவசியம் என்றே எண்ணுகிறேன். எனக்கு இப்போதுள்ள பிரச்சினைகள் இல்லையென்றால் நானே கூட்டம் ஏற்பாடு செய்திருப்பேன்.

அப்படியானால் மாலன் என்ன சொல்கிறார்? ஒன்றுமில்லை, அவரது புகையை வெளியே விடுகிறார். நெடுங்காலமாக இப்படி புகைந்து கொண்டிருக்கிறார்.

மாலனின் பிரச்சினை என்ன? அவர் யார் என்று அவருக்கு தெரியவில்லை, அதுதான். இதழாளரா? அங்கும் ஒன்றும் சாதிக்கவில்லை. சிறுகதையாளரா? ஐயோ பாவம். சிற்றிதழ்? சொல்வதற்கில்லை. எல்லா வணிக இதழ்களிலும் எல்லாவகையிலும் எழுதிவிட்டார். பேரவில்லை. ஆக குழப்பம் மிச்சம். கொஞ்சநாள் இலக்கியவாதியாக வணிக எழுத்தாளர்களைக் காய்ந்தார். பின்னர் வணிக எழுத்தாளராக இலக்கியவாதிகளைக் காய்ந்தார். பிறகு இரண்டுமில்லாமல் இருதரப்பையும் காய்ந்தார். இப்போது மீண்டும் சுஜாதாபக்கம் சாய்ந்து இலக்கியவாதிகளைக் காய்கிறார்.

கலாப்ரியாவின் கவிதை இது. ‘புகைபோக்கி வழியாக வீட்டுக்குள் வந்துவிட்ட பச்சோந்திக்கு என்ன நிறம் மாற்றிக் கொள்வது என்று தெரியவில்லை!’

‘உயிர்மை’ இதழில் சாரு நிவேதிதா எடுத்துக் கொடுத்திருக்கும் சுஜாதாவின் கணையாழி கடைசிப் பக்கத்து வரிகளை வைத்து சில விசாரிப்புகள். ‘அகிலன் நினைவுப்பரிசு’ பெற்ற இளம் எழுத்தாளர் பரிசு கிடைத்ததும் நிலைகுலைந்து தமிழில் ஜே.ஜே.சிலகுறிப்புகள் தவிர இலக்கியமே இல்லை மலையாளத்தில்தான் உள்ளது என்றாராம், இந்தமாதிரி ஆசாமிகளையெல்லாம் கூட்டிவந்து காபிடிபனெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்’ என்று எழுதியிருப்பது உங்களையா என்று.

என்னையேதான். ரப்பர் நாவலுக்கு ‘அகிலன் பரிசு’ பெற்ற விழாவில் 1991ல் நான் பேசிய செய்தி அவருக்கு எவராலோ அப்படி கூறப்பட்டது. ஆனால் பின்னர் நாவலைப் படித்துவிட்டு மிகவும் பாராட்டி எழுதினார். அதனூடாக என் இலக்கிய வருகையை அறிவித்து எழுதியவரே அவர்தான். அதன் பின் என் சிறுகதைத் தொகுதிகள் , நாவல்கள் அனைத்தைப் பற்றியும் பாராட்டி எழுதியிருக்கிறார். தொடர்ச்சியாக என்னைப்பற்றி பேசி இளம் எழுத்தாளனாகிய எனக்கு பரவலான வாசக கவனத்தைப் பெற்றுத்தந்தவர் அவரே.

நாவல்களின் வடிவம் பற்றி நான் சொன்ன கருத்தே சுஜாதாவுக்கு அப்படி போய்ச் சேர்ந்தது. அவரை மட்டும் படித்துவிட்டு நான் தமிழில் படிக்க ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டேன் என்று வல்லிக்கண்ணன் உட்பட பலர் எழுதிக் கொண்டே இருந்தார்கள். ஆகவே நான் என் தரப்பை விளக்க ‘நாவல்’ என்று நாவலின் வடிவம் பற்றி ஒரு நூலையே எழுதினேன். தமிழிலக்கிய மரபைப்பற்றி விரிவாக கட்டுரைகள் எழுதினேன். ஆனால் இன்றும் சிலர் அதையே சொல்லத்தான் செய்கிறார்கள். என்ன செய்வது?

ஏப்ரல் 8, 2008

[32. பாலுணர்வெழுத்தும் தமிழும்]

இணையத்தில் உரையாட வருபவரான நண்பர் பெத்துச்சாமி வெங்கடாச்சலம் ‘பாலுணர்வு எழுத்து இலக்கியமா?’ என்ற கேள்வியைக் கேட்டிருந்தார். ‘ஆம் பாலியல் எழுத்திலும் இலக்கியப்படைப்புகள் உண்டு’ என அவருக்குப் பதிலளித்தபின்னும் அதையொட்டியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். எந்த ஒரு வகை எழுத்திலும் நமக்கு உடனே கிடைப்பது தரமற்ற எழுத்துதான். அதுவே அதிகமான பேரால் எழுதப்படுவதாக இருப்பதே அதற்குக் காரணம். பொதுவாக அதையொட்டியே நமது மனச்சித்திரங்களும் மதிப்பீடுகளும் அமைகின்றன. பாலுணர்வு பற்றி ஆழமான குற்றவுணர்வு உள்ள மக்கள் நாம் என்பதனால் அந்த தரமில்லாத எழுத்தைப் படித்ததுமே தீவிரமான எதிர்நிலைப்பாடுகளை உருவாக்கிக் கொள்கிறோம்.

இலக்கியத்தின் வகைமைகள் முடிவிலாதவை. அவற்றின் வெகுசில வகைகளையே நாம் தமிழில் இலக்கியம் என்ற பேரில் வாசித்துக் கொண்டிருக்கிறோம். துப்பறியும் கதை, திகில்கதை, பேய்க்கதை, அறிவியல்கதை, புதிர்கதை, முதிராக்காதல்கதை போன்ற பல வகைமைகளுக்குள் பேரிலக்கியங்களை நாம் உலக இலக்கியப் பரப்பில் காணலாம். அவற்றில் பாலுணர்வுக் கதையும் ஒன்று.

தமிழில் நாம் பெருவாரியான வணிக எழுத்துக்கு மாற்றான ஒரு போக்காக மட்டுமே தீவிர இலக்கியத்தை புரிந்துகொண்டு வகுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான வரலாற்றுக் காரணங்கள் பல. ஆகவே நம் மனத்தில் தீவிர இலக்கியம் என்பது வாசிப்பார்வத்தைத் தூண்டாதது, குறைவானவர்களால் படிக்கப்படுவது, நுட்பத்தை மட்டுமே இலக்காகக் கொண்டது என்ற எண்ணம் வலுவாக வேரூன்றியது.

அதேபோல எழுத்தாளர்களும் ஒரு எதிர்நிலையில் நின்றே எழுதிவந்தார்கள். வெகுஜன ஊடகங்கள் முன்னிலைப்படுத்திய எழுத்துக்களால் தொடப்படாத தளங்களை மட்டுமே அவர்கள் இலக்கியத்தில் இலக்காக்கினார்கள். வெகுஜன எழுத்து என்பது காமம், திகில்,கேளிக்கை என்று மட்டுமே விரிந்தமையால் தமிழ் வாழ்க்கையின் சொல்லப்படாத யதார்த்தங்களை நோக்கித் திரும்பியது நமது இலக்கியம். இன்றும் யதார்த்தவாதமும், இயல்புவாதமும் நமது இலக்கிய அழகியலின் மைய ஓட்டங்களாக மேலோங்கியிருப்பதற்குக் காரணம் இதுவே. இந்த இயல்பு வரலாற்றுப் பின்புலம் கொண்டது, இயற்கையானது, சிறப்பானது.

ஆனால் இக்காரணத்தால்தான் நாம் பிற இலக்கிய வகைமைகள் இலக்கியமே அல்ல, அவை வணிக எழுத்துக்கள் என்ற எண்ணத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். தீவிர இலக்கியம் படிக்கும் வாசகர்களில் ஒருசாரார் உற்சாகமாகச் சொல்லப்பட்ட எழுத்தையே இலக்கியமல்ல என்று நிராகரிக்கும் மனநிலை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆதவன் அதனாலேயே அவர்களால் புறக்கணிக்கப்பட்டார். ஏன், எளியமொழியில் நேரடியாக எழுதுகிறார் என்பதனாலேயே அசோகமித்திரனை ஏற்காதவர்கள் உண்டு. இந்நிலையில் பிறவகைமைகளைப் பற்றி பேசவே வேண்டாம்.

உண்மையில் திகில், காமம், மனக்கிளர்ச்சி போன்ற தளங்களில் கூட இலக்கியப் படைப்புகளே தீவிரமாகவும் உக்கிரமாகவும் இயங்கமுடியும். வணிக எழுத்து அவற்றையே சார்ந்திருக்கிறது, அவற்றை மீண்டும் மீண்டும் எழுதுகிறது என்றாலும் வணிக ஊடகங்கள் பெருவாரியான

மக்களைச் சார்ந்துள்ளன. ஆகவே அவர்களின் பொதுவான ஓர் ஒழுக்க எல்லையை அவை மீறிச் செல்ல இயலாது. அந்த எல்லையை அவையும் உணர்ந்து தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டாகவேண்டும். மாறாக இலக்கியம் எல்லைகள் இல்லாதது. தன் தேடலை தன் திறனின் உச்சம் வரைக்கும் கொண்டுசெல்வது. ஆகவே பாலியல் எழுத்து என்றால் அதன் உச்சம் இலக்கியத்திலேயே சாத்தியம்.

இன்று வணிக எழுத்து என்பது தமிழில் அனேகமாக இல்லை. வணிகக் கேளிக்கை ஊடகமான தொலைக்காட்சி அதன் முதுகெலும்பை முறித்துவிட்டது. எழுத்து என்றாலே இன்று இலக்கியம்தான். ஆகவே இன்று இலக்கியத்துக்கு எதிர்மறைப் பண்பு தேவையில்லை. வணிக எழுத்துக்கு மாற்றாக தன்னை முன்வைக்கும் அவசியமும் இல்லை. அதனால் தன் எல்லைகளை அனைத்துத் தளத்திலும் விரித்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறது இலக்கியம். பாலுணர்வெழுத்தும் அதில் ஒன்று.

தமிழில் நல்ல பாலுணர்வெழுத்து மிகக்குறைவே. பாலுறவையும் பாலுணர்வையும் எழுதும்போதே சொல்லலங்காரங்களில் சென்று அடைக்கலம் தேடுவது நம் எழுத்தாளர்களின் வழக்கமாக இருக்கிறது. புதுமைப்பித்தன் ஒரு பாலுணர்வு நாவல் எழுதி வைத்து நண்பர்களுக்கு கொடுத்து வந்ததாக தொ.மு.சி.ரகுநாதன் எழுதியிருக்கிறார். ஏன் இதெல்லாம் எழுதுகிறீர்கள் என்று கேட்டால், ‘என்ன கேள்வி இது? தமிழன் நல்ல போர்னோகிராஃபி படிக்கவேண்டாமா?’ என்று அவர் வேடிக்கை செய்வார் என்று ரகுநாதன் சொல்கிறார். புதுமைப்பித்தன் வேடிக்கை செய்யவில்லை.

தொ.மு.சி.ரகுநாதன் புதுமைப்பித்தன் ஆங்கிலப் பாலுணர்வு எழுத்துக்களை விரும்பிப் படிப்பார் என்றும் தனக்கும் அதில் ஆர்வம் உண்டு என்றும் சொல்லியிருக்கிறார். சி.சு.செல்லப்பா பாலுணர்வு நூல்களைப் படிப்பதில் மோகம் உடையவர் என்று அவ்வப்போது பேச்சு உண்டு — பிரமிள் அதை வெளிப்படையாகச் எழுதியிருக்கிறார். பிரமிளும் அந்த மோகம் உடையவரே. வல்லிக்கண்ணனிடம் ஒரு தகரப்பெட்டி நிறைய பாலுணர்வுப் புத்தகங்கள் இருந்தன என்று சொல்வார்கள்.

தமிழில் எந்த ஒரு இலக்கிய வகைமைக்கும் முதல்தொடக்கம் புதுமைப்பித்தனின் ஆக்கங்களிலேயே இருக்கும். அவரது ‘விபரீத ஆசை’யே தமிழ் பாலுணர்வு எழுத்தின் முதல் முன்னுதாரணமாக கொள்ளத்தக்கது. நண்பனின் பிணம் கிடக்க அவன் மனைவியுடன் கூடுபவனின் தடுமாற்றமும் பதற்றமும் பிறழ்வுநிலையும் சொல்லப்பட்ட கதை அது. அதன் பின் நேராக எஸ்.பொன்னுத்துரையின் ‘சடங்கு’, ‘தீ’ என்ற இரு ஆக்கங்கள். பாலுணர்வெழுத்தில் தமிழில் இன்றுவரை சிறப்பாகச் சொல்லப்படவேண்டிய ஆக்கம் சடங்குதான்.

எழுபதுகளில் தமிழ்நாடனின் ‘காமரூபம்’ போன்ற நூல்கள் பாலுணர்வுஇலக்கியங்கள் என்று கொண்டாடப்பட்டன. ஆயினும் அவை சொல் அலங்காரங்களில் மறைந்து நின்று சொல்ல முயன்றவையே. பாலுணர்வெழுத்தில் தமிழின் அடுத்த முக்கியமான ஆக்கம் தஞ்சை பிரகாஷின் ‘மீனின் சிறகுகள்’. அவரது கரமுண்டார் வீடு, கள்ளம் போன்ற நாவல்களிலும் பாலுணர்வு அம்சம் இருக்கிறது.

சமீபத்தில் ஜே.பி.சாணக்யா பாலுணர்வுக் கதைகளை எழுதியிருக்கிறார். ‘அமராவதியின் பூனை’ என்ற அவரது கதை குறிப்பிடத்தக்கது. ஆனால் பெரும்பாலான கதைகளில் சொற்களின் புதருக்குள் கதையைச் சிக்கவைக்கும் உத்தியையே அவரும் மேற்கொண்டிருக்கிறார். எஸ்.பொன்னுதுரை உட்பட பலரும் செய்துவந்த விஷயம் அது.

மேலே குறிப்பிட்ட தமிழ் பாலுணர்வுக்கதைகளில் பாலுணர்வுக்கூறு சற்றே மேலோங்கியிருக்கிறதே ஒழிய அவை முழுமையான பாலுணர்வுக்கதைகள் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும் – மீனின் சிறகுகள் விதிவிலக்கு. பாலுணர்வுக்கதை என்பது தன்

மையக்கருவாகவே பாலுணர்வை எடுத்துக் கொண்டிருக்கும். அதைப் பற்றி கூர்ந்த அவதானிப்புடன் விவாதிக்கும். அதை நுண்ணிய விவரிப்புடன் சித்தரித்துக் காட்டும். அதன் மனநிலைகளை பல தளங்களில் விரித்துச் செல்லும். வெறுமே கிளர்ச்சியுறச்செய்வது மட்டுமல்ல அதன் நோக்கம். அது ஒரு ரகசிய உலகை உருவாக்கி அளிக்கும்.

ஐம்பதுகளில் டி.எச்.லாரன்ஸின் எழுத்துக்களும் அறுபதுகளில் ஆல்பர்ட்டோ மொரோவியோவின் எழுத்துக்களும் தமிழ்நாட்டில் பாலுணர்வெழுத்துக்களின் சிறப்பான முன்னுதாரணங்களாக இலக்கிய தனிநபர்பேச்சுகளில் முன்வைக்கப்பட்டன. எழுபதுகளில் ஹென்றி மில்லர். இவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் தங்கள் எல்லையை தாங்களே தாண்டி வந்திருக்கின்றன என்பதைக் காணலாம்.

பாலுணர்வெழுத்திற்கும் பாலியல்கவர்ச்சி எழுத்துக்கும் என்ன வேறுபாடு? வெறுமே சற்று நேரம் நமக்கு ஒரு மனச்சித்திரத்தின் இன்பத்தை மட்டுமே அளித்து நின்றுவிடுவது பாலியல்கவர்ச்சி எழுத்து. இலக்கியம் எந்த வகையானாலும் அது நம்மை நாமே அறியச்செய்யும். கூர்ந்து நோக்க வைக்கும். நமக்குள் நம்மைக் கொண்டுசெல்லும். அதுவே முக்கியமான வேறுபாடு.

என் நோக்கில், நல்ல பாலுணர்வெழுத்து என்பது சில இயல்புகள் கொண்டது. அது எந்நிலையிலும் அழகாகவே இருக்கும். பகற்கனவுகளுக்கு மட்டுமே உரிய மென்மையான அழகு அது. தொட்டால் பொலபொலவென உதிர்ந்துவிடக்கூடிய, பிறரிடம் பகிர முடியாத அழகு. எல்லா இலக்கிய ஆக்கங்களைப் பற்றியும் சொல்வதுதான், நல்ல பாலுணர்வெழுத்து குறைவாகவே சொல்லி வாசகனின் கற்பனையைத் தூண்டும். அவனுடைய அந்தரங்கமான கனவுகளில் மட்டுமே அது முழுமையடையும்.

மனத்திரிபு நிலைகளை எழுதுவது பாலுணர்வெழுத்து அல்ல. அதை வேறு வகைமையில்தான் சேர்க்க வேண்டும். மனதை சிதைப்பதும் வதைப்பதும் பாலுணர்வெழுத்தின் இயல்பல்ல. பாலுணர்வெழுத்து இனிய மனக்கிளர்ச்சி ஒன்றை மட்டுமே அளிக்கும். அதன் உச்சியில் ஒரு வகை தனிமையின் துயரையும், இழப்பின் ஏக்கத்தையும் சொல்லி முடியக்கூடும். எப்போதும் அது மூளைக்குள் பரவும் இனிய தென்றலாகவும் கற்பனையில் விரியும் இளவெயிலாகவுமே இருக்கும்.

எங்கெல்லாம் இலக்கியம் இருக்கிறதோ அங்கெல்லாம் பாலுணர்விலக்கியமும் உண்டு. பழங்குடிப் பாடல்கள் முதல் பேரிலக்கியப் பரப்பு வரை. வேதங்களில், பைபிளில். இந்திய காவிய மரபின் இரு உச்சங்களான கம்பனையும் காளிதாசனையும் பாலுணர்வெழுத்தின் இரு சிகரங்களாகவே சொல்ல வேண்டும்.

ஏனென்றால் மனிதர்களுக்கு பாலுணர்வெழுத்து மிகவும் தேவையாகிறது. அது ஓர் அடிப்படையான இச்சை. இச்சைகள் அனைத்துமே ருசிகள். ருசிகளே அழகுகளாக ஆகின்றன. மனிதன் தன் கற்பனையை பாலுறவுசார்ந்து முடிவிலாது விரித்துக் கொண்டாகவேண்டியிருக்கிறது. அது அவன் வாழ்வின் மீது கொள்ளும் ஆசையின் ஒரு வெளிப்பாடேயாகும். நம் கலைகளில் பாலுணர்வென்பது வாழ்வாசையின் மன எழுச்சியாகவே எப்போதும் வெளிப்பாடு கொள்கிறது.

இயற்கை நமக்கு உயிர்த்துடிப்பான வாழ்க்கையை ஒவ்வொரு கணமும் அளித்தபடியே உள்ளது. நாம் அமைத்துக் கொண்ட வாழ்க்கை நம்மை ஒவ்வொரு கணமும் விதவிதமான சிறைகளில் அடைத்துக் கொண்டே இருக்கிறது. பருவுடலால் அச்சிறைகளை மீற முடியாதபோது நாம் கற்பனையால் மீறிச் செல்கிறோம். ஒரு வயலினின் ரீங்காரம் கேட்டு நாம் மூடிய கான்கிரீட் அறைக்குள் இருந்துகொண்டே பூத்த வனாந்தரத்தில் உலவுகிறோம். எல்லா கலையும் மனிதனின் கற்பனையின் அடிப்படை அலகான படிமங்களால் ஆனதே.

கற்பனையில் இருந்து எப்படி காமத்தை விலக்க முடியும்? நல்ல பாலுணர்வெழுத்தும் ஓயாத

படிமவெளியை உருவாக்கக் கூடியது. சுவர்களை மறையச் செய்யக்கூடியது. நம்மை கட்டற்ற பசுமை வெளியில் நிறுத்தக் கூடியது. அத்தகைய எழுத்துக்கள் தமிழில் இனிவரும் காலத்தில் உருவாகுமென எண்ணுகிறேன். தொழிலின் சிறையில் மனிதர்கள் அடைபடும்தோறும் அதற்கான தேவை அதிகரிக்கும்.

என் நண்பரும் வாசகருமான ‘கே.எஸ்’ இந்தியாவுக்கு வெளியே ஒரு பல்கலையில் பணியாற்றுகிறார். அசாதாரணமான வாசிப்பு கொண்டவர். கம்பன் முதல் நாயன்மார்கள் வரை. புதுமைப்பித்தன் முதல் சு.வேணுகோபால்வரை. ஆனால் இலக்கியம் பற்றி எப்போதும் ஒரு ஏளனத்துடன் மட்டுமே எதிர்வினையாற்றுவார். ஏன், எனக்கு தெரிந்து அவர் எதிலுமே நேர்நிலைக் கருத்து சொன்னதில்லை. அவர் வாழும் சூழல் என்னால் கற்பனை செய்யக்கூடுவதல்ல.

ஆனால் அவ்வப்போது நல்ல பாலுணர்வுக் கவிதைகளை அனுப்புவார். எட்டுவரி இருக்கும், ஆனால் ‘நேற்று இரவு முழுக்க அதை எழுதினேன்’ என்பார். இரவெல்லாம் அந்த வரிகளுக்குள் இருந்திருக்கிறார் என ஊகிப்பேன். கவிதை மின்னஞ்சலில் வந்ததுமே தொடர்ந்து திருத்தங்களும் வரும். ஆச்சரியமாக எல்லாப் பாலுணர்வுக்கவிதைகளும் மிக நேரடியான உணர்வு வெளிப்பாடு கொண்டவை.

நேற்றுவந்த இரு கவிதைகள்தான் இக்கட்டுரைக்கே தூண்டுதலாக அமைந்தன.

மெய்க்காட்சி

கண்கள் என்று ஏன் பெயர்?

தொட்டுச் சிலிர்க்க வைப்பதனாலா?

குத்தும் கூர்மையினாலா?

நாணிப் புதைந்துகொள்வதனாலா?

என் நாவின்

உரையாடலில்

சிலிர்த்து

விழித்தெழுவதனாலா?

உணர்வுகளின் தழலில்

சுட்ட செம்புபோல்

சிவந்து ஒளிர்வதனாலா?

என் இனிய

அதிகாலைத் துயிலில்

மெதுவாகத் தொட்டு

வருடிச் செல்வதனாலா?

என் துயரில்

அமுதூட்டுவதனாலா?

அவை

யான்நோக்காக்கால்

நிலம் நோக்கும்

நோக்குங்கால்

தான் நோக்கி

மெல்ல நகும்.

புலியாவது

பூனைக்குட்டிகளை உங்களுக்குப் பிடிக்குமா?

பூனைக்குட்டிகள் மிக அழகானவை

கரிய பளபளப்புள்ள மென்மயிர்.

அல்லது இளம்பொன்னிறம்.

வெம்மையானவை.

அடைக்கலம் தேடுபவை.

அன்பின் வருடலுக்கு

நெகிழ்ந்து கொடுப்பவை.

மழைக்குப்பின் எழும்

இளம்புல்பரப்பு போல

அவ்வளவு மென்மையானவை.

உயிர்துடிப்பானவை.

செந்நிறச் சிறுவாயுடன்

இளஞ்சிவப்புச் சிறு மூக்குநுனிபுதைத்து

தன்னுள் தான் ஒடுங்கி

தூங்குபவை.

பூனைக்குட்டிகள் எப்போதும்

பதுங்கியே இருக்கின்றன.

பூனைக்குட்டி சிலிர் தெழுவதைக்

கண்டிருக்கிறீர்களா?

மூச்சு ஒலிக்க

கண்கள் ஒளிர

வாய் திறந்து சீறி

கூர் உகிர்கள் எழுந்து வர?

புலி பதுங்குவது பாய்வதற்கே

பூனையும் புலியே.

மென்மையான அழகான

கைக்கடக்கமான

நல்ல புலி.

ஏப்ரல் 4, 2008

33. காலச்சுவடு நூறாவது இதழ்

'காலச்சுவடு' நூறாவது இதழ் வெளியாகிறது. தமிழிலக்கிய சூழலில் இது ஒரு முக்கியமான சாதனை. தமிழில் சிற்றிதழியக்கம் என்பது எப்போதுமே பொருளாதாரச் சிக்கல்கள் நிர்வாகத்திறனின்மை ஆகிய இரண்டு அடிப்படைகளைக் கொண்டே இயங்கி வந்துள்ளது. சந்தா அனுப்பினால் இதழ் வரும் என்ற உறுதியை அளிக்கும் இதழ்கள் மிகக் குறைவாகவே இருந்திருக்கின்றன. மிகச்சிறந்த நிர்வாகத்திறனும் தெளிவான இதழியல் நோக்கும் கொண்ட கண்ணனின் மேற்பார்வையில் 'காலச்சுவடு' அடைந்த வெற்றி ஒரு சமகால வரலாறு. அவ்விதழில் அவரது கனவும், சலியாத தொடர் உழைப்பும் முன்னெடுக்கும் விசையாக இருந்துள்ளன. நம் சூழலில் இத்தகைய அழுத்தமான அறிவார்ந்த நீடித்த உழைப்பும் அர்ப்பணிப்பும் மிக அபூர்வமானவை.

இதழில் கண்ணன் எழுதியிருக்கும் முன்னுரைக்குறிப்பில் 'சுபமங்களா'வின் இலக்கிய இடம் குறித்த எதிர்மறைக் கருத்து இடம்பெற்றிருப்பதைப்பற்றி வாசகர் ஒருவர் எழுதிக்கேட்டிருந்தார். ஒரு சிற்றிதழின் இலக்கியப் பங்களிப்பை அத்தனை சாதாரணமாக மதிப்பிட்டுவிடமுடியாது. வரலாற்றுச் சூழல், இலக்கிய மதிப்பீடுகள் என அதை மதிப்பிட பல அளவுகோல்கள் உண்டு. கண்ணனின் மதிப்பீடு அவசரமானது, போதாமைகள் கொண்டது என்றே எனக்குப் படுகிறது.

தமிழில் நடுத்தர இதழ்களுக்கான தேவையை தொடர்ச்சியாக முன்வைத்தவர் சுந்தர ராமசாமி. அவரே ஈடுபாடு காட்டி பல முயற்சிகள் வந்தன. எஸ்.வி.ராஜதுரையின் 'இனி', வசந்தகுமாரின் 'புது யுகம் பிறக்கிறது' போன்றவை முளையிலேயே கருகின. தமிழில் வெற்றிபெற்ற முதல் நடுத்தர இதழ் 'சுபமங்களா'.

முந்தைய நடுத்தர இதழ்களின் தோல்வியிலிருந்து சுபமங்களா கற்றுக் கொண்ட பாடம், எந்த ஒரு குழுவின் குரலாகவும் ஒலிக்காமலிருப்பது என்பதே. அந்த பாடத்தால்தான் அது வெற்றி பெற்றது. கோமல் சுவாமிநாதன் மார்க்ஸியர். முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொறுப்பிலிருந்தவர். சாதாரணமாக அவர் அதை ஒரு முற்போக்கு மேடையாக ஆக்கியிருக்கலாம். ஆனால் சுபமங்களாவில் எல்லா கருத்தியல் தரப்புக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆகவே அனைவரும் அதில் எழுதினார்கள். சில இதழ்களுக்குள்ளேயே அது ஒரு பொதுமேடையாக ஆகியது. அதுவே அதன் முதன்மைப் பங்களிப்பு.

தமிழ் இலக்கியத்தளத்தின் அனைத்து தரப்பினரும் விவாதிக்கும் ஒரு பொதுத்தளம் என ஒன்று அதற்கு முன்னர் உருவானதே இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவரவர் இதழ்களில் பேசிக்கொள்வதே வழக்கம். சுபமங்களாவில் நடந்த அந்த விவாதம் மூலமே உண்மையில் தமிழ் இலக்கியச்சூழலில் ஓர் உயிரசைவு உருவாகியது. கோமலின் அந்த நிலைப்பாட்டை சுந்தர ராமசாமி ஏற்கவேயில்லை. சுபமங்களா சுயநிலைப்பாடு இல்லாமல் 'எல்லாருக்கும்' இடமளிக்கிறது என்று தொடர்ந்து என்னிடம் சொல்லியிருக்கிறார். அதைத்தான் கண்ணனும் சொல்கிறார்.

சுபமங்களாவுக்கு சுயநிலைப்பாடு தெளிவாகவே இருந்தது என்பதை சுபமங்களா நேர்காணல்களை வாசிக்கும் எவரும் உணரலாம். சிவசங்கரி, பாலகுமாரன் போன்ற வணிகஎழுத்தாளர்களிடம் அதன் நோக்கும் போக்கும் கறாராகவே இருந்தன என்று

காணலாம். அது வணிக இலக்கியத்துக்கு எதிராக இலக்கியம் என்ற பொதுவட்டத்தை முன்வைத்தது. அதற்குள் இயங்கும் அனைவரையும் தன் பக்கங்களில் கொண்டுவர முயன்றது. அதில் பெருமளவு வெற்றியும் பெற்றது. அ.மார்க்ஸும் நாகார்ஜுனனும் அருணனும் ஞானக்கூத்தனும் ஒரே இதழில் பேச ஆரம்பித்த பிறகே தமிழில் இன்றைய இலக்கிய காலகட்டம் தொடங்கியது.

எழுத்தாளர்களுக்கு படங்கள் போட்டு 'கிளாமரைஸ்' செய்கிறது சுபமங்களா என்று குற்றம் சாட்டப்பட்டதுண்டு. அம்பை சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சுந்தர ராமசாமி கூட அவ்வாறு சொல்லியிருக்கிறார். பின்னர் சுந்தர ராமசாமியின் பலநூறு படங்கள் தமிழில் வெளிவந்ததை, இன்றும் அவரில்லாமல் காலச்சுவடே இல்லை என்ற நிலை இருப்பதை நாம் காண்கிறோம். சுபமங்களா அன்று அறியப்பட்டிருந்த வணிக எழுத்தாளர்களுக்கு மாற்றாக ஒரு எழுத்தாளர் வரிசையை முன்னிறுத்தியது. அவர்களுக்கு அது முக்கியம் கொடுக்க விரும்பியது. அதற்கு ரவிசங்கரனின் அழகிய புகைப்படங்கள் பெரும் பங்களிப்பாற்றின.

சுபமங்களாவில் வந்த எழுத்தாளர்களின் பேட்டிகள் பொதுவாக சாதாரணமானவை. காரணம் சுபமங்களாவின் வாசகன் அவர்களைக் கேள்வியே பட்டிருக்கமாட்டான். ஆகவே எளிய அறிமுகமாகவே அந்தப் பேட்டிகள் பலசமயம் உள்ளன. ஆனால் பக்க வடிவமைப்பு வழியாக 'இதோ முக்கியமான புது எழுத்தாளர்கள்!' என கூவி முன்வைத்தது சுபமங்களா. பாலகுமாரனுக்கு 'நிகராக' வண்ணதாசனை வெளியிட்டதைப்பற்றி அதிர்ச்சி அடைந்து பேசிய வாசகர்களை நான் கண்டிருக்கிறேன். (யார்யா இவரு?) இன்றைய இளம் வாசகன் இதை சற்று கற்பனைசெய்துதான் புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு முக்கியப்படுத்தப்பட்ட ஓர் எழுத்தாளர் வரிசை வழியாகவே தமிழில் ஒரு புது வாசகர்வட்டம் உருவானது. இன்று நாம் காணும் பதிப்பக அலை, புத்தகக் கண்காட்சிகள், புதிய நூல்கள் அனைத்துக்கும் விதை இவ்வாறுதான் வீசப்பட்டது. சுபமங்களாவை மறந்து எந்த இலக்கிய வாசகனும் இதையெல்லாம் பேச முடியாது. அந்தக் காலகட்டத்தின் பங்கு உள்ளது. தொலைக்காட்சி வணிக எழுத்தை அழித்துக் கொண்டிருந்த காலம். வேறு வகை எழுத்துக்கான இடைவெளி உருவாகியிருந்தது. அந்த வரலாற்று இடத்தை சுபமங்களா நிரப்பியது.

சுபமங்களாவின் வெற்றியே மேலும் நடுத்தர இதழ்களுக்கான இடத்தை உருவாக்கியது. 'புதியபார்வை' அதைத்தொடர்ந்து வெளிவந்தது. 'காலச்சுவடு' வெளிவந்தது. 'விண்நாயகன்' வந்து நின்றுபோனது. சுபமங்களாவைப் போலன்றி காலச்சுவடு ஒருபோதும் இலக்கிய எழுத்தாளர்களை முன்னிறுத்தியதில்லை என்பதை அதன் இதழ்களைப் புரட்டிப் பார்ப்பவர்கள் காணலாம். மிகச்சில எழுத்தாளர்களே அதில் பேசப்பட்டிருக்கிறார்கள். சுந்தரராமசாமி தவிர எவருமே அதில் முக்கியப்படுத்தப்படவில்லை. காலச்சுவடு உத்தேசிக்கும் 'கறாரான' இலக்கிய நோக்கு என்பது சுந்தர ராமசாமி தவிர பிறரையெல்லாம் கீழிறக்கும் இடத்துக்கே அதைக் கொண்டு சென்றது.

சுபமங்களா உருவாக்கிய எழுத்தாளர்கள் யார் என்று கேட்டால் நான் என்னையும் எஸ்.ராமகிருஷ்ணனையுமே முதன்மையாகச் சொல்வேன். எங்களை சிலர் இன்று முக்கியமான எழுத்தாளர்களாகச் சொல்கிறார்கள் என்பதை கண்ணன் அறிந்திருப்பார். சிற்றிதழ்களில் இருந்து எங்களை அடுத்தகட்ட வாசகர்களுக்குக் கொண்டுபோன இதழ் அது. அன்று வெறும் நான்கு கதைகளே எழுதியிருந்த என்னிடம் இரண்டாவது இதழுக்கே கோமல் கதை கேட்டு வெளியிட்டார். ஜகன் மித்யை. பின்னர் கதாவிருது பெற்றது அக்கதை. கடைசி இதழ் வரை என் முக்கியமான கதைகள் பலவற்றை அதில்தான் எழுதினேன்.

முற்போக்கு இலக்கியவகைக்குள் எழுதிக் கொண்டிருந்த எஸ்.ராமகிருஷ்ணன் சுபமங்களா வழியாகவே முக்கியமான சிறுகதையாசிரியராக அறிமுகமானார். அவரது ஒருகதையை படித்துவிட்டு நான் சுந்தர ராமசாமியிடம் பேசியதை நினைவு கூர்கிறேன். சுந்தர ராமசாமி

உடனே ராமகிருஷ்ணனுக்கு அதைப் பாராட்டி கடிதம் எழுதினார். இன்று நாம் பேசும் பல படைப்பாளிகள் அதன் பக்கங்கள் வழியாக அறிய வந்தவர்கள். கண்மணி குணசேகரன், அழகியபெரியவன் வரை.

நூறு இதழ்கள் வழியாக காலச்சுவடு தமிழுக்குக் கொடையளித்த பெரும் படைப்பாளிகள் யார் யார்? 'அரவிந்தன்' என்று சொல்லி நகைச்சுவை வழங்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். உண்மையில் எந்த இதழும் எழுத்தாளர்களை 'உருவாக்க' இயலாது. அவர்கள் உருவாகும் காலத்தில் அடையாளம் கண்டு கொள்ளலாம். அவர்கள் செய்யும் புதுமைகளுக்கு இடமளிக்கலாம். எனக்கு முதலில் 'நிகழ்' அமைந்தது. பின்னர் 'சுபமங்களா'. காலச்சுவடு சிலர் கதைகளை வெளியிட்டுள்ளது. அது தொடர்ந்து கவனப்படுத்திய எழுத்தாளர் என யாருமே இல்லை.

காலச்சுவடின் கொடை மிக முக்கியமானது என்பதே என் எண்ணம். சுபமங்களாவுடன் ஒப்பிட்டுக்கொள்ள முயன்றதற்குப் பதிலாக அதை கண்ணன் சொல்லியிருக்கவேண்டும். நடுத்தர இதழ்களின் அடுத்த கட்டத்தை தொடங்கிவைத்த இதழ் காலச்சுவடு. இலக்கிய, அறிவுலக அறிமுகம் என்பதற்குப் பதிலாக மிக விரிவான இலக்கிய, அறிவுலக விவாதங்களை அது முன்வைத்தது. அப்போது காலச்சுவடு வெளியிட்ட பேட்டிகளை சுபமங்களா பேட்டிகளுடன் ஒப்பிடும்போது இதை உணரலாம். விரிவான, தொடர்ந்த கோட்பாட்டு ஆய்வுகளுக்கும் அரசியல் சர்ச்சைகளுக்கும் அது இடமளித்தது. பின்நவீனத்துவம், மதச்சார்பின்மை, அமைப்பியல், பின்காலனியம், நவீனகாந்தியம் என இக்கால சிந்தனைகள் அதன் பக்கங்களில் இன்றுவரை தொடர்ந்து பேசப்படுகின்றன.

அப்போது காலச்சுவடு இதழில் நான் எடுத்து வெளியான சச்சிதானந்தன் பேட்டியை சுபமங்களாவுக்கு அளித்திருக்கலாமென்று கோமல் என்னிடம் கேட்டபோது இதையே சொன்னேன். சுபமங்களாவின் வரலாற்றுப்பணி அறிமுகம் செய்வதே, விரிவான கோட்பாட்டு விவாதம் கொண்ட அப்பேட்டி அதன் வாசகர்களுக்கு உரியதல்ல என்று. இன்று எல்லா தரப்பிலும் தீவிர வாசகர்களாக உள்ள அத்தகைய ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கியதில் காலச்சுவடுக்கு பெரும் பங்கு உண்டு. நிகழ் போன்ற சிற்றிதழ்களில் புழங்கிய அந்த உலகம் திடீரென விரிவானதற்குக் காரணம் காலச்சுவடுதான். அதுதான் அதன் வரலாற்றுப் பங்களிப்பு.

நூறாவது இதழின் தலையங்கம் என்பது ஒருவகையில் ஒரு வரலாற்றுப் பதிவு. அதன் ஒவ்வொரு சொல்லையும் என்றோ எவரோ வாசிக்கக் கூடும். அத்தகைய ஒரு குறிப்பில் காழ்ப்புகள் இன்றி இன்னும் திறந்த மனத்துடன் எழுதியிருக்கலாம் என்று படுகிறது. பிறர் மீதான நக்கல்களும் கசப்புகளும் இருக்கட்டும், காலச்சுவடு இதழின் தொடக்க கால வெற்றிகளுக்கு முக்கிய காரணங்களில் ஒருவராக இருந்த மனுஷ்ய புத்திரனைப்பற்றி மனந்திறந்து சில சொற்களாவது பாராட்டாகவோ நன்றியாகவோ சொல்லியிருந்தால் சொல்பவர் இன்னும் மேலாகவே எண்ணப்பட்டிருப்பார்.

தமிழ் இலக்கியத்தின், சிந்தனைகளின் வரும் காலகட்டங்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு காலச்சுவடு மேலும் மேலும் சாதனை படைக்க வாழ்த்துகிறேன்.

ஏப்ரல் 16, 2008

34. சொல் புதிது பற்றி...

அன்புள்ள ஜெயமோகன்,

சிற்றிதழ்கள் நிர்வாகத்திறனின்மை கொண்டவை என்று எழுதியிருந்தீர்கள். 'சொல்புதிதும்' அப்படித்தானா?

அருண்

அன்புள்ள அருண்,

என்ன சந்தேகம்? சொல்புதிது அளவுக்கு குளறுபடியாக வந்த இதழ்கள் மிகக் குறைவு. எனக்கு நிர்வாகத்திறன் போகட்டும், நிர்வாகம் என்ற ஒன்றின் இருப்பு பற்றிகூட ஒன்றும் தெரியாது. என்னையே வேறு யாராவதுதான் எப்போதும் நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

நான் சிற்றிதழ்களை நடத்தக்கூடாது. நடத்தவும் மாட்டேன். அது நண்பர் சூத்ரதாரி (எம்.கோபாலகிருஷ்ணன்) யின் கனவு. அவர் இதழ் ஆரம்பிக்க என்னிடம் உதவி கேட்டார். சேர்ந்து ஆரம்பித்தோம். அதன் விஷயங்களை திரட்டியளிப்பது மட்டுமே என் பொறுப்பு. பொதுவாக நான் விஷயங்களின் கைப்பிரதிகளை அனுப்புவதுடன் சரி. அதன்பின் அச்சிட்ட இதழ்களையே காண்பேன். மேலும் நான் அப்போது என் பெரிய நாவல்களின் வேலைகளையே முதன்மையாகக் கவனித்தேன். இவ்வியல்பு காரணமாக பல சிக்கல்கள் ஏற்பட்டன. இன்றுவரை என் 'எதிரிகள்' என்னைப்பற்றிச் சொல்லும் அவதூறுகளின் அடிப்படைகள் இவ்வாறு உருவானவையே.

ஐந்தாவது இதழ் வந்தபோது ஆசிரியராக இருந்த கோபாலகிருஷ்ணன் அதிகாரியாக பணி உயர்வு பெற்று கடும் பணிச்சுமைக்கு ஆளானார். அதுவரை இதழின் ஆசிரியர் விற்பனை பிரதிநிதி கடைநிலை ஊழியர் எல்லாமே அவர்தான். அப்போது ஒப்பு நோக்க பிழைகள் குறைவு. ஆனாலும் ஒவ்வொரு முறையும் இதழ் வெளிவரும்போது மனச்சோர்வுதான்.

பின்னர் சரவணன் 78 ஆசிரியராக வந்தார். அப்போதுதான் அவர் பட்டமேற்படிப்பை முடித்திருந்தார். குறைவான ஊதியத்தில் அவர் பணியாற்ற முன்வந்தார். ஆனால் அனுபவம் குறைவு. தொடர்ச்சியாக பலவகையான பிழைகள், குளறுபடிகள்.

முக்கியமான குளறுபடி என்றால் தமிழிசை பற்றிய கட்டுரை சார்ந்த விவாதத்தைச் சொல்ல வேண்டும். தமிழ் சிற்றிதழ்களில் தமிழ் இசைக்கு ஒரு முக்கியமான தனி இதழ் வெளியிட்டது சொல்புதிது தான். அதன் அட்டையில் நா.மம்முதுவின் படம் வெளியிடப்பட்டது. உள்ளே அவரது விரிவான பேட்டி. அவரை விரிவாக அறிமுகம் செய்தது சொல்புதிதுதான். வித்வான் லக்ஷ்மண பிள்ளை பற்றி மிக விரிவான ஒரு கட்டுரையை எம்.வேதசகாயகுமார் எழுதினார்.

பொதுவாசகர்களுக்காக தமிழிசை பற்றிய இரு அறிமுகக் குறிப்புகளை எழுதிச் சேர்க்கலாமென பிறகு தோன்றியது. சரவணனுக்கு தகவல்களை அனுப்பி இரு பின்குறிப்புகளை சேர்க்கும்படி சொன்னேன் — பெயரில்லாமல் சாய்ந்த எழுத்தில். இதழ் வெளிவந்தபோது அவை இரு தனி கட்டுரைகளாக, ஒன்று சரவணன் பேரிலும் இன்னொன்று இதழ் பொறுப்பாளரான அருண்மொழி நங்கை பேரிலும் வெளியாகியிருந்தது. நான் மிகக்

கடுமையாக அவரை கண்டித்தேன். ஆனால் குறிப்புகள் கட்டுரைகள் போல நீண்டு விட்டமையால் வேறு வழி தெரியவில்லை என்று அவர் சொன்னார்.வேறோரு கோணத்தில் இதழியலில் இது தவிர்க்க முடியாததும்கூட.

சில வருடங்கள் கழித்து பொ.வேல்சாமி அருண்மொழிநங்கை பேரில் வந்த கட்டுரை தஞ்சை தமிழ் பல்கலையைச் சேர்ந்த ஓர் ஆய்வாளர் எழுதியது என்று என்னிடம் தெரிவித்தார். உடனே நான் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அத்தகவலை உறுதி செய்து கொண்டேன். அப்போது சரவணன் இதழைவிட்டு போயிருந்தார். அந்த ஆய்வாளரை தொடர்பு கொண்டு மன்னிப்பு கோரியதுடன் இதழ் சார்பில் பொது மன்னிப்பும் கேட்டேன். பின்னர் சரவணன் எனக்கு மன்னிப்பு கோரி கடிதம் எழுதியிருந்தார்.

உண்மையில் சரவணன் பேரில் வந்த கட்டுரையும் வேறு ஒரு கட்டுரையின் நகல் என்று இரண்டையும் சேர்த்துதான் பொ.வேல்சாமி சொல்லியிருந்தார். ஆனால் நம் சக இதழ்களுக்கு இந்த தகவல் முக்கியமானதாகப் படவில்லை. அதைத் தவிர்த்தால் மட்டுமே பழியை என்மீது திருப்ப முடியும் என்பது அவர்களின் திட்டம். பொ.வேல்சாமி என்னிடம் சொன்னதை நான் உறுதிசெய்துகொண்டேன், ஆனால் அவர் அதை அவரது கட்டுரைகளில் சொல்லவில்லை.

இன்னொரு குளறுபடி மேலும் வேடிக்கையானது. நிர்மால்யாவும் நானும் மொழிபெயர்த்த கல்பற்றா நாராயணனின் நெடுஞ்சாலை புத்தர் என்ற கவிதை சொல்புதிதின் பின்னட்டையில் வெளியானது. அது ஊட்டியில் நடந்த கவிதை பரிமாற்ற அரங்குக்காக மொழியாக்கம் செய்யப்பட்டது. அம்மொழியாக்கம் 30 தமிழ் மலையாள கவிஞர் மத்தியில் படிக்கப்பட்டு திருத்தப்பட்டு பலமணிநேரம் விவாதிக்கவும்பட்டது. அக்கூட்டத்தில் சரவணன் பங்குகொண்டிருந்தார். அவர்தான் சொல்புதிதுக்கு அப்போது பொறுப்பு. ஆனால் சொல்புதிதில் அக்கவிதையில் இரண்டு வரிகள் விடுபட்டு பிரசுரமாகியிருந்தது. மேலும் இருவரிகள் அச்சுக்குளறுபடியாகியிருந்தன. வழக்கம்போல சால்ஜாப்புகள்.

இரு வருடம் கழித்து ஓர் இதழில் அதே சரவணன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். சொல் புதிதில் வந்த மொழிபெயர்ப்பையும் நான் என் தொகுப்பில் சேர்த்த சரியான மொழிபெயர்ப்பையும் அளித்து ஒப்பிட்டு மொழிபெயர்ப்புகள் நடுவே ஏன் இந்த வேறுபாடு, இப்படியெல்லாம் மொழிபெயர்த்தால் என்ன இலக்கிய நம்பகத்தன்மை என்றெல்லாம் கேட்டு ஒரு பெரிய கட்டுரை! இசை பற்றிய கட்டுரைக்காக நான் சரவணனை மன்னிக்காமைக்காக பழிவாங்குதல்.

அடுத்து என் நண்பர் மௌலானா சதக்கத்துல்லா ஹஸனீ ஆசிரியரானார்.பொதுவாக இதழில் பிழைகள் குறைந்தாலும் அவருக்கு இலக்கிய நுட்பங்கள் தெரியாமையினால் சில சிக்கல்கள் உருவாயின. எம்.வேதசகாயகுமார் எழுதிய (எம்.வேதா) நாய்களைப்பற்றிய ஒரு உருவகக் கதை சுந்தர ராமசாமியைப் பற்றியது என்று சொல்லப்பட்டு பெரும் பிரசாரம் கிளப்பப்பட்டது. (நாச்சார் மடத்து விவகாரங்கள்) டாமன், டையூவுக்கு குடும்பத்துடன் பயணம் மேற்கொண்டிருந்த நான் அவ்விதழைக் காணவேயில்லை.

வேதசகாயகுமாரின் கதை உண்மையில் சுந்தர ராமசாமி, பிரமிள்,நகுலன் வகையறா நடுவே நாய்களை உருவகமாக்கி நடந்து வந்த ஒரு நெடுங்கால வசையிலக்கிய மரபின் நீட்சி. அதில் சுந்தர ராமசாமி, நகுலன், பிரமிள் எழுதிய பல கவிதை மற்றும் கட்டுரைகளின் நுண்ணிய உள்ளர்த்தங்கள் உண்டு. வேதசகாயகுமார் அந்த வசையிலக்கியங்கள் வெளியான கொல்லிப்பாவை முதலிய இதழ்கள் வழியாக வளர்ந்தவர். அவ்விலக்கிய மரபில் நம்பிக்கை உடையவர். அவர் அவரே எழுதிய கதை என்று சொன்னதுமன்றி மன்னிப்பு கோரவும் இல்லை.

வசையிலக்கியம் இல்லாத மொழி இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டு ஆங்கில வசையிலக்கிய மரபில் பேரிலக்கியங்கள் உண்டு. தமிழில் பிரமிளும் நகுலனும் விரிவாகவே

எழுதியிருக்கிறார்கள். சுந்தர ராமசாமியும் எழுதியிருக்கிறார். அவை பூடகமானவை. அதேபோலவே வேதசகாய குமாரின் கதையும் பூடகமானதே. அதனால்தான் மௌலானாவுக்கு புரியவில்லை. காலச்சுவடு அதை வெளிச்சமாக்கி பிரசாரத்தை தூண்டிவிட்டது.

எனக்கு வசை இலக்கியத்தில் நம்பிக்கை இல்லை. சொல்வது எதுவானாலும் நேரடியாகவே சொல்வேன். சொல்புதிது வசையிலக்கியத்தை வெளியிட்டதுமில்லை. அதன் இதழ்கள் விரிவான ஒட்டுமொத்த ஆய்வுகளுக்காகவே ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்றுவரை அக்கதை நான் எழுதியது என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அப்பிரசாரத்தை சோர்விலாது நடத்திய காலச்சுவடு ஆசிரியர் அரவிந்தன் என் நண்பர். அவருக்கு மிக நன்றாகவே தெரியும், அது நான் எழுதியதல்ல என்று. நாகர்கோயிலில் அக்கதையை முன்னரே வேதசகாயகுமாரின் வாயால் வாசித்து கேட்காத அறிவுஜீவிகள் குறைவு. ஆயினும் நான் பொறுப்பேற்று நேரடியாக மனுஷ்யபுத்திரனுடன் தொடர்பு கொண்டு மன்னிப்பு கோரினேன். எழுத்திலும் மன்னிப்பு கேட்டேன். உண்மையில் எவரையும் புண்படுத்த நான் விரும்புவதில்லை.

சொல் புதிது நன்றாகவே வரவேற்பு பெற்றது. இதழ்கள் மிகக் குறைவாகவே மிஞ்சியுள்ளன, என் மாடியில். ஆனால் பணம் கையில் வந்தது மிகக்குறைவு. முதல் இதழ் முதல் 15 வது இதழ் வரை ஒரு பைசாகூட தராத விற்பனையாளர் பலர். சந்தா கட்டியவர்களுக்கு ஒழுங்காக போய்ச்சேரவும் இல்லை. இன்றுகூட எப்படியும் அரை லட்ச ரூபாய் வெளியே நிற்கிறது.

கடைசியில் எவரோ யார் என நானறிவேன் – சொல் புதிது ஓர் இஸ்லாமிய தீவிரவாத இதழ் என்று சொல்லி புகார் செய்து விட்டார்கள். மௌலானாவை தினம் மதுரை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கூட்டி வைத்து மாதக்கணக்கில் விசாரணை செய்தார்கள். நாங்கள் முறைப்படி பதிவுசெய்யாமல் நடத்தி வந்தோம். அதையே காரணம் காட்டி இதழை நிறுத்தினார்கள். பதிவுக்கு முயன்றபோது பெயர் கிடைக்கவுமில்லை. இதழ் நின்றுவிட்டது.

சொல்புதிதை இப்போது பார்க்கும்போது அதன் மிக விரிவான பேட்டிகள், இந்திய மரபு குறித்த கட்டுரைகள், நூல்பகுதிகள் ஆகியவற்றுக்காக அதை ஒரு குறிப்பிடத்தக்க முயற்சி என்றே சொல்லத்தோன்றுகிறது.

ஏப்ரல் 17, 2008

[35. பாவலர் விருது]

இசைஞானி இளையராஜா இலக்கியப்பேரவை வழங்கும் படைப்பிலக்கியத்திற்கான பாவலர் விருது இவ்வருடம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ரூபாய் இரண்டு லட்சமும் பாராட்டுப் பட்டயமும் அடங்கியது இவ்விருது.

இசைஞானி இளையராஜா இலக்கியப்பேரவை சென்ற வருடம் முதல் இலக்கிய விருதுகளை வழங்கிவருகிறது. மொத்தம் ஐந்து இலக்கிய விருதுகள். மூத்த தமிழறிஞருக்கான பாவலர் வரதராஜன் விருது ரூபாய் இரண்டு லட்சமும் பாராட்டுப்பட்டயமும் அடங்கியது. இவ்வருடம் அது மூத்த தமிழறிஞரான ம.ரா.பொ.குருசாமி அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

படைப்பிலக்கியத்திற்கான பாவலர் வரதராஜன் விருது எனக்கு, ஒட்டுமொத்த இலக்கியப் பங்களிப்புக்காக, வழங்கப்படுகிறது. ரூபாய் இரண்டு லட்சமும் பாராட்டுப்பட்டயமும் அடங்கியது இது. இளம் படைப்பாளிகளுக்கான இசைஞானி இளையராஜா விருது கவிஞர் நா.முத்துக்குமார், கவிஞர் இளம்பிறை ஆகியோருக்கு அளிக்கப்படவுள்ளது. தலா ஐம்பதாயிரம் ரூபாயும் பாராட்டுப் பட்டயமும் அடங்கியது இவ்விருது.

இவ்வருடம் இதழியல் சார்ந்த இலக்கியப் பங்களிப்புக்காக மறைந்த ‘சரஸ்வதி’ விஜயபாஸ்கரனின் மனைவிக்கு அளிக்கப்படுகிறது. ரூபாய் ஒரு லட்சமும் பாராட்டுப்பத்திரமும் அடங்கியது இவ்விருது.

சென்ற வருடம் தமிழறிஞருக்கான பாவலர் வரதராஜன் விருது பா.நமச்சிவாயம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. படைப்பிலக்கியத்திற்கான பாவலர் வரதராஜன் விருது வண்ணதாசனுக்கு வழங்கப்பட்டது. வளரும் எழுத்தாளர்களுக்கான இசைஞானி இளையராஜா விருது கவிஞர் பழனி பாரதி, சொ.சேதுபதி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இவ்வருடம் பரிசு பெறும் ம.ரா.பொ.குருசாமி அவர்கள் இன்று வாழும் மூத்த தமிழறிஞர்களில் ஒருவர். திரு.வி.கவுடன் பழகியவர். மு.வரதராசனின் மாணவர். ம.பொ.சிவஞானம் அவர்களின் தொண்டராக தமிழரசுக் கழகத்தின் எல்லைப்போராட்டங்களில் பங்குபெற்றவர். கோவை பூ.சா.கோ.கலைக்கல்லூரியில் தமிழாசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

திரு ம.ரா.பொ.குருசாமி அவர்களின் எழுத்துக்களுடன் சென்ற சில வருடங்களாக எனக்கு ஒவ்வொரு நாளும் உறவு உண்டு. அவர் தொகுத்து உரையளித்த ‘கபிலம்’ என்ற நூலில் உள்ள கபிலரின் பாடல்களை மீண்டும் மீண்டும் படித்தேன். என் ‘காடு’ நாவலுக்கு முக்கியமான ஊக்கசக்தியாக இருந்த நூல் அது. இப்போது அவர் தொகுப்பாசிரியராக இருந்து வெளியிட்ட கோவை கம்பன் அறநிலை வெளியீடான கம்பராமாயண உரை நான் அனேகமாக ஒவ்வொருநாளும் படிக்கும் நூலாக உள்ளது. அவருடன் பரிசு பெறுவதென்பது ஒரு நன்னிகழ்வு என்று நினைக்கிறேன். வாசகர்கள் ‘ரசனை’ இதழில் ம.ரா.பொ.குருசாமி அவர்களின் நினைவுகளை படிக்கலாம்.

தமிழ் நவீன இலக்கியத்தின் மலர்ச்சிக்கு வித்திட்ட இதழ் ‘சரஸ்வதி’. சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் போன்றவர்கள் மலர்ந்து வந்த மேடை. தமிழ் முற்போக்கு எழுத்தின் நாற்றங்கால் அது. அதை நடத்திய ஜயபாஸ்கரன் பற்றி சுந்தர ராமசாமி நிறைய

சொல்லியிருக்கிறார். சரஸ்வதி இதழ் பெறும் விருது மகிழ்ச்சிக்குரியது.

இளையராஜா அவர்களின் இசையுடன் சேர்ந்து வளர்ந்த தலைமுறையினன் நான். இத்தருணத்தில் நான் எது சொன்னாலும் அது முகமனாகவே அமையும். எனினும் அவரால் அளிக்கப்படும் விருது ஒரு முக்கியமான கௌரவம் என்று மட்டுமே சொல்ல விழைகிறேன்.

இன்னுமொரு மகிழ்ச்சிக்குரிய விஷயம் இவ்விருதை வரும் 24-4-08 அன்று சென்னையில் முன்னாள் குடியரசுத்தலைவர் மதிப்புக்குரிய ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் வழங்குகிறார்கள் என்பது. சமகால அரசியல் உலகில் நான் உள்ளூர வணங்கும் தலைவர்களில் ஒருவர் அவர். நிகழ்ச்சி நிரல் இன்னும் கைக்கு வரவில்லை.

நிறைவும் உவகையும் கொள்ளும் தருணம் இது.

ஏப்ரல் 21, 2008

36. பிறந்தநாள்

இன்று என் பிறந்த நாள். நாற்பத்தியாறு முடிந்து நாற்பத்தி ஏழு வயதை நோக்கிச் செல்கிறேன்.பொதுவாக நாற்பது வயதைக் கடப்பவர்களை 'கலாய்ப்பது' என் வழக்கம். சில மாதங்களுக்கு முன்னர் நண்பர் ஷாஜிக்கு நாற்பது வயதானபோது அவருக்கு நான் விரிவான உபதேசங்களை அளித்தேன். சாப்பாட்டில் கொழுப்பை குறையுங்கள், இதய அடைப்பு வரும். உப்பு சாப்பிடக்கூடாது, ரத்த அழுத்தம் வரும். இனிப்பு சாப்பிட்டால் நீரிழிவு. மரணத்தின் காலடி ஓசை கேட்க ஆரம்பிக்கிறதா என்ற சுருக்கமான கவித்துவ விசாரணையும் உண்டு. ஷாஜி முகம் வெளிறிப்போய் அமர்ந்திருந்தார். அவர் கிளம்பும்போதே நண்பர் சுரேஷிடம் தொலைபேசியில் கூப்பிட்டு ஷாஜியிடம் மேலும் துக்கம் விசாரிக்கச் சொன்னேன். உற்சாகமாக இருந்தது. ஷாஜி மனம் உடைந்து போய் அன்று உச்சகட்டமாக தேறல் அருந்தி மாட்டிறைச்சி உண்டதாக மறுநாள் அறிந்து கொண்டேன்.

இவ்வருடம் ஜூன் மாதம் ஆர்தர் வில்சனின் பிறந்தநாள். எல்லா மிரட்டல்களையும் கேட்டபிறகு ஆர்வமாக 'ஆமா சார், ஜாக்ரதையாத்தான் இருக்கணும். நான் முடிவுசெஞ்சிட்டேன்...' என்றார். எனக்கு பகீரென்றது. விளையாட்டு வினையாகிறதா? சாப்பாட்டை ஏதாவது குறைக்கப் போகிறாரா? '...பழங்கள் நெறைய சாப்பிடணும் இல்ல சார்? நான் இனிமே சாப்பாட்டுக்கு அப்றம் நெறைய பழங்கள் சாப்பிடலாம்னு நெனைக்கிறேன். பேரிச்சம்பழத்தை தேனிலே போட்டு சாப்பிடலாமா சார்? ஆப்பிள் சாப்பிட்டா ஒடனே ஒரு டம்ளர் பால் குடிச்சிடணும்னு சொல்றாங்களே?' அப்பாடா! நாற்பது வயதில் ஒரு மனிதன் மாறிவிடுவான் என்றால் அதுவரை அவன் வளர்த்து வந்த ஆளுமை என்பது என்ன?

எனக்கு நாற்பது வயதானதை சிலவருடங்கள் பிந்தித்தான் உணர்ந்துகொண்டேன். ரொம்பநாள் இளைஞனாகவே உணர்ந்தேன் என்று அர்த்தம். ஒருமுறை ஒரு சின்னப்பெண் ஸ்கூட்டியில் கடுமையான போக்குவரத்து நெரிசலில் அபாயகரமாகச் சென்றுகொண்டிருப்பதைக் கண்டபோது 'இதையெல்லாம் எப்படி பொறுப்பில்லாமல் இப்படி அனுப்புகிறார்கள்?' என்று எண்ணிக் கொண்டிருந்தபோது கூடவே ஓர் புரிதல். நான் அந்தப்பெண்ணின் அப்பா ஸ்தானத்தில் இருந்துகொண்டு அப்படி யோசித்துக் கொண்டிருக்கிறேன் என. அது ஒரு திருப்புமுனை. நாற்பது வயதைப்பற்றி என்னையும் ஒரு எழுபதுவயதுக்காரர் எச்சரித்தார் – சுருக்கமாக. அதுவரை கட்டிக்காத்து வந்த நெறிகளையெல்லாம் சற்றே தளர்த்திப் பார்க்கும் வயது என. பீதியாக இருந்தது. இப்போது ஓர் ஆறுதல். நாற்பது தாண்டப்போகிறது. அவ்வளவுதான், இனிமேல் பிரச்சினை இல்லை. சோதனைகளை வெற்றிகரமாக தாண்டிவிட்டேன். 'யாதெனின் யாதெனின்...'

காலைமுதல் வாழ்த்துக்கள். என் வீட்டில் பிள்ளைகளின் பிறந்தநாள் மட்டுமே கொண்டாடுவோம். மற்றபடி பிறந்தநாளை நினைவுகூரும் வழக்கமெல்லாம் இல்லை. காலையில் வாழ்த்துக்கள் வரும்போதுதான் தகவலே நினைவுக்கு வரும். வாழ்த்து கூறிய நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் நன்றி. வாசகிகள் தவறாமல் எத்தனையாவது பிறந்தநாள் என்று கேட்டார்கள். அ.முத்துலிங்கம் அவர்கள் அனுப்பியிருந்த வாழ்த்து அட்டையில் இவ்வருடம் விவாதங்களில் சிக்காமல் நாவலை எழுதி முடிப்பதற்காக வாழ்த்தியிருந்தார். என் திட்டமும் அதுதான். பார்ப்போம்.

நேற்றும் முழுக்க தொலைபேசி அழைப்புகள். நண்பர்கள் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள். பாவலர் விருது குறித்து வாழ்த்துக்கள். உண்மையில் நேற்று உற்சாகமாக இருந்திருக்க வேண்டும். இல்லை. நேற்று என் லாப்ரடார் நாய் ஹீரோ ரத்தமாக மலம் கழிக்க ஆரம்பித்தது. சில முறை போனபின் சுத்தமான ரத்தம். பெரும்பாலான தொலைபேசி வாழ்த்துக்களை விலங்கு மருத்துவமனையில் வைத்துதான் ஏற்க முடிந்தது. உயிர்கொல்லி வைரஸ் தாக்குதலா என்ற பீதி இருந்தது. சாயங்காலம்தான் நிலைமை தெளிந்தது.கொக்கிப்புழு பாதிப்பு. அதற்கு அளிக்கப்பட்ட குடற்புழுநீக்க மருந்து போதவில்லை, அதன் எடை மிக அதிகம். ஐம்பது கிலோவுக்கும் மேல். நான்கு புட்டி மருந்து தேவை. வழக்கமான அளவுக்கு இரு மடங்கு. அதன் எடையை உடனடியாகக் குறைக்க வேண்டும். சாப்பாட்டையே படுத்துக் கொண்டு சாப்பிட விரும்பும் பிறவி. உணவைக் குறைத்தால் கண்களில் ஒரு தீனபாவனை வந்துவிடும். அதை நம்மால் தாங்க முடியாது. என்ன செய்வது என்று தெரியவில்லை. மாலையானபோது நலமாகிவிட்டது. அதற்குள் நான் களைத்துப் போனேன்.

ஆற்றூர் ரவிவர்மாவுக்கு விருது பற்றிய தகவலைச் சொன்னேன். அவருக்கு மிகவும் உற்சாகம். பொதுவாக அவர் இம்மாதிரி விஷயங்களை பொருட்படுத்துவதே இல்லை. அவர் சொல்லி டாக்டர் எம்.கங்காதரன் உள்பட பலர் கூப்பிட்டு வாழ்த்துச் சொன்னார்கள். கல்பற்றா நாராயணன் கூப்பிட்டபோது இந்த ஊசல் நிலையைச் சொன்னேன். 'இலையின் ஓரத்தில் கசப்பு இல்லாவிட்டால் விருந்து ருசிக்காது. மேற்படி ஆசாமி ஒரு கிளாஸிஸ்ட். அவருக்கு எல்லாமே சமநிலையில் இருந்தாகவேண்டும்' என்று சொன்னார். '...ஆனால் அவரால் அது முடிவதும் இல்லை. கோடானுகோடி வருஷங்களாக பிரபஞ்சம் இப்படித்தான் தராசுமுள் போல நிலையில்லாமல் இருக்கிறது...

ஹீரோ உள்ளே வந்து ஆர்வமாக கணிப்பொறியைப் பார்க்கிறது. சற்றே கவனமில்லாமல் இருந்தால் மூக்கால் பித்தானை அமுக்கி அணைத்துவிட்டுப் போய்விடும். நேற்று கம்பிளிப்போர்வையை குவித்துப் போட்டதுபோல சோர்ந்து கிடந்த சாயலே இல்லை. விட்டால் உலகையே தின்றுவிடுவேன் என்ற பாவனை. ஹெலிகாப்டர் விசிறி போல பின்பக்கம் வால்சுழலல். வெளியே காகங்களின் ஒலி. தென்னை ஓலைகளின் மெல்லிய சிறகொலி....

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிறத்தில் விடியும் இந்த முடிவற்ற அற்புத வெளியில் எல்லா நாளும் பிறந்தநாளே.

ஏப்ரல் 22, 2008

37. ஜக்கி வாசுதேவ்

ஜக்கி வாசுதேவ் பற்றி என்னிடம் முதலில் சொன்னவர் நண்பர் தண்டபாணி. யுவன் சந்திரசேகரின் உயிர் நண்பர். அவரது மனைவிக்கு பலவிதமான உடல்நலச்சிக்கல்கள். அந்த மன அழுத்தத்தில் அவர் தேடிப்போன பலரில் ஜக்கியும் ஒருவர்.

பின்னர் ஜூனியர்விகடனில் அவரைப்பற்றிய அவதூறுகள் வந்தன. அவரது மனைவி மர்மமான முறையில் இறந்தார் என்பதும் அங்கே இளம்பெண் நடமாட்டம் அதிகம் என்பதும். சாமியார்களைப்பற்றி எனக்கு எப்போதுமே ஐயம் அதிகம். ஆனால் அச்சமயம் அறிமுகமான ஒரு காவலதிகாரி அந்த அவதூறுகள் முழுக்க முழுக்க அப்பகுதியின் வனநில ஆக்ரமிப்பாளர்களால் உருவாக்கப்படுவது என விளக்கினார்.

ஜக்கியைப்பற்றிய என் மதிப்பு ஜக்கியின் முக்கியமான மாணவர்களில் ஒருவரான சௌந்தர் அண்ணா மூலம் வலுவாக உருவானது. ஆன்மீகமான விடுதலை என நான் எண்ணும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அபூர்வமான மனிதர்களில் ஒருவர் அவர். நெடுங்காலம் ஜக்கி வாசுதேவ் குருகுலத்தில் இருந்தவர். ஆன்மீகமான சமநிலை கைவந்தவர்களிடம் எப்போதும் எதற்கும் நிலைகலங்காத ஒரு விடுபட்ட நிலையும், அதன் விளைவான அமைதியும், மாறாத மெல்லிய நகைச்சுவையும் இருக்கும். அதுவே அடையாளம். அவர்களை எவரும் அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. அவர்களைப் பார்த்தாலே தெரிந்துவிடும், அவர்கள் வேறு என.

சௌந்தர் அண்ணா வழியாக நாஞ்சில்நாடன் ஜக்கியை நோக்கிச் சென்றார். முழுமையான யதார்த்தவாதியான நாஞ்சில்நாடனின் வாழ்க்கையில் பல மனஅல்லல்கள் அதன் மூலம் சமநிலைக்கு வந்தன என்று அறிந்தேன். அதன்பின் ஜக்கி வாசுதேவ் சீடர்களின் குழுமஅமைப்பின் பொறுப்பில் இருப்பவரான 'மரபின் மைந்தன்' முத்தையா ஜக்கியை அறிய உதவினார். ('ரசனை,' 'நமது நம்பிக்கை' மாதஇதழ்களின் ஆசிரியர். இலக்கியப்பேச்சாளர். வைரமுத்து வாசகர்களின் அமைப்பான 'வெற்றிதமிழர் பேரவை'யின் செயலர்.) எழுத்தாளர் சுந்தர ராமசாமி திருவனந்தபுரத்தில் சென்று தங்கி ஜக்கி நடத்திய தியான முகாமில் கலந்துகொண்டதாக அறிந்தேன். ஆனால் அவர் அதை வெளியே சொல்லவில்லை. தன் மகளின் இறப்புக்குப் பின் அவர் அந்தரங்கமாக கடும் மன அழுத்தத்தில் இருந்தார் அப்போது.

ஏற்கனவே இரண்டுமுறை ஜக்கி குருகுலத்துக்குச் செல்ல திட்டமிட்டு முடியாமல் போயிற்று. சென்ற வாரம் எதிர்பாராமல் நண்பர் லதானந்துடன் குடும்பமாக அங்கே சென்றேன். ஜக்கியைச் சந்திக்க முடியவில்லை. சாதாரணமாக சுற்றுலாப்பயணிகளுடன் சென்று குருகுலத்தைச் சுற்றிப்பார்த்தேன்.

வித்தியாசமான கட்டடக்கலை கொண்ட இடம் அது. இந்திய ஆலயங்களின் இயல்பு வந்துவிடலாகாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் உருவாக்கப்பட்டது. மாபெரும் சதுரக் கல்தூண்கள் கல்லாலான தாழ்வான கட்டடங்கள். புல்வெளிகள். பயணிகள் பார்க்கக் கூடுவதாக உள்ளது இரண்டு இடங்கள்தான். ஒன்று ரசலிங்கம் வைக்கப்பட்டுள்ள நீர்நிலை. இன்னொன்று மாபெரும் தியானலிங்கம் இருக்கும் கூடம்.

பாதரசத்தை உறையவைக்கும் கலை நமது ரசவாதத்தின் ஒரு சாதனையாக நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளது. இதை ரசக்கட்டு என்கிறார்கள். பாதரசத்தில் எதுவும்

கலக்கப்படுவதில்லை, ஆனால் சில கிரியா ஊக்கிகளின் முன்னிலையில் அது கெட்டியாகிவிடுகிறது. அது ஒருவகை கதிரியக்கம் கொண்டுவிடுகிறது என்கிறார்கள்.

கல்லாலான ஒரு கட்டடத்தில் பல படிகள் இறங்கிச்சென்றால் ஒரு குளம். அதனுள் நீருக்குள் ரசலிங்கம் இருக்கிறது. கூரையிடப்பட்டு வெயில்படாத நீள் சதுர வடிவமான குளம் அது. மேலிருந்து கல்சுவர் வழியாக வழிந்து இறங்கும் நீர் சில்லிப்பை உருவாக்குகிறது. வெளியே குளியலறையில் நீராடிவிட்டு அங்கே அளிக்கப்படும் காவி உடையை வாங்கி அணிந்து நீரில் இறங்கி அந்த ரசகோளத்தை தொட்டு வணங்கலாம்.

தியானலிங்கம் இருக்கும் கூடம் கோல்கும்பாஸ் போல முகலாய மினாரங்களின் அமைப்பு கொண்டது. உள்ளே இருக்கும்போது மினாரங்களின் அதே பாணியில் செங்கற்களை சீராக அடுக்கி உருவாக்கப்பட்ட அரைக்கோளக்கூரை பிரமிப்பூட்டுகிறது. நடுவே மாபெரும் லிங்கம். சுற்றி தியானத்தில் அமர்வதற்கான சிறு குகைகள்.

உள்ளே நுழையும்போது ஓர் இளம் துறவி மெல்லிய குரலில் 'லிங்கத்தை வணங்காதீர்கள். எதையும் வேண்டிக் கொள்ளாதீர்கள். எந்த மந்திரத்தையும் பிரார்த்தனையையும் செய்யாதீர்கள். சற்று நேரம் அதை நோக்கியபடி அமர்ந்து கண்மூடி சும்மா இருங்கள். வேறு எதையும் செய்ய வேண்டாம். எந்த நினைவு வந்தாலும் தவறில்லை. வந்த நினைவுகளை கவனித்தபடி அமைதியாக இருங்கள்...' என்றார்.

தியானகூடத்தில் ஆழமான அமைதி. ஏராளமானவர்கள் அமைதியாக இருக்கும்போது அந்த இடத்தில் ஆழமான ஒன்று உருவாகிவிடுகிறது. ஒரு கனம். ஒருவகை உக்கிரம். அத்துடன் லிங்கம். அது உருவாக்கும் ஆழமான அதிர்வு அலாதியானது. அது சைவ மதத்தின் தெய்வ உருவம். அதே சமயம் மானுடன் உருவாக்கிய முதல் தெய்வ வடிவமும் அதுவே என்று சொல்லலாம். ஒரு கிடைக்கல்மேல் வைக்கப்பட்ட நடுகல். திருவண்ணாமலை போன்ற புராதன ஆலயங்களில் உள்ள சிவலிங்கம் எந்த வடிவமும் இல்லாத எளிய கல்லேதான்.

பண்பாடு முளைத்த தொல்பழங்காலத்தில், தமிழ்நிலத்தின் ஏதோ ஓர் எல்லையில், ஒரு முதுமூதாதை கண்டடைந்த ஒரு மகத்தான உச்சகணத்தின் அடையாளம் அது. அதன் அளவிடமுடியாத தொன்மையே அதன் முதல் பெருஞ்சிறப்பு. அது சுட்டுவது எதை என்று ஆயிரம் விளக்கங்கள் சொல்லப்படலாம். ஆக்க சக்தியின் வடிவம் அது என்பவர்கள் உண்டு. நடுகல்லின் அடுத்த கட்ட வடிவம் என்பவர்கள் உண்டு. தொல்குடிகள் தெய்வமாக வழிபட்ட குமரிக்கண்டத்தின் மகேந்திரமலை அல்லது மேரு மலையின் சிறு மாதிரிவடிவம் என்பவர்கள் உண்டு. ஏதோ ஒன்றாக அது இருப்பதே அதைச்சுற்றி நம் பிரக்ஞையை சிறகடித்துப் பறக்கச்செய்கிறது.

தன் அமைப்புக்கு எந்த வகையான மத அடையாளமும் வந்துவிடலாகாது என்ற கவனம் கொண்டவர் ஜக்கி. அவரது உபதேசங்கள் விவாதங்கள் எதிலும் அவர் மத உருவகங்களைக் கையாள்வதில்லை. இந்த லிங்க வடிவத்தை அவர் தேர்வுசெய்தமைக்கு ஆழ்ந்த காரணம் இருக்கக் கூடும். திருவண்ணாமலையில் ஒரு பண்டாரம் சொன்னார், அவர் தியானிப்பது அந்த மலையை என்று. எங்கே அமர்ந்து ஒரு கல்லைத்தூக்கி முன்னால் வைத்துக் கொண்டாலும் அண்ணாமலையாக ஆகிவிடும். தியானத்துக்கான மிக எளிய புராதனமான ஆதிவடிவம் அதுவேபோலும்.

அங்கேயே விடுதியில் சாப்பிட்டுவிட்டு உடனே கிளம்பிவிட்டோம். தியான லிங்கத்தை பொதுவாக அனைவருமே கைகூப்பி வணங்கி பிரார்த்தனை செய்வதையே கண்டேன். அது அவர்களின் மதம், அதைவிட்டு அவர்களால் எளிதில் விலகி விட இயலாது.

ஆனால் இன்று மீண்டும் மீண்டும் இது தேவையாகிறது. இந்து ஞான மரபு மூன்று அடுக்குகள் கொண்டது. முதல் அடுக்கு என்பது பலநூறு பழங்குடி, நாட்டார் தெய்வ நம்பிக்கைகளினால் ஆனது. மூதாதை வழிபாடு, ஆவி வழிபாடு, இயற்கை வழிபாடு ஆகிய மூன்றின் கலவை அது.

அடுத்த தளம் நாம் பரவலாக அறியும் பெருந்தெய்வ வழிபாடுகளினால் ஆனது. மூன்றாம் தளம் தூய தத்துவத்தால் ஆனது.

முதல் அடுக்கில் தெய்வ உருவகம் என்பது நடைமுறைத்தேவை சார்ந்ததாக உள்ளது. நடவுக்கு ஒரு தெய்வம், அறுவடைக்கு இன்னொரு தெய்வம் என. பலியும் கொடையும் அதன் வழிபாட்டு முறைகள். இரண்டாம் அடுக்கில் தெய்வ உருவகம் என்பது முழுமுதல்தெய்வம் என்ற கருதுகோளாக உள்ளது. படைத்தல் காத்தல் அழித்தலைச் செய்யும் பிரபஞ்ச அதிபன். அதன் வழிபாடு ஆராதனை, பக்தி.

மூன்றாம் அடுக்கில் தெய்வ உருவகம் என்பது முழுமையான தத்துவ உருவகமே. பிரம்மம் போல. அதன் வழிமுறை யோகம், தியானம்.

இம்மூன்று உருவகங்களும் ஒன்றோடொன்று பிணைந்து ஒரேசமயம் இருந்துகொண்டிருக்கின்றன ஒன்றிலிருந்து இன்னொன்று உருவாகிவந்து கொண்டிருக்கிறது. ஒன்று இன்னொன்றாக மாறிக் கொண்டு. மிருக்கிறது. என் நோக்கில் மூன்றுமே முக்கியமானவையே. இம்மூன்றிலும் ஆன்மீக விடுதலையை அடைந்த மனிதர்களை நான் கண்டிருக்கிறேன்.

இந்து ஞான மரபின் தத்துவ மையம் என்பது அதன் சிக்கல் மற்றும் நுட்பம் காரணமாகவே மிகச்சிலரால் மட்டுமே அணுக முடிவதாக இருந்து வருகிறது. தத்துவமும் தியானமும் அதற்கான அவகாசமும், அறிவுத்திறனும், மனப்போக்கும் கொண்டவர்களுக்கு உரியவை.

இக்காலகட்டத்தில் கல்வி வளர்ச்சியும் உலகளாவிய சிந்தனைகளுடனான அறிமுகமும் ஏராளமான மக்களை தத்துவமையம் நோக்கி ஈர்க்கிறது. எளிய விடைகள் நிறைவளிப்பதில்லை. தருக்க முனை கூர்மை கொள்கிறது. நம்பிக்கையை சார்ந்து இயங்க முடிவதில்லை. ஆகவே இந்து ஞானமரபின் தத்துவ தியான மரபுகளை இன்றைய நோக்கில் மறு ஆக்கம் செய்து முன்வைக்கும் அறிஞர்களும் ஞானிகளும் இயங்கவேண்டிய தேவை உருவாகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்து ஞானமரபின் தத்துவசாரம் முற்றாக மறக்கப்பட்டு அதன் சடங்குகள் மட்டுமே அதுவாக விளங்கிய காலகட்டத்தில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண மடம், நாராயண குருகுலம், வள்ளலார் மரபு போன்ற தத்துவநோக்குள்ள அமைப்புகள் உருவாகி தொன்மையான தத்துவ மரபை மீட்டு அளித்தன.

பின்னர் அவற்றை நவீன வாழ்க்கையின் தேவைக்கு ஏற்ப மறுவிளக்கம் அளித்து விரிவாக்கம் செய்யும் ஞானிகள் தேவைப்பட்டார்கள். ஓஷோ, ஜே.கிருஷ்ணமூர்த்தி, பிரம்மகுமாரிகள் அமைப்பு, ராமச்சந்திரா மிஷன் என பல்வேறு அமைப்புகள் உருவாகி வந்தபடியே இருப்பதற்குக் காரணம் இதுவே. வேதாத்திரி மகரிஷியும் ஜக்கியும் அவர்களில் அடங்குவர். மீண்டும் மீண்டும் அவர்கள் முன்வைப்பது அந்த தத்துவ தியான மரபையே. அது தேவையாகும் சிலருக்குச் சென்று சேரும். பிறருக்கு இன்னொரு வழிபாட்டு முறையாக எஞ்சும். இன்று பல்லாயிரம் பேர் அவற்றைச் சார்ந்து உள்ளனர்.

இந்து ஞான மரபின் அடிப்படை இயல்பே சுதந்திர சிந்தனையை அனுமதிப்பதுதான். நிலையான அமைப்பு என எதுவும் அதில் இல்லை. சாதி மதம் சார்ந்து உருவாகும் அமைப்புகள் அவற்றின் இடத்தில் தேங்கி நிற்கையில் அதனால் கழன்று முன்னகர முடியும். ஆகவே அதன் வளர்ச்சி என்பது அதன் வேரிலிருந்து மீண்டும் மீண்டும் முளைத்தெழும் ஏராளமான கிளைகளின் மூலமே நிகழ்கிறது.

ஜக்கி வாசுதேவை எப்போதாவது ஒருமுறை சந்திக்க வேண்டும்.

ஏப்ரல் 29, 2008

[38. அவலாஞ்சி]

இணையம் வழியாக அறிமுகமானவர் நண்பர் லதானந்த். ஆனந்த் என்ற இயற்பெயர் கொண்டவர். 'நாகம்மாள்', 'சட்டி சுட்டது' போன்ற புகழ்பெற்ற கொங்கு இலக்கியப்படைப்புகளின் ஆசிரியர் ஆர்.ஷண்முகசுந்தரத்தின் அண்ணாவின் மகன். தமிழக வனத்துறையில் சரக அலுவலராகப் பணியாற்றுகிறார். லதானந்த் என்றபேரில் விகடனில் கதைகள் எழுதுகிறார். சுட்டிவிகடனில் ரேஞ்சர்மாமா என்றபேரில் 'வனங்களில் வினோதங்கள்' என்ற புகழ்பெற்ற நூலை எழுதியவர். எனது காட்டுமோகத்தைச் சொன்னபோது ஒரு பயணத்துக்கு ஒழுங்குசெய்தார்.

சென்ற வாரம் நானும் குடும்பமும் கோவை ரயிலில் வந்து இறங்கியதுமே அவரது இனிய உபசரிப்புக்கு ஆளானோம். நேராக அவர் இல்லத்துக்குப் போய் தங்கினோம். அவரது மனைவியின் சிறந்த சமையல், மூச்சுத் திணறவைக்கும் உபசரிப்பு. அன்று முழுக்க கோவையைச் சுற்றியே பயணம். அவரது காரில்.

கோவைக்குற்றாலம் என்று அழைக்கப்படும் சிறு அருவிக்குப் போனோம். அருவியைச் சூழ்ந்து லாடவடிவில் செங்குத்தாக எழுந்து நிற்கும் மாபெரும் மலைச்சிகரங்கள் அளித்த பிரமிப்பே அங்கே முக்கியமான அனுபவம். மீண்டும் மீண்டும் கண்கள் அந்த மலைகளை நோக்கி எழுந்தமையால் அருவி ஒரு பொருட்டாகவே படவில்லை. சின்னஞ்சிறு நீரோடையாகவே நீர் கொட்டியது. செயற்கையான தடைகளில் தேங்கி கொட்டிய அருவியில் குளிக்கத் தோன்றவில்லை. எங்கள் ஊரில் திற்பரப்பு அருவியில் அந்நேரம் கண்ணாடி மலைகள் சரிவது போல நீர் கொட்டிக் கொண்டிருந்தது.

மதியம் சிறுவாணி நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குச் சென்றோம். உலகிலேயே சுவையில் இரண்டாமிடம் பெறும் நீர் என்றார்கள். பெரிய தொட்டிகளில் நீர் சுழற்றப்பட்டு சீனக்காரமும் குளோரினும் சேர்க்கப்பட்டு மாபெரும் கட்டடம் ஒன்றுக்குள் சென்று அடுக்கடுக்கான கூழாங்கல் முதல் நுண்மணல் வரையிலான படிமங்களில் அரிக்கப்பட்டு வெளியே வந்தது. வாங்கி குடித்துப் பார்த்தோம். உலகைப்பற்றி தெரியவில்லை, நான் குடித்த நீர்களில் அதுவே சுவையானது. பேசாமல் உலகிலேயே சுவையானது என்று சொல்லிவிடலாம்தான். எதற்கு வம்பு என்றுதான் இரண்டாமிடம் அளிக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

ஜக்கி வாசுதேவின் தவநிலையத்துக்குச் சென்றுவிட்டு பேரூர் பட்டீஸ்வரர் கோயில் சென்றோம். கொங்கு பகுதியில் அவினாசி கோயிலும் இதுவும்தான் பெரியது போலிருக்கிறது. ஓங்கிய மதில் சூழ்ந்த அழகிய ஆலயம். அருகே பேரூர் சாந்தலிங்க அடிகள் மடம். தமிழ்நாட்டில் மிக அதிகமான ஆலயங்களுக்கு தமிழில் குடமுழுக்கு செய்தவர் அவர்.

அன்றிரவு கோவை வனக்கல்லூரி விடுதியில் தங்கிவிட்டு அதிகாலையில் ஊட்டி வழியாக அவலாஞ்சி மலைப்பகுதிக்குச் சென்றோம். ஊட்டிசாலையில் போக்குவரத்து நெரிசலிட்டதனால் போய்ச்சேர மாலையாகிவிட்டது. போகும்போதே சமையலுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொண்டோம். ஊட்டியிலிருந்து 28 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அவலாஞ்சி. ஆனந்த் தான் வண்டியை ஓட்டினார். ஊட்டியை நெருங்குவது வரை வெயிலடித்தது. அவலாஞ்சிக்கு திரும்பும்போதுதான் மலைக்குரிய அமைதியும் குளிரும் வர

ஆரம்பித்தன.

150 வருடம் பழக்கமுள்ள மரத்தாலான அழகிய வனவிடுதியில் தங்கினோம். வசதியான அறை. மூன்று கட்டில்கள். தரையும் மரம். தம் தம் என்று நடக்கையில் ஒலியெழுந்தது. டீ குடித்துவிட்டு அருகே இருந்த காட்டுக்குள் நடக்கச் சென்றோம். குந்தா நீர்மின்சாரத்திட்டத்துக்காக கட்டப்பட்ட அணையின் நீர்நீட்சிப் பகுதி மாபெரும் ஏரி போல தேங்கிக் கிடக்க சுற்றும் குறுங்காடுகள் விரிந்த புல்வெளிகள். நானும் அஜிதனும் சைதன்யாவும் புல்வெளியில் ஓடினோம். மூச்சுக்குள் காட்டின் தூய காற்று நிறைந்து விம்மும்போதுதான் நாம் விட்டுவிட்டு வந்தவற்றில் இருந்து முழுக்க விலக முடியும்போலும்.

இரவு திரும்பி வந்து குளிர் ஏறும்வரை விடுதி முற்றத்தில் அமர்ந்து ஓய்வெடுத்தோம். பின்னர் சூடான அசைவ உணவு. விடுதியில் ஓர் அறை மட்டும் பூட்டப்பட்டிருந்தது. அதைப்பற்றி ஒரு கதை சொல்லும்படி சைதன்யா கேட்க நான் அங்கே தங்கியிருந்த ஒரு கொடூரமான துரை செண்பகப்பூக்களை பறித்து மாலைகட்டி அணியக்கூடிய ஓர் அழகிய படுகப்பெண்ணை அடைத்து வைத்துக் கொன்ற கதையை சொன்னேன். பயங்கரமான பேய்க்கதை. சொல்லச் சொல்ல கதை விரிவடைந்தது அட, இதை எழுதலாமே என்று எனக்கே தோன்றிவிட்டது. சைதன்யா என்னுடன் ஒட்டிக் கொண்டாள். சிரித்து தைரியம் காட்டிய அஜிதன் விளக்கில்லாமல் தனியாக படுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டதனால் அருண்மொழி தனியாக படுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அங்கே டிரவுட் (Brown Trout, Loch Leven Trout Salmo Levensis) என்னும் அரியவகை மீனை முட்டையிலிருந்து பொரிக்க வைக்கும் இடத்தைப் பார்க்கப் போனோம். நல்ல குளிர். போகும் வழியில் தொழிலாளர்கள் சுடச்சுட அண்டாவில் டீ போட்டு குடிப்பதைக் கண்டோம். வெள்ளையர்கள் அவர்கள் நாட்டு மீனை உண்ண ஆசைப்பட்டமையால் அங்கிருந்து இந்த மீனைக் கொண்டுவந்து இங்கே வளர்க்க முயன்றார்கள். பல முயற்சிகள் தோல்வியடைந்தன. 1909ல் பி.சி.வில்சன் என்பவர் ரெயின்போ டிரவுட் வகை மீன்களை அவலாஞ்சிக்குக் கொண்டுவந்து வளர்க்க ஆரம்பித்தார். டிரவுட் மீனின் முட்டைகளின் உள்ளே உள்ள கரு கண்கள் போல் இருக்கும். அவற்றை கண்ணுள்ள டிரவுட் முட்டைகள் என்கிறார்கள். வில்சன் அவற்றை நியூஸிலாந்தில் இருந்து கொண்டுவந்து வளர்த்ததாகத் தெரிகிறது. வில்சன் துரையின் நினைவாக ஒரு நடுகல்லை அவலாஞ்சியில் கண்டோம்.

டிரவுட் மீன் தன் முட்டைகளைத் தானே உண்ணும் வழக்கம் கொண்டது. ஆகவே மீன்கள் கருவுற்றதுமே முட்டையை பிதுக்கி எடுத்து பொரிக்க வைத்து மீன்கள் நீந்த ஆரம்பித்ததும் ஓடைவழியாக அணைக்கட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். 150 வருடம் முன்பு வெள்ளையர் கட்டிய முட்டை பொரிப்பறை இன்றும் செயல்படுகிறது. இருபது வருடம் முன்பு நம்மவர் கட்டிய பெரிய அறை ஒருமாதம்கூட செயல்படாமல் பாழடைந்து கிடக்கிறது. அந்த இருண்ட தோட்டத்துக்குள் ஒரு சில ஊழியர் பொறுப்பில் நூறாண்டுகண்ட ஒரு நிறுவனம் இன்றும் செயல்பட்டு வருவது ஆச்சரியமூட்டியது. மீன் பற்றிய மேலும் விவரங்களை அறிய விரும்புகிறவர்கள் பார்க்க : http://www.fao.org/docrep/003/x2614e/x2614e06.htm

காலை ஏழு மணிக்குக் கிளம்பி அவலாஞ்சி மலைச்சிகரங்களுக்குச் சென்றோம். 1809ல் ஏற்பட்ட ஒரு பெரிய நிலச்சரிவினால் இப்பெயர் வந்தது என்கிறார்கள். ஏராளமான மலைகளின் உச்சிகளினால் ஆன ஒரு நிலவெளி என இதைச் சொல்லலாம். மண்ணுக்கு அடியில் சில அடி ஆழத்திலேயே பாறை இருப்பதனால் பொதுவாக மரங்கள் வளர்வதில்லை. கனத்த புல்மெத்தை மட்டுமே. அலையலையாக கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை புல்வெளி புல்வெளி...

மூச்சு வாங்க சிரித்தும் அமர்ந்தும் புல்மலைகளில் ஏறுவதும் புல்சரிவுகளில் இறங்குவதுமாக அங்கே திளைத்தோம். அருண்மொழி ஓர் மலையுச்சியில் அமர்ந்துகொள்ள நானும்

பிள்ளைகளும் மேலும் மேலும் என புல்மலை மீது ஏறிச்சென்றோம். அங்கே எங்கும் மான் புழுக்கைகள். ஒரு மானை ஓநாய் தின்று போட்டுச்சென்ற எச்சத்தைப் பார்த்தோம். சுத்தமாக சதையில்லாமல் கரம்பிய, இன்னும் உலராத, இரு பின்னங்கால்கள், குளம்புடன். எதிர் மலையில் மான்கூட்டங்கள் இருந்தன. தொலைநோக்கி மூலம் பார்த்தோம். எங்களையே கூர்ந்து நோக்கி நின்றன. எங்கள் வாசனை காற்றில் சென்றிருக்கலாம்.

அங்கு நிறைந்திருந்த அமைதி மெல்ல மெல்ல நம் காதுக்குப் பழகி மனதுக்குள் குடியேறும்போது காலம் இல்லாமலாகிறது. என்ன நடக்கிறது என்ற போதமே இருப்பதில்லை. விசித்திரமான தனிமை. பச்சை நிறம்தான் உயிரின் நிறம். பூமி முழுக்க பரவியிருக்கும் பெரும் கருணையின் நிறம் அது. எப்போது கண்களை பச்சை நிறைக்கிறதோ அப்போதே நம் அகம் நிறைந்து விடுகிறது. உள்ளே இருக்கும் ஒன்று வெளியே இருப்பதைக் கண்டுகொள்கிறது. தாயைச் சேய் என சென்று அணைகிறது.

திரும்பும் வழியில் சைதன்யா பக்கவாட்டில் ‘ஒரு நாயி…’ என்றாள். அருண்மொழியும் பார்த்தாள். ஒருகணம் கழித்தே அது ஓநாய் என்று தெரிந்தது. அதற்குள் மறைந்துவிட்டது. அஜிதன் பார்க்கவில்லை. ‘ஏண்டீ சொல்லல்லே?’ என்று அவளை எட்டி அறையப்போனான். ‘ஜெர்மன் ஷெப்பர்ட் மாதிரி இருந்துது அப்பா…’ என்றாள் சைதன்யா. ‘காட்டில ஏதுடீ ஜெர்மன் ஷெப்பர்ட்?’ என்றான் அவன். ‘செந்நாயா இருக்கலாமோ?’ என்றேன். ‘இல்லப்பா இது ஓநாய்தான். ஓநாய் இந்த உயரத்திலே மட்டும்தான் இருக்கும். செந்நாய்னா ரொம்பக்குள்ளமா சிவப்பா இருக்கும். இதுக்கு லேசா பிரவுன் நெறம் உண்டு…. பாக்க ஜெர்மன் ஷெப்பர்ட் நாய் மாதிரியேதான் இருக்கும்… புக்ல போட்டிருக்கு…’ என்றான் அஜிதன் அழாக்குறையாக.

அவனை ஆறுதல்படுத்துவதுபோல சற்றுநேரம் கழித்து சாலைக்குச் சமானமாக ஒரு காட்டுக்கீரி ஓடியது. பெரிய கீரி. ஊர்க்கீரியைவிட இருமடங்கு பெரிது. சற்றுநேரம் ஓடி மறைந்தது. அஜிதன் எழுந்து நின்று அதை பார்த்தான். ‘இந்த டிரிப் நல்ல டிரிப் அப்பா… இப்ப என்னோட பேர்ட் லிஸ்ட் நூறைத் தாண்டியாச்சு’ அவன் நேரில் பார்த்த, அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய பறவைகளின் பட்டியல். பல பறவைகள் நீலகிரிக்கே உரியவை.

மதியம் தாண்டியபின் திரும்பி வந்தோம். சற்று ஓய்வெடுத்து சாப்பிட்ட பின் காரில் ஊர் திரும்பினோம். மாலையில் கோவை ரயிலில் மீண்டும் நாகர்கோயில். ரயிலில் பிள்ளைகள் அமைதியாக இருந்தார்கள். வரும்போதிருந்த உற்சாகமான ஆட்டம் இல்லை. களைப்பு மட்டுமல்ல. ஒருவகை நிறைவும்கூட. அன்று கனவில் அவர்கள் பச்சைப் பெருவெளியையே காண்பார்கள்.

ஏப்ரல் 29, 2008

39. ஜூவியின் பதினாறாம் பக்கம்

நண்பர் ஒருவர் மின்னஞ்சல் அனுப்பி ஜூனியர் விகடன் ஒன்றின் பதினாறாம் பக்கத்தில் உங்களைப்பற்றிய கிசுகிசு உள்ளதே கவனித்தீர்களா என்று கேட்டார். நான் ஜூனியர் விகடனை விரும்பிப் படிப்பவன். தமிழக ஊடக தளத்தில் கிராமங்களைக் கவனிக்கும் ஒரே இதழ் அதுதான். அதற்குக் காரணம் அதன் மாணவ இதழாளர்கள் என்ற அமைப்பு. பொதுவாக ரவிக்குமார், ஜென்ராம் எழுதும் கட்டுரைகளும் பிடிக்கும். ஆனால் ஒருமாதமாக கடும் எழுத்துவேலை. கவிதையரங்கு என்பது ஒருமாதிரி சக்தியை உறிஞ்சி துப்பிவிடுகிறது. ஜூனியர் விகடன் படிக்கவில்லை. இருந்தாலும் இந்தக் கிசுகிசுவை படித்தேன்.

விஷயம் இதுதான். 'வித்யா கர்வத்துடன் பெரிய ஆட்களை வம்புக்கிழுக்கும்' எழுத்தாளர் விருது கிடைத்ததும் தன் இணைய இதழில் வெளியிட்ட விருது அழைப்பிதழில் சின்னச் சின்ன ஆட்களையெல்லாம் அவர்கள் என்று சொல்லி காக்கா பிடிப்பதில் ஜெயம் கண்டிருக்கிறாராம்.

பாவலர் விருது பெற்றமைக்கான விழாவுக்கான என் அழைப்பிதழ் அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட அழைப்பிதழின் நேர்நகல் என்பதை எவருமே உணரலாம். அதை படமாக வெளியிட இந்த இணையதளத்தின் அமைப்பில் இடமில்லை என்பதனால் எழுத்தாக வெளியிட்டோம். மேலும் நான் எப்போதும் எவரையுமே மரியாதை தவறி குறிப்பிடுவதில்லை – விமரிசனம் ஒரு மதிப்பீடு சார்ந்து மட்டுமே.

இதழ்கள் வெளியிடும் கிசுகிசுக்களை நானும் கவனித்து வருபவன் தான். நமது சமூகம் மறைமுக அடக்குமுறை கொண்டது. ஆகவே செய்திகள் பலமுறை வடிகட்டப்படுகின்றன. செய்திகளுக்கு இடையேயான இடைவெளிகளை கிசுகிசுக்கள் நிரப்புகின்றன. ஆனால் நான் திரைத்துறைக்குள் சென்றபின் இந்த கிசுகிசுக்களுக்கும் உண்மைக்குமான தூரம் என்னை பிரமிக்கச் செய்தது. சினிமா பற்றி எதையும் எழுதலாம். யாருமே கேட்கமாட்டார்கள்.

உதாரணமாக 'நான் கடவுள்' படம் பற்றி இருபதுக்கும் மேலான கிசுகிசுக்கள், துணுக்குச் செய்திகள் வந்தன. அவை அனைத்துமே முற்றிலும் பொய்கள். சில பொய்களுக்கு உள்நோக்கம் உண்டு. படம் தொடங்கி ஆறுமாதமாகியும் திரைக்கதை எழுதப்படவில்லை என்பது அத்தகையது. உண்மையில் பல மாதம் முன்னரே திரைக்கதை எழுதப்பட்டு பல பிரதிகள் எடுக்கப்பட்டு அனைவர் கையிலும் அளிக்கப்பட்ட பாலா படம் இது ஒன்றுதான். மற்ற கிசுகிசுக்கள் சும்மா ஏதாவது போடவேண்டுமே என்பதற்காக போடப்பட்டவை. (படம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஒரு பத்துநாள் சென்னையில் விடுபட்ட துணுக்குகளை எடுத்தால் நேராக பின் தயாரிப்புவேலைகள் தொடங்கும். படத்தொகுப்பு ஏற்கனவே முக்காற்பங்கு முடிந்துவிட்டது.)

இப்போது தெரிகிறது, இருவகையான செய்திகள் திரையுலகம் பற்றி உள்ளன. ஒன்று விளம்பரத்துக்காக திரைத்துறையாலேயே கொடுக்கப்படுபவை. கதாநாயகி படப்பிடிப்பில் விபத்துக்கு ஆளானார், (முந்நூறு பேர் சூழ இருந்தும்) கதாநாயகன் ஓடிப்போய் காப்பாற்றினார் என்பது போன்ற செய்திகள். இன்னொன்று காதில் விழும் துணுக்குகள். கிசுகிசுக்களில் மிகப்பெரும்பகுதி போகிற போக்கில் டெஸ்கில் உட்கார்ந்து எழுதப்படுவன. சினிமாக்காரர்கள் அவற்றை ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை.

நடிகை பேட்டிகளில் என்ன வருகிறதென அந்த நடிகைகள் கடைசி வரை தெரிந்து

கொள்வதில்லை. இவற்றை எழுதும் பல இதழாளர்கள் சீரிய இலக்கிய வாசிப்பும் அபூர்வமான மொழிப்பயிற்சியும் உடையவர்கள் என்பது எனக்கு எப்போதுமே வருத்தம் அளிப்பது. ஒரு கட்டத்தில் கவிஞர் சுகுமாரன்கூட இவற்றை எழுதியிருக்கிறார். அப்போது அவர் கவிதைகள் எழுத முடியவில்லை. இத்தகைய எழுத்துக்கள் ஒருவரின் மொழியாளுமையை மெல்லமெல்ல அழித்துவிடும்.

கிசுகிசுக்கள் பொய்யா என்பது பற்றி எவருக்குமே ஆர்வமில்லை. ஒரு கிசுகிசு அடுத்தது வரும்போது மறைந்து விடுகிறது. மக்கள் இடைவிடாது பிரபலங்களைப்பற்றி நினைக்கச் செய்கின்றன இவை. இன்னும் ஒன்று, சினிமாவில் உள்ளவர்களுக்குத்தெரியும் இது, உண்மையான வம்புகள் அபாயகரமான செய்திகள் வெளியே வராமலிருக்கவும் இவை பயன்படுகின்றன.

பொதுவாக இலக்கியவாதிகளைப் பற்றி கிசுகிசுக்கள் குறைவு. தினமலரில் சாரு நிவேதிதா கிசுகிசுக்கள் எழுதிவருகிறார். அம்பலம், திண்ணை எல்லாமே அவரது புனைவுகள். ‘தெறம’ ‘டிஸ்கஷன்’ போன்ற சொல்லாட்சிகளும் நடிகர்கள் நடிகைகள் பற்றிய அடைமொழிகளும் அவரது கண்டுபிடிப்பே. அதை அவரே தன் ‘ராஸ லீலா’ நாவலில் சொல்லியும் இருக்கிறார். என் நோக்கில் தமிழின் மிகச்சிறந்த கிசுகிசு எழுத்தாளர் அவரே. அவரது நாவல்களே கிசுகிசுப்பாக பேசுபவைதான். தினமலரில் அம்பலம் பகுதியில் அவ்வப்போது எழுத்தாளர்களைப்பற்றி ஏதாவது வரும். அதிகமும் என்னைப்பற்றித்தான். சாருவுக்கு என் மீது ஒரு ரகசிய மோகம். ஆனால் எழுத்தாளர்களைப்பற்றி என்ன எழுத? மேலும் தினமலர் வாசகர்களுக்கு எழுத்தாளர்களைப்பற்றி ஒன்றும் தெரியாது.

இப்போது சினிமாக்காரனாகிவிட்டமையால் நல்ல கிசுகிசுக்களை எதிர்பார்க்கலாம் என்கிறார்கள் நண்பர்கள். ஜெ எழுத்தாளர் ஆர் நடிகையுடன் சுற்றுவது சம்பந்தமாக ஏதாவது வந்தால் தயவுசெய்து நம்புங்கள்.

கடைசியாக நானும் ஒரு கிசுகிசு சொல்லிவிடுகிறேன். ‘ஆ’ வில் தொடங்கி ‘யா’வில் முடியும் நடிகர் இரண்டரை வருடமாக வளர்த்த தாடி, தலைமுடியை எடுத்துவிட்டார். கண்ணாடியில் பார்த்து ‘அநியாயமா சின்னப்பையனா இருக்கானே’ என்று தன்னைப்பற்றி எண்ணி ஃபீல் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

மே 6, 2008

40. கலைஞனின் உடல்மொழி: ஜெயகாந்தன் ஆவணப்படம்

ஒரு எழுத்தாளனை எதற்காக ஆவணப்படம் எடுக்க வேண்டும்? அவனுக்காக அவனது எழுத்துக்கள் பேசும். அவன் போனபின்னும் அவை பேசிக் கொண்டிருக்கும். கலைஞனின் சொற்கள் அழியாது. தன் ஆக்கங்களில் பேசியவற்றுக்கு அப்பால் அவன் ஒரு பேட்டியிலோ அல்லது ஆவணப்படத்திலோ ஒன்றும் சொல்லிவிடப்போவதில்லை. இலக்கியம் சாந்த நோக்கில் இத்தகைய ஆவணப்படுத்தல்களுக்கு எந்த இடமும் இல்லை.

ஆனால் நமக்கு இலக்கியவாதி என்ற ஆளுமை தேவைப்படுகிறது. வள்ளுவரும் கம்பனும் எப்படி இருந்தார்கள் என நாம் அறிவதில்லை. ஆனால் அவர்களைப்பற்றிய கதைகள் நமக்குக் கிடைக்கின்றன. அவர்களை நாம் மனக்கண்ணில் வரைந்துகொள்கிறோம். இன்று அவர்களுக்கு முகங்களை உருவாக்கியிருக்கிறோம். தாடிமீசையுடன் வள்ளுவரும், அடர்ந்த பெரிய மீசையுடன் கம்பரும்.

ஏன்? காரணம் நாம் படைப்பை படிக்கையில் படைப்பாளியுடன் உரையாடுகிறோம் என்பதே. அருவமான எழுத்தாளனுடன் நம்மால் பேச முடிவதில்லை. நமக்கு உருவம் தேவையாகிறது. எந்தக் காரணத்தால் கடவுள்களுக்கு உருவம் அமைந்ததோ அதே காரணத்தால்தான் நாம் கலைஞர்களுக்கும் உருவம் அளிக்கிறோம்.

பெரும் கலைஞர்களின் உருவத்தைப் போற்றுவது உலக மரபு. ஹோமரின் சிலை நமக்குக் கிடைக்கிறது. நம்மாழ்வார் ஆழ்வார் திருநகரியில் கோயில்கொண்டிருக்கிறார். புகைப்படக்கலை வந்தபின்னர் இது இன்னும் முக்கியமானதாக ஆகியது. பாரதியின் பாடல்களுக்கு நிகராகவே அவரது தீவிரமான கண்கள் கொண்ட புகைப்படங்களும் ஆர்யா வரைந்த ஓவியமும் தமிழ் மக்களின் மனதில் பதிந்திருக்கின்றன. அந்த சித்திரங்களே கூட மக்களிடம் உக்கிரமாக உரையாடக்கூடியவையே. அவரது பாடல்களில் இருந்து அந்த முகத்தை பிரிக்க முடியாது.

கலைஞனின் உடல் அவனுடைய கருத்துகளின் பிம்பமாக மாறிவிடுகிறது. ஒரு கட்டத்தில் அது அவன் சொன்ன அனைத்துக்கும் உரிய குறியீடாக ஆகிறது. ஆகவேதான் நாம் கலைஞனின் உடலை ஆவணப்படுத்துகிறோம். நம் நாட்டில் முறையான ஆவணப்பதிவுகள் அனேகமாக இல்லை. இப்போதுதான் தொடங்கியிருக்கின்றது. ரவி சுப்ரமணியம் இயக்கிய ‘ எல்லைகளை விஸ்தரித்த எழுத்துக்கலைஞன், ஜெயகாந்தன்’ என்ற ஆவணப்படம் அதில் ஒரு முக்கிய சாதனை.

இந்த ஆவணப்படத்தின் சிறப்பு முறையான சீரான பேட்டி போல அல்லாமல் ஒரு ரகசியக் காமிரா எடுத்தது போல ஜெயகாந்தனை இது பதிவுசெய்திருக்கிறது என்பதே. ஜெயகாந்தன் காமிரா உணர்வே இல்லாமல் ஏதோ நிலையில் பேசிக் கொண்டே இருக்க, காட்சி அவரது மாறிக்கொண்டே இருக்கும் முகபாவனைகளை, கையசைவுகளை, உடல்மொழியை பதிவுசெய்தபடி மௌனமாக மாறிக் கொண்டே இருக்கிறது. ஜெயகாந்தனின் ‘மடத்தில்’ பலநாள் சென்றவன் என்ற முறையில் அவரது கொட்டகையின் ஒரு மூலையில் நின்று கொண்டிருக்கும் உணர்வை இந்த ஆவணப்படம் உருவாக்குகிறது. இதுவே அதன் வெற்றி.

ஜெயகாந்தனின் விரல்கள் அவர் பேசும்போது செய்யும் அசைவுகளை நானும் கவனித்திருக்கிறேன். அவர் கவனிக்கும்போது அவை ஒன்றுடன் ஒன்று முறுக்குகின்றன.

சிந்திக்கும்போது வேகமாக தாளமிடுகின்றன. பேசும்போது அவர் முன்னகர்வதும் ஒரு கருத்து முடிவடைந்ததுமே சற்று தோள் தளர்வதும் உண்டு. மீசையைக் கோதுவது, பக்கவாட்டில் நோக்கியபடி அசைவிழந்து இருப்பது, லேசாக தொடையைத் துள்ள வைப்பது என அவரது நுண்ணிய சலனங்களை இந்த ஆவணப்படத்தில் காணும்போது அவரது அந்தரங்க உரையாடலின் சபைக்கு பல்லாயிரம் பேரை ரவி சுப்ரமணியன் கொண்டு சென்றிருக்கிறார் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது.

ஜெயகாந்தனின் ஆண்மை நிறைந்த சிரிப்பு பல கோணங்களில் அழகுறப் பதிவாகியிருக்கிறது. கோபம் கொப்பளிக்க, நக்கலுடன், கனிவுடன், தனக்குத்தானே என அவர் சிரிக்கிறார். வயதாக ஆக சிரிப்பதற்கான காரணங்கள் பெருகிவருகின்றன போலும். ஓங்கூர் சாமியின் சிரிப்பு அவரிலும் சற்றே தொற்றிக் கொண்டது போலும்.

ஜெயகாந்தனின் கதைகளை கவனிக்கும் வாசகர் அவர் எழுதுவதில்லை, காட்டுவதும் இல்லை, உரையாடுகிறார் என்று உணர்ந்திருப்பார். அதை சொற்பொழிவுத்தன்மை என்று சிலர் சொல்லியதுண்டு. உண்மையில் மேடையில்கூட ஜெயகாந்தன் சொற்பொழிவாற்றுவதில்லை. உரையாடிக் கொண்டே இருக்கிறார். அது பொதுவாக இடதுசாரிப் பணியாளர்களின் இயல்பு. ப.ஜீவானந்தம் பற்றி சொல்லும் சுந்தர ராமசாமி இதை குறிப்பிடுகிறார். சுந்தர ராமசாமியேகூட உரையாடலில் எப்போதும் ஈடுபட்டிருந்தவர்தான்.

ஜெயகாந்தனின் கதைகளுக்குள் ஒலித்த அந்த உரையாடலின் குரலை நாம் பல வண்ணங்களில் பல அழுத்தங்களில் இந்த ஆவணப்படமெங்கும் காண்கிறோம். சாதாரணமாக பேசியபடியே வந்து சட்டென்று மேலெழுந்து ஓர் தரிசன ஒளியைப் பெறுபவை அவரது சொற்கள். அவரது சிறந்த சிறுகதைகளை தவிர்த்தால் ஜெயகாந்தன் சொல்லிய மன எழுச்சியின் ஒளிபடிந்த அழகிய வரிகளினாலேயே அவர் நினைவுகூரப்படுவார்.

இந்த ஆவணப்படத்திலும் அத்தகைய பல தருணங்கள் மிக இயற்கையாகப் பதிவாகியிருக்கின்றன. கன்னடர்கள் தங்கள் நாட்டில் தமிழ் படிப்பதை தடை செய்வது, திருவள்ளுவர் சிலையை வைக்க மறுப்பது பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு ஜெயகாந்தன் சொல்லும் பதில் உதாரணம். ‘நாம் கன்னடக் கவிஞனுக்கு சிலை வைப்போம். கன்னடம் பயிற்றுவிப்போம். பெருந்தன்மையும் நல்லியல்பும் என்றால் என்ன என்று நாம் அவர்களுக்குக் கற்பிப்போம்...’

ஜெயகாந்தன் அவ்வாறுதான் சொல்ல இயலும். ‘இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்ய’ மட்டுமே அவரால் சொல்ல இயலும். அவரது வேதம் திருக்குறளே. அது ஒரு மதநூல் போல அவரை ஆட்கொண்டிருக்கிறது. அதன் பின் பாரதி. ஜெயகாந்தனின் சாரம் என்ன என்றால் ‘அவரிடம் உள்ள உண்மையான உள்ளார்ந்த இலட்சியவாத அம்சமே’ என்று நான் பதில்சொல்வேன். அந்த இலட்சியவாதம் குறளைக் கண்டடைந்தது. இந்த ஆவணப்படமெங்கும் நாம் தொடர்ந்து குறளின் ஒலியைக் கேட்கிறோம். அந்த இலட்சியவாதமே அவரை பாரதியின் நீட்சியாக சமகாலத்தில் நிலைநாட்டியது.

ரவி சுப்ரமணியன் அவரிடம் பொதுவாக தமிழ் வாசகர்கள் கேட்க விரும்பும் கேள்விகளை கேட்கிறார். பல வினாக்கள் தீவிரமானவை. சில வினாக்கள் சீண்டும் தன்மை கொண்டவை. ஜெயகாந்தன் தனிப்பட்ட முறையில் சீண்டும் தன்மை கொண்ட கேள்விகளுக்கு மிக நிதானமாக பதில் சொல்கிறார். அவர் திராவிட இயக்கத்துடன் சுயநலத்துக்காக சமரசம் செய்துகொண்டாரா? சங்கராச்சாரியாரை அவர் எப்படி ஆதரித்தார்? அவர் சினம் கொண்டு உறுமுவது சமூகம் சார்ந்த அற்பத்தனங்களையும் போலித்தனங்களையும் பற்றிய பேச்சு வரும்போதுதான். சில இடங்களில் அவரது சொற்கள் உதடசைவாக ஆகும் அளவுக்கு சினம் எழுகிறது.

ஜெயகாந்தனின் சொந்த ஊரான கடலூர், அங்குள்ள கடற்கரை காந்தியவாதியான அவரது

தாய்மாமா அவரது குடும்பம் என அவரது அறியப்படாத உலகங்களுக்குள் செல்லும் ஆவணப்படம் அவரது இசையார்வம், இடதுசாரி அரசியல்மேல் அவருக்குள்ள அழியாத பற்று என பல தளங்களுக்கு விரிகிறது. ஆனால் முதலாளித்துவ ஆதரவாளர் ஆகிவிட்டாரா என்ற வினாவுக்கு ஜெயகாந்தன் 'மார்க்ஸ் கண்டது பதினெட்டாம் நூற்றாண்டுக்குரிய குரூரமான சுரண்டல் முதலாளித்துவத்தை மட்டுமே. இன்றைய முதலாளித்துவத்தின் நவீன முகங்களை அவர் ஊகிக்கவில்லை' என்று நேரடியாக விடை சொல்கிறார்.

இளையராஜாவின் பின்னணி இசை இப்படத்துக்கு பெரிய பின்பலம். குறிப்பாக இசை தொடங்கும் இடங்கள் இசையமைப்பாளர் ஜெயகாந்தனை எந்த அளவுக்கு நுட்பமாக புரிந்தவர் என்பதற்கான சான்றுகள். 'நாம் அசோகரை உருவாக்குவோம். அலக்ஸாண்டர்களாக ஆவதில்லை' என்று அவர் சொல்லியதுமே இசை பொங்கி எழும் இடம் ஓர் உதாரணம்.

செழியனின் ஒளிப்பதிவு அழகுறக்காட்டுவது, திரையை நிறைப்பது என்ற வேலையை உதறிவிட்டு செயற்கையாக ஏதுமில்லாமல் பதிவுசெய்வது தெரியாமல் பதிவுசெய்ய முயல்கிறது. ஜெயகாந்தனின் கையசைவுகள் போன்றவற்றை உரிய இடங்களில் காமிரா சென்று தொடுவது ஒளிப்பதிவாளர் தன் பணியை அறிந்திருக்கிறார் என்பதற்கான ஆதாரம்.

சமீபத்தில் சாகித்ய அகாதமியின் நிதியுதவியுடன் பல எழுத்தாளர்களைப்பற்றிய ஆவணப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. போதிய நிதி வசதியுடன் நுட்பமாக எடுக்கப்பட்டுள்ள இந்த ஆவணப்படம் முதன்மை பெற்று நிற்கிறது. தயாரிப்பாளரான இளையராஜா நன்றிக்குரியவர்.

('எல்லைகளை விஸ்தரித்த எழுத்துக் கலைஞன்' எண்ணம் எழுத்து இயக்கம் ரவி சுப்ரமணியன், ஒளிப்பதிவு செழியன், இசை இளையராஜா, படத்தொகுப்பு: ஆர்.ஜி.பிப்மனோகர், எல்லோரா ஆவணபடங்கள் வெளியீடு)

மே 20, 2008

41. கனடிய இலக்கியத் தோட்ட விருதுகள்

கனடாவின் டொரொண்டோ நகரை மையமாகக் கொண்டு செயல்படும் கனடிய இலக்கியத் தோட்டம் அளிக்கும் இலக்கிய விருதுகள் இவ்வருடம் நாஞ்சில்நாடன் மற்றும் எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன. நாஞ்சில்நாடன் அவரது கட்டுரை நூலான 'நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை' என்ற நூலுக்காக பரிசு பெறுகிறார். 'யாமம்' நாவலுக்காக எஸ்.ராமகிருஷ்ணன். கனடிய இலக்கியத் தோட்டம் அமைப்பு டொரொண்டோ பல்கலையுடன் இணைந்து ஏற்கனவே இயல் விருதை வழங்கிவருகிறது. ரூபாய் 500 கனடிய டாலர் மதிப்புள்ள விருதுகள் இவை.

கட்டுரைகள் அவரது புனைவிலக்கியத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டியவை. அவரது புனைகதைகளில் ஒலிக்கும் சமூகக்கோபம் கொண்ட ஆசிரியனின் குரலே இக்கட்டுரைகளில் நேரடியாக ஒலிக்கிறது. மரபின் செழுமைகளை இழந்து நுகர்வு வெறியால் சூழலை அழித்துக் கொண்டு வணிகப்புத்தியால் உறவுகளைச் சிதைத்துக் கொண்டு அழியும் நம் தலைமுறையை நோக்கி ஒரு கலைஞன் கொள்ளும் கோபத்தின் கனலை நாம் அவரது கட்டுரைகளில் காணலாம். நாஞ்சில்நாடன் என்றாலே அவரது இயல்பான நகைச்சுவைதான் நம் நினைவுக்கு வரும். இக்கட்டுரைகளில் அது கரிய நகைச்சுவையாக நுரைத்துக் கொண்டே இருக்கிறது.

எஸ்.ராமகிருஷ்ணனின் 'யாமம்' புனைவை பிரித்து பிரித்து மறு அடுக்கு செய்து கற்பனைக்கும் யதார்த்தத்துக்கும் நடுவே உலவும் புதுவகை நாவல். மனித இச்சையின் விளக்கமுடியாத ஒரு மர்மத்தை தொட்டு அதை விளக்காமலேயே நின்றுவிடும் அபூர்வமான இலக்கிய ஆக்கம் இது. இவ்விரு நூல்களும் எளிய வாசகர்களுக்கும் நேரடியான வாசிப்பின்பத்தை அளிப்பவை. கூர்ந்த வாசகர்களுக்கு மேலதிக தளங்களை திறந்து காட்டுபவை. இத்தகைய ஆக்கங்கள் கூட நம் சூழலில் இயல்பான வாசக கவனத்தை பெற முடியாத நிலை உள்ளது இன்று. இந்தச் சூழலில்தான் இவ்வகை விருதுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்விருதுகள் மூலம் இப்படைப்பாளிகள் பெறும் நன்மை என அதிகம் ஏதுமில்லை. இந்நூல்கள் வாசகர்நடுவே அதிகமாக அழுத்திக் கூறப்படுகின்றன என்பதே முதல் நன்மை. நல்ல நூல்கள் உடனடிக் கவனம் பெறாத சூழலில் தங்கள் நூல்களுக்கு ஒரு அங்கீகாரம் கிடைப்பதனால் படைப்பாளி எழுதிமுடித்து வெளியிட்டதும் அடையும் சோர்வு சற்றே விலகும். நாஞ்சில்நாடன், எஸ்.ராமகிருஷ்ணன் இருவருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மே 22, 2008

42. அம்மா வந்தாள்: மூன்றாவது முறை...

அம்மா வந்தாள் நாவலை மீண்டும் படிக்க நேர்ந்தது, பதினைந்து வருடம் கழித்து. இது மூன்றாவது முறை. இம்முறை தி.ஜானகிராமனின் எண்ண ஓட்டச் சித்தரிப்புகள் சற்று சலிப்பூட்டின. உரையாடல்களில் ஒரே பாணியை பல இடங்களில் பல கதாபாத்திரங்களில் கடைப்பிடிக்கிறாரோ என்ற எண்ணம் ஏற்பட்டது. கதாபாத்திரங்களின் உணர்ச்சிகரத்தின் ஒரேயொரு அம்சத்தை மட்டுமே அவர் கவனிக்கிறார் என்ற எண்ணமும் வலுவாக உருவாகியது. ஆனாலும் இப்போதும் அது சுவை குன்றாத முக்கியமான ஆக்கமாகவே தோன்றியது, அப்படி தொடர்வாசிப்புக்கு ஈடுகொடுக்கும் தமிழ்ப் படைப்புகள் உண்மையில் மிகவும் குறைவேயாகும்.

அம்மா வந்தாள் நாவலின் தொடக்கமே நுட்பமான சில எண்ணங்களை உருவாக்கியது. அப்புவுக்கு இந்து மீது ரகசிய ஈர்ப்பு உண்டு என்பது நாவலில் நிறுவப்பட்டுவிட்ட ஒன்று. பவானியம்மாள் அவளை தனியாக, அப்புவின் பொறுப்பில் விட்டுவிட்டு கல்யாணத்துக்குப் போயிருக்கிறாள். அந்த நாள் அப்புவுக்கு முக்கியமானது. எந்த ஆணின் மனதையும் படபடக்கச் செய்ய கூடியது அந்த தருணம். ஆனால் அப்பு காவேரிக்கரையில் கிடந்து காவேரியின் அழகை, அதன் மோனத்தை ரசித்துக் கொண்டு அங்கே அவர் வந்து சேர்ந்த நாட்களை எண்ணிக் கொண்டு அவளைப்பற்றிய நினைவே இல்லாமல் இருக்கிறான்.

ஒரு கோணத்தில் இதை புனைவைதொடங்கும் சாதாரணமான முறை என்று சொல்லலாம். கதைச்சூழலையும் கதைநாயகனையும் இயல்பாக அறிமுகம் செய்வது தி.ஜானகிராமனின் நோக்கம். கதைநாயகனின் அந்தரங்க நினைவோட்டத்தில் கதையை தொடங்குவது இன்னும் வசதி அவனுடைய குணச்சித்திரத்தை காட்டிவிடலாம். அவன் அங்கே வந்ததுதான் கதையின் தொடக்கப்புள்ளி என்பதனால் அதைப்பற்றிய நினைவோட்டமாக இருந்தால் இன்னும் நல்லது. மேலும் தி.ஜானகிராமனுக்கு காவேரிக்கரை சார்ந்த ஒரு மோகம் உண்டு. காவேரியை வருணித்தால் அவருக்கு கதை சொல்லும் மனநிலை இயல்பாகப் படிகிறது.

ஆனால் புனைவின் கோணத்தில் நோக்கினால் அந்த சிந்தனைகளுக்கு வேறு ஒரு தளம் அமைகிறது. இந்து அங்கே தனியாக இருப்பது அப்புவுக்கு தெரியும். அதை அவன் ‘நினைக்காமல்’ இருக்க முயல்கிறான். அதனால்தான் அவன் காவேரியையும் இளமைப்பிராயத்தையும் பற்றி எண்ணிக் கொள்கிறான். முடிந்தவரை தாமதமாக வருகிறான். அதில் அவனது எதிர்பார்ப்பும் அச்சமும் கலந்திருக்கிறது.

தி.ஜானகிராமன் எழுதியதற்கு முதலில் சொன்னவை காரணமாக இருக்கலாம். ஆனால் இரண்டாவதாகச் சொன்ன வாசிப்பை நிகழ்த்துவதற்கு நாவல் முழுக்க இடமிருக்கிறது. இதுவே அந்நாவலை முக்கியமானதாக ஆக்குகிறது. தமிழில் நுண்ணிய அடித்தளங்கள் கொண்ட மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று அம்மா வந்தாள்.

இந்துவுக்கு அப்பு மேல் உள்ள ஈடுபாடு அதுவரை எப்படி அப்புவுக்கு தெரியாமல் இருந்தது என்ற கேள்வியும் நாவலை வாசிக்கும்போது எழுகிறது. அவள் அங்கேயேதான் இருக்கிறாள். அவர்கள் சந்தித்துக் கொள்கிறார்கள். பவானியம்மா இல்லாத இரவில் இந்து சற்றே அத்து மீறுகிறாள், சரி. ஆனால் அவள் இருக்கும்போதும் பிறகு அப்படி அத்து மீறுகிறாளே? ஒரு பார்வை ஒரு சிரிப்பில்கூட அப்புவுக்கு இந்துவின் மனம் தெரியவில்லையா?

அந்த வினாவுக்கு நாவல் அளிக்கும் பதில் அப்பு கிளம்பிச் செல்கிறான், அவன் வராமலிருந்துவிடக்கூடும் என்ற எண்ணத்தில் இருந்தே அந்த வேகம் இந்துவுக்கு வருகிறது என்பதுதான். உண்மையில் பவானியம்மாவுக்குக் கூட அது உள்ளூர தெரிந்திருக்கலாம். நாவலின் இறுதியில் அவள் தன் வாழ்நாள் கனவான வேதபாடசாலை என்பதையே விட்டுவிட்டு இந்துவை பூடகமாக அப்புவின் மனைவியாக ஆக்குகிறாள். அவளுக்கு இந்துவின் காதல் சற்றும் அதிர்ச்சியை அளிக்கவில்லை. உள்ளூர அப்புவுக்கு இந்துவின் மீதான கவர்ச்சி இருந்துகொண்டிருப்பதை பிறகு நாம் காணும்போது அந்த காதல் பரிமாற்றம் எப்படியோ அங்கே நிகழ்ந்திருக்கிறது என ஊகிக்க முடியும்.

நாவலில் தண்டபாணியின் குணச்சித்திரம் அதேபோல மிகவும் பூடகமானது. அவரது வேதாந்த உபன்யாசம் மூலம் நாம் அவரை முதலில் காண்கிறோம். ஆனால் அவரது ஆளுமையில் அந்த அம்சமே இல்லை. அது மனைவிமீதான காமமும் பக்தியுமாக அடிபணிந்து நிற்பது. அதை அவரே அஞ்சித்தான் வேதாந்தத்தால் மூடிக் கொள்கிறார். அப்புவிடம் அம்மாவின் தொடர்பு குறித்து பேசும்போது அவர் 'சும்மா வேடிக்கைதான் பாக்க முடியும்' என்று சொல்லும் வேதாந்தம் அவரே உருவாக்கிக் கொண்ட ஒரு தற்காப்பு ஆயுதம் மட்டுமே.

அம்மாவின் குணச்சித்திரத்தைச் செதுக்க தி.ஜானகிராமன் அதிக கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறார். அலங்காரம் என்ற பேரில் தொடங்கி. அப்பு, தண்டபாணி இருவரின் கோணத்திலும் அம்மாவை அறிமுகம் செய்கிறார். அப்புவுக்கு அம்மா ஒரு கம்பீரமான பெண். பிழம்பு. தண்டபாணி அவளிடம் குழந்தைத்தன்மையும் கம்பீரமும் கலந்த ஒரு கவர்ச்சியைக் கண்டுகொண்டிருக்கிறார்.

நாவலின் உச்சமான ஒரு மௌனப்புள்ளி, இந்துவை அணைக்கையில் அப்பு அம்மாவை எண்ணுவதுதான். இதுவே இந்நாவலை சென்றகாலங்களில் ஈடிபஸ் உளச்சிக்கல் என்ற கோணத்தில் பலரை ஆராயச்செய்தது. இந்துவிடம் இருந்த அலங்காரத்தின் கூறு என்ன? அதை தி.ஜானகிராமன் சொல்வதில்லை. தோற்றத்தில் அவர் அவர்களை மிகத் தெளிவாக வேறுபடுத்துகிறார். இந்து கொடிபோல. அலங்காரம் மரம் போல.

ஆனால் இந்து, அலங்காரம் இருவரும் தி.ஜானகிராமன் மீண்டும் மீண்டும் உருவாக்கிய இரு கதாபாத்திரங்கள்தான் என்பதை நாம் கவனிக்கலாம். 'செம்பருத்தி'யில் வரும் பெரிய அண்ணிதான் அலங்காரம். சின்ன அண்ணிதான் இந்து. செம்பருத்தியின் புவனா இந்த நாவலிலும் வந்து போகிறாள் – அப்பு பெண்பார்க்கச் சென்ற இடத்தின் பெண்ணாக.

அலங்காரம், இந்து இருவரிடமும் இருக்கும் பொது அம்சம் தாபம்தான் என்று படுகிறது. எண்ணெயை எட்டித்தீண்டும் தீத்தழல் போல அவர்கள் ஆணை எட்டிப் பிடித்துக்கொள்கிறார்கள். அந்த வேகமே பொதுவான அம்சம். அப்படியானால் அம்மாவின் உள்ளே எரிந்த காமத்தை அப்பு முன்னரே அறிந்திருந்தானா? நாவலில் அப்படி இல்லை. ஆனால் அம்மாவைப் பற்றிய அப்புவின் எண்ணங்களில் எல்லாம் அவளது வேகம் பதிவாகியிருக்கிறது. அது இச்சா சக்தியின் வேகம். அதுவே காமம். அதுவே இந்துவிலும் எரிந்தது.

அந்தக் காமம் வெறுமொரு ஆராதகனாக இருக்கும் தண்டபாணியை தாண்டி சிவசு என்ற இலக்கை நோக்கிச் சென்றதா? இந்நாவலில் சிவசுவிடம் அலங்காரம் கண்டது என்ன என்ற வினா மிக முக்கியமானது. தண்டபாணியின் செயற்கைத்தனம், அவரது உலகமறுப்பு அலங்காரத்தை அவரை விட்டு விலகச் செய்ததா என்ன? சிவசு மிக ஆழம் இல்லாத மனிதன். ஆனால் செயல்வேகமே உருவானவன். அதுதான் அவனைநோக்கி அலங்காரத்தை ஈர்த்திருக்க வேண்டும்.

தண்டபாணி மகனிடம் சொல்கிறார், பெண்ணுக்கு எல்லாமே வேண்டும். ஆண் முரடனாகவும் இருக்கவேண்டும் சொன்னபேச்சும் கேட்கவேண்டும். கல்வியும் வேண்டும் செல்வமும்

வேண்டும் புகழும் வேண்டும். ஒன்று குறைந்தாலும் மனக்குறைதான் என்கிறார். கல்யாணமே செய்யவேண்டியதில்லை என அப்பு சொல்கிறான். கை தப்புசெய்கிறது என்பதற்காக கையை வெட்ட முடியுமா என்கிறார் தண்டபாணி.

அலங்காரத்தை கண்டு கொள்வது அப்புவுக்கு ஒரு சுயதரிசனம். அவன் இந்துவிடம் மீள்கிறான். அதை நுட்பமாக புரிந்துகொண்டுதான் அலங்காரம் சொல்கிறாள் ‘நீயும் அம்மா பிள்ளைதான்’ என்று.

தமிழ் ஸ்மார்த்த எழுத்தாளர்களிடம் இருக்கும் ஒரு முக்கியமான கூறு குறித்து ஒரு அவதானிப்பு என்னிடம் உண்டு. அந்த அவதானிப்பு இந்நாவலிலும் உறுதியாகியது. அவர்களுடைய நுண்ணுணர்வு கண் சார்ந்தது அல்ல, காது சார்ந்தது. இந்நாவலில் தி.ஜானகிராமன் சென்னை, காவேரிக்கரை இரண்டையும் முழுக்க முழுக்க காது உணரும் சித்திரமாகவே எழுதிக் காட்டுகிறார். காட்சிச் சித்திரங்கள் அதை துணைகொள்கின்றன. உரையாடலும் ஒரு காதுச் சித்திரமே. மௌனி, லா.ச.ரா முதல் யுவன் சந்திரசேகர் வரை இந்த அம்சம் தொடர்கிறது.

காது உணரும் உச்சமாக இசையைச் சொல்லலாம். இப்படைப்பாளிகளிடமிருந்து நம்மால் இசையுலகை பிரித்துப் பார்க்க முடியாது. மோகமுள் முழுக்கமுழுக்க இசையைச் சார்ந்தது என்றால் இந்நாவல் அந்த இடத்தில் ஒலியை வைத்திருக்கிறது.

தமிழ் ஸ்மார்த்த எழுத்தாளர்களிடம் இருக்கும் ‘அம்பாள்’ என்ற ஆழ்படிமம் பற்றி நான் ஏற்கனவே தி.ஜானகிராமன் பற்றி எழுதும்போது பேசியிருக்கிறேன் – (ஏழு விமரிசன நூல்கள்) அழகும் உக்கிரமும் கலந்த பெண். கொல்லும் கவர்ச்சி. அச்சமூட்டும் காமம். அந்த சித்திரங்களை நாம் தி.ஜானகிராமன் போலவே மௌனியிடமும் லா.ச.ராவிடமும் காணலாம். அலங்காரம் அந்தப் பெண் சித்திரங்களில் முக்கியமான ஒன்று. அதுவே அம்மா வந்தாள் நாவலின் வெற்றி.

(அம்மா வந்தாள், தி.ஜானகிராமன், ஐந்திணை பதிப்பகம், சென்னை)

மே 24, 2008

43. சில சினிமாப்பாடல்கள்

பாலு மகேந்திராவின் மாணவரான நண்பர் சுரேஷ் கண்ணன் அபூர்வ திரைப்பாடல்கள் என்ற ஒரு எம்.பி3 பதிவை அளித்தார். எம்.கே.தியாக ராஜ பாகவதர் முதல் இளையராஜா வரையிலான இசையமைப்பாளர்களின் அடிக்கடி கிடைக்காத பாடல்கள். மீண்டும் மீண்டும் அதைக் கேட்கிறேன். பல பாடல்களை தொடர்ச்சியாக பலமுறை. கேட்க ஆரம்பித்தால் இரவெல்லாம் கேட்பது என் வழக்கம்.

நான் நல்ல இசை ரசிகனல்ல. ஒலிப்பிம்பங்களை உருவாக்கிக் கொள்ள என்னால் முடியாது, இசையும் எனக்கு காட்சிப்பிம்பங்களாகவே ஓடும். இசையைப்பற்றிய தகவல்களை நான் சேமித்துக் கொள்வதும் இல்லை. ஆனாலும் இசை எனக்கு ஒரு வகையான மனக்கிளர்ச்சிநிலையை உருவாக்கிக் கொள்ள அல்லது அமைதி அடைவதற்கு தேவைப்படுகிறது.

கேட்டுக் கொண்டிருந்தபோது பி.சுசீலா பாடிய ஒருபாடல் ‘கனி எது என் கன்னம்தானென்று சொல்வேனடீ’ என்னை சில மணிநேரம் இளமை நினைவுகளில் அலைக்கழித்தது. உடனே வேறு இசைவட்டுகளை எடுத்து அந்தப்பாடல் என் நினைவில் எழுப்பிய வேறு சில பாடல்களைக் கேட்டேன். ‘பளிங்கினால் ஒரு மாளிகை’, ‘பார்த்த ஞாபகம் இல்லையோ’, ‘ஆடும் நேரம் இதுதான் இதுதான்...’ பின்னர் இப்பாடல்கள் நடுவே என்ன ஒற்றுமை என்ற எண்ணத்தில் மூழ்கினேன். என் பலவீனமான இசையறிவுக்கு ஒன்றும் பிடிகிடைக்கவில்லை. பொதுவான ஏதாவது ராகமோ தாளமோ ஆலாபனை முறையோ இருக்குமோ? அல்லது ஒருவேளை எனது அந்தரங்க மனநிலை ஏதேனும் இருக்குமோ?

பாடல்களுக்கு அப்படி ஒரு தன்மை உண்டு. நினைவுகளுடன் பிணைந்திருத்தல். பிரிக்கவே முடியாதபடி. ‘வசந்தகால நதிகளிலே வைரமணி நீரலைகள்’ என்ற பாடலும் பிளாஸ்டிக் லேமினேஷனின் மணமும் என் நெஞ்சில் பிணைந்துள்ளன. காரணம் கல்லூரி நாட்களில் ஒருமுறை லேமினேஷன் போட்ட பேருந்து சலுகைச்சீட்டை வாயில் கவ்வியபடி நான் பயணம்செய்யும்போது அப்பாடலைக் கேட்டிருக்கிறேன்.

சிலசமயம் மனநெகிழ்வூட்டும் நினைவு. முதலாண்டு மாணவனாக நான் கல்லூரி வந்த காலத்தில் ‘வெள்ளிமணி ஓசையிலே’ என்ற பாடல் ஒலித்த தேநீர்கடை வாசலில் இருந்த பேருந்து நிறுத்தத்தில், பூனைமயிர் இறங்கிய கன்னங்களும் மிகச்சிறிய உதடுகளும் சிறிய நாசியும் பெரிய கண்களும் கொண்ட உருண்டைமுகமுள்ள ஒரு மூத்த மாணவியை பார்த்தேன். சிவப்பான சரிதா. அக்காலத்து திரை நாயகி அவர்தான். பெயரே தெரியாமல் இரண்டுவருடங்கள் ‘உள்ளமெனும் கோயிலில் வெள்ளிமணி ஓசை’யைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனால் இந்தப்பாடல்கள் அப்படி அல்ல என்றும் படுகிறது. இதேபோல மனதில் ஒரே இடத்தில் அமைந்துள்ள பாடல்கள் உண்டா? டி.ஆர்.மகாலிங்கத்தின் நாதஸ்வரக் குரல் ஒலிக்கும் ‘கண்களின் வெண்ணிலவே உல்லாச காதல் தரும் மதுவே...’ டி.எம்.எஸ் பாடும் ‘முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டு போலே; பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடும் ‘ இன்பம் பொங்கும் வெண்ணிலா வீசுதே’ போன்ற பாடல்கள் என் மனதில் ஒரே புள்ளியில் இணைகின்றன. ஏன்?

நண்பர் சொன்னார். ‘அந்தப்பாடல்களில் பொதுவான அம்சம் என்ன என்றால் அவை மிகச்சிக்கலான தாளத்தின் மீது எளிமையான மெட்டுகளை அமைத்துள்ளன என்பதுதான். பாட்டை விட்டுவிட்டு தாளத்தை மட்டும் கேட்டால் நாம் முற்றிலும் வேறு ஒரு அனுபவத்தை அடைவோம்.’ ஆம் அது உண்மைதான்.

அப்படியானால் முதலில் சொன்ன பாடல்களில் என்ன பொதுத்தன்மை உள்ளது? அவற்றில் விசித்திரமான ஒரு மர்மம் உள்ளது போலப் படுகிறது. காமத்தின் விளங்கிக் கொள்ள முடியாத மர்மமா அது? ‘கனி எது’ பாடலில் ஆஹாஹா என்ற ஆலாபனையில் வெளிப்படும் தாபம் மற்ற பாடல்களில் எல்லாம் அதே வீச்சில் வெளிப்படுகிறது…

அப்படிப்பார்த்தால் ‘மலரும் வான் நிலவும் சிந்தும் அழகெல்லாம் உன் எழில்வண்ணமே’ என்ற பாடலும் ‘ஊரெங்கும் மாவிலை தோரணம்’ பாடலும் அப்படியே ‘வெள்ளிமணி ஓசையிலே’ பாடலுடன் இணைகின்றன. ஏன்?

மே 25, 2008

44. வெயிலுக்கு விருது

இந்த வருடத்துக்கான சிறந்த பிராந்திய மொழிப் படத்துக்கான தேசியவிருது வசந்தபாலனின் 'வெயில்' படத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட வெயில் தான் என்று அனைவருமே எண்ணியிருந்தார்கள். பருத்திவீரனா என்ற ஐயம் சிலருக்கு இருந்தது. எனக்கு அறிமுகமுள்ள மிகத்தீவிர கேரளத் திரைப்படைப்பாளிகள் பலரும் 'வெயில்' மிகவும் பிடித்திருந்ததாகச் சொன்னார்கள். ஒரு கலைப்படைப்பின் புதுமை நேர்த்தி எல்லாம் அது வெளிவந்த சில காலத்துக்கு மட்டுமே. அதிலும் தொழில்நுட்பம் தாவிச்சென்றுகொண்டிருக்கும் சினிமாவில் மிக வேகமாக புதுமை பின்னால் நகர்ந்து விடுகிறது. அதை மீறி படத்தை நெஞ்சில் நிறுத்துவது அதில் உள்ள மானுட அம்சம். அது காலாவதியாவதே இல்லை. வெயிலின் ஆத்மா வலியாலும் கொந்தளிப்பாலும் ஆனது. அதுவே அதன் சிறப்பும் வெற்றியும்.

வெயிலில் இந்தியாவெங்கும் ஒவ்வொரு வீட்டிலும் இருந்துகொண்டிருக்கும் உண்மையான ஒரு சிக்கல் அந்த உண்மையின் எரியும் தீவிரத்துடன் பேசப்பட்டிருந்தது. குழந்தைகள் மேல் உள்ள வன்முறை. குழந்தைகள் மேல் அதீதமான எதிர்பார்ப்பை திணிப்பதேகூட வன்முறையே. அதுவே அடுத்தகட்டத்தில் நேரடி வன்முறையாக மாறுகிறது. 'முருங்கைக் காயை ஒடிச்சு வளக்கணும், பிள்ளைய அடிச்சு வளக்கணும்' போன்ற பழமொழிகள் வழியாக குழந்தைகள் மேல் நாம் செலுத்தும் வன்முறையை நமது மரபு நியாயப்படுத்துகிறது.

பெண்களை கோழைகளாகவும் ஆண்களை முரடர்களாகவும் ஆக்குகிறது இந்த வன்முறை. அதுவே நம் சமூகத்தில் உள்ள பெரும்பாலான குடும்பங்களின் உளவியல் அமைப்பு என்றால் அது மிகையல்ல. நம்முடைய குடும்பங்கள் வன்முறை நொதித்துக் கொண்டே இருக்கும் அமைப்புகள். பல வீடுகளில் ஒவ்வொரு நாளும் நேரடியான உடல்சார்ந்த வன்முறை நிலவுகிறது. குழந்தைகள் வன்முறையைக் கண்டும் அதற்கு ஆளாகியும் வளர்கிறார்கள். பின்னர் அந்த மனிதர்களின் வாழ்க்கை முழுக்க அந்த வன்முறை இருந்துகொண்டே இருக்கிறது. குடும்ப வன்முறை என்பது உண்மையில் ஒரு விதை. அது சமூகத்தின் ஆழ்மனதில் விதைக்கப்படுகிறது. முளைத்துக் கொண்டே இருக்கிறது. உள ஆழத்தின் வன்முறை விதைகள் உறங்கும் மனிதன் ஏதோ வகையில் கடுமையான பாதிப்பு கொண்டவன்.

மூத்த மலையாள திரைக்கதை ஆசிரியர் ஒருவர் என்னிடம் முருகேசனின் (பசுபதி) கதாபாத்திரத்தில் இயல்பாகவே அந்த நுட்பம் கைகூடியிருக்கிறது என்று சொன்னார். அவனது தாழ்வுணர்ச்சி, தோள்களை தொங்கவிட்டுக் கொண்டு பதுங்கி நடக்கும் உடல்மொழி, பரிதாபமான பார்வை என ஒரு பக்கம். ஒரு பிரச்சினை என வரும்போது உருவாகும் உச்சகட்ட கொலைவெறி இன்னொரு பக்கம். இளம்பருவ வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த இரு குணங்களையும் பெற்றவர்களாக, ஒரு குணத்தில் இருந்து இன்னொன்றுக்கு மாறக்கூடியவர்களாக, ஒருவகை இரட்டைத்தன்மை கொண்டவர்களாக இருப்பார்கள் என்றார்.

உண்மையில் நம்முடைய திரை அலசல்களில் வெயில் அளவுக்கு விவாதிக்கப்பட்ட படம் குறைவு. ஆனால் இன்னமும் கூட விவாதிக்க இடமிருக்கிறது. இளமைப்பருவ வன்முறையைப் பற்றிய எந்த விவாதத்திலும் வெயில் உடனடியாக குறிப்பிடப்படுகிறது. சமீபத்தில் நான் எழுதிய தேர்வுக் கட்டுரை குறித்த கடிதங்கள் பலவற்றில் வெயில் பற்றிய குறிப்பு இருந்தது. பல

வாசகர்கள் தங்கள் இளமை அனுபவங்களை அந்தப் படத்துடன் இணைத்தே நோக்குகிறார்கள். ‘தந்தை’ என்ற நிலையில் உள்ள வன்முறை அதாவது ‘நல்ல நோக்கம் கொண்ட வன்முறை’ என்ற கருத்தைப் பற்றி அப்படத்தை முன்வைத்துப் பேசலாம். வன்முறையை நம் சமூகம் எப்படி பெருக்கிக் கொள்கிறது என்று ஆராயலாம். அதற்கான பல நுண்ணிய ஊடுவழிகள் அந்தப் படத்தில் உள்ளன.

உதாரணமாக ஒன்று. உக்கிரமான குடும்ப வன்முறை என்பது பெரும்பாலும் தமிழகத்தில் நடுத்தர சாதிகளிலேயே இருக்கிறது. அதற்குக் காரணம் அந்தக் குடும்பங்களில் குடும்பத்தலைவர் மிக மிக வலிமை கொண்டவராக, எதிர்த்தே பேசமுடியாதவராக இருக்கிறார். பெண்களின் குரல் ஒலிப்பதேயில்லை. அச்சமூகங்களில் ஆண் என்பவன் வன்முறையாலேயே அடையாளப்படுத்தப்படுகிறான். மீசை கிருதா என உடல்தோற்றமே அதற்கு ஆதாரமாகிறது. எங்கும் எதிலும் வன்முறை நோக்கை முன்னெடுப்பதே ஆண்மை என்று எண்ணப்படுகிறது. வெயில் அதைப்பற்றிய பல நுண்விவரிப்புகளை முதல் காட்சி முதலே கொடுத்துச் செல்கிறது. வெளிவாழ்க்கையில் உள்ள தீவிரமான வன்முறையின் இன்னொரு வடிவமே குடும்பத்திற்குள் உள்ள வன்முறை என்பதே வெயில் அளிக்கும் சித்திரம். சமூக வன்முறை என்பது கிளைகள். குடும்ப வன்முறை வேர்.

அந்த வன்முறையால் உடனடியாக பாதிக்கப்படுவது குடும்பத்தின் பெண்களும் குழந்தைகளுமே. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகமாகப் பேசப்பட்டாலும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை இந்தத் திரைப்படத்திலேயே உக்கிரமாக வெளியாகியது. அதுவே இந்த ஆக்கத்தின் முக்கியத்துவம்.

‘வெயில்’ வசந்தபாலன் என் நண்பர். இப்போது ‘அங்காடித்தெரு’வில் சேர்ந்து பணியாற்றுகிறோம். ‘வெயில்’ அவருக்கும் தயாரிப்பாளர் சங்கருக்கும் விருதுகளை அளித்தபடியே இருக்கிறது. இந்த தேசிய விருது அவருக்கு மேலும் உற்சாகத்தையும் நம்பிக்கையும் அளிக்கும். அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஜூன் 12, 2008

45. இரண்டு அறிவியல் செய்திகள்

அறிவியல் 1

தினமணி நாகர்கோயில் பதிப்பு, ஜூன் 9 திங்கள்கிழமை, மூன்றாம்பக்கத்தில் வந்த மூன்றுகட்டச் செய்தி 'புராணங்கள் குறிப்பிடும் பாதாள லோகம் மெக்ஸிகோ!!'. செய்தி இவ்வாறு. 'நமது புராணங்கள் குறிப்பிடும் பாதாளலோகம் மெக்ஸிகோதான் என்று அங்கு 2 வாரம் கள ஆய்வுசெய்து திரும்பிய கன்யாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மைய பொதுச்செயலாளர் எஸ்.பத்மநாபன் தெரிவித்தார்.

கள ஆய்வு மேற்கொண்டு திரும்பிய அவருக்கு நாகர்கோயில் யார்ன் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பத்மநாபன் மேலும் பேசியதாவது:

கேரளத்தில் கொண்டாடப்படும் திருவோணத்தின் கதாநாயகன் மகாபலி. மெக்ஸிகோ நாட்டிலும் மகாபலி உள்ளது. இந்தக்கதை அங்கே ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. மிகவும் தூரமான நாட்டில் இருந்து வந்த மன்னன் ஒருவன் அங்கே பனாமா கடற்கரையில் இறங்கினான் என்று அங்கே கதை ஒன்று வழக்கில் உள்ளது. அவன்தான் மகாபலி. அவனைத் தொடர்ந்து அங்கே சென்ற மயன் தனது கைவண்ணத்தை காட்டியதன் பயனாகவே மெக்ஸிகோவில் கோயில்களும் பிரமிடுகளும் உருவாயின என்பது கள ஆய்வில் தெரியவந்தது. அதுதான் இன்றும் மயன் (மாயன்) நாகரிகமாக அங்கே பறைசாற்றி நிற்கிறது. மெக்ஸிகோநாடு ஸ்பெயின் நாட்டவரின் ஆதிக்கத்துக்கு வந்தபிறகு மயன் உருவாக்கிய கலைச்செல்வங்கள் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மெக்ஸிகோநாட்டில் உள்ள மலைகளும் பள்ளத்தாக்குகளும் செடிகொடிகளும் மிருகங்களும் பறவைகளும் மக்களின் உடல் அமைப்புகளும் பயன்படுத்தும் பொருட்களும் எல்லாம் தற்போதைய கேரளநாட்டையே நினைவுறுத்துகின்றன. இதன் மூலம் மகாபலி மற்றும் மயன் ஆகியோர் முன்பு வாழ்ந்த நாடு கேரளம் என்றும் அங்கிருந்து அவர்கள் மெக்ஸிகோ சென்றதனால்தான் இருநாடுகளுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது என்றும் அறியமுடிகிறது.

மெக்ஸிகோ நாட்டில் உள்ள நான்கு பக்கமும் படிகள் கொண்ட பிரமிடுகள் சூரியனுக்காக எழுப்பப்பட்டவை. இந்தப்பிரமிடுகள் பற்றிய இலக்கணம் மயன் எழுதிய பன்னிருசாரம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த பிரமிடுகள் கேரள மாநிலத்தில் கண்ணனூர் கோழிக்கோடு மாவட்டங்களிலும் தமிழ்நாட்டில் கன்யாகுமரி தூத்துக்குடி மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை காலசுவாமி என்று வணங்குகிறார்கள்.

மேலும் மெக்ஸிகோ நாட்டில் தமிழர்கள் பயன்படுத்தும் அம்மி குழவியை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் மண்பாண்டங்களையும் பயன்படுத்துவது கள ஆய்வில் தெரியவந்தது. அங்குள்ளவர்கள் நாகத்தை தெய்வமாக வழிபட்டதை அருங்காட்சியகத்தில் நடத்திய கள ஆய்வுகள் தெளிவுபடுத்தின. ஆகவே மெக்ஸிகன் நாட்டு மாயன் நாகரிகம் தமிழ்நாட்டு மயன் நாகரிகமே என்று கள ஆய்வில் நிரூபணமாகியுள்ளது என்றார் டாக்டர் பத்மநாபன்.

நிகழ்ச்சிக்கு ரோட்டரி சங்கத் தலைவர் சி.எஸ்.மணி தலைமை வகித்தார். டாக்டர் மனகாவலபெருமாள் டாக்டருக்கு நினைவுப்பரிசு வழங்கினார். பேராசிரியர் டாக்டர் சுகுமார்

நன்றி உரை நிகழ்த்தினார்.

அறிவியல் 2

இஸ்லாமிய அறிவியக்க இதழான சமரசம் மே 2008 இதழில் 33 ஆம் பக்கத்தில் கி. சம்ஷாத் எழுதிய 'அறிவியல் தேர்ச்சிகொள்' என்ற கட்டுரை வெளியாகியிருக்கிறது. 'நாம் (இஸ்லாமியர்கள்) மார்க்கக் கல்வி உலகக் கல்வி என்று பிரித்து வைத்ததனால்தான், வழிகாட்டியாக இறக்கி வைத்த குர் ஆனை பொருளறியாமல் படித்துவிட்டு திருப்தி அடைந்ததனால்தான் வாழும்வழி தெரியாமல் போய்விட்டோம். எத்தனை பெரிய நஷ்டம் இது?' என்று கட்டுரை ஆசிரியர் சொல்கிறார்.

'அவனே வானத்திலிருந்து மழையை பொழியச்செய்கிறான். அதிலிருந்து உங்களுக்கு அருந்தும் நீரும் இருக்கிறது. அதிலிருந்து (உங்கள் கால்நடைகளை) மேய்ப்பதற்கான மரங்கள் (மற்றும் புல்பூண்டுகளும் உருவாகி) அதில் இருக்கின்றன. அதனைக் கொண்டே (விவசாயப்) பயிர்களையும் ஒலிவ் மரத்தையும் பேரீத்த மரங்களையும் திராட்சைக் கொடிகளையும் இன்னும் எல்லாவகைக் கனி வர்க்கங்களையும் அவன் உங்களுக்காக விளைவிக்கிறான். நிச்சயமாக இதில் சிந்திக்கும் மக்கள் கூட்டத்தாருக்கு (தக்க) அத்தாட்சி இருக்கிறது. இன்னும் அவனே இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் உங்கள் (நலன்களுக்கு) வசப்படுத்திக் கொடுத்துள்ளான். அவ்வாறே நட்சத்திரங்களும் அவன் கட்டளைப்படியே வசப்படுத்தப்பட்டுள்ளன. நிச்சயமாக இதிலும் ஆய்ந்தறியக்கூடிய மக்கள் கூட்டத்தாருக்குங்(தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன... இன்னும் பூமியில் அவன் அடைந்திருப்பன பல விதமான நிறங்களை உடைய (செடிகொடிகள் பிராணிகள் பறவைகள் போன்ற)வையுமாகும். நிச்சயமாக இதில் (அல்லாஹ்வின் அருள்கொடைகளை) நினைவுகூரும் மக்களுக்கு தக்க அத்தாட்சி உள்ளது.'

இந்த வசனங்களைப்போல எத்தனையோ நினைவூட்டும் வசனங்கள். அல்லாஹ் தான் அருளியுள்ள அருட்கொடைகளைக் கொண்டு மக்களை சிந்திக்கவும் ஆய்ந்தறியவும் நினைவுகூரவும் தூண்டுகின்றான். இதுவல்லவா உண்மையான கல்வி? — என்று கூறும் கட்டுரை ஆசிரியர் நவீன அறிவியல் வளர்வதற்கான வழியை விஞ்ஞானம் என்ற தலைப்பில் இவ்வாறு கூறுகிறார்.

'எத்தனையோ சமீபத்திய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் குர் ஆனின் வசனங்களோடு ஒத்துப்போவதை ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் கண்டுபிடிக்க வேண்டியவை எவ்வளவோ உள்ளன. அருள் மிக்க குர் ஆனை கையில் வைத்திருப்பவர்கள் சிறு வயதில் இருந்தே பிள்ளைகளுக்கு இறைவசனங்களின் பொருளைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினால் நூறில் பத்து பிள்ளைகளாவது விஞ்ஞானிகளாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் வர வாய்ப்பு உள்ளது. எதையாவது கண்டுபிடித்துவிட்டு இது குர் ஆனிலும் உள்ளது என்று சொல்வதை விட குர் ஆன் வசனங்களை ஆராய்ந்து இதுவரை கண்டுபிடிக்காதவற்றைக் கண்டுபிடிக்கலாமே...'

இந்தக் கடைசி வரியே கட்டுரையின் சாரமாக எடுத்து முதலிலும் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை இவ்வாறு முடிகிறது '...இன்னும் மருத்துவம் வானவியல் இயற்பியல் கணிதம் இவற்றில் எல்லாம் குர் ஆனின் மூலம் எத்தனையோ புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கலாம். நமக்கு முன் வாழ்ந்த முஸ்லீம்களில் விஞ்ஞானிகளும் கணித மேதைகளும் ஆராய்ச்சியாளர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் உலகம் இருட்டடிப்பு செய்துவிட்டது. அதன் பின்பு ஒரு நீண்ட இருண்ட காலம். ஆனால் இருள் எப்போதும் நிரந்தரமானதல்ல. இருளுக்குப்பின் விடியும் என்பதுதான் நியதி. இறையருளால் இனிவரும் தலைமுறைகள் எழுச்சி பெற்று தங்கள் கல்வியை குர் ஆனில் இருந்து தொடங்கட்டும்! மீண்டும் புரட்சிகரமான கண்டுபிடிப்புகள் மலரட்டும்!'

ஜூன் 16, 2008

46. சுவரில் முட்டி நிற்கும் மலையாள சினிமா

நேற்று ஒரு மலையாளப்படம் பார்த்தேன். என் மனைவிக்கு தரமான மலையாளப்படம் என்றால் ஒரு மோகம். அப்படியே பிள்ளைகளுக்கும் தொற்றிக் கொண்டுவிட்டதனால் வீடெங்கும் மலையாளப்படங்கள். பிள்ளைகளும் மனைவியும் படம்பார்த்தே மலையாளம் பேசக் கற்றுக் கொண்டுவிட்டார்கள். (நான் மலையாளம் மறக்காமல் பார்த்துக்கொண்டேன்.)

ஆனால் இந்தப்படம்... என்ன சொல்வது? பேரரசு ஒருகோடி ரூபாய் செலவுக்குள் ஒரு படமெடுத்தால் எப்படி இருக்கும், அந்தவகை. அண்ணன் தம்பி என்று படத்தின் பெயர். மம்மூட்டி இரட்டைவேடம். கோபிகா ஒரு ஜோடி. லட்சுமி ராய் இன்னொரு ஜோடி. படத்தைப்பற்றியோ கதையைப்பற்றியோ சொல்லப்போவதில்லை. மம்மூட்டி தோன்றும் முதல் காட்சியைப்பற்றி மட்டும் சொல்கிறேன். ஒரு எளியமனிதரை பொள்ளாச்சி சந்தையில் ரவுடிகள் போட்டு அடிக்கிறார்கள். அப்போது மம்மூட்டி லாரியில் வந்து இறங்குகிறார். ஒருவன் பறந்து வந்து லாரியில் விழ லாரிமேல் லோடு ஏற்றப்பட்டிருந்த பூக்கூடை அப்படியே கவிழ்ந்து ஸ்லோ மோஷனில் பூ அவர்மீது கொட்டுகிறது. விளங்குமா நாடு?

இரட்டை வேடத்தில் மம்மூட்டி. இரண்டுக்குமே சவால்கள். இரண்டுபேரும் மாறி மாறி டூப்புடன் 'ஓவர்லாப்' தவறுவது நன்றாகவே தெரியும்படி போடும் சண்டைகள். குத்துப்பாட்டு. குட்டி ஆசாமிகள் ஹீரோவை புகழ்ந்து பேசும் 'பஞ்ச்' வசனங்கள். மேற்கொண்டு என்ன நடந்தது என்று தெரியவில்லை. தியேட்டரை விட்டு நானும் மனைவியும் தப்பி ஓடிவந்துவிட்டோம்.

வந்த சூட்டில் மலையாள சினிமாவில் எனக்குத்தெரிந்த நாலைந்து முக்கியமானவர்களைக் கூப்பிட்டு என் மனக்குமுறலைக் கொட்டினேன். அவர்கள் சொன்னதைக் கேட்டபோது கோபம் பரிதாபமாக மாறியது. முக்கியமான வினியோகஸ்தர், நாற்பது வருடமாக இந்தத் துறையில் இருப்பவர், புலம்பித் தள்ளிவிட்டார். சென்ற ஐந்தாறு வருடங்களாகவே மலையாள சினிமாவுக்கு அடிமேல் அடி. எந்தத் தொழில் துறையிலும் இத்தனை தொடர் தோல்விகளும் நஷ்டங்களும் தாங்கக் கூடியவை அல்ல. மலையாள சினிமா என்ற ஒன்று இன்னும் இருப்பதே சினிமா ஊடகத்தில் உள்ள 'கிளாமர்' காரணமாகத்தான்.

என்ன நடக்கிறது? மலையாள சினிமாவின் பரப்பு மிகவும் குறைவு. அதன் முதல் திரையிடலே 60 பிரதிகள்தான். மலைப்பகுதிகளில் இரண்டாம் ஆட்டத்துக்கு கூட்டம் இருக்காது. மழைக்காலத்தில் இரவுக்காட்சிகளே கூட்டம் சேராமல் ஓடும். கேரளத்தில் பெரும் பகுதி மழை ஓயாது பெய்யும் மலைக்கிராமங்கள். மேலும் கேரளத்தில் வளைகுடா பணத்தால் நடுத்தர வர்க்கம் பெருகியபடியே வருகிறது. இவர்கள் பொதுவாக திரையரங்குகளுக்கு வந்து படம் பார்ப்பதில்லை. வீட்டில் ஹோம் தியேட்டர் இருக்கும். ஆகவே படத்தின் ஒட்டு மொத்த வசூல் சாத்தியக்கூறு மிகமிக குறைவானதே. ஆகவே மிகக் குறைவான பட்ஜெட்டில்தான் மலையாளத்தில் படம் எடுத்தாக வேண்டும்.

மலையாள சினிமாவின் வலிமையே இந்த சிறிய அளவுதான் என்று சொல்ல வேண்டும். ஆர்ப்பாட்டமான காட்சியமைப்புகள் மலையாள சினிமாவுக்குக் கட்டுப்படி ஆகாது. திரைக்கதை, நடிப்பு ஆகிய இரண்டை மட்டுமே நம்பி மலையாள சினிமா இயங்கியாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது இதனால்தான். ஆகவேதான் மலையாளத்தில்

தொடர்ச்சியாக ஏராளமான நல்ல திரைக்கதைகள் எழுதப்பட்டன. நுட்பமான பல நடிகர்கள் உருவாகி வந்தார்கள். மலையாள சினிமாவின் சாதனைகள் இந்தத் தளத்திலேயே. இந்திய சினிமாவில் மலையாள சினிமாவின் முக்கிய இடம் இவ்வாறு உருவாகி வந்ததேயாகும்.

அதாவது பட்ஜெட் காரணமாகவே மலையாள சினிமா யதார்த்தத்தில் நின்றது என்று சொல்ல வேண்டும். கடுமையான தணிக்கை உள்ள நாடுகளில் வணிக சினிமா இல்லாமல் போய் அதன் விளைவாக நல்ல சினிமா வளர்வதுபோல என்று இதைச் சொல்லலாம். மலையாள வணிக சினிமா எப்போதும் இருப்பதுதான். மலையாளத்தில் மூன்றுவகை படங்கள் உண்டு. மிகத்தரமான படங்கள். நடுவாந்தர படங்கள். தரைமட்ட வணிகப் படங்கள். மூன்றாம் வகை படங்களில் நசீர், ஜெயன், சோமன், மம்மூட்டி, மோகன்லால் அனைவருமே நடித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே அதிகமாக கவனிக்கப்படும் வெற்றிப் படங்கள் எப்போதுமே நடுவாந்தரப் படங்கள்தான். அங்குள்ள வெறும் மசாலாப் படங்கள் தரமற்ற ரசிகர்களுக்காக மிகக் குறைவான முதலீட்டில் எடுக்கப்பட்டு ஒருவாரம் ஓடினால் போதும் என்ற எதிர்பார்ப்புடன் வெளியிடப்படுபவை. அதாவது அங்குள்ள வணிகப்படம் நல்ல படங்களுக்கு போட்டியே அல்ல.

இந்தப்போக்கு எண்பதுகள் வரை வலுவாகவே நீடித்தது. எண்பதுகள் மலையாளப் படத்தின் பொற்காலம். எம்.டி.வாசுதேவன் நாயர், லோகித் தாஸ், பி.பத்மராஜன், ஸ்ரீனிவாசன், டெனிஸ் ஜோசஃப், டி.தாமோதரன், கலூர் டென்னிஸ், ஜான் பால் போன்ற தரமான திரைக்கதை ஆசிரியர்கள் எழுதிய படங்கள் தொடர்ந்து வெளிவந்து வெற்றிபெற்றன. பாலன்.கே.நாயர், திலகன், மம்மூட்டி, மோகன்லால், பரத் கோபி, நெடுமுடி வேணு, டி.ஜி.ரவி, பாபு நம்பூதிரி, ஒடுவில் உண்ணி கிருஷ்ணன், ஜகதி ஸ்ரீகுமார், முரளி போன்று மலையாள திரையுலகின் எக்காலத்திலும் சிறந்த நடிகர்கள் வந்தார்கள். ஐ.வி.சசி,பரதன்,ஜோஷி,கெ.ஜி.ஜார்ஜ்,சிபி மலையில், மோகன், சத்யன் அந்திக்காடு, பாலசந்திர மேனன், கமல் என சிறந்த இயக்குநர்கள் தொடர்ந்து படங்களை அளித்தார்கள். வசூலிலும் மம்மூட்டி, மோகன்லால் படங்கள் சாதனை புரிந்தன.

தொண்ணூறுகள் மலையாள சினிமாவின் சோதனைக் காலம். சட்டென்று நடுத்தர வர்க்கம் திரையரங்குகளுக்கு வருவது நின்றது. இது நடுத்தரப் படங்களை கடுமையாக பாதித்தது. கே.ஜி.ஜார்ஜ், பரதன், மோகன், பாலசந்திரமேனன் போன்ற பல இயக்குநர்கள் தொடர் தோல்விகளுக்குப் பின் மெல்ல பின்வாங்கினார்கள். இந்த நெருக்கடியை மலையாள சினிமா இரு உத்திகள் மூலம் எதிர்கொண்டது. மோகன்லாலும் மம்மூட்டியும் ‘அடிதடி அதிமானுடர்களாக’ சித்தரிக்கப்பட்ட ‘ஆக்ஷன்’ படங்கள் வெளியிட்டு அடித்தட்டு மக்களை மேலும் அதிகமாக திரையரங்குகளுக்கு கொண்டுவந்தார்கள். நகரங்களில் உள்ள திரையரங்குகளை நவீனப்படுத்தி நடுத்தர வர்க்கத்தை திரையரங்குக்குக் கொண்டுவந்தார்கள்.

ஆனால் இரண்டாயிரத்தில் இருந்து மீண்டும் நெருக்கடி முற்றியது. நகரத்து உயர்தர திரையரங்குகளை தமிழ் இந்தி ஆங்கிலப் படங்கள் கைப்பற்றிக் கொண்டன. டிவிடியில் பார்த்தால் சுவைக்காத ‘மெகா’ படங்களுக்கே ரசிகர்கள் வந்தார்கள். மெல்லமெல்ல கிராமத்து திரையரங்குகளையும் தமிழ்ப்படங்கள் கையகப்படுத்தின. மம்மூட்டி மோகன்லாலின் ‘மஸில்’ படங்களுக்கு பழகிய ரசிகர்கள் அடுத்தகட்ட ரசனைக்கு இறங்கிச் சென்றார்கள். அவர்களுக்கு நவீன படமாக்கல் உத்திகள் தேவைப்பட்டன. ஆகவே இன்று கேரளத்தில் தமிழ்ப்படங்களே மிக விரும்பப் படுகின்றன. கேரளம் முழுக்க தமிழ் வணிகப்படங்கள் வெற்றிகரமாக ஓடுகின்றன.

‘அந்நியன்’ கேரளத்தில் நூற்றியைம்பது அரங்குகளில் வெளியாகி ஒரு உச்சகட்ட மலையாள வெற்றிப்படத்தைவிட நான்குமடங்கு வசூல் செய்தது. மணிச்சித்ரதாழ் வசூல் செய்ததைவிட சந்திரமுகி பலமடங்கு அதிக வசூல் செய்ததாகச் சொல்லப்படுகிறது. சிவாஜி, பில்லா எல்லாமே பெரும் வெற்றிகள். இப்போது ‘தசாவதாரம்’ அங்கே ஒரு பெரும் அறுவடையை

செய்கிறது. இங்கே தோல்வியடைந்த ‘குருவி’ போன்ற படங்கள் கூட மலையாளத்தில் வெற்றிப்படங்களே.

நடுத்தர படங்களுக்கான ரசிகர்கள் மேலும் மேலும் குறைந்து அனேகமாக இல்லை என்ற நிலை. நடுத்தர படங்களின் ஆசிரியர்களான எம்.டி.வாசுதேவன்நாயர், லோகித் தாஸ் போன்றவர்கள் கடுமையான தோல்விகளுக்குப் பின் ஒதுங்கி விட்டார்கள். மம்மூட்டி மோகன்லால் போன்றவர்கள் அவ்வப்போது சில சராசரி வெற்றிகளுடன் தொடர் தோல்விகளை அளிக்கிறார்கள். திலீப் தோல்வியை மட்டுமே அளிக்கிறார். ஜெயராம் அரங்கிலேயே இல்லை. பிருத்விராஜ் உருவாகவே இல்லை. ஒருபோதும் தோல்வியடையாத ஸ்ரீனிவாசன் படங்கள் கூட தோல்வி அடைகின்றன. மிகக் குறைவான பட்ஜெட்டில் எடுப்பதனால் எப்போதும் நஷ்டத்தை தவிர்த்துவிடும் சத்யன் அந்திக்காட்டின் படங்களிலும் கணிசமானவை கவிழ்கின்றன. இதுவே இன்றைய நிலை.

இதற்கு என்ன செய்யலாம் என்று பல கோணங்களில் முயற்சி செய்கிறார்கள். சில விஷயங்கள் தெளிவாகவே கண்ணுக்குத் தெரிகின்றன. ஒன்று கேரளத்து இளையதலைமுறை மலையாளப் படங்களை தவிர்க்கின்றது. அவர்களின் ரசனை தமிழ் ‘ஹைடெக்’ படங்களிலேயே இருக்கிறது. அவர்களை இங்கே இழுக்க செய்யப்படும் முயற்சியே ‘அண்ணன் தம்பி’ போன்ற படங்கள். அதாவது தமிழ்ப் படங்களையே மலையாளத்தில் எடுப்பது.

ஆனால் இத்தகைய தமிழ்ப்படங்கள் மலையாளப்படங்களைவிட மூன்று நான்கு மடங்கு பொருட்செலவில் எடுக்கப்படுகின்றன. பாடல்களும் சண்டைகளும் பல வாரங்கள் படப்பதிவு செய்யப்படுகின்றன. அவற்றில் மிக அதிகமாக ஊதியம்பெறும் நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள். எடுத்த படங்கள் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் டி.ஐ (டிஜிட்டல் இம்ப்ரூவிங்) செய்யப்பட்டு சிறந்த வண்ண அமைப்புக்குக் கொண்டு வரப்படுகின்றன. சந்தையில் சண்டை போடுவதும் குத்துப்பாட்டும் அல்ல தமிழ் சினிமா, அந்த தொழில்நுட்ப தேர்ச்சிதான். அதை மலையாளப்படம் கனவுகூட காணமுடியாது. முப்பது நாள் படப்பிடிப்பு, பத்துநாள் பின்தயாரிப்பு வேலைகள் என்று எடுத்தால்தான் மலையாளத்தில் கட்டுப்படியாகும். இரண்டுநாளில் பாட்டும் ஒருநாளில் சண்டையும் உள்ளூர் ஆட்களை வைத்துக்கொண்டு எடுத்தால் அந்த லட்சணத்தில்தான் இருக்கும். குமட்டும்படியாக.

இன்னொரு வகை முயற்சி துணிந்து பொருள் செலவிட்டு இளைஞர்களை கவரும்படி அவர்களுக்கான கதைகளை எடுத்துப் பார்ப்பது. கமல் எடுத்த ‘கோல்’ அப்படிப்பட்ட ஒரு முயற்சி. பெரும் தோல்வி. இளைஞர்களுக்கு அது அவர்களின் படமாக தெரியவில்லை. அப்படியானால் என்னதான் செய்வதென்று அறியாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். சினிமா மோகத்தால் படமெடுக்க வரும் புதியவர்களை நம்பியே பலரும் ஏதாவது செய்துகொண்டிருக்கிறார்கள். படம் ஊற்றிக் கொண்டதும் அவர்கள் மறைய அடுத்த கும்பல் வளைகுடாவிலிருந்து பணத்துடன் வருகிறது.

என்னிடம் பேசிய நண்பர் சொன்னது இது. மலையாளத்தில் உள்ள நடிகர்கள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்குமே வயதாகிவிட்டது. பெரும்பாலானவர்கள் கால்நூற்றாண்டுக் காலமாக திரையுலகில் இருக்கிறார்கள். முப்பது நாற்பது படம் செய்துவிட்டார்கள். இனி அவர்களிடம் புதிதாக எதிர்பார்க்க முடியாது. தமிழில் புதியவர்கள் வந்தபடியே இருக்கிறார்கள். தமிழ் சினிமாவின் முகம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை முழுமையாகவே மாறிவிடுகிறது. கேரளத்தில் அப்படி இல்லை. மலையாள சினிமாவில் ஒல்லியான இளம்நடிகரே இல்லை. எல்லாருமே வயதாகி குண்டாக தொப்பையுடன்தான் இருக்கிறார்கள்.

புதியவர்கள் உள்ளே நுழையவே முடியாது. அதற்குத் தடையாக இருப்பது அங்குள்ள சிண்டிகேட்டுகள்தான். நடிகர்கள், தயாரிப்பாளர், இயக்குநர் என ஒருகுழு ஒருவருக்கொருவர் நட்புடன் தொடர்ந்து செயல்படுகிறார்கள். அப்படி ஒரு ஐந்து குழு இருக்கிறது மலையாளத்தில். அவர்களை விட்டு விட்டு வேறு படமுயற்சிகளைச் செய்ய எவருக்கும்

அமைப்பு பலமும் இல்லை. திராணியும் இல்லை. சென்ற சில வருடங்களில் கவனிக்கப்பட்ட ஒரே புதிய வருகை 'காழ்ச்ச' 'தன்மாத்ர' போன்ற படங்களை எடுத்த பிளெசி. இருபது வருடம் சினிமாவில் இருந்தபின் நாற்பத்தைந்து வயதில்தான் அவரது முதல் படத்தை அவர் அடைந்தார்.

இக்காரணத்தால் மலையாளப் படங்களின் கூறுமுறையும் காட்சியமைப்பும் மிகமிகப் பழகிப்போனவையாக உள்ளன. நவீனப் படங்களை தொடர்ந்து பார்க்கும் தலைமுறைக்கு அவை மிகவும் சலிப்பூட்டுகின்றன. ஒரு உதாரணம் நான் பார்த்த இந்தப்படம், அண்ணன் தம்பி. பல காட்சிகளில் இரு நிமிடத்துக்கும் மேலாக காமிரா அசையாமல் நிற்கிறது. நடிகர்கள்தான் அங்குமிங்கும் அலைந்து வசனம் பேசுகிறார்கள். தமிழில் பருத்தி வீரன் போன்ற படங்களில் ஒரு சிறு காட்சியில்கூட இருபதுக்கும் மேற்பட்ட படத்துளிகள் (ஷாட்) உள்ளன என்று சொல்கிறார்கள். மன்மதன் படத்தில் 'என்னாசை மைதிலியே' என்ற பாடலில் மட்டும் 300 படத்துளிகள். சினிமா மொழி அப்படி மாறிவிட்டிருக்கிறது.

இதே போல மலையாளப்படங்களில் பெரும்பாலான காட்சிகளில் ஒரு நிரந்தரமான 'டெம்ப்ளேட்' இருக்கிறது. ஒரு ஒட்டுமொத்த காட்சி, அதன் பின் தனித்தனி அருகாமைக் காட்சிகளிலும் நடு அளவுக் காட்சிகளிலும் வசனங்கள், மீண்டும் ஒரு ஒட்டுமொத்தக் காட்சி. அதேபோல ஒளியமைப்பு எப்போதுமே ஒட்டுமொத்த பொது வெளிச்சம்தான். தமிழ்ப் படங்களில் சுவர்களில் வழிந்தும் பொருட்களில் பிரதிபலித்தும் ஒளி பரவியிருக்கச் செய்ய ஒளிப்பதிவாளர்கள் எடுத்துக் கொள்ளும் கடும் உழைப்பும் கவனமும் அங்கே சற்றும் இல்லை. ஒருநாளைக்கு எட்டு காட்சிகளை எடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்து மலையாள சினிமா உருவாக்கிக் கொண்ட வழிமுறை இது.

இப்போது மலையாளப்படங்களைப் பார்க்கும்போது அவை துணுக்குறச் செய்யும் அளவுக்கு பழைமையானவையாகத் தெரிகின்றன. மலையாளப்படங்களில் ஊறி வளர்ந்த எனக்கே இப்படி இருக்கும்போது புதிய இளைஞர்கள் எப்படி உணர்வார்கள் என்பதை உணர முடிகிறது.

இவ்விஷயத்தில் இன்னும் நுண்மையான ஒரு அரசியல் தளமும் உள்ளது. மலையாள கதாநாயக உருவகம் என்பது அங்கே நடந்த அரசியல் இயக்கங்களில் இருந்து உருவாகி வந்தது. துணிச்சலும் முரட்டுத்தனமும் நல்லியல்பும் கலந்த கதாநாயகர்கள். வேட்டியை மடித்துக்கட்டி காதில் பீடி வைத்து திமிராக நடப்பவர்கள். நெஞ்சில் கனல் எரியும் மனிதர்கள். சத்யன், மது போன்றவர்கள் வழியாக உருவாகி வந்த அந்த நாயக உருவகத்தை தகழி, உறூப், தோப்பில் பாஸி, டி தமோதரன் போன்ற முன்னாள் கம்யூனிஸ்டுகள் உருவாக்கினார்கள்.

இன்றைய கேரள இளைய தலைமுறை அரசியல்மேல் அவநம்பிக்கை கொண்ட, நுகர்வு பண்பாட்டில் ஊறிய ஒன்று. இடதுசாரி அரசியல் கொண்ட தோல்வியில் இருந்து உருவாகிறது இந்த அம்சம். இன்று இளைஞர்கள் கொண்டாட விரும்புகிறார்கள். நகரங்களில் மட்டுமல்ல சிறிய பட்டணங்களில் கூட பப்புகளில் கூடும் இளைஞர் கும்பல் இதையே காட்டுகிறது. ஆனால் அங்கே இன்னும் அதே பழைய கதாநாயக உருவகங்களையே புதிய மொந்தைகளில் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

மலையாள சினிமா என்ன ஆகும்? இந்தப்பக்கம் புதிய புதிய உலகச்சந்தைகளை வென்று தமிழ் சினிமா பெரும் வணிக சாம்ராஜ்யமாக ஆகிக் கொண்டிருக்கிறது. கோடிகள் புரள்கின்றன. சினிமாவில் பணம் என்பது தொழில்நுட்பம். தொழில்நுட்பம் என்பது பணம். ஹாலிவுட் சினிமா ஐரோப்பிய சினிமாவை சாப்பிட்டது போல கோலிவுட் சினிமா மலையாள சினிமாவை இல்லாமல் செய்துவிடலாம். அவ்வப்போது வரும் சில ஆர்ட் படங்களாக மலையாள சினிமா சுருங்கி விடலாம்.

அல்லது சட்டென்று புதிய கருக்களும் புதிய கூறுமுறையுமாக புதிய தலைமுறை பொங்கி

வரலாம். இது நடக்கவேண்டுமென்பதே விருப்பம்.

ஜூன் 27, 2008

47. இரு படைப்பாளிகள்

கனடா இலக்கியத்தோட்டத்தின் விருது பெற்ற 'கூகை' நாவலை எழுதிய சோ.தருமனை பலருக்கும் தெரிந்திருக்கும். அவரது 'தூர்வை' என்ற முந்தைய நாவலும் முக்கியமானது. தலித்துக்களின் வாழ்க்கையின் அவலங்களை மையப்படுத்துவதற்குப் பதில் அவர்களின் மண்சார்ந்த பண்பாட்டையும், அவர்கள் வாழ்க்கையில் உள்ள களியாட்டங்களையும், உறவுகளில் உள்ள மூர்க்கமான உணர்ச்சிகரத்தையும் வெளிப்படுத்திய ஆக்கங்கள் இவை. கோயில்பட்டி அருகே உள்ள உருளைக்குடி கிராமத்தில் பிறந்த சோ.தருமன் எழுத்தாளர் பூமணியின் மருமகன். 'ஈரம், 'சோகவனம்,' 'வனக்குமரன்' ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. மறைந்த வில்லிசைக்கலைஞர் பிச்சைக்குட்டி அவர்களைப்பற்றி ஒரு வரலாற்று நூலையும் எழுதியிருக்கிறார்.

அமிர்தம் சூரியாவை அதிகம் பேருக்கு தெரிந்திருக்காது. வடசென்னையில் பிறந்தவர். பல சிறுவேலைகளுக்குப் பின் இப்போது கல்கி இதழில் வேலை பார்க்கிறார். 'அமிர்தம்' என்ற சிற்றிதழை நடத்தியமையால் இப்பெயர் வந்தது. 'உதிரி சயனத்தை நீரில் அலசும்வரை' என்ற கவிதைத்தொகுப்பு மூலம் கவனத்துக்கு வந்தவர். 'முக்கோணத்தின் நாலாவது பக்கம்' என்ற கட்டுரைத்தொகுதியும், 'பகுதிநேரக் கடவுளின் நாட்குறிப்பு' என்ற கவிதைத்தொகுதியும் வெளிவந்துள்ளன. சிறுகதைத்தொகுதி வரவுள்ளது.

இவர்கள் இருவருடனும் எனக்கு நல்ல நட்பு உண்டு. சோ.தருமனை அவ்வப்போது பார்ப்பேன். தொலைபேசியில் பேசுவர். அமிர்தம் சூரியா பல வருடங்களுக்கு முன் எனக்கு தென்சென்னையில் நண்பர் செந்தூரம் ஜெகதீஷ் வழியாக அறிமுகமான நல்ல நண்பர்களில் ஒருவர்.

இவர்கள் இருவருடைய பேட்டிகளை சமீபத்தில் இரு இதழ்களில் படிக்க நேர்ந்தது. தீரா நதி ஜூன் இதழில் சோ.தருமனின் பேட்டி வெளிவந்துள்ளது. இனிய உதயம் மே மாத இதழில் அமிர்தம் சூரியாவின் பேட்டி வெளிவந்துள்ளது. இருவருடைய பேட்டிகளும் எனக்கு மிக முக்கியமானவையாகப்பட்டன.

இவர்கள் பேட்டிகளில் உள்ள பொதுவான அம்சங்கள் என எனக்குப் பட்டவை இவை. தங்களை இலக்கியவாதிகள் என்ற அடையாளத்துடன் முன்வைக்கவே இவர்கள் விரும்புகிறார்கள். தலித் அடையாளத்துடன் அல்ல. அதை ஒரு சலுகையாகவோ, முன்னுரிமையாகவோ வாசகர்கள் அளிப்பதை வெறுக்கிறார்கள். அவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் கிடைக்கும் பலவகையான அங்கீகாரங்களின் ராஜபாட்டையை படைப்பாளிக்கே உரிய அகங்காரத்துடன் நிராகரிக்கிறார்கள். தலித் வாழ்க்கை என்பது அவர்களின் எழுதுதளம் மட்டுமே. தலித் அல்லது பிற அரசியல் தளங்களில் மட்டும் வேரூன்றி நின்று இலக்கியம் பற்றிப் பேசாமல் இலக்கியத்தில் மட்டுமே வேரூன்றி நிற்க விரும்புகிறார்கள். தங்கள் படைப்பை அரசியல் கோட்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் சார்ந்து விவாதிக்காமல் தாங்கள் எதிர்கொண்ட வாழ்க்கையை நேரடியாக முன்னிறுத்தி விவாதிக்கிறார்கள்.

இதன் காரணமாக குறுகிய காழ்ப்புகள், குழுஅரசியல், அர்த்தமில்லாத நிராகரிப்புகள் என இவர்களின் மனம் செல்வதில்லை. தங்கள் எழுத்தின் முன்னோடி மரபுகளை அங்கீகரிப்பதில்

எந்தவிதமான தயக்கமும் இவர்களிடம் இல்லை. தங்கள் எழுத்து உட்பட அனைத்தையுமே இலக்கிய அளவுகோல்களின்படி கறாராகப் பார்க்க இவர்களால் இயல்கிறது. கோட்பாட்டாளர்களாலும் அவர்களின் தொண்டர்களாலும் முன்வைக்கப்பட்ட தலித்தியம் என்ற அரசியல்நிலைப்பாடு தலித் இலக்கியம் என்ற வாழ்க்கைசார்ந்த அழகியல் வெளிப்பாடாகவே தமிழில் வெளிப்பாடு கொண்டது என்பதற்கான உதாரணங்கள் இவை.

இவ்விரு பேட்டிகளையும் வைத்து நோக்கும்போது இன்னொரு அம்சமும் கவனத்தில் வருகிறது. இவர்கள் இருவருமே தலித் அரசியல் அல்லது பிற அரசியல்கள் வழியாக இலக்கியத்துக்கு வந்தவர்கள் அல்ல. தருமனின் தந்தை தெருக்கூத்துக் கலைஞர். வளமான ஒரு கலைப்பின்னணி அவருக்கு இருக்கிறது. அமிர்தம் சூரியாவின் தந்தையும் ஒரு நாட்டார் கலைஞர். நாடக ஆசிரியர். அவர்கள் அங்கிருந்துதான் இலக்கியத்துக்குள் வருகிறார்கள். கலைசார்ந்த நோக்கு அவர்களில் வலுவாக இருப்பதற்கான காரணம் இதுவே.

அமிர்தம் சூரியா சொல்கிறார். 'உறவினர் வீட்டில் தாய்க்கிழவி இறந்துபோன மகனைப்பார்த்து 'அய்யோ எம் வீட்டு ஆதி சொத்து அம்போன்னு கொள்ள போவுதே' என்று அழுதாள். இறந்தவன் அவளது மகன் மட்டுமல்ல, தனது குடியின் ஆதி சொத்து என்கிறாள். துக்கம் விசாரிக்க வந்தநாம் அந்த ஆதி சொத்தை கொள்ளை அடிக்க வந்தவர்கள் என்கிறாள். மரணம் நிகழ்ந்த வீட்டிற்கு வருகை தந்த அனைவருமே இனி வாழ்ந்துவிடவேண்டும், நாம் வாழ்கிறோம் என்ற முனைப்போடும் நம்பிக்கையோடும்தான் வீடு திரும்புவோம். அத்தகைய நம்பிக்கையை நாம் அந்த மரணவீட்டில் இருந்து எடுத்து வருகிறோம். இது கொள்ளைதானே? கிழவியின் இந்தப் பேச்சின் ஓசையை நான் என் கவிதையில் இடைநுழைக்கும்போது இறுக்கமான மொழியால் கட்டப்பட்ட கவிதையின் சமன்பாடு குலைக்கப்பட்டு கவிதை தன்னுள் வாசகனை அனுமதிக்கிறது.'

சோ.தருமன் சொல்கிறார். 'கலாபூர்வமான சிருஷ்டி என்னவென்றால் கதை எல்லாருக்கும் தெரியும். கதை தெரியாத ஆட்களே கிடையாது. அதை எழுதவும் எல்லாருக்கும் தெரியும். அதை கலாபூர்வமாக எழுதுவதற்கு எழுத்தாளனுக்கு மட்டுமே தெரியும்...'

அமிர்தம் சூரியாவிடம் தலித் அழகியல்கூறுகள் உங்கள் கவிதைகளில் இருந்தும் ஏன் நீங்கள் தலித் படைப்பாளியாக வெளிப்படவில்லை என்ற கேள்வி கேட்கப்படுகிறது. 'என் கவிதையில் தலித் அழகியல்கூறுகள் இருப்பதை மறுக்கவில்லை. இது இயல்பானது. மாறாக தலித் இலக்கியம் மட்டுமல்ல இனி வரப்போகும் வன்னிய இலக்கியமாக இருந்தாலும் சரி அது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அறிவுஜீவிகளின் அரசியல். தன் இனப்படைப்பாளிகள் கூடி பயனைப்பங்கிட்டுக் கொள்வதற்கான திட்டமிட்ட இலக்கிய உடன்படிக்கை' என்கிறார்.

'இளையராஜா தலித்தாக பிறந்திருக்கலாம். அவரை தலித் என்ற சிமிழுக்குள் அடைக்க முடியுமா?' என்று கேட்கும் அமிர்தம் சூரியா 'நான் எனது இலக்கியத்தை ஒரு குறிப்பிட்ட சாதியின் இனவிடுதலை ஆயுதமாக மட்டும் பார்க்கவில்லை. ஒட்டுமொத்த மனித விடுதலையின் ஆயுதமாகவே பார்க்கிறேன். விநாயகசதுர்த்தி காலத்தில் ஒரே அச்சில் ஏராளமான விநாயகரை உருவாக்கி விற்பதுபோல பொம்மை வியாபாரத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே நான் தலித் படைப்பாளியாக சுருங்கிப்போக விரும்பவில்லை' என்கிறார்.

'குடிக்க தண்ணீர் இல்லாமல் தமிழன் வாழ்ந்தாலும் வாழ்வானே தவிர சாதி இல்லாமல் கணநேரமும் வாழத்துணிவில்லாத நிலையில் வன்னிய இலக்கியம் தோன்றுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? அமைப்பியல், இருத்தலியம், நவீனத்துவம், பின்நவீனத்துவம் இவற்றையெல்லாம் கற்றுணர்ந்த பேராசிரியர் பிரம்மராஜனிடம் இது பற்றி கேட்டால் விரிவாகச் சொல்வார்' என்கிறார்.

சோ.தருமன் 'நான்கு மாநிலங்கள் கூடி ஏற்பாடுசெய்திருந்த சாகித்ய அகாதமி கூட்டத்தில்

பதினைந்து வருடங்களுக்கு முன்னரே நான் என்னை பிறப்பால் வேண்டுமென்றால் தலித் என்று குறிப்பிடுங்கள். ஆனால் எழுத்தால் என்னை பிரிக்காதீர்கள் என்றேன். இலக்கியத்தில் என்ன இட ஒதுக்கீடு என்று கேட்டிருக்கிறேன்' என்கிறார். 'இதுவரை கிடைத்த தலித் இலக்கியங்கள் எனக்குச் சொன்னவை இவை. தலித் என்றால் எண்ணெயே தேய்க்காமல் பரட்டைத் தலையோடு இருப்பான். எதற்கெடுத்தாலும் கோபப்படுவான். சண்டை போடுவான். தலித் பொம்பிளை என்றால் அவள் லேசாகச் சோரம்போவாள். தலித்துக்களை லேசில் ஏமாற்றிவிடலாம். இதை மீறி என கொடுத்திருக்கிறது தலித் எழுத்துக்கள்? தலித்தின் பாஷையையாவது கொடுத்திருக்கிறார்களா? இவர்கள் பேசும் தலித் பாஷையே போலியானது.'

சோ.தருமனின் கடைசிக் கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. அது அவரது எதிர்கால திட்டங்களைச் சார்ந்து அவர் உருவாக்கும் நிராகரிப்பு என்றே படுகிறது. இவ்விரு பேட்டிகளும் தமிழின் படைப்பிலக்கிய தளத்தின் அடிப்படையான வலிமையைக் காட்டுகின்றன. இலக்கிய அரசியல்கள், குழுச்சண்டைகள், கோட்பாட்டுக்குதறல்கள் ஆகியவற்றுக்கு அப்பால் தமிழிலக்கியத்தின் ஆத்மா என்பது தன் வாழ்க்கைக்கு நேர்மையாக இருக்கும் தனிப்பட்ட படைப்பாளியின் படைப்புத் திமிரில்தான் உள்ளது என்று வெளிப்படுத்தி நம்பிக்கை அளிப்பவை.

ஜூன் 28, 2008

48. பருவமழைப் பயணம் மழையில்லாமல்

இந்த வருடமும் எங்கள் பருவமழைப் பயணம் நடத்திவிட வேண்டுமென்று ஈரோடு வழக்கறிஞர் கிருஷ்ணன் சொன்னார். ஆனால் பருவ மழையைத்தான் காணவில்லை. வழக்கமாக ஜூன்மாதம் தொடக்கத்திலேயே தென்மேற்குப் பருவக்காற்று கேரளாவிலும் தேனி தென்காசி கன்யாகுமரி மாவட்டங்களிலும் மழையை அளிக்க ஆரம்பித்துவிடும். கேரளத்திலும் குமரியிலும் பெருமழை கொட்டும். பெரும்பாலான மலையாளிகளின் நினைவில் மழையும் பள்ளிக்கூடமும் இணைந்திருக்கும். காரணம் மழையில் நனைந்தபடிதான் முதன் முதலாக பள்ளிக்கூடம் சென்றிருப்பார்கள். பள்ளி திறக்கும்போதெல்லாம் மழை. இம்முறை ஜூன் மாதம் ஓரிரு மழையுடன் அப்படியே பருவமழை பொய்த்தது. குற்றாலம் சாரல்பருவம் தொடங்கவேயில்லை. ஐந்தருவியில் கூட மழை இல்லை. எங்களூரில் அவ்வப்போது சிறிய மழை, எப்போதும் குளிர்காற்று. மழையை எதிர்பார்த்து பயணம் ஒத்திப்போடப்பட்டது.

ஜூலையில் கண்டிப்பாக மழை இருக்கும் என்றார்கள். ஆகவே ஜூலை நான்கு என்று தேதியை உறுதிசெய்தோம். ஆனால் விசாரித்தபோது எங்கும் மழை இல்லை. எங்கே செல்வது என்று குழப்பம். கே.பி.வினோத்தின் மனைவி கடுப்பாகி 'பம்பாய்க்கு போங்கள், அங்கேதான் மழைபெய்கிறது' என்று சொன்னதாக தகவல். நான், பேசாமல் மொர்காராவுக்குச் செல்வோம், மழை இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் மேகமாவது இருக்கும் என்றேன். திட்டமிடாமலேயே நான் மூன்றாம்தேதி கோவை விரைவு வண்டியில் கிளம்பி ஈரோடு சென்றேன். ஈரோட்டில் நண்பர் விஜயராகவன் வீட்டில் தங்கினேன். காலையில் கிளம்பி அரச்சலூர் சென்று அங்கே ஒரு மலைக்கோயிலின் படிகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

மதியம் கிருஷ்ணன் ஒரு நாளிதழில் பீர்மேடு குமுளியில் மழைபெய்து பம்பை நதியில் வெள்ளம் என்ற செய்தியைப் பார்த்தார். உடனே பீர்மேட்டுக்கு கிளம்பிவிடுவோம் என்று முடிவாயிற்று. மாலை ஐந்து மணிக்கு வழக்கம்போல மாருதி ஆம்னி வண்டியில் நான், கிருஷ்ணன், கே.பி.வினோத், சிவா, வழக்கறிஞர் செந்தில் ஆகியோர் கிளம்பினோம். இரவெல்லாம் தத்துவம், அரசியல் என்று பேசியபடியே சென்றோம். கம்பம் தாண்டியபின்னும் எங்கும் மழையோ சாரலோ இல்லை. காட்டுக்குள் காற்று ஓடும் ஒலியைக் கேட்டால்கூட 'ஆகா, மழை!' என்று எதிர்பார்த்து பரவசம் கொண்டு கூவிக் கொண்டிருந்தார் கிருஷ்ணன்.

பின்னிரவு இரண்டு மணிக்கு எங்கள் வழக்கமான முகாமான பீர்மேடு கிருஷ்ணசுவாமி கோயிலுக்குச் சொந்தமான விடுதிக்குச் சென்று சேர்ந்தோம். கேரள ஆலயங்களில் பெரும்பாலானவற்றில் முன்பு மன்னரோ அரச குலமோ வந்து தங்குவதற்காக நல்ல விடுதிகளைக் கட்டியிருக்கிறார்கள். இப்போது அவற்றை குறைந்த வாடகைக்குக் கொடுக்கிறார்கள். மிகச்சிறந்த பராமரிப்பும் நல்ல உபசரிப்பும் உள்ள விடுதிகள் அவை. கேட்டபோது இரண்டுநாள் முன்புவரை சிறிய மழை இருந்ததாகவும் இப்போது அதுவும் இல்லை என்றும் சொன்னார்கள். இந்த பருவமழை முற்றாக பொய்த்துவிட்டது.

சற்றே தூங்கிவிட்டு காலையில் எழுந்து அருகே உள்ள ஆற்றங்கரை வழியாக நடக்கச் சென்றோம். கிருஷ்ணன் அர்விந்த் எழுதிய குறிப்புகளை முன்வைத்து கென் வில்பர் மற்றும்

சிந்தனைகளின் ஒருங்கிணைப்பு பற்றி கேட்க தொடர்ச்சியாக உரையாடியபடியே சென்றோம்.

சிறிய சிறிய மழைகளினால் பசுமையும் ஈரமும் இருந்தமையால் பீர்மேட்டுக்குரிய அட்டைகள் உயிர்கொண்டிருந்தன. ஆனால் சென்றதடவை போல படைபடையாக வந்து தொத்திக் கொள்ளவில்லை. ஆற்றங்கரை வழியாகச் சென்று ஆற்றின் சில்லிட்ட நீரில் குளிக்கலாமா என்று தயங்கி நின்றோம். வழக்கமாக சிவா எந்த நீரைக் கண்டாலும் சட்டையைக் கழற்றிவிடுவார். அவர் குளிப்பதைக் கண்டு படிப்படியாக மற்றவர்களும் குளித்தோம்.

திரும்பிவந்து பரோட்டா கடலைக்கறி சாப்பிட்ட பின் என்ன செய்வதென யோசித்தோம். கே.பி என்று அழைக்கப்படும் புல்மேடு தேக்கடி அருகே உள்ளது. மிகவும் பாதுகாக்கப்பட்ட பகுதி. அங்கே ஒருமுறை கிருஷ்ணனும் கும்பலும் சென்றிருக்கிறார்கள். ஆகவே இம்முறையும் அங்கு போக முயலலாம் என்று சொல்லி அதற்கு அனுமதிபெற தேக்கடிக்கே கிளம்பினோம். சென்றமுறை வந்தபோது அந்த சாலையெங்கும் பெரிய பெரிய அருவிகள் நேரடியாக தார்பரப்பின்மீது கொட்டிக் கொண்டிருந்தன. மலைகள் முழுக்க அருவிகள் வெள்ளித்தூண்களாக பளபளத்தன. இம்முறை வெறும் ஈரப்பசுமை இளவெயிலில் பளபளத்தது. கரியபாறைகளில் நீர் வழியும் வெள்ளித்துகில்கள் ஒளிவிட்டன.

தேக்கடியில் சுற்றுலாப்பயணிகள் அனேகமாக எவரும் இல்லை. காட்டிலாகா அலுவலகத்தில் அனுமதிகொடுக்க வேண்டிய அதிகாரிகள் எவருமே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். திரும்பி பீர்மேட்டுக்கே செல்ல ஆரம்பித்தோம். வரும்வழியில் ஒரு டீக்கடையில் மதியம் சாப்பிட்டபோது அங்கிருந்த ஒருவரிடம் இங்கே நல்ல இடம் ஏதாவது இருக்கிறதா என்று சிவா கேட்டார். பொதுவாக இப்படி கேட்பது அபாயகரமானது. மலைவாசிகள் ஏதாவது பெரிய கட்டடத்தைத்தான் சொல்வார்கள். இயற்கை அழகு என்ற எண்ணமே அவர்கள் மனதில் இருக்காது. ஆனால் இந்த மனிதர் வேறுபட்டவர். பருந்துப்பாறைக்குப் போங்கள் என்று சொல்லி வழியும் காட்டினார்.

கான்கிரீட் சாலை போடப்பட்ட பருந்துப்பாறை அப்பகுதியின் மலை உச்சி. மலை ஏற ஏற பெரும் புல்வெளிகளும் புல்மேடுகளும் வர ஆரம்பித்தன. அவலாஞ்சி போன்ற புல்லலைவெளி. மேகம் தவழும் புல்மலைகளுக்கு மேல் சென்று சேர்ந்தோம். வண்டியை நிறுத்திவிட்டு நீர் ஊறி ஊறி வழிந்த புல்பரப்பு வழியாக இறங்கி கீழே ஓடிய ஒரு காட்டாற்றுக் கரைக்குச் சென்று சேர்ந்தோம். அட்டைகள் அதிகமிருந்ததனால் குளிக்கவில்லை. மேகங்கள் மலையை மூடும்போது பெரும் மழை வரப்போகிறதென தோன்றும். ஆனால் மேகம் அப்படியே சிறு துளிகளுடன் கடந்துசென்று உடனே இளவெயில் வந்துவிடும். ஈரத்துடன் பச்சைநிற அகல்களில் கண்ணாடிச் சுடர் போல இலைகள் எரியும்.

அந்தி இருள்வதுவரை பருந்துப்பாறையிலேயே இருந்தோம். அனேகமாக வேறு யாரும் இல்லை. இருட்டப்போகும்போது சில வண்டிகள் வந்தன. சொந்தமாக வாகனம் இல்லாமல் அங்கே செல்லமுடியாது. அப்படி வருபவர்களில் இளைஞர்கள் பெரும்பாலும் ஒருவகை குற்றகரமான மூர்க்கத்துடன் இருக்கிறார்கள். பெரும்பாலும் மூக்குமுட்ட குடித்துவிட்டு ஆட்டம்போடுகிறார்கள். கூச்சலிடுதல், கத்தி ஒருவரை ஒருவர் பிடித்துத்தள்ளி நடனமிடுதல், குப்பைகளை அள்ளி வீசுதல் ஆகியவையே அவர்கள் அந்த இடத்தை 'என்ஜாய்' செய்யும் முறைகள். அதைவிட மதுக்குப்பிகளை ஓங்கி மலைச்சரிவிலும் பாறைகளிலும் வீசி உடைத்துப் போடுதல். இப்பகுதிகளில் மிக அபாயகரமான விஷயமே இதுதான். வினோதின் காலை, செருப்பை மீறி, ஒரு கண்ணாடிச் சில்லு நன்றாக அறுத்துவிட்டது. செந்தில் அங்கெல்லாம் சிதறிக்கிடந்த பிளாஸ்டிக் குப்பைகளைச் சேகரித்து குப்பைத்தொட்டியில் போட்டார்.

புத்தம் புதிய கார் ஒன்றில் நான்கு தமிழ் இளைஞர்கள் முழுப்போதையில் உரக்க ஹாரன் அடித்தபடி புல்மேடுகளில் மிக அபாயகரமாக வண்டியை ஏற்றி கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். சில இடங்களில் நிறுத்தி நடனமாடினார்கள். அவர்களை விட்டு விலகி வெகுதூரம் தள்ளிச் சென்றுவிட்டோம்.

இப்படி கேவலமாக நுகர்வதில் தமிழர், மலையாளிகள் என்ற பேதம் இல்லை. ஆனால் தமிழர்களில் பொதுவாக இயற்கைமுன் வியந்துநிற்கும் மனநிலை ஓரளவுக்கு உள்ளது. ஆனால் இப்படிப்பட்ட எந்த இடத்திலும் நான் இன்றுவரை இயற்கையை ரசிக்கும் ஒரு மலையாளி இளைஞனை கண்டதே இல்லை. மலையாளிகளுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. மலையாளிகளில் இருவகையினர்தான். ஆடம்பரமான கார், உயர்தர உடைகளில் வந்து காரை நிறுத்திவிட்டு ஸ்டீரியோவை அலறவிட்டபடி குடிப்பவர்கள். கார்களில் அப்பிக்கொண்டுவந்து குடித்துவிட்டு எடுத்ததற்கெல்லாம் சேர்ந்து ஊளையிட்டு ஆபாசமாக நடந்துகொள்பவர்கள்.

இரவு திரும்பி ஒன்பதுமணிக்கே தூங்கிவிட்டு மறுநாள் அதிகாலையில் எழுந்து வாகைமண் சென்றோம். விடியும்போது அங்கே இருந்தோம். வாகைமண் புல்மேடு என்பது பலநூறு கிலோமீட்டர் பரப்புள்ள பசும்வெளி. அதுவே கேரளத்தின் உச்சி என்பார்கள். அங்கிருந்து செங்குத்தாக மலை இறக்கம் உள்ளது. ஆகவே ராணுவத்தினரின் கிளைடர் பயிற்சி அங்கேதான் நடக்கும். சென்றமுறை இங்கே வந்தபோது மழை கொட்டிக் கொண்டிருந்தது. ஆகவே புல்வெளிக்குள் அதிகதூரம் செல்ல முடியவில்லை. இப்போது புல்வெளியில் வெகுதூரம் சென்று மலைச்சரிவில் புல்லைப் பிடித்தபடி ஆழத்தில் இறங்கி மலைவிளிம்பு வரை போய் அமர்ந்திருந்தோம்.

இயற்கையில் ஈடுபடுவதென்பது இசை கேட்பதுபோலத்தான். அது எளிய விஷயம் அல்ல, அதற்கு ஒரு மனப்பயிற்சி தேவை. பெரும்பாலானவர்கள் இசை கேட்கும்போது முதல்சில வரிகளை கேட்டு ஆகா என்பார்கள். உடனே கவனம் வேறு வேறு விஷயங்களில் சிதறிச் சென்றுவிடும். இயற்கையழகின்முன் செல்லும்போதும் உடனே ஒரு பரவசம் வரும். சில கணங்களில் மனம் பொறுமையிழந்து அலைபாயும். மனம் ஏதேதோ சில்லறை நினைப்புகளில் அலையும். உண்மையில் அந்த முதல் சில கணங்கள் மட்டுமே நாம் இசை அல்லது இயற்கையை அறிகிறோம்.

எமர்சனின் இயற்கை என்ற கட்டுரையை நான் மொழியாக்கம் செய்திருக்கிறேன் (தமிழினி வெளியீடு). அதில் இதைப்பற்றி எமர்சன் விரிவாகவே பேசுகிறார். இயற்கை முன் நம் அகங்காரம் அழிகிறது, ஆனால் சிலகணங்களிலேயே அது முன்னைவிட தீவிரமாக எழுந்துவிடுகிறது. இயற்கையில் இருக்க நித்ய சைதன்ய யதி ஒரு வழிமுறையைச் சொல்லித் தந்தார். அதை நான் என் நண்பர்களிடம் சொல்லி அவர்களும் அதை மிகவும் விரும்பினார்கள். ஒரு மனப்பயிற்சிதான். ஒன்று மிக அழகான ஒரு இடத்தில் வசதியாக அமர்ந்து கொள்ளவேண்டும். இருபது நிமிடங்கள் எவரும் எதுவும் பேசக்கூடாது. கண்களால் பார்வையின் ஒரு எல்லை முதல் மறு எல்லைவரை உள்ள காட்சியை அணுவணுவாக பார்க்க வேண்டும். பரபரவென்று தலையை திருப்பிப் பார்க்கவோ பார்வையை அலையவிடவோ கூடாது. ஒரு புள்ளியை ஐந்து நிமிடம் வரை கூர்ந்து நோக்க வேண்டும்.

எளிதாகத் தோன்றலாம். செய்துநோக்கினால் இது எத்தனை கஷ்டமென்று தெரியும். தியானம் கலைவதுபோலவே மனம் வேறு எண்ணங்களை நோக்கி கலைந்துசெல்லும். அதை மீண்டும் மீண்டும் இழுத்து அக்காட்சியிலேயே நிலைநாட்ட வேண்டும். அதன் நுண்மையான தகவல்களையெல்லாம் மனதுக்குள் கொண்டுவர முயலவேண்டும். வழுக்கி வழுக்கிச் செல்லும் பிரக்ஞையை நிலை நிறுத்துவது எளிய செயல் அல்ல. அதற்கு தடையாக இருப்பவை இரண்டு. ஒன்று காட்சிகளை சொற்களாக ஆக்கும் நம் இயல்பு. ‘எவ்வளவு அழகாக இருக்கிறது’, ‘மகத்தான காட்சி’ இவ்வாறெல்லாம் அகத்தே சொல்லிக்கொள்வது. (இதை சப்தாகரண விருத்தி என்கிறது மரபு.) இன்னொன்று காட்சிகளை முன்காட்சிகளுடன் அல்லது முன் நினைவுகளுடன் இணைத்துக் கொள்ளுதல். ‘இதேபோன்ற இடம் ஊட்டியில் இருக்கிறது’, ‘இதைப்பார்த்தால் நாராயண் மிகவும் மகிழ்வானே’ இவ்வாறு ஒப்பிடுதல், இன்னொரு நினைவுக்குச் செல்லுதல். (ததாகரணவிருத்தி.) இவ்விரண்டையும் முடிந்தவரை நீக்கி தொடர்ந்து அக்காட்சியை மட்டுமே கண்களிலும் கருத்திலும் நிறுத்த முயல்வதுதான் பயிற்சி.

இவ்வாறு ஓர் இயற்கைச்சூழலில் இருந்தவர்கள் அவ்வனுபவத்தை மறக்க முடியாது. திரும்பிவந்தபின் மெல்ல மெல்ல பயணத்தின் காட்சிகள் கலைந்து சிலச்சில துணுக்குகளாக நினைவில் எஞ்சும்போது இந்த இருபது நிமிடம் மட்டும் அப்படியே நினைவில் கனவுபோல தங்கி அழியாமலிருப்பதைக் காணலாம். இருமுறை வாகமண் புல்பரப்பில் அப்படி இருபது நிமிட விழித்தியானத்தைச் செய்தோம்.

வாகமண்ணில் மதியம் சாப்பிட்டுவிட்டு அருகே இருந்த குரிசுமலைக்குச் சென்றோம். கிறித்தவர்களின் புனித தலம். அங்கே குன்றின்மீது சிலைகளை நிறுவியிருக்கிறார்கள். அங்கிருந்தபோது இருமுறை மழைவரும்போல இருண்டு ஏமாற்றியது. எங்கள் இரண்டுநாள் பயணம் முடியப்போகிறது, மழையைக் காணாமலேயே என்று எண்ணியபோது கீழே இருந்து அலையலையாக மேகம் ஏறிவந்து மழை கொட்ட ஆரம்பித்தது. மழைச்சட்டையை போட்டுக் கொண்டு கொட்டும் நீர்த்தாரைகளின் வழியாக மூன்று கிலோமீட்டர் நடந்து இறங்கினோம்.

அன்று மாலையே கிளம்பி பின்னிரவில் ஈரோடு வந்தோம். வரும் வழியில் வண்டி பெரியாற்றருகே ஒரு பெட்ரோல் பங்கில் அந்த காரைக் கண்டோம். குடித்துவிட்டு ஓட்டிய பையன்கள் அதை பக்கவாட்டில் சரித்து விட்டிருக்கிறார்கள். ஒருபக்கமே நொறுங்கி வண்டி கலகலத்துவிட்டிருந்தது. பையன்களுக்கு நல்ல அடி என்றார்கள். நான் அப்பேச்சுகளில் கவனித்த ஒரு விஷயம், பேசிய எவருக்குமே அவர்கள் மேல் அனுதாபம் இல்லை என்பது. குடித்துவிட்டு ஓட்டியவர்கள் சாகட்டுமே என்ற பாவனை, நல்லவேளை வேறு ஆட்கள் மேல் மோதவில்லை என்றார் ஒருவர். அவரும் குடிப்பவராக இருக்கக் கூடும். ஆனாலும் நம் சமூகத்தில் குடிமேல் அப்படி ஒரு கசப்பு இருக்கிறது. இந்த மனநிலை புரியவில்லை.

ஈரோடு வரும்போது பெரிய குளத்தில் நின்றோம். ஒரு குடிகாரர் வந்து மலையாளத்தில் அவர் ஒரு மலையாள ஆசிரியர் என்றும் இப்போது நோயுற்று அனாதையாக இருப்பதாகவும் சாப்பிட பணம் தரும்படியும் சொன்னார். கிருஷ்ணன் பணம் தரமுடியாது போ என்று தமிழில் சொன்னதும் ஆங்கிலம் என அவர் நினைத்த ஒரு மொழியில் சரமாரியாக பேசி 'நான் என் கல்வியை விற்க மாட்டேன். என்னிடம் பணம் இல்லை கல்வி இருக்கிறது' என்றார். தமிழர்களுக்கு வேறு மலையாளிகளுக்கு வேறு என்று உத்தி கைவசம் வைத்திருக்கிறார்! அவரிடம் ஏற்கனவே ஒரு டிபன் பொட்டலம் இருந்தது. அதைக் கவனித்தபோது 'டிபன் யாருக்கு வேண்டும்? நான் கேட்பது பணம். எனக்கு மருந்து வாங்க பணம் வேண்டும்' என்றார்

நான் 'பணம் இல்லை போய்யா' என்றேன். 'நீ பேசாதே. நீ வேலைக்காரன். அவர் முதலாளி, அவர் சொல்லட்டும்' என்று என் மண்டையை தட்டினார். கிருஷ்ணன் பெர்முடாஸ் அணிந்திருந்ததுதான் காரணம் என நான் ஊகித்தேன். கிருஷ்ணன் 'போய்யா' என்றதும் விலகி நின்று கொஞ்ச நேரம் வசைபாடினார். ஈரோட்டுக்கு வந்துசேரும்போது இரண்டரை மணி.

மறுநாள் காலையில் எழுந்து நண்பர்களுடன் காவேரியில் தடுப்பணை கட்டப்பட்டுள்ள கரணம்பாளையத்துக்குச் சென்றேன். அருகே இருந்த தோப்பில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். கிருஷ்ணன் அப்போதுதான் 'வில் துரந்தி'ன் ஸ்டோரி ஆஃப் ஃபிலாசபி படித்துக் கொண்டிருந்தார். அதைப்பற்றிய ஐயங்கள் விவாதங்கள். துராந்த் தத்துவம் பற்றி கொடுக்கும் விளக்கமும் கருத்தும் மிகச் சாதாரணமாகவும் அற்பமாகவும் இருப்பதாக கிருஷ்ணன் கருதினார்.

காவேரியில் நீர் பெருகிச் சென்றுகொண்டிருந்தது. தடுப்பணை மேல் நீர் பெருகி நுரை எழ வளைந்துவிழும் காட்சி அற்புதமாக இருந்தது. அருகிலேயே ஒரு திறந்தவெளிப் பரிசல் தொழிலகம். கூட்டம்கூட்டமாக மக்கள் பெரிய பாத்திரங்களில் கூட்டாஞ்சோறுடன் பரிசலில் ஏறி மறுகரைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். குலதெய்வ வழிபாடு போல. அங்கேயே ஒரு ஓட்டலில் சாப்பிட்டோம். மீன்குழம்பு மட்டும்தான். நன்னீர் மீன். கடல்மீனிலிருந்து வித்தியாசமான சுவை கொண்டது. முதலில் சப்பென்று கொழகொழவென்று இருக்கும்.கடல்மீனும் வாசனையும் இருக்காது. சற்றே தின்றபின் சுவையாக மாறும்.

மாலை வழக்கம்போல பத்து நண்பர்கள் சேர்ந்து அருகே உள்ள வள்ளிபுரத்தான்பாளையம் கிராமத்துக்குச் சென்றோம். அங்கே கரும்பு வயல்களுக்கு நடுவே நடந்தபடி பாரதிபற்றி பேசிக் கொண்டு ரயில்நிலையம் சென்று அமர்ந்திருந்தோம். இரவு எங்கள் வழக்கமான டீக்கடையில் இட்லி தோசை சாப்பிட்டுவிட்டு திரும்பினோம். பத்துமணிக்கு நாகர்கோயிலுக்கு ரயில். ரயில்நிலையத்துக்கும் நண்பர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். இன்னொரு பயணம் பற்றி பேசிக்கொண்டு கிளம்பினேன்.

ஜூலை 7, 2008

49. எழுதப் போகிறவர்கள்

வேதசகாயகுமார்தான் முனைவர் வறீதையா கான்ஸ்தன்டீனை அறிமுகம் செய்துவைத்தார். தூத்தூர் செயிண்ட் ஜூட்ஸ் கல்லூரியில் இணைப்பேராசிரியராக பணியாற்றுகிறார். கடற்கரைச் சூழலியல் ஆய்வுகள் சார்ந்து 25 ஆய்வுக்கட்டுரைகளும் ஏழு நூல்களும் படைத்திருக்கிறார். தமிழில் அணியம் என்ற நூலின் ஆசிரியர் (தமிழினி வெளியீடு.)

இரண்டுவருடங்களாக அவர் கடற்கரைப்பகுதி மக்களின் படைப்பாற்றலை வளர்த்துக்கொள்ள உதவும்பொருட்டு நாகர்கோயிலில் ஒரு சிறிய கூடுகையை நடத்திவருகிறார். இப்போது நாகர்கோயில் கார்மல் உயர்நிலைப்பள்ளியில் மாதத்தில் இரண்டாம் ஞாயிறன்று இக்கூடுகை நிகழ்ந்து வருகிறது. இருபதுக்குள் உறுப்பினர்கள் வந்து அதில் பங்கெடுத்து தங்கள் படைப்புகளை பரிமாறி விவாதித்துக் கொள்கிறார்கள். எழுத்தாளர்கள் அழைக்கப்பட்டு கருத்துப்பரிமாற்றம் நடைபெறுகிறது. வேதசகாய குமார், ஜோ.டி. குரூஸ், பாமா, மாலதி மைத்ரி ஆகியோர் இதுவரை கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள். 13-7-08 அன்று நான் கலந்துகொண்டேன்.

பத்துபேர் உரையாடலில் கலந்து கொண்டார்கள். நான் எழுத ஆரம்பித்த சூழல், இப்போது எழுதும் முறை ஆகியவற்றை விளக்கி இருபதுநிமிடங்கள் பேசினேன்.

ஐம்பது அறுபதுகளில் குமரிமாவட்டத்தின் தென்பகுதியில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒரு கலாசார மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்தார்கள். கிராமநூலகம் நிறுவுதலே அன்றெல்லாம் கட்சிப்பணியின் அடிப்படை வேலை. அதன் பின் கலைநிகழ்ச்சிகள். அவ்வாறு உருவான வாசிப்புப்பழக்கம் இன்றும் அப்பகுதியில் தீவிரமாக உள்ளது. தமிழகத்தில் மிக அதிகமாக வாசகர்கள் வாசிக்கும் கிராம நூலகங்கள் அப்பகுதியில் உள்ளவையே. அத்தகைய ஒரு வாசிப்புச்சூழலில் உருவானவர் என் அம்மா. அவரது சகோதரர்கள் கம்யூனிஸ்டுகள். அம்மாவிடமிருந்து எனக்கு வாசிப்புப் பழக்கம் வந்தது. இயல்பாகவே நான் எழுதலானேன். நிறைய பிரசுரமாகவும் செய்தன.

முதலில் வேடிக்கைக்காக எழுதினேன். பின்னர் என் வாழ்க்கையில் தீவிரமான நிகழ்வுகள் ஏற்பட்டன. அவற்றிலிருந்து நான் தீவிரமான அக, புற அலைச்சல்களுக்கு ஆளானேன். அதன்பின் எண்பத்தாறில் மீண்டும் எழுத ஆரம்பித்தேன். அதையே என் இலக்கியப்படைப்பியக்கத்தின் தொடக்ககாலமாக கருதுகிறேன். அதன்பின் உள்ள கதைகளே பிரசுரமாகியிருக்கின்றன. என் எழுத்து என்பது என்னை அறிவதற்கான அகப்பயணம் மட்டுமே. அப்பயணம் வாழ்க்கையை வரலாற்றை அறிவதாக இயல்பாகவே விரிவடைகிறது.

இத்தகையதோர் கூடுகையில் இலக்கியத்தின் அடிப்படைகளைப் பற்றி சில சொற்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுவாக இரண்டாம்தர எழுத்தாளர்கள் இம்மாதிரி அரங்குகளில் வந்து எழுத்தாளர்கள் சமூக மாற்றத்துக்காக எழுத வேண்டும், முற்போக்குக் கருத்துகளை எழுதவேண்டும் என்று சொல்லிவிட்டுச் செல்வது வழக்கம். எழுத ஆரம்பிக்கும் இளம் படைப்பாளிகளை அழிப்பதற்கு இதைவிடச் சிறந்த உபதேசம் வேறு தேவையில்லை. என் கைக்கு வரும் இளம் எழுத்தாளர் படைப்புகளில் பெரும்பாலானவை இத்தகைய தவறான திசை திருப்புதல்களால் படைப்பியக்கத்திற்கு நேர் எதிராக சென்றுவிட்ட ஆக்கங்களாகவே இருக்கின்றன.

இத்தகைய அறிவுரைகளை நம்பும் இளம் எழுத்தாளன் தன் காலகட்டத்தில் எங்கும் ஓங்கி ஒலிக்கும் கோஷங்களையும் அறைகூவல்களையும் தானும் எதிரொலிக்க ஆரம்பிக்கிறான். கருத்துகளை அறைகூவல்களாகவோ புலம்பல்களாகவோ எழுதினால் அவை இலக்கியமாகும் என நம்புகிறான். உயர்ந்த கருத்து, தேவையான கருத்து உடைய ஒன்று நல்ல இலக்கியம் என்று நம்ப ஆரம்பிக்கிறான். அந்தக்கருத்துகள்தான் ஏற்கனவே சூழலில் ஒலிக்கின்றனவே, அதற்கு நீ எதற்கு என்ற கேள்வியை எவருமே அவனிடம் கேட்பதில்லை. அவன் அப்படியே நெடுநாள் திரிந்து தன் படைப்புமனத்தையும் மொழியையும் திரும்பப்பெற முடியாதபடி இழந்துவிடுகிறான்.

ஆகவே உங்கள் சமூகத்தை முன்னேற்ற எழுதவேண்டாம். உங்கள் சமூகத்தைச் சீர்திருத்தவும் நீங்கள் எழுத வேண்டாம். அப்படியானால் என்ன எழுதுவது? சமூகத்தைப் பற்றி எழுதுங்கள். சமூகத்தை வெளியே நோக்கி எழுத வேண்டாம். சமூகத்தை உங்களுக்குள் நோக்கி எழுதுங்கள். உங்களைப்பற்றி எழுதுங்கள். உங்கள்மூலம் நீங்கள் அறியும் வாழ்க்கையை சித்தரித்துக் காட்டுங்கள். நேர்மையாக, சமரசமில்லாமல் எழுதுங்கள். உண்மையை எழுதினாலே அது புரட்சிகரமானதாக ஆகும் என்பதை அறிவீர்கள். எழுத்து சமூகத்தை சீர்திருத்தட்டும், எழுத்தாளன் வேலை எழுதுவதே.

அதாவது எழுதவேண்டியது கருத்துகளை அல்ல, வாழ்க்கையை. இது ஏன் என்று நோக்க வேண்டும். இங்கே ஃபாதர் ஜெயபதி அவர்கள் மது ஒழிப்புக் கூட்டங்கள் நடத்துகிறார். மது தீங்கானது, குடிப்பழக்கம் ஒரு நோய் – இவைபோன்ற கருத்துகளை மது அடிமைகளிடம் சொன்னாலே போதுமே. அவர்களுக்கு புரியுமே. ஆனால் என்ன செய்கிறார்கள்? அவர்களிடம் தங்கள் வாழ்க்கையை விவரித்துச் சொல்ல வைக்கிறார்கள். உள்ளது உள்ளபடி சித்தரிக்க வைக்கிறார்கள். வாழ்க்கையை நாம் மொழியில் சொல்ல ஆரம்பித்ததுமே அதை ஒரு கண்ணாடியில் பார்ப்பதுபோல பார்க்க ஆரம்பித்துவிடுகிறோம். அதன் குறைகள் தெளிவாக கண்முன் நிற்கின்றன. இதைப்போன்ற ஒரு சிகிச்சை முறைதான் இலக்கியமும். கொள்கைக்காக திரிக்காமல், மிகைப்படுத்தாமல் உள்ளது உள்ளபடி சொல்ல ஆரம்பித்தாலே போதும். இலக்கியத்தின் முதல்படி அதுவே.

இளம் எழுத்தாளர்களின் முக்கியமான இன்னொரு சிக்கலையும் சொல்லிச் செல்கிறேன். கருத்துகளைச் சார்ந்து எழுதும்போது கருத்துகளை காட்டக்கூடிய நிகழ்ச்சிகள் மற்றும் தகவல்களை மட்டுமே அவர்கள் முக்கியமாக கருதுகிறார்கள். அந்த முக்கியமான விஷயங்களை மட்டுமே எழுதுகிறார்கள். அவை எல்லார் கண்ணுக்கும் படும் பொதுவான விஷயங்களாகவும் இருக்கும். இலக்கியம் என்பது நுண்தகவல்களால் ஆனது என்பதை உணருங்கள். கண்டு கேட்டு அறிந்து, உங்களை அறியாமல் கொஞ்சம் கொஞ்சமாக சிறுவயது முதலே ஆழ்மனதில் ஊறித்தேங்கியிருக்கும் தகவல்கள் இலக்கியப்படைப்பில் இடம்பெறும்போதே அதற்கு இலக்கிய மதிப்பு கிடைக்கிறது.

காரணம் சின்னவிஷயங்கள் இலக்கியத்தில் பெரிய விஷயங்கள். அவற்றுக்கு இலக்கியத்தில் அசாதாரணமான ஆழம் கைவந்துவிடும். ஜோ டி க்ரூஸின் ஆழிசூழ் உலகு நாவலில் கடலுக்குள் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் தகவல் ஒன்று வருகிறது. சாதாரணமாக அதைச் சொல்லிச் செல்கிறார் அவர். ஆனால் எனக்கு மனிதன் கடலை தன்வயப்படுத்தும் ஒரு முயற்சியாகவே அது படுகிறது.

எழுத ஆரம்பிக்கும்போது எழுத்தில் கவனம் கொள்ளவேண்டிய மூன்று தொழில்நுட்ப விஷயங்களை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

1. ‘சொல்லாதீர்கள், காட்டுங்கள்.’ எழுத ஆரம்பிப்பவர்கள் கதைகளை சுருக்கமாகச் சொல்ல முயல்வார்கள். காரணம் அது நாம் சாதாரணமாக வாழ்க்கையில் செய்வது. நடந்ததை சுருக்கமாகச் சொல்வது. ஆனால் இலக்கியத்தின் நோக்கம் அனுபவத்தைத் தெரிவிப்பது அல்ல. அது கற்பனை மூலம் வாசகனை அந்த அனுபவத்தை தானும்

அடைய வைக்கவே முயலவேண்டும். ஆகவே அந்தக் கதை கண்முன் உண்மையில் நிகழ்ந்தால் எப்படி இருக்குமோ அந்தக் காட்சியனுபவத்தை வாசகனுக்கு அளியுங்கள். நுண்ணிய தகவல்கள் மூலம் கதையை கண்ணிலே காட்டுங்கள். கடற்கரை வாழ்க்கையை எனக்குச் சொல்லாதீர்கள், நானே அங்குவந்து வாழும் அனுபவத்தை எனக்கு அளியுங்கள்.

2. 'கதையின் கருத்தை கதைக்குள் சொல்லாதீர்கள்'. கதை என்பது வாசகனுக்கு அனுபவத்தை அளிப்பது. கருத்தை அவனே உருவாக்கிக் கொள்ளட்டும். வாசகனுக்கு நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னால் அது உங்கள் கருத்து. அவனே அதை கதையில் கண்டடைந்தால் அது வாசகனின் கருத்து. கதைக்குள் என்ன சொல்லப்படுகிறது என்பது அல்ல முக்கியம். என்ன உணர்த்தப்படுகிறது என்பதுதான் முக்கியம்.

3. 'கதைவடிவங்களை கற்றுக்கொள்ளுங்கள்.' கதையின் வடிவம் பற்றிய ஒரு பிரக்ஞை எழுத்தாளனுக்கு தேவை. இன்றுவரை கதையிலக்கியம் அடைந்துள்ள சிறந்த வடிவத்தை முயன்று கற்று அதை நாமும் அடைவதற்கான முயற்சி தேவை.

பேச்சுக்குப் பின் நீண்ட விவாதம் நடைபெற்றது. எழுத்தாளன் ஒருபோதும் தன் இன, மத, சாதி, மொழி அடையாளங்களை தன் அடையாளமாகக் கொள்ளலாகாது என்று நான் சொன்னேன். அவை அவனது பேசு பொருட்கள் மட்டுமே. அவன் அதற்கு வெளியே இருப்பவனாகவே தன்னை உருவகித்துக் கொள்ள வேண்டும். நமது மரபு நமக்கு முக்கியம். நாம் அதைக் கற்று உணர்ந்து அதன் சிறந்த அம்சங்களை சுயப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே நமது பண்பாடு என்பது.

ஆனால் விமரிசனமில்லாமல் மரபை அணுகுவதென்பது மிகமிக அபாயகரமானதாகும். மரபின் மீது பக்தியோ நெகிழ்ச்சியோ கொள்வதில் பொருளில்லை. மரபின் எந்தவிஷயமும் கருமையும் வெண்மையுமாக இருமுகத்துடனேயே நம்மிடம் வந்துசேர்கின்றன. நாம் தவிர்த்தாகவேண்டிய பல விஷயங்கள் அவற்றில் உள்ளன என்றேன்.

நம் சாதி அல்லது இன அடையாளம் நம் பண்பாட்டின் அடிப்படையாக அல்லவா இருக்கிறது? அவற்றை உதறினால் நாம் ஒன்றுமில்லாதவர்களாக ஆகிவிடுவோமே என்றார் வறீதையா. வேதசகாயகுமார் 'இன்றுவரை மீனவர்களில் ஒரு வழக்கம் உள்ளது, கைப்பிள்ளைக்காரிக்கு பாலுக்கு பால்சுறா போன்ற மீன்கள் தேவை என்றால் அதற்கு பணம் வாங்கமாட்டார்கள். அத்தகைய பண்பாட்டுக்கூறுகளை கைவிட்டுவிட முடியாதே' என்றார்.

நான் என் நோக்கில் அதை விளக்கினேன். ஒருகாலத்தில் நிலம் விலையில்லாததாக இருந்தது. நூறுவருடம் முன்புகூட நம் நாட்டில் காட்டுநிலத்துக்கு விலை இல்லை. பின்னர் நிலம் ஒரு உடைமையாக ஆயிற்று. அப்போது பல விளைபொருட்கள் விலைகொண்டவையாக கருதப்படவில்லை. நான் சிறுவனாக இருந்தபோது எந்த பனையேறியிடமும் பதநீர் கேட்டு குடிக்கலாம். இல்லை என்று சொல்லமாட்டார்கள், பணமும் பெற மாட்டார்கள். அது நிலமானியகால மனநிலை. இன்று அந்நிலை இல்லை. இது முதலாளித்துவ காலம். நேற்றைய பனையேறியல்ல இன்றுள்ளவர். இன்று பதநீர் விற்று அவர் ஒரு மகனை எஞ்சீனியரிங் படிக்க வைக்கக் கூடும். அன்று நிலத்தில் நடந்தவர்கள் இன்று ஏணியில் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்துக்கு இதற்கே உரிய சில விதிகள் உள்ளன. அனைத்தும் விலையுள்ளதே என்பது அதில் ஒன்று.

எனக்கு இன்றைய காலமே மேலானது என்று படுகிறது. இன்றுள்ள அற உணர்வு அன்று இல்லை. இன்றுள்ள சமத்துவ வாய்ப்புகள் அன்று இல்லை. வாழ்க்கை இன்று மேம்பட்ட நிலையிலேயே உள்ளது.ஆகவே பின்னால் திரும்பிப்பார்த்து அந்த விழுமியங்களை நோக்கி ஏங்குவதில் பொருளில்லை. சென்றகாலத்தை நாம் வாழும் காலத்தில் நின்றபடி அணுகி அதிலிருந்து கொள்ள வேண்டியதை மட்டுமே கொள்ளும் நோக்கையே நான் ஒப்புக்

கொள்வேன்.

நம்முடைய மரபில் இன்றும் பழங்குடித்தன்மை சார்ந்த சில மனநிலைகள் உள்ளன. பிரித்துப் பிரித்து தன்னை வேறுபடுத்தி தன் சுயத்தை காணும் மனநிலை அது. நான் இன்னசாதி, சாதிக்குள் இன்ன உபசாதி, உபசாதிக்குள் இன்ன குலம், குலத்துக்குள் இன்ன குடும்பம் – இவ்வாறு செல்லும் அந்த போக்கு. நீங்கள் உங்களை ஒரு சாதி என்று அடையாளப்படுத்திக் கொண்டால் உடனே அடுத்த அடையாளங்கள் வரிசையாக தேவைப்படும். இந்தியச் சூழலில் பொதுவாக நமது அந்தரங்கம் இந்த வகையான பிரித்துக்கொள்ளல் வழியாகவே செயல்படுகிறது.

நவீனமனிதன் நேர் எதிராகவே செயல்படும் மனம் கொண்டிருப்பான் என்று நான் நினைக்கிறேன். தன்னை மேலும் மேலும் பெரிய ஒட்டுமொத்த அடையாளங்களுடன் மட்டுமே அவன் பொருத்திக் கொள்வான். பண்பாடு சார்ந்து, தேசம் சார்ந்து, மானுடம் சார்ந்து... நவீனமயமாதல் என்றால் இதுதான். ஐரோப்பிய மறுமலர்ச்சி உலகுக்கு அளித்த கொடை அது. பலநூறு எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் கலைஞர்கள் வழியாக இரு நூற்றாண்டுகளில் மெல்லமெல்ல உருத்திரண்டு வந்தது. இந்த பொது அடையாளத்துக்குக் கொண்டுசெல்லத் தக்கவற்றை, மானுடப்பண்பாட்டுக்கு இன்றியமையாத கூறுகளாக ஆகக்கூடியவற்றை மட்டும் நாம் மரபிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவற்றை மானுடப்பொதுவானவையாக மறு ஆக்கம் செய்து முன்வைக்கலாம். நம்மை குறுக்கும் அடையாளங்கள் பண்பாட்டுக்கூறுகள் அல்ல. அவை சுமைகளே.

நமது பின்புலத்தின் நீட்சிகள் அல்ல நாம், அவற்றை பரிசீலனைசெய்பவர்கள் என்ற எண்ணம் நமக்கு வேண்டும். என் நோக்கில் எழுத்தாளன் ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் குரலாக ஒலிக்க மாட்டான். அவை அவனுக்கு தற்செயலாக அமைந்தவை மட்டுமே. அவன் ஒரு பொதுமானுடக்குரலையே முன்வைப்பான்.

மாலை ஆறுமணிவரை விவாதித்துவிட்டு பிரிந்தோம். அடுத்த அமர்வில் பாளையங்கோட்டை ஆ.சிவசுப்ரமணியம் அவர்கள் பேசுவதாக அறிவிக்கப்பட்டது.

ஜூலை 15, 2008

50. நிழல் நாடுவதில்லை நெடுமரம்

தமிழினி ஜூன் 2008 இதழில் கண்மணி குணசேகரனின் நூல்வெளியீட்டு விழாவைப்பற்றி ஓர் அறிக்கை இருக்கிறது. அன்பழகன் எழுதியது. கண்மணி குணசேகரனின் இரு நூல்களை தமிழினி வெளியிட்டிருக்கிறது. 'நடுநாட்டுச் சொல்லகராதி' (வட்டார வழக்கு) என்ற நூலும் 'காலடியில் குவியும் நிழல்வேளை' என்ற முழுக்கவிதை தொகுதியும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றின் வெளியீட்டை பொங்குதமிழ் வளர்ச்சி அறக்கட்டளை நிகழ்த்தியது. 28-6-08 அன்று. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்கள் கலந்துகொண்டார். பழமலை தலைமைவகித்தார்.

சமீபத்தில் இலக்கியச் சூழலில் எவரும் வெளியே சொல்லாமல் ஆனால் உள்ளூர பேசிக்கொண்டிருக்கும் விஷயம் பாட்டாளி மக்கள் கட்சி வன்னிய எழுத்தாளர்களை ஒருங்கிணைத்து உருவாக்கியிருக்கும் படைப்பாளிகள் பேரவை என்ற அமைப்புதான். முன்னரே இந்த அமைப்புக்கான வேலைகள் நடந்துகொண்டிருக்க வேண்டும், வன்னிய எழுத்தாளர்கள் நடுவே ஒரு கூட்டுப்புரிதல் இருப்பதாக அவ்வப்போது பேசப்பட்டதுண்டு. இந்த அமைப்பின் தொடக்க மாநாட்டில் தமிழின் அங்கீகாரம்பெற்ற வன்னிய எழுத்தாளர் முதல் ஒருசில கவிதைகளே எழுதிய இளம் எழுத்தாளர் வரை அனேகமாக அனைவருமே பங்கு பெற்றிருக்கிறார்கள். பின் நவீனத்துவர்கள் அதி தீவிர இடதுசாரிகள் பெரியாரியர்கள்... வேடிக்கை என்னவென்றால் இவர்களில் முக்கால்வாசிப்பேரை அவர்கள் வன்னியர்கள் என்று அம்மாநாட்டுக்குப் பின்னரே பிறர் அறிந்தார்கள்.

இந்திய அளவில் எழுத்தாளர்கள் வெளிப்படையாக சாதி அடையாளத்துடன் ஒன்றுதிரள்வது இதுவே முதல்முறை எனலாம். ஏற்கனவே கேரளத்தில் ஈழவ எழுத்தாளர்களையும் கர்நாடகத்தில் வொக்கலிக எழுத்தாளர்களையும் திரட்டுவதற்கான முயற்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. அவை எழுத்தாளர்களின் புறக்கணிப்பால் தோல்வியைத் தழுவின. குறிப்பாக கேரளத்தில் செல்வாக்கான ஈழவ நாளிதழான கேரளகௌமுதி சார்பில் அம்முயற்சி நிகழ்ந்தும்கூட எழுத்தாளர்கள் அதில் கலந்துகொள்ள தயங்கினார்கள். இதெல்லாம் ஐம்பது அறுபதுகளில். இப்போது தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டியிருக்கிறது.

பொதுவாக எழுத்தாளர்கள் தங்களை சாதி, மதம், இனம் சார்ந்து பொது அடையாளத்தின்கீழ் காட்டிக்கொள்ள தயங்குவார்கள். எழுத்து என்பது எந்த அடையாளமும் இல்லாத தனிமனித அந்தரங்கத்தில் இருந்து கிளைப்பது என்ற ஆழமான நம்பிக்கை பெரும்பாலான எழுத்தாளர்களிடம் உண்டு. யாரென்றே தெரியாத, ஏதோ ஒரு காலத்தைச் சேர்ந்த வாசகனின் அந்தரங்கத்துடன் தன் எழுத்து பேசும் என்று அவன் நம்புவதன் அடிப்படையும் இதுவே. இலக்கியத்தின் செயல்முறையும் மிக அந்தரங்கமானது. நல்ல இலக்கிய வாசகன் ஒருபோதும் எழுதுபவன் தன் இனம், மதம், சாதியைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டுமென எதிர்பார்க்க மாட்டான். இலக்கியத்தின் தார்மீகமான, அழகியல்சார்ந்த அளவுகோல்களும் இத்தகைய அடையாளப்படுத்தல்களுக்கு அப்பாற்பட்டவை.

அனைத்துக்கும் மேலாக ஒன்று உண்டு. இத்தகைய அடையாளப்படுத்தல்கள்மூலம் மக்களை ஒன்றாக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் அரசியல்வாதிகளே இத்தகைய அமைப்புகளை உருவாக்குகிறார்கள். அவற்றில் இணைவதன்மூலம் எழுத்தாளர்கள் தங்களை வழிநடத்தும்

பொறுப்பை அரசியல்வாதிகளுக்கு அளிக்கிறார்கள். தன்னகங்காரம் கொண்ட ஒரு சாதாரண எழுத்தாளன்கூட அதற்கு துணிய மாட்டான். சென்ற காலங்களில் பிற மாநிலங்களில் தொடங்கிய முயற்சிகள் சரிவுற்றமைக்குக் காரணம் இதுதான்.

இந்த அமைப்பில் கடந்தகாலங்களில் ஒரு 'பின்நவீன' கவிஞராக முன்னிறுத்தப்பட்ட, உலக இலக்கியம் அறிந்த, பிரம்மராஜன் துணைத்தலைவராக பொறுப்பேற்றுப் பணிபுரிவது பரவலாக அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. தலைவராக பொறுப்பேற்றுள்ள பழமலை தீவிர இடதுசாரி அமைப்புகளில் அ.மார்க்ஸ் போன்றவர்களுடன் இணைந்து பணியாற்றும்போதே சாதிப்பித்து கொண்டவர் என்று புகழ்பெற்றவர். ஆனால் பிரம்மராஜனும் நெடுங்காலமாக வன்னியர் சங்கம், பாட்டாளி மக்கள்கட்சியுடன் இணைந்து பணியாற்றியவர் என்பதே உண்மை. (எண்பதுகளில் அவரது கவிதைகளை அக்குவேறு ஆணிவேறாகக் கட்டுடைத்த நாகார்ஜுனன்கூட இதைப்பிரித்து எடுக்கவில்லை!)

இலக்கியத் தளத்தில் எழும் கேள்விகள் மிக அடிப்படையானவை. இனிமேல் இந்த எழுத்தாளர்கள் ஒரு குழுவாகச் செயல்படுவார்களா? ஒருவர் எழுதியதை பிறர் பாராட்டிக் கொள்வார்களா? இலக்கிய மதிப்பீடுகளில் இனி வன்னியர் என்ற பரிசீலனையும் இடம்பெற வேண்டும் என்று கோருவார்களா? வருத்தம் தரும் விஷயம், நாடார் எழுத்தாளர்களை ஒருங்கிணைக்கவும் இப்படி ஒரு ரகசியச் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது என்பது. தேவர் எழுத்தாளர்களுக்கு வேலை நடந்துகொண்டிருக்கலாம். கணிசமான எழுத்தாளர்களின் சாதி பற்றி இனிமேல்தான் தெரிந்துகொள்ளப்போகிறோம். மொத்தத்தில் இனிமேல் இலக்கியத்தை சாதி அடிப்படையில் மட்டுமே வாசிக்க மதிப்பிட முடியும் என்ற நிலை உருவாகிறது. இப்படிப்போனால் தமிழகத்தில் எழுத்தாளர் என்று யாருமிருக்கமாட்டார்கள், சாதிக்கொரு பூசாரிக்குலம் இருப்பதுபோல சாதிக்கொரு எழுத்தாளர் குழு இருக்கும்.

இதைப்பற்றி நம் சூழலில் நிலவும் ஆழமான மௌனமும் வியப்புக்குரியது. இந்த மாநாடு நடந்து இரண்டுமாதம் தாண்டியிருக்கிறது. உயிர்மை, காலச்சுவடு, உயிர் எழுத்து, தீராநதி, வார்த்தை, தமிழினி என எந்த இதழும் இதில் ஏதேனும் பிரச்சினை இருப்பதாக காணவில்லை. இந்தியாவின் எந்த மூலையில் எது நடந்தாலும் குரல்கொடுக்கும் இச்சிற்றிதழ்களுக்கு இந்த விஷயம் பற்றி சொல்ல ஒன்றுமில்லை, அதாவது அவை இதை மௌனமாக அங்கீகரிக்கின்றன. இணையத்தில் எல்லா விஷயங்களுக்கும் இருபதுமடங்கு குமுறல்கள் எழுவது வழக்கம். இன்றுவரை ஒரு சிறு குறிப்பைக் கூட நான் வாசிக்க நேரவில்லை. இணையத்தில் பினாமிபேரில் தலித்துகளுக்காக அனல் கக்குபவர்கள் கூட வாய்திறக்கவில்லை. காரணம் நமது சூழலில் உண்மையான அதிகாரம் பிற்படுத்தப்பட்டோர் அரசியலில் மையம் கொண்டிருப்பதுதான். சாதிய எதிர்ப்பு என்பதெல்லாம் மேல்பூச்சுச் சொற்கள் மட்டுமே.

நானறிந்து தலித் எழுத்தாளர்கள் சிலர் மட்டுமே தங்கள் அச்சத்தைப் பதிவுசெய்திருக்கிறார்கள். இத்தகைய கூட்டமைப்புகள் மேல்பேச்சுக்கு எப்படியிருந்தாலும் அடிப்படையில் சாதிக்கட்டுமானத்தை இறுக்கவும் அதன் மூலம் தலித்துக்களுக்கு எதிரானதாக சூழலை மாற்றவுமே உதவும் என்று அவர்கள் எண்ணுவது சரியானதே. இவ்வாறு கருத்துச் சொல்ல முன்வந்த தலித் படைப்பாளிகள் தலித் எழுத்தாளர்கள் தலித் அடையாளத்துடன் அமைப்புகளாக திரண்டபோது அதில் கலந்துகொள்ளாது விலகி நின்ற படைப்பாளிகள் என்பதும் கவனத்திற்குரியது. உதாரணமாக அமிர்தம் சூர்யா போன்ற இளம்படைப்பாளிகளின் குரலை சுட்டிக்காட்டலாம்.

மருத்துவர் ராமதாஸ் அவர்களின் தமிழ்ப்பற்று, மக்கள் தொலைக்காட்சியின் செயல்பாடு இரண்டிலும் மரியாதை கொண்டவன் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். ஆனால் எழுத்தாளன் என்பவன் தன் குழு அடையாளத்தால் இயக்கப்படுபவனாக இருக்கக் கூடாது என்பதே என் எண்ணம். ஆழ்ந்த நீதியுணர்வு ஒன்றே அவனை இயக்க வேண்டும். அந்த

நேர்மையே இலக்கியத்தின் ஆதார விசை. அதன் பொருட்டு தன் குழுவுக்கும் தன் சமூகத்துக்கும் கூட எதிரானவனாக ஆக அவன் தயங்கலாகாது. அவ்வாறு நாளை ஒரு வன்னிய எழுத்தாளன் வன்னியசாதியை கட்டவிழ்த்து ஒரு நாவலை எழுதினால் இந்த அமைப்பு அவனை வேட்டையாடுமா? இன்றுவரை தமிழகத்தில் எந்த பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த எழுத்தாளரும் தன் சாதியை விமரிசித்து ஒரு இலக்கியப்படைப்பை எழுதியதில்லை. துதி பாடல்களை மட்டுமே எழுதியிருக்கிறார்கள். பிறர் எழுதுவதை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அந்த இறுக்கம் இனி பலமடங்கு அதிகரிக்குமா?

பகடைகளைப்பற்றி பூமணி எழுதிய 'பிறகு', 'வெக்கை' போல, பரதவர்களைப்பற்றி ஜோ டி க்ரூஸ் எழுதிய 'ஆழிசூழ் உலகு' போல, வொக்கலிகர் பற்றி சு.வேணுகோபால் எழுதிய 'நுண்வெளி கிரணங்கள்' போல, வன்னியர் பற்றி இனிமேல்கூட ஒரு நல்ல இலக்கிய ஆக்கத்தை எதிர்பார்க்க முடியாதா? கட்சியும் சாதிச்சங்கமும் போட்டுக்கொடுக்கும் முன்வரைவை ஒட்டித்தான் இனி இவர்கள் 'நவீன' இலக்கியம் படைப்பார்களா? ஒரு வன்னியருக்கும் பிறருக்கும் ஒரு மோதல் வந்தால் இந்த எழுத்தாளர்கள் நியாயத்துக்காக பேசுவார்களா, இல்லை வன்னியர்களுக்காகப் பேசுவார்களா? வடதமிழ்நாட்டில் தலித் வன்னியர் முரண்பாடுகள் முனைகொண்டுள்ள சூழலில் இந்த வினாவைக் குறிப்பாகக் கேட்டாகவேண்டியுள்ளது.

கல்வியறிவும் நவீன உலகுடன் அறிமுகமும் நவீன இலக்கிய வாசிப்பும் கொண்ட இளையதலைமுறைப் படைப்பாளிகளின் வரிசை ஒன்று இப்படி சாதியமைப்பில் சென்று அமர்ந்து கோஷமிடுவதைக் காணும்போது துயரமே மிகுகிறது. சாதிப்பித்து என்பது முற்போக்கானது என்று தமிழ்நாட்டில் மெல்லமெல்ல நிறுவப்பட்டு விட்டிருக்கிறது — பொதுமேடையில் ஒப்புக்கு ஒரு பார்ப்பனிய எதிர்ப்புக் குரலை மட்டும் எழுப்பிக் கொண்டால் போதும்!

கண்மணி குணசேகரன் நான் மதிக்கும் ஒரு படைப்பாளி. சென்ற காலங்களில் அவரைப்பற்றி தொடர்ந்து எழுதியும் வந்திருக்கிறேன். வறிய நிலையில் இருந்து தன் உழைப்பால் எழுத்தாளராக அறிய வந்தவர். இந்தக் கூட்டத்தில் நாஞ்சில்நாடன் கண்மணியின் வாழ்க்கையைப்பற்றிச் சொல்கிறார். மிகக்குறைவான வருமானம் உள்ள வாழ்க்கை. மனைவி பெற்றோரின் மரணங்கள். அந்த சோதனைகள் நடுவே சலிக்காமல் நின்று பேராசிரியர்கள் செய்யக்கூடிய பணியை தனியாகச் செய்திருக்கிறார். பல்கலை மானியக்குழு இத்தகைய ஆய்வுகளுக்காக ஆண்டுதோறும் பலலட்சம் ரூபாய்களை நிதியுதவிகளாக பல பேராசிரியர்களுக்கு அளித்துள்ளது. எவருமே இன்றுவரை எதையும் எழுதியதில்லை. பணம் மட்டும் மறைந்துவிட்டிருக்கிறது.

இன்றுவரை கண்மணி எந்த உதவியையும் எவரிடமிருந்தும் பெற்றதில்லை. நான் அறிந்து கண்மணியை தொடர்ந்து முன்னிறுத்தி வருவது தமிழினி வசந்தகுமார்தான். அவரோ நாஞ்சில்நாடனோ அல்லது கண்மணியின் தீவிர வாசகர்களோ வன்னியரல்ல என்பது கண்மணிக்கு தெரியுமென நினைக்கிறேன். கண்மணி இன்று சாதி அடையாளத்தில் புகலிடம் தேடுவது அவருக்கு உடனடி லாபம் அளிக்கலாம், அது அவரது படைப்புமனத்துக்கு ஒரு இழப்பே.

மேடை நிகழ்ச்சியைப் பற்றி அன்பழகன் எழுதுகிறார், 'பேராசிரியர் பழமலை எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு கண்மணி பற்றி குறிப்பிட நேர்ந்தபோது பள்ளி மாணவனுக்கு கற்பிக்கும் தொனியுடன் எப்படி எழுதக்கூடாது இனி எப்படி எழுத வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்'. மிக இயல்பான விஷயம். பழமலை இப்போது கண்மணியின் இயக்கத்தலைவர்.

அன்பழகன் எழுதுகிறார். நன்றிகூற வந்த கண்மணி பழமலை பெயரைக் குறிப்பிட்டு 'விட்டுட்டும் போகமுடியாது, இட்டுட்டும் போக முடியாதுங்கிற ஆளு அய்யா' என்றார். 'எனக்கு நல்லாத்தெரியும். நான் எழுதுனதை எங்க வட்டாரத்துக்காரங்க யாருமே

படிச்சதில்லை. படிச்சாத்தானே தெரியும் நான் என்ன எழுதியிருக்கேன்னு. பதினேழு வயசிலேருந்து இருபது வருஷமா எழுதறேன். 3 கவிதைத்தொகுப்பு, 3 சிறுகதைத் தொகுப்பு, 2 நாவல் வந்தாச்சு. இப்ப இந்த அகராதி. படிச்சுப் பாருங்க. என்ன ஏதுன்னு புரியாம யோசனை சொல்ற வேலை எங்கிட்ட வேணாம். தமிழ்ல நான் ஒரு சிறந்த எழுத்தாளன். இதுல எனக்கு சந்தேகமே இல்ல. யாருக்காவது இருந்தா படிச்சுப் பாருங்க...' என்றார்.

ஆம், சான்றோர் அமர்ந்துள்ள மேடையிலேறி நின்று நான் சிறந்த எழுத்தாளன் என்று அறிவிக்கும் அந்த ஆண்மையே நல்ல எழுத்தாளனின் அடையாளம். அது அணையாமலிருக்கும்வரை மட்டுமே அவரால் எழுதவும் முடியும். கண்மணி தமிழின் சிறந்த படைப்பா. ஒரு விமரிசகனாக எனக்கு அதில் ஐயமும் இல்லை. ஆனால் நல்ல எழுத்தாளர்கள் ஒருபோதும் நிழல்களில் நிற்பதில்லை என்பதை மட்டும் கண்மணிக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜூலை 16, 2008

[51. ஒரு விழா]

குமரிமாவட்டத்தின் மலையோரப்பகுதிகளான விளவங்கோடு, கல்குளம் வட்டங்களுக்கும் தமிழகத்தை ஒட்டிய பகுதிகளான அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்களுக்கும் பண்பாட்டு ரீதியாக நிறைய வேறுபாடுகள் உண்டு. அகஸ்தீஸ்வரம் தோவாளைப்பகுதிகளில் தமிழகப்பெருநிலத்தின் பண்பாட்டுத்தாக்கம் அதிகம். ஆகவே திராவிட இயக்கத்தின் பாதிப்பும் அதிகம். இங்குள்ள கிராமிய அறிவியக்கம் என்பது பெரும்பாலும் திராவிட இயக்கச் சார்பு உடையதாகவே இருக்கும். அதற்கே உரிய ஆர்ப்பாட்டமான போலிமொழி, மேடைப்பேச்சையும் திரைப்படத்தையும் மட்டுமே கொண்ட கலாசாரச் செயல்பாடுகள். நடிகர்களுக்கான ரசிகர்மன்றங்கள் இப்பகுதியின் முக்கியமான பொதுச்செயல்பாடுகளாக அரைநூற்றாண்டாகவே இருந்துவந்திருக்கின்றன. எண்பதுகளில் திராவிட அரசியல் கவர்ச்சியை இழந்தபோது ரசிகர் மன்றச்செயல்பாடுகள் உச்சத்தை அடைந்தன. இப்போது இப்பகுதி ஒட்டுமொத்தமாகவே சாதிய அரசியலுக்குள் கவிழ்ந்துவிட்டது.

நேர்மாறாக கல்குளம் விளவங்கோடு பகுதிக்கே உரிய தனிப்பண்பாட்டுக் கூறுகள் சில உண்டு. ஒன்று திராவிட இயக்கம் கிட்டத்தட்ட பெயரளவுக்கே உள்ளது என்பது. இங்குள்ள முதன்மையான அரசியலியக்கங்கள் காங்கிரஸும் கம்யூனிஸ்டுக் கட்சியும்தான். இப்பகுதியின் பண்பாட்டுக்கூறுகளை பெரும்பாலும் கம்யூனிஸ்டுக் கட்சியும் கிறித்தவ சபைகளும்தான் தீர்மானித்திருக்கின்றன. இந்தப் பண்பாட்டு அம்சங்களை புறவயமாக விளக்குவது கஷ்டம், இருந்தாலும் சில அடையாளங்களைச் சுட்டிக் காட்டலாம்.

1. இந்தப்பகுதியில் அனேகமாக எல்லா ஊர்களிலும் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் நூலகங்கள் உள்ளன. அவற்றின் செயல்பாடுகளில் ஊராரின் பங்களிப்பு மிக அதிகம். நூலகத்துக்கென பணமும் நிலமும் கேட்டால் எப்படியும் கிடைத்துவிடும் என்றார் ஒரு நண்பர்.
2. அதேசமயம் திரையரங்குகள் மிகமிகக் குறைவு. மொத்தமே நான்கைந்து அரங்குகள். அவற்றில் பாதியில் மலையாளப்படம்தான் ஓடும். ரசிகர்மன்றச் செயல்பாடுகள் அனேகமாக கிடையாது. எம்ஜிஆர், ரஜினிகாந்துக்குக் கூட ரசிகர்திரள் கிடையாது.
3. எல்லா தொழிலுக்கும் ஏதாவது தொழிற்சங்க அமைப்பு உண்டு. ஆகவே கூலி விஷயங்களில் கறாரான பேச்சுதான். ஏமாற்றுவது நடக்காது. வேலைநிறுத்தங்கள் கூலித்தகராறுகள் எப்போதும் உண்டு.
4. சென்ற அரை நூற்றாண்டில் இப்பகுதியிலிருந்துவந்த அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் மிக நேர்மையானவர்கள். டி.மணி, கொச்சுமணி, ஜே.ஹேமச்சந்திரன், இஸ்மாயீல், முகமது அலி முதல் இன்றைய லீமா ரோஸ் முதலிய கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல ஜேம்ஸ், டென்னிஸ் போன்ற காங்கிரஸ்காரர்கள் கூட மிக நேர்மையானவர்கள் என்று புகழ்பெற்றவர்கள்.
5. ஊழலுக்கு எதிரான ஒரு மக்கள் மனநிலை இங்கு உண்டு. சின்னச் சின்ன ஊழல்கள் கூட உடனடியாக சுவர்களில் போஸ்டர்களாக அடித்து ஒட்டப்படும். இப்போது தக்கலை, மார்த்தாண்டம், குலசேகரத்தில் காணப்படும் சுவரொட்டிகளில் 90 விழுக்காடு ஊழலை அம்பலப்படுத்தும் போஸ்டர்களே. ஒரு வெளியாள் ஊருக்கு வந்தால் இந்தச்

சுவரொட்டிகளைப் பார்த்து மலைத்துவிடுவார். இந்த அம்சத்தை தமிழகத்தில் எங்கும் காணமுடியாது. குமரிமாவட்டத்தில் அதிகாரிகள் மேல் வரும் புகார்களில் எண்பது சதவீதம் இந்த பகுதியில் இருந்து வருவதே. சென்ற 5 வருடத்தில் லஞ்சம் வாங்கு போது பிடிபட்ட எல்லா நிகழ்ச்சிகளும் இப்பகுதி மக்களால் பிடித்துக் கொடுக்கப்பட்டவையே.அதிகாரிகளுக்கு இது தண்டனைப்பகுதி என்பார்கள்

6. பொதுவான வாழ்க்கைத்தரம் அதிகம். கல்வி சேமிப்பு ஆகியவற்றின் மீது ஒருவகையான வெறியே உண்டு. சுகாதாரத்துக்கான தேசியவிருது பெற்ற ஐந்து தமிழக ஊர்களும் இப்பகுதியில்தான் உள்ளன.
7. கிரிக்கெட் ஆர்வமே இப்பகுதியில் கிடையாது. ஊடகத் தாக்கத்தால் இருபது வயதுக்கு குறைவானவர்களிடம் ஓரளவுக்கு இப்போது உருவாகி வருகிறது என்று சொல்லலாம்.
8. இளைஞர் அமைப்புகள் ஏதேனும் வகையில் செயல்படாத ஊரே கிடையாது.

மார்த்தாண்டத்தில் இருந்து திருவட்டார் செல்லும் வழியில் உள்ளது பயணம் என்ற சிற்றூர். இங்கே பயணம் இளைஞர் மன்றம் என்ற அமைப்பு இருபத்தைந்து வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இருபத்தைந்து வருடங்கள் தொடர்ச்சியாக நூலகம், வாசிப்புக்கூட்டங்கள் ஆகியவற்றுடன் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான ஓவிய, இலக்கியப்போட்டிகளையும் நடத்தி வருகிறார்கள். மார்த்தாண்டம் கிறிஸ்தவக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தவரும் புகழ்பெற்ற நாளிதழ் சேகரிப்பாளரும் ஆய்வாளருமான முனைவர் தியாகசாமி அவர்கள் இதன் நிறுவனர், கௌரவ தலைவர். இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி இவ்வருடம் நடந்த போட்டிகளில் பரிசுகள் வழங்குவதற்காக 19-7-08 அன்று சிறப்பு விருந்தினராக நான் சென்றிருந்தேன்.

இளைஞர் அமைப்புக்கென்று பயணத்தில் சொந்தக் கட்டடம் இருக்கிறது, சத்தியநேசன் நினைவுக் கட்டடம். ஆனால் மார்த்தாண்டம் சாலையில் இரு கல்யாணமண்டபங்களை வாடகைக்கு எடுத்து போட்டிகளை நடத்தினார்கள். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளும் ஒரு திருவிழா. காலைமுதலே போட்டிகள் பல இடங்களில் பல நடுவர்களின் முன்னிலையில் நடந்து கொண்டிருந்தன. நான் நான்குமணிக்குச் செல்லும்போது சாலையெங்கும் மாணவர்கள் வந்த வாகனங்கள். பலவகை சீருடைகள் அணிந்த மாணவர்களும் மாணவிகளும். சிரிப்புகள் கூக்குரல்கள். ஐஸ் நக்கும் முகங்கள், தெத்துப்பற்கள், முகப்பருக்கள், வெட்கங்கள், இலக்கில்லாத உற்சாகங்கள், கூக்குரல்கள். காரிலிருந்து நான் இறங்கியதும் ஐம்பது குரல்கள் ‘ஓ!’ என்று சேர்ந்து கத்தின.

கிட்டத்தட்ட போட்டிகள் முடிவடைந்து கொண்டிருந்தன. கீழே பேச்சுப்போட்டிக்கு யாரோ உரக்க கீச்சுக்குரலெழுப்பிக் கொண்டிருந்தார்கள். ‘இந்திய அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தம் சரியா?’ என்பதே போட்டித்தலைப்பு. தலைப்பை அங்கு வந்தபிறகுதான் கொடுப்போம் என்றார் அமைப்பாளர் ராபர்ட். அவர்தான் என்னை தேடிவந்து அழைத்தவர்.

அங்கே குமரிமாவட்டத்தின் புகழ்பெற்ற பேச்சாளரும் கவிஞருமான குமரி அமுதன் வந்திருந்தார். ஏற்கனவே எனக்கு அறிமுகமான நண்பர். தக்கலை அருகே குமாரபுரத்தில் ஒரு கிறித்தவப்பள்ளியில் வேலைபார்க்கிறார். அவர் சிறுவனாக இருந்தபோது பெற்றோரை இழந்து முற்றிலும் கைவிடப்பட்டு திருச்சபையின் பாலர் விடுதியில் நின்று படித்திருக்கிறார். பட்டமும் ஆசிரியர் பயிற்சி இளநிலை பட்டமும் பெற்று அதே பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார். சமீபத்தில் குமரிமாவட்ட குழந்தை விளையாட்டுப் பாடல்களை ‘குலை குலையா முந்திரிக்கா’ என்றபேரில் தொகுத்திருக்கிறார்.

இன்னொருவர் பிருந்தா சுரேஷ் என்ற பேரில் கவிதைகள் எழுதும் சுரேஷ்.

மேடைப்பேச்சாளர். அங்கிருந்த அனைவருமே ஏதோ ஒரு வகையில் கலை இலக்கியச் செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள். இலக்கிய வாசகர்கள். குமரிமாவட்டத்தில் இளைஞர்கள் படிப்பு முடிந்ததுமே வேற்றூர் சென்றுவிடுவதனால் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய தலைமுறை வந்து பொறுப்பேற்றால் மட்டுமே அமைப்புகள் முன்னகரும். பயணம் இளைஞர் மன்றத்தின் ஐந்தாவது தலைமுறை இது. ஆறாம் தலைமுறை பையன்கள் ஒரே கும்பலாக வந்து என்னுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு போட்டியிலும் பத்து ஆறுதல் பரிசுகள் உண்டு. ஆகவே கிட்டத்தட்ட 500 பரிசுகள். சான்றிதழ்களை கட்டாகக் கொண்டு வந்து என்னிடம் கையெழுத்திடச் சொல்லிவிட்டார்கள். முந்நூறு கையெழுத்து வரை போட்டேன். குமரி மாவட்டம் களியிக்காவிளையைச் சேர்ந்த ஓவியரான ராஜசேகரன் சமீபத்தில் தன் பிரம்மாண்டமான ஈஸல் ஓவியம் மூலம் புகழ்பெற்றவர். அடூர் கோபாலகிருஷ்ணனின் மூன்று படங்களுக்கு கலை இயக்குநராக பணியாற்றியிருக்கிறார். இவ்வருடம் கேரள அரசு விருதும் பெற்றிருக்கிறார். அவரை கௌரவிப்பதும் விழாவின் முக்கியமான நிகழ்ச்சி. ஆறடி உயரத்தில் ஜிப்பா தாடி மென்மையான பேச்சு என மலையாள கலைப்படத்துறையினரின் இலக்கணத்துடன் இருந்தார் ராஜசேகரன். அவரைப்பற்றி சுகுமாரன் சமீபத்தில் காலச்சுவடு இதழில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

விழாவில் என்னை குமரி அமுதன் அறிமுகம் செய்து பேசினார். ராஜசேகரனை மார்த்தாண்டம் பேச்சாளர் பேரவை செயலாளர் விஜயகுமார் அறிமுகம் செய்து வைத்து பேசினார். இந்த அமைப்பின் முக்கியமான புரவலரான மார்த்தாண்டம் தொழிலதிபர் பி.கே.சிந்துகுமார், பேராசிரியர் தியாகசாமி ஆகியோர் கலந்துகொண்டார்கள். நான் ராஜசேகரனுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கினேன்.

ஓவியப்போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு ராஜசேகரன் பரிசு வழங்கினார். பிறருக்கு நான். பலநூறு பரிசுகள். வழங்கிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆறுதல் பரிசுகள் அதிகமும் பெரும்பாலும் கிழக்கு பதிப்பகத்தின் அறிமுக நூல்வரிசையைச் சேந்தவை. Prodigy என்ற குழந்தைகளுக்கான பதிப்பகத்தை அவர்கள் நடத்துகிறார்கள். மருதன், புதுவை ரா ரஜினி, சொக்கன் போன்றவர்கள் எழுதிய அப்துல் கலாம், பில்கேட்ஸ், பெரியார், பாரதி போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகள். பத்ரி சேஷாத்ரி எழுதிய உலகம் என்ற சிறு நூலைத்தான் கை சலிக்க கொடுத்துக் கொண்டே இருந்தேன். நான் சின்னப்பையனாக இருக்கும்போது பிரேமா பிரசுரம் வெளியிட்ட அழுக்குத்தாள் நூல்களை தருவார்கள். இப்போது நூல்களின் அச்சுத்தரம் மேம்பட்டிருப்பது மகிழ்ச்சியை அளித்தது. பாதி குழந்தைகள் அங்கேயே படிக்க ஆரம்பித்துவிட்டன.

மேடையில் இருந்து குழந்தைகளைப் பார்ப்பது அலாதியான உவகையை அளிப்பதாக இருந்தது. பிறந்தது முதல் தணியா மோகத்துடன் நான் பார்த்துவரும் எனது மண்ணின் முகங்கள். முகம்பார்த்தே சாதியையும் பிராந்தியத்தையும் என்னால் சொல்லிவிடமுடியும். ஆர்வமே உருவான முகங்கள். கிண்டல் ஒளிந்திருக்கும் முகங்கள். ‘சமர்த்து’ குழந்தைகள்... எத்தனையோ விஷயங்கள் என் கண்ணில் பட்டன. மேலும் எத்தனையோ அகத்தில் பதிவாகியிருக்கக் கூடும்.

புறக்கணிக்கப்பட்டு தானாக வளரும் குழந்தைகளை முன்பெல்லாம் நிறைய காணலாம். இப்போதுகூட தமிழ்நாட்டில் அதிகம் கண்ணுக்குப்படுபவை அவையே. இங்கே அப்படிப்பட்ட ஒரு குழந்தை கூட இல்லை. கான்வெண்ட் பள்ளிகளுக்கு இணையாகவே அரசுப்பள்ளிகளிலும் சூட்டிகையான குழந்தைகள் நிறைய இருந்தன. வழக்கம்போல எல்லா தளத்திலும் பரிசுபெறும் அதி சூட்டிகையான ஓரிரு குழந்தைகள். தங்கள் பள்ளியோ குழுவோ பரிசுபெறும்போது சம்பந்தப்பட்டவர்கள் குதியாட்டம் போடுகிறார்கள். இந்த நட்சத்திரங்கள் மேடையேறும்போது அரங்கமே அதிர்கிறது! தூய்மையான அந்த உற்சாகம் நம்மையும்

தொற்றக்கூடியது.

பெயர்கள்தான் எப்படியெப்படி மாறிவிட்டிருக்கின்றன! கிறிஸ்தவபெயர்களில் மேரியையே காணவில்லை. அந்தோணி, ஸ்டீபன் என யாருமே இல்லை. ஏகப்பட்ட ஸ்டெஃபிகள். ஜெஃபி, பிளெஸி என விசித்திரமான பெயர்கள். நிதீன், ஜதீன் என பையன்களின் பெயர்கள். கூட கிறிஸ்தவ அடைமொழிகள் சிலபோது. முற்றிலும் புதிய முளைகள். மழைக்குப்பின் காட்டைப் பார்க்கப்போகும்போது எல்லாமே புதிதாக இருப்பதைப்போல. ஒரு புதிய தலைமுறை உருவாகிறது குமரி மண்ணில். அவர்கள் வாசித்தும் எழுதியும்தான் வளர்கிறார்கள்.

ஜூலை 22, 2008

52. நாமக்கல் ’கூடு’

‘**கூ**ளமாதாரி’, ‘நிழல்முற்றம்’ போன்ற நாவல்கள், ‘திருச்செங்கோடு பீக்கதைகள்’ போன்ற சிறுகதைத்தொகுதிகள் ஆகியவற்றின் ஆசிரியரான எழுத்தாளர் பெருமாள் முருகன் இப்போது நாமக்கல்லில் பேராசிரியராக வேலை பார்க்கிறார். ஆர்.ஷண்முகசுந்தரம் நாவல்களைப் பற்றிய அவரது முனைவர் பட்ட ஆய்வேடு முக்கியமானது என்று குறிப்பிடப்படுகிறது. பழந்தமிழ் ஆராய்ச்சி மற்றும் பதிப்புகளைப்பற்றிய ஆராய்ச்சி ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவர். பலவருடங்களாக அவர் நாமக்கல்லில் ‘கூடு’ என்ற ஆராய்ச்சிக்குழுவை நடத்திவருகிறார்.

ஏறத்தாழ முப்பதுபேர் வரை பங்குகொள்ளும் இந்த குழுமம் மாதம் ஒரு முறை கூடுகிறது. அதிகமும் முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களும் மாணவர்களும் அடங்கியது. பெருமாள் முருகனின் வீட்டு மொட்டைமாடிதான் கூடும் இடம். பங்கேற்பவர்கள் முன்னரே அறிவிக்கப்பட்ட தலைப்புகளில் கட்டுரைகள் கொண்டுவந்து வாசிக்க அவற்றின் மேல் விரிவான விவாதம் நிகழும். நாமக்கல்லின் முக்கிய இலக்கிய ஆய்வாளர் பொ.வேல்சாமி (‘பொற்காலங்களும் இருண்டகாலங்களும்’, ‘கோயில் நிலம் சாதி’ போன்ற நூல்களின் ஆசிரியர்) பெரும்பாலும் கலந்துகொள்வார்.

நான் இரு வருடங்களுக்கு முன்னால் பொ.வேல்சாமியைப் பார்க்க நாமக்கல் சென்றிருந்தபோது கூடு குழும நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன். பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசினேன். உற்சாகமூட்டும் உரையாடலாக இருந்தது. பொதுவாக தமிழாய்வு மானவர்களின் மனத்தேங்கல் நம்மை சோர்வடைய வைக்கும். எங்கும் எப்போதும் ஒரே கேள்விகளையே கேட்பார்கள். அங்கிருந்த மாணவர்கள் வேறுவகையாக, இலக்கிய அடிப்படைகளில் நன்கு அறிமுகம் கொண்டவர்களாக இருப்பதைக் கண்டேன். அது பெருமாள் முருகனின் பங்களிப்பு என்று புரிந்தது.

இத்தகைய சிறிய தொடர்முயற்சிகள் பெரும்பாலும் பெருமாள் முருகன் போன்ற தனிநபர்களின் சலியாத இலக்கிய ஆர்வத்தின் சாட்சியங்கள். அவை நிகழும்போது சாதாரணமாக இருக்கும். பங்கேற்பாளர்களின் ஈடுபாடு சட்டென்று குறைவதும் காரணமில்லாமல் எழுவதுமாக பொறுமையைச் சோதிக்கும். ஆனால் நம்மையறியாமலேயே ஒரு வரலாறு உருவாகிக் கொண்டிருப்பதை சற்று கழிந்துதான் அறிவோம். கலையிலக்கியத்துறைகளில் நிகழும் எதுவும் வீணாவதில்லை, முற்றாக மறக்கப்படுவதும் இல்லை.

கூடு நிகழ்வு அதன் ஆவது கூட்டத்தை முடித்திருப்பதை அப்படிப்பட்ட ஒரு வரலாற்றுப் புள்ளியாகச் சொல்லவேண்டும். அதில் பங்கேற்ற நண்பர் ஒருவர் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

‘கூடு’ என்ற இலக்கிய ஆய்வரங்கின் மூன்றாமாண்டு தொடக்கவிழாவும் 25ஆவது அமர்வும் நாமக்கல்லில் எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களின் இல்லத்தில் சிறப்பாக (20.07.2008 மாலை 4.00 – 7.00) நிகழ்ந்தது. இதில் ப.செயப்பிரகாசம் மற்றும் பிரபஞ்சன் ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார்கள்.

ப.செயப்பிரகாசம் ‘வட்டார இலக்கியம்’ என்ற தலைப்பிலும் பிரபஞ்சன் ‘கதைகளினூடே

பயணம்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். மூன்று பெண்கள் உள்பட முப்பது ஆண்கள் கலந்துகொண்டனர். பெரும்பாலானோர் தமிழ் ஆய்வாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வு முருங்கை மரத்தின் கீழ் நடைபெற்றதால் நிகழ்ச்சியினைத் தொடங்கிவைத்து உரையாற்றிய பெருமாள் முருகன் பிரபஞ்சனின் 'பிருமம்' என்ற கதையினை நினைவுகூர்ந்து பேசினார். முருங்கை மரத்தினை பிரபஞ்சன் 'பிருமம்' என்று அக்கதையில் கூறியிருந்தார். நிகழ்வில் திரு. ப. செயப்பிரகாசம் மொழியின் முக்கியத்துவம், வட்டாரச் சொற்களின் அழிவு, கரிசல் எழுத்தாளர்கள் வட்டார மக்களின் புழங்குபொருள் சார் வழக்காறுகள் போன்றன பற்றி விளக்கிக்கூறினார். இவரது உரை தஞ்சை மற்றும் கரிசல் வட்டார இலக்கியத்தைப் பற்றி மட்டும் இருந்தது.

திரு. பிரபஞ்சன் கதை படிப்பதன் நோக்கம் என்ன, கதையைப் படைப்பதன் நோக்கம் என்ன, சிறந்த கதை எவ்வாறு இருக்கும் என்று பல்வேறு சிறுகதைகளை எடுத்துக்கூறி விளக்கினார். வரலாற்று மீட்டுருவாக்கக் கதைகள் என்ற போர்வையில் எழுதப்படும் விஷம்தோய்ந்த கதைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இரண்டு படைப்பாளர்களும் தங்களின் உரையில் உதாரணத்திற்காகக் கூட தாங்கள் எழுதிய கதைகளைப் பற்றிக் கூறவில்லை என்பது இலக்கிய அவையடக்கத்திற்குச் சான்றாக இருந்தது.

சிறப்புரைகளைத் தொடர்ந்த கலந்துரையாடல் நிகழ்ந்தது. பிராமணர் மற்றும் பிராமணர் அல்லாதோர் இலக்கியம் பற்றியும் கணிப்பொறிப் பயன்பாட்டினால் ஏற்படும் வட்டார வழக்குச் சொற்களின் அழிவு பற்றியும் வட்டார இலக்கியங்களின் பயன் குறித்தும் வினாக்கள் எழுப்பப்பட்டு விடைகள் பெறப்பட்டன.

நிகழ்ச்சியின் நன்றியுரையில் சரவணன் மறைந்த எழுத்தாளர் திரு. நா.பார்த்தசாரதி நடத்திய 'தீபம்' இலக்கிய அரங்குபோல 'கூடு' இலக்கிய அரங்கும் அழிந்துபடக் கூடாது என்று தனது ஆதங்கத்தை முன்வைத்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினருக்கு பெருமாள் முருகன் அவர்கள் நினைவுப் பரிசாக புத்தகம் வழங்கினார். தேநீர் விருந்துடன் அரங்கு கலைந்தது. நிகழ்ச்சியினை ம. நடராஜன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

ஜூலை 23, 2008

53. ஜெகமிதுவே ஒரு நாடகரங்கம்!

நேற்றிரவு ஒன்பது மணியளவில் ஷாஜி எழுதிய கட்டுரை ஒன்றை மொழியாக்கம் செய்துகொண்டிருந்தேன், உயிர்மை இதழுக்காக. வானொலி பற்றிய கட்டுரை. என்னுடைய வானொலி நினைவுகள் எழுந்தன. எங்கள் வீட்டில் வானொலி இல்லை. அப்பாவுக்கு அந்தமாதிரி நாகரீகமெல்லாம் பிடிக்காது – பிள்ளைகளை 'அட்சர விரோதிகள்' ஆக்கிவிடும் என்ற எண்ணம். ஓரளவு சரிதான் போலிருக்கிறது. நாங்கள் மூவருமே எதையாவது படித்துக் கொண்டுதான் இருந்தோம்.

ஆனாலும் இசைக்காக நான் 'நாயாய்' அலைந்து திரிந்திருக்கிறேன். பாடல்கள் ஒலிக்கும் நேரத்தில் மதியவெயிலில் வீடுகளுக்கு வெளியே நின்று வியர்த்து தகித்து பாட்டு கேட்பேன். இசையே பித்தாக வாழ்க்கையை நடத்திவரும் நண்பர் சுகா (சுரேஷ் கண்ணன்) யுவன் போன்றவர்களிடம் பேசும்போது அவர்கள் சொல்லும் பெரும்பாலான பாடல்களை நான் கேட்டிருப்பது தெரிகிறது. என் கவனத்துக்கு வராமல் போன முக்கியமான பாடல்கள் குறைவே. அப்படியானால் எனக்கும் கொஞ்சம் இசையார்வம் இருந்திருக்கிறது.

ஷாஜியின் கட்டுரை சம்பந்தமே இல்லாமல் பல பிம்பங்களை மனதில் எழுப்பியது. நான் பாட்டுகேட்டு நிற்கும் காட்சி. கேட்ட பாடல்கள். பாடல்கள் ஒரு குறிப்பிட்ட கால இடத்துடனும் மனநிலையுடனும் இணையும் விதத்துக்கு நிகரே இல்லை. 'செந்தாமரையே செந்தேனிதழே...' ஏ.எம்.ராஜா இடைவேளைக்குப் பின் திரும்பிவந்தபோது பாடியபாடல். உடனே 'முத்தாரமே உன் ஊடல் என்னவோ' என்ற பாடல். அத்துடன் இணைந்து 'எங்குமே ஆனந்தம், ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்' கண்டசாலாவின் பாடல்.

சுகாவை கூப்பிட்டு அந்தப்பாடல்களை எப்படி கேட்பது என்றேன். http://music.cooltoad.com என்ற இணையதளத்தை சொல்லி அங்கே சென்று பதிவிறக்கம் செய்யலாம் என்றார். உடனே பதிவிறக்கம் செய்துவிட்டேன். என்னிடம் அகலக்கற்றை இணைய இணைப்பு இல்லை. பதிவிறக்கம் செய்ய மிகவும் தாமதமாகும். இருந்தாலும் அந்தப்பாடல்களை பெற்று கேட்க ஆரம்பித்தேன். வழக்கம்போல நான் பாட்டு கேட்க ஆரம்பித்தால் விசித்திரமான பித்துநிலை கைகூடிவிடும். அந்தப் பாடல்களில் இருந்து விதவிதமான மனநிலைகள், சிந்தனைகள், காட்சிபிம்பங்கள். வெளிவரவே முடியாது. இரவெல்லாம், விடியும் வரை அந்த மூன்று பாடல்கள்தான்.

அந்தப்பாடல்களில் உள்ள பொதுத்தன்மை என்ன? அனிச்சையான ஒரு மனத்தேர்வு இருப்பதனால் ஏதோ ஒரு பொதுத்தன்மை இருந்தாகத்தான் வேண்டும். மூன்றிலும் ஆண்குரல் சன்னமாக, சற்று கம்மியது போல ஒலிக்கிறது. இனம்புரியாத சோகம் கலந்தது போல. ஆனால் பாட்டில் சோகம் இல்லை. ஒன்று இயற்கையை வருணிக்கும் பாடல். பிற இரண்டும் காதல் பாடல்கள். கண்டசாலா குரலில் எப்போதுமே சோகம் இருக்கும். ராஜா சிலசமயம் கொஞ்சுவார். இந்தப் பாடல்கள் பெரும்பாலும் கீழ்ஸ்தாயியில் ஒலிக்கின்றன. என்ன பொதுக்கூறு இருக்கும்? சரி, அதைக் கண்டுபிடித்துத்தான் என்ன ஆகப்போகிறது?

'எங்குமே ஆனந்தம்' பாடலில் எங்குமே ஆனந்தம் பல்லவிக்குப் பின் வரக்கூடிய இசை அசாதாரணமான துயரத்துடன்தான் ஒலிக்கிறதென்று தோன்றுகிறது. 'ஜீவனில் மேவுது காதல் தாகம்!' அதில் துயரம் இருக்கத்தான் செய்கிறது. 'மயலாலே அலையும் தரங்கம் ' என்ற

வரிக்குப் பின் வரும் மெல்லிய ஆலாபனையும் சரி, ‘இது காதலோ’ என்ற வரியின் எடுப்பும் சரி, முடியும்போதுள்ள ஆலாபனையும் சரி துயரச்சாயையுடந்தான் இருக்கின்றன. அதை உணர்வு ரீதியாக புரிந்துகொள்ள முடிகிறது. இயற்கையின் முன் நாம் அடையும் மன எழுச்சியில் இருப்பது விளக்கமுடியாத உயிரின் துயரம். விசித்திரம்தான், எங்குமே ஆனந்தம் என்று துயரத்துடன் பாடுவது!

‘முத்தாரமே’ என்ற பாட்டிலும் ஒலிப்பது சோகம்தானா? ‘சொல்லாமல் தள்ளாடும் உன் உள்ளம் என்னவோ?’ பெண் குரலில் துள்ளல் இருக்கிறது. ராஜா துயரம் கலந்த குரலில்தான் பாடுகிறார். அந்த புல்லாங்குழல் அவரது துயரத்துடன்தான் கலந்து ஒழுகிச்செல்கிறது. ‘செந்தாமரையே’ பாட்டிலும் அந்த கித்தார் ஒலி இனம்புரியாத துயரத்துடன்தான் ஒலிக்கிறது. இதிலும் பெண்குரல் உற்சாகத்துடன் ஒலிக்க ஏ.எம்.ராஜா துயரச்சாயலுடன் பாடுகிறார்.

வெள்ளைச்சட்டையும் வேட்டியும் அணிந்து தொங்குமீசையுடன் முப்பத்தைந்து வருடம் முன்பு ‘செந்தாமரையே’ என்று பட்டாளம் அம்மன் கோயில் திருவிழாவில் மைக் பிடித்துப் பாடிய மணிகண்டன் என்ற அண்ணன் சிலவருடங்கள் கழித்து தற்கொலை செய்து கொண்டார். அவரது அம்மா மயக்கம் போட்டு விழுந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின் சுயநினைவுக்கு வரவேயில்லை. அவரது முடியெல்லாம் உதிர்ந்துவிட்டது, இமைமயிர்கள் கூட. கிழ ஆந்தைபோல திண்ணையில் குனிந்து அமர்ந்திருந்தாள்.

ஈரமான மார்கழி இரவுகள். தென்னை மரங்களை அசைக்கும் காற்று.தொலைதூரத்திலிருந்து வரும் வயல் மணம். உழவுகாலத்து புளிச்சேறுமணம். ஆடிமாசத்து பச்சை மணம். பொதியேறும் காலத்து பால் மணம். அறுவடை காலத்து கதிர்மணம். நெல்லில் குடியேறும் தெத்துப்பூச்சியின் இலை கசங்கிய வாடை. எத்தனை மனிதர்கள்! பெரும்பாலும் வயலிலேயே வாழ்ந்தவர்கள். வயல்களில் பலநூறு, பல்லாயிரம் முறை முளைத்து தழைத்து கதிரிட்டு சாய்ந்து அறுதடம் மட்டும் விட்டு மறைந்தவர்கள். மீண்டும் மீண்டும் உழுது புரட்டப்படும் மண். அதன் அழியாத தொல்மணம்...

பிம்பங்கள். பிம்பங்களை மட்டும் நெஞ்சில் மிச்சம் வைத்துவிட்டு காலம் மண்ணில் உள்ள அனைத்தையும் அழித்து அழித்துச் செல்கிறது. இந்த பிம்பங்களும் என்னுடன் சேர்ந்து மண்ணில் மறையுமென்றால் எதன் பொருட்டு திரும்பத்திரும்ப இதை நிகழ்த்துகிறது அது?

எப்படியும் விடிந்துவிடுகிறது. விடியும்போது எல்லாம் சரியாகிவிடுகிறது.

ஜூலை 26, 2008

54. ராஜமார்த்தாண்டன் 60 விழா

இலக்கிய விமரிசகரும், சிற்றிதழாளரும், கவிதை வரலாற்றாசிரியருமான ராஜ மார்த்தாண்டனுக்கு அறுபது ஆண்டு நிறைவு விழா நெய்தல் இலக்கிய அமைப்பின் சார்பில் நாகர்கோயில் ஆர்.ஓ.ஏ.கலையரங்கத்தில் 26-7-08 மாலை ஆறுமணிக்குத் தொடங்கியது. நாஞ்சில்நாடன் கோவையில் இருந்துவந்து வடிவீஸ்வரத்தில் அவரது தம்பி வீட்டில் தங்கியிருந்தார். நான் அலுவலகத்தில் இருந்து முன்னரே வந்து குளித்து உடைமாற்றி ஒரு ஆட்டோவில் ஏறி அவரது வீட்டுக்குச் சென்றேன். அங்கிருந்து இன்னொரு ஆட்டோவில் இருவரும் அரங்குக்கு வந்தோம். அங்கு குளச்சல் மு யூசுப் போன்ற நண்பர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

ஆறுமணியளவில் மெல்ல மெல்ல கூட்டம் சேர ஆரம்பித்தது. நாகர்கோயிலின் இலக்கிய நண்பர்கள் பெரும்பாலானவர்கள் வந்தார்கள். ஏறத்தாழ அறுபதுபேர். ராஜமார்த்தாண்டன் தன் மனைவி மகனுடன் வந்தார். அவருக்கு இரு குழந்தைகள். மகள் அஜிதா திருமணமாகி சென்னையில் இருக்கிறாள். ஒரு குழந்தை இருக்கிறது. மகன் திருச்செங்கோடு கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியராக இருக்கிறார்.

நிகழ்ச்சிக்கு நாகர்கோயிலின் மூத்த அறிஞர்களில் ஒருவராகிய கொடிக்கால் அப்துல்லா தலைமை ஏற்றார். குமரிமாவட்ட உருவாக்கத்துக்கான போராட்டங்களிலும் பின்னர் இடதுசாரி இயக்கங்களிலும் ஈடுபட்டு சிறைசென்றவர் (அப்போது கொடிக்கால் செல்லப்பா) சுந்தர ராமசாமியின் நண்பர். 2001ல் ராஜமார்த்தாண்டனுக்கு அவரே ஒரு பாராட்டுக்கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அறிமுக உரை வாசித்த நெய்தல் கிருஷ்ணன் ராஜமார்த்தாண்டனுடனான அறிமுகம் சுந்தர ராமசாமி வழியாக உருவாயிற்று என்று நினைவுகூர்ந்தார். சார் என்று அழைக்கத்தொடங்கி மெல்ல மெல்ல ஓய் என்று அழைக்குமளவுக்கு நெருங்கி வந்த உறவு அது என்றார். விழாவை முனைவர் அ.கா.பெருமாள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

கொடிக்கால் தன் தலைமை உரையில் இங்கே கூடியிருக்கும் பெரும்பாலான நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க வழியமைத்தது சுந்தர ராமசாமியின் ஆளுமையும் அவரது இல்லமும்தான் என்று சொல்லி அவரை இன்று நாம் நினைவுகூரவேண்டும் என்றார். ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன் கொடிக்கால் ‘புதுமைத்தாய்’ என்ற இதழை வெளியிட்ட காலத்தில் அதில் அன்று மாணவராக இருந்த ராஜமார்த்தாண்டன் தன் ஆரம்பகால கவிதைகளை வெளியிட்டிருக்கிறார் என்று நினைவுகூர்ந்தார்.

மொழிபெயர்ப்பாளரும் பிரதிமேம்படுத்துநருமான எம்.எஸ். தன் வாழ்த்துரையில் நண்பனை பிறரிடம் புகழவேண்டும் என்ற விதி ஒன்று உள்ளது. அனேகமாக தினமும் சந்திக்கும் நண்பராக இருக்கும் ராஜமார்த்தாண்டன் மேல் தனக்கிருக்கும் மதிப்பையும் பிரியத்தையும் சொல்ல இந்த மேடை ஒரு வாய்ப்பளிக்கிறது, அதற்கான இந்த சந்தர்ப்பத்திற்கு நன்றி சொல்ல வேண்டும் என்றார்.

நாஞ்சில்நாடன், அவரும் ராஜமார்த்தாண்டனும் அ.கா.பெருமாளும் எம்.வேதசகாயகுமாரும் பேராசிரியர் ஆறுமுகம்பிள்ளையும் (ராஜேந்திரன்) தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரியில் ஒருசாலை மாணாக்கர்கள் என்றார். ஆனால் ராஜமார்த்தாண்டனுடன் நட்பு ஏற்பட்டது

‘தலைகீழ் விகிதங்கள்’ நாவலுக்கு சுந்தர ராமசாமி காகங்கள் அமைப்பில் நடத்திய விமரிசனக் கூட்டத்தில்தான். அன்று பொதுவாக எதிர்மறை விமரிசனங்கள் எழுந்தன. மறுநாள் சுந்தர ராமசாமியிடம் ‘நீங்கள் கடுமையாக விமரிசிக்கும்போது வருத்தமாக இல்லை, ஆனால் இவர்கள் விமரிசிக்கும்போது இவர்களெல்லாம் யார் என்று தோன்றுகிறது’ என்று சொன்னார். சுந்தர ராமசாமி அவர்கள் நாஞ்சில்நாடனின் எழுத்தின் மீதும் அவர் மீதும் அவரைவிட அதிகமாக பற்று வைத்திருக்கிறார்கள் என்றும் விமரிசனம் அந்த எதிர்பார்ப்பிலிருந்து எழுவதே என்றும் சொன்னார். அந்தக் கூட்டத்தில்தான் கறாரான விமரிசகராக ராஜமார்த்தாண்டன் அறிமுகமானார்.

ராஜமார்த்தாண்டன் கவிதைகள் எழுதியிருக்கிறார். இதழ்கள் நடத்தியிருக்கிறார். பெரிய இதழில் பணியாற்றியிருக்கிறார். ஆனால் கவிதை விமரிசகராகவே அவரது இடம் உறுதிப்பட்டிருக்கிறது. சென்னையில் இருந்த காலகட்டங்களில் குடிப்பழக்கத்தால் உடல் நலம், நேரம் ஆகியவற்றை பெரிதும் இழந்துவிட்டார். சில வருடங்களுக்கு முன்னர் அவர் மிக அபாயகட்டத்தில் இருந்தார். அத்துடன் குடும்ப கவலைகளும் அவரை வாட்டின. இப்போது உடல்நலம் சீரடைந்துள்ளது. குடும்பநிலை சிறப்பாக இருக்கிறது. இப்போது அவர் முகத்தில் உள்ள ‘தெளிச்சம்’ எப்போதும் இருந்தது இல்லை. இனி அவரிடமிருந்து மேலும் சிறந்த படைப்புகள் வரவேண்டும் என்றார். பூமிக்கு நிலவு 61 சதவீத முகத்தை மட்டுமே காட்டுகிறது, மீதிப் பகுதி காட்டப்படுவதேயில்லை. ராஜமார்த்தாண்டன் தன் முழுமையை இன்னும் வெளிப்படுத்தவில்லை. அது வெளிப்படவேண்டும் என்றார் நாஞ்சில்நாடன்.

சுரேஷ் குமார இந்திரஜித், ராஜமார்த்தாண்டன் மதுரையில் தினமணி உதவியாசிரியராக வேலைபார்த்த நாட்களில்தான் தனக்கு அறிமுகமாகி குடும்ப நண்பராக ஆனார் என்றார். அப்போது யாத்ரா இதழை நடத்திக் கொண்டிருந்த ஜெயபால், மணி ஆகியோருடன் இணைந்து அவரை சந்திக்க நேர்ந்தது. ஒரேதெருவில் வசித்தோம். இலக்கிய விவாதம் செய்வோம். ஒரு கட்டத்தில் ஒரு இலக்கிய அமைப்பை உருவாக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இருவரும் இணைந்து சந்திப்பு என்ற நிகழ்ச்சியை நடத்த ஆரம்பித்தோம். அப்போது இரு பதிப்பகங்கள் மட்டுமே இலக்கிய நூல்களை வெளியிட்டன. க்ரியா ஒருசிலரது நூல்களை மட்டுமே வெளியிடும். ஆகவே அன்று இலக்கிய வெளியீட்டகமாக அணுகக்கூடியதாக இருந்தது மீரா நடத்திய ‘அன்னம்’ மட்டுமே. அன்னத்தின் புத்தக விற்பனை நிலையம் ஒன்று மேலமாசி வீதியில் ஒரு மாடியில் இருந்தது. அங்கே கூட்டங்களை நடத்தினோம்.

சுந்தர ராமசாமி பங்கேற்ற ஒருசந்திப்புக்கு அறைகொள்ளாத கூட்டம் வந்தது. அதைத்தொடர்ந்து காலச்சுவடு இதழுக்கு ஒரு இதழ் அறிமுகக் கூட்டமும் நடத்தினோம். உடனே ராஜமார்த்தாண்டன் அவரே பிரமிள் பங்கேற்கும் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார். நான் பிரமிளை அப்படித்தான் சந்தித்தேன். பிரமிளுக்கு போடப்பட்டிருந்த அறையில் நானும் என் நண்பர் ஒருவருமாகச் சென்றபோது அவர் கையில் டீ கோப்பையுடன் உலவிக் கொண்டிருந்தார். என்னை பொருட்படுத்தவேயில்லை. சற்றுநேரம் பொறுத்தபின் நானும் நண்பரும் அறையில் கிடந்த ஒரு செஸ் பலகையை எடுத்து வைத்து விளையாட ஆரம்பித்தோம். பிரமிள் சற்றுநேரம் கழித்து அதை கவனித்தார். அருகே வந்து அமர்ந்து ஆலோசனைகள் சொன்னார். அப்படி அவர் எங்கள் உலகில் நுழைந்தார்.

பிரமிள் சுந்தர ராமசாமியையும் வெங்கட் சாமிநாதனையும் கடுமையாக வசைபாடுவார். ராஜமார்த்தாண்டன் அதை ஏற்பவர் அல்ல. ஆனால் மாற்றுக்கருத்து சொல்பவனை பிரமிள் வெறுத்து ஆவேசமாகத் திட்டுவார். நாம் கேட்கமட்டுமே செய்ய வேண்டும். ஆனால் ராஜமார்த்தாண்டன் தன் கருத்தை தெளிவாகச் சொல்லிவிட்டு மௌனமாக இருப்பார். பிரமிள் ஊசி ஏற்றியபடியே இருந்தாலும் அசர மாட்டார். கடைசிவரை இம்மூவருடனும் ஒரே நட்புடன் இருந்தார் ராஜமார்த்தாண்டன். அதுவே அவரது இயல்பு என்றார் சுரேஷ்குமார இந்திரஜித்.

கவிஞர் சுகுமாரன், நான் அண்ணாச்சி என்று அழைப்பது இருவரையே. ஒருவர் விக்ரமாதித்யன் இன்னொருவர் ராஜமார்த்தாண்டன். இருவரும் பல ஒற்றுமைகள் கொண்டவர்கள். முறைப்படி தமிழ் கற்று மரபிலக்கிய அறிமுகம் கொண்டவர்கள். இருவருமே வேட்டியுடன் காணப்படுபவர்கள். இருவருமே தாடி வைத்தவர்கள். இருவருமே குடிகாரர்கள். என் வளர்ச்சியில் இருவருக்கும் ஒரு பங்குண்டு. என் முதல் தொகுப்பை வெளியிட ஊக்கப்படுத்தி பிழைநோக்கியும் அளித்தவர் விக்ரமாதித்யனே. என் முதல் தொகுப்புவந்ததும் அதைக் கவனித்து கொல்லிப்பாவையில் முதல் விமரிசனம் வெளியிட்டவர் ராஜ மார்த்தாண்டன்.

கடந்த பலவருடங்களில் ராஜமார்த்தாண்டன் எனக்கு தொடர்ந்து இலக்கிய முக்கியத்துவம் அளித்து எழுதியிருக்கிறார். ஆரம்பகால காலச்சுவடு இதழில் அவர் நம்பிக்கையூட்டும் மூன்று கவிஞர்கள் என நான் ராஜசுந்தரராஜன், சமயவேல் ஆகியோரைப்பற்றி முக்கியமான ஒரு கட்டுரையை எழுதினார். எங்களில் பிற இருவரும் அதிகமாக எழுதவில்லை. ஆனால் கவிதையை ஒரு வாழ்வுமையமாகக் கொள்ள எனக்குத் தூண்டுதலாக இருந்தது அந்தக் கட்டுரையே.

பலவருடங்களுக்கு முன் மா.தட்சிணாமூர்த்தி காமத்தை மையமாக்கி ‘திவ்யதரிசனம்’ என்ற கவிதைநூலை கொண்டுவந்தபோது சுந்தரராமசாமியிடம் நான் அந்நூலை விமரிசனம்செய்து பேசினேன். அப்போது ராஜமார்த்தாண்டன் அதை நியாயப்படுத்தினார். பிறகு கேள்விப்பட்டேன் அந்நூலை வெளியிட்டது மட்டுமல்ல அட்டைப்படம் வரைந்ததும் ராஜமார்த்தாண்டன்தான் என்று. ஓவியம் கவிதை இரண்டுக்குமே நல்லகாலமாக ராஜமார்த்தாண்டன் கவிதைவிமரிசனத்துக்கு வந்து சேர்ந்தார்.

ராஜமார்த்தாண்டன் என் கருத்துகளுடன் பெரும்பாலும் ஒத்துப்போகிறவர். ஆனால் அவ்வப்போது நாங்கள் கடுமையாக முரண்படுவதும் உண்டு. உதாரணமாக அவரது ‘கொங்குதேர் வாழ்க்கை தொகுதி இரண்டு’ பற்றி நான் காலச்சுவடு இதழில் கடுமையாக விமரிசனம் எழுதியிருந்தேன். அவர் அதிலேயே அதற்கு மறுப்பும் எழுதியிருந்தார். அப்படிப்பட்ட ஒரு விவாதம் கடும் மனக்கசப்பில் முடிவதே வழக்கம். ஆனால் இப்போது அவர் எனக்கு அண்ணாச்சிதான் என்றார் சுகுமாரன்.

விமரிசகரான ந.முருகேசபாண்டியன் மதுரையில் இருந்த நாட்களில் ராஜமார்த்தாண்டன் தன்னுடைய குடும்ப நண்பராக இருந்தவர் என்றார். ஆனால் அதற்குமுன்னரே ராஜமார்த்தாண்டனை தெரியும். அவர் ஆய்வுமாணவராக இருந்த நாட்களில், 36 வருடம் முன்பு, கோகயம் என்ற சிற்றிதழை நடத்தினார். அதற்கு நானும் சமயவேலும் சந்தா செலுத்தினோம். ஒரு விமரிசகனாக நான் உருவாவதற்குக் காரணமே ராஜமார்த்தாண்டன்தான். நான் குற்றாலத்தில் அவரை சந்தித்தபோது சுரேஷ்குமார இந்திரஜித் கதைகளைப்பற்றி அவருக்கு நான் எழுதிய நீண்ட கடிதத்தை அவரிடம் சுரேஷ் காட்டினார். அதை ராஜமார்த்தாண்டன் வாங்கி பையில் வைத்துக் கொண்டார். அது தினமணி கதிரில் ஒரு மதிப்புரையாக வெளிவந்தது. அது எனக்களித்த தன்னம்பிக்கையினால்தான் நான் தொடர்ந்து எழுதினேன்.

ராஜமார்த்தாண்டன் தன் இலக்கிய நிலைப்பாடுகளைச் சொல்வதில்லை. அவருடையது ரசனை சார்ந்த விமரிசனம். அவ்விமரிசனத்துக்கு எதிரான ஒரு அலை தமிழில் எழுந்தபோதும் அவர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எழுதுவது சிக்கலாக இருந்தால்தான் விமரிசனம் என்ற நிலை தமிழில் உருவானபோதும் அவர் பொருட்படுத்தவில்லை. தன் ரசனையிலும் வெளிப்பாட்டிலும் உறுதியாக இருந்தார். அதுவே அவரது விமரிசன பங்களிப்பை உருவாக்கியது என்றார் முருகேச பாண்டியன்.

கடைசியாக நான் பேசினேன். ராஜமார்த்தாண்டனை ஒரு கவிதை விமரிசகராகவே முன்னிலைப்படுத்துவதாகச் சொன்னேன். அவரது ‘தமிழ் புதுக்கவிதை வரலாறு’

‘கொங்குதேர் வாழ்க்கை தொகுதி இரண்டு’ ஆகியவை முக்கியமான நூல்கள். க.நா.சு வழிவந்த ரசனை விமரிசகர் ராஜமார்த்தாண்டன். தன் தேர்வுகளையும் ரசனையையும் மட்டும் சொல்லிவிட்டு ஆய்வையும் அலசலையும் நிகழ்த்துவதில் இருந்து விலகிநிற்கும் முறை இது. இவ்வகை ஆய்வு வெறும் சிபாரிசு என்று தோன்றலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் இந்தத் தேர்வுகள் முன்வைக்கப்படும்போது திட்டவட்டமான ஓர் அழகியல் கோணமும், அதன் பின்னால் உள்ள ஆளுமையும் தெளிவடைந்து வருகின்றன. அதுவும் முக்கியமான ஓர் இலக்கிய விமரிசன முறையே.

ராஜமார்த்தாண்டன் என்னுடைய விமரிசனக் கருத்துகளை முழுமையாக மறுத்து வாதிட்டிருக்கிறார். என்னுடன் விவாதமும்புரிந்திருக்கிறார். ஆனால் நான் கவிதை பற்றி என் முதல் நூலை எழுதியபோது (உள்ளுணர்வின் தடத்தில், தமிழினி) அவருக்குத்தான் அந்நூலை சமர்ப்பணம் செய்தேன். வாசகனாக எந்தவிதமான தடையும் தராமல் படைப்பின் முன் நிற்பது என்பதே ராஜமார்த்தாண்டன் முன்வைக்கும் விமரிசன முறையாகும் என்றேன்.

ராஜமார்த்தாண்டன் தன் ஏற்புரையில் இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் இனி கிடைக்காது என்பதனால் தன்னை உருவாக்கியவர்களுக்கு நன்றி சொல்வதற்காக இந்த தருணத்தை பயன்படுத்திக் கொள்வதாகச் சொன்னார். விவசாயியாக இருந்த தன் தந்தை கடுமையான உழைப்பினால் தன்னை அறிவார்ந்த வேலைக்குப் போகச்செய்ததை நினைவுகூர்ந்தார். இலக்கிய அறிமுகம் செய்து ஆளாக்கியவர் பேராசிரியர் ஜேசுதாசன். இலக்கிய ஆசானாக இருந்தவர்கள் பிரமிள், சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன் ஆகியோர். ஓர் இலக்கிய ஆளுமையாக அறிமுகமாகி நெருக்கமான முன்னோடியாக வழிநடத்தியவர் ஜெயகாந்தன்.

தினமணி வேலைக்கு உதவியவர்கள் விக்ரமாதித்யன், வண்ணநிலவன், அசோகமித்திரன் ஆகியோர். இலக்கிய நண்பர்களாக நெடுங்காலம் விளங்கியவர்கள் கட்டைக்காடு ராஜகோபாலன், எம்.வேதசகாயகுமார் ஆகியோர். சென்னை நாகராஜ் மேன்ஷனில் நெடுங்காலம் தங்கிய நாட்களில் அங்கே இலக்கிய விவாதங்களை அனுமதித்தவர் உரிமையாளர் நாகராஜ். ஒரு எழுத்தாளனாக உருவாகி அறியப்பட்டிருப்பதற்குக் காரணமானவர் பதிப்பாளர் ‘தமிழினி’ வசந்தகுமார். அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

தன்னுடைய குடும்பத்தைக் குறிப்பிட்ட ராஜமார்த்தாண்டன் தன் குடும்பத்திற்கு உருப்படியாக எதுவுமே செய்யாதவராக தான் ஆகிவிட்டதை வருத்தமான குரலில் சொன்னார். தன் மனைவிக்கு தன் மேல் கடுமையான கோபங்களும் வருத்தங்களும் இருந்தால் அது நியாயமே. ஆனால் அவர் மீது தனக்கு நன்றியே உள்ளது. ஒரு தந்தையாக எதுவுமே செய்யாவிட்டாலும்கூட தன்மேல் அளவற்ற பிரியமும் மரியாதையும் வைத்திருக்கும் பிள்ளைகளும் நன்றிக்குரியவர்களே என்று சொன்னபோது கண்ணீர் மல்கினார்.

எட்டரை மணிக்கு விழா முடிந்தது. விழாவில் குமரிமாவட்டத்தின் சிறப்புபானமாகிய சுக்குப்பால் அளிக்கப்பட்டது.

ஜூலை 28, 2008

55. மசனொபு ஃபுகோக்கா கீழை ஞானி

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னர் காசர்கோடு நகருக்கு அருகே பையன்னூர் என்ற கிராமத்தில் நடந்த ஒரு கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே கோபாலகிருஷ்ணன் விஜயலட்சுமி என்ற தம்பதிகள் வந்திருந்தார்கள். நீண்ட தாடிவைத்திருந்த கோபாலகிருஷ்ணன் நம்முடைய உணவு எந்த அளவுக்கு மலினப்பட்டிருக்கிறது என்பதை விளக்கி அதற்குக் காரணம் லாபம் மட்டுமே நோக்கமாகக் கொண்ட வேளாண்மையே என்றார். அந்த இயல்பிலிருந்து வேளாண்மையை விடுவிக்கும் ஒரு புரட்சி நிகழ வேண்டும் என்று சொல்லி ஒரு நூலைக் காட்டினார்.

அது மசனொபு ஃபுகோக்கா எழுதிய 'ஒற்றைவைக்கோல் புரட்சி' என்ற நூல். அப்போதுதான் நான் மசனொபு ஃபுகோகாவின் பெயரைக் கேள்விப்படுகிறேன். எனக்கு அப்போது பேசப்பட்ட பல கருத்துகள் உடன்பாடாக தோன்றின. அது கேரளத்தில் சைலண்ட் வேலியைக் காப்பதற்கான போராட்டத்தை தொடர்ந்து சூழியல் கருத்துகள் பரவலாகிவந்த காலம். சூசீமுகி, வைத்ய சஸ்திரம் போன்ற சூழியல் இதழ்கள் வெளிவந்துகொண்டிருந்தன. நான் அப்போது ஷுமாக்கர், இவான் இல்யிச் ஆகியோரின் நூல்களில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தேன்.

நான் வாசித்த ஒற்றைவைக்கோல் புரட்சி என்னை ஆழமாக பாதித்த நூல்களில் ஒன்றாக இருந்தது. சொல்லப்போனால் நான் இன்றுவரை வாசித்த ஜென் நூல்களில் அதுவே முதன்மையானது. 'இயைந்திரு' என்ற ஜென் தரிசனத்தின் நடைமுறை விளக்கமாக இருந்தது அந்த நூல். அந்த தரிசனம் மாசானபு ஃபுகோகாவுக்குக் கிடைப்பதும் ஒரு ஜென் தருணம் மூலமே. குப்பையில் முளைத்துக்கிடந்த ஒரு நெல்செடியின் செழுமையைக் கண்டு அதைப் புரிந்துகொள்ள முயன்று அலைந்து திரிந்து மனக்குழப்பத்தின் உச்சியில் இருக்கையில் ஒரு பறவையின் சிறகடிப்பைக் கேட்கிறார் மாசானபு ஃபுகோகா. அந்த தருணத்தில் அவர் மனதில் அந்த தரிசனம் திறந்துகொள்கிறது. உச்சகட்ட புனைவுத்தருணம்போல என்னை பரவசம்கொள்ளச் செய்தது அந்த இடம்.

அந்நூலில் மாசானபு ஃபுகோகா பேசும் பலகருத்துகளை நான் சிந்தனை செய்திருக்கிறேன். என் சிறுவயதில் நான் கண்ட மூத்த விவசாயிகள் பலரும் கலைஞர்கள், பாடகர்கள், அடிமுறை ஆசான்கள். அவர்களுக்கு அதற்கெல்லாம் நேரம் இருந்திருக்கிறது. என் தலைமுறை விவசாயிகளுக்கு நேரமே இல்லை. அவர்கள் ஒவ்வொரு கணமும் போராடியாக வேண்டும். 'ஹைக்கூ கவிதை எழுதிய விவசாயிகள் ஏன் மறைந்து போனார்கள்?' என்று கேட்கிறார் மாசானபு ஃபுகோகா. ரசாயன உரங்கள் மூலம் மண்ணுடனும் பூச்சிக்கொல்லிகள் மூலம் உயிர்பெருந்தொகையுடனும் வெல்லமுடியாத ஒரு போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறான் இன்றைய விவசாயி. சற்றே அசந்தால்கூட அவனை விழுங்கிவிடும் அந்த இயற்கைச் சக்திகள்.

காட்டில் அலைந்த நாட்களில் புதர்களில் வளர்ந்த பெரிய நெற்கதிர்களை நான் கண்டிருக்கிறேன். காட்டில் ஒரு மரச்சீனியை பிடுங்கி நாங்கள் எட்டுபேர் வயிறு புடைக்க உண்டிருக்கிறோம். அந்த விளைச்சலை ஒருபோதும் வேளாண்மை அளிக்காது. காட்டரசியாகிய நீலியின் அருள் அது என்பார்கள் விவசாயிகள். நீலி இயற்கையின் பெருந்தோற்றம். அவள் அருள் பெற்ற ஒரு விவசாயத்தை உருவாக்க முனைந்தார் மாசானபு

ஃபுகோகா. இயற்கையுடன் போராடாமல் இயற்கையுடன் முழுமையாக இணைந்த ஒரு வேளாண்மை முறையை அவர் உருவாக்கினார்.

இன்று தமிழகத்தின் முக்கியமான பேசுபொருள்களில் ஒன்றாக மாறியுள்ளது இது. நம்மாழ்வார் போன்ற புகழ்பெற்ற இயற்கைவேளாண்மை நிபுணர்களும் ஏராளமான விவசாயிகளும் இன்று உருவாகியிருக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் மாசானபு ஃபுகோகாவின் சில கட்டுரைகளையும் ஒரு பேட்டியையும் நான் மொழியாக்கம் செய்திருக்கிறேன்.

மாசானபு ஃபுகோகா (Fukuoka Masanobu) 1913 பிப்ரவரி 2 ஆம் தேதி பிறந்தார். சென்ற ஆகஸ்ட் 16, 2008 அன்று மரணமடைந்தார். The OneStraw Revolution, The Road Back to Nature and The Natural Way Of Farming ஆகியவை முக்கியமான நூல்கள். நான் அறிந்தவரை ஒற்றை வைக்கோல் புரட்சி மட்டும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எனக்கு மாசானபு ஃபுகோகா அளித்த தரிசனங்களில் முக்கியமானது இயற்கை வேளாண்மை சார்ந்தது அல்ல. அவர் தன் நூலில் ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாட்டை ஒரு வகை அரைகுறை ஐரோப்பியநோக்கு என்று சொல்லி சாதாரணமாக நிராகரித்துச் செல்கிறார். முழுமையின் ஒருமையை மைய தரிசனமாகக் கொண்ட ஜென் மரபு அப்படித்தான் அதைக் காண முடியும். ஆனால் அந்த வயதில் அந்த நோக்கு என்னை அதிர்ச்சியடையச் செய்தது. மீள மீள சிந்திக்கச் செய்தது.

மேலை அறிவியல் என்பது புறவயமான, நிரூபிக்கப்பட்ட, கடைசி உண்மைகளை முன்வைப்பது என்று நாம் பள்ளிக்கல்விமூலம் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறோம். உண்மையில் அவர்களின் நிரூபணவாத அறிவியல்கூட அவற்றுக்குப் பின்னால் உள்ள ஊகங்களின் நிரூபணத்தையே நிகழ்த்துகிறது. அந்த ஊகங்களோ அவர்களின் பிரபஞ்ச நோக்கின் கூறுகள் மட்டுமே. அறிவியலுக்குப் பின்னால் அந்தப் பண்பாடு பிரபஞ்சத்தை எப்படி நோக்குகிறது என்ற அடிப்படைக் கேள்விக்கு இடமுண்டு என்று நான் உணர்ந்தேன்.

ஆகவே மேலை அறிவியல் முன்வைக்கும் உண்மைகளை முற்றிறுதியான உண்மைகளாகக் கொள்ள வேண்டியதில்லை என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அவை ஒருவகை பிரபஞ்ச நோக்கின் விளைவுகள். வேறுவகையான பிரபஞ்ச நோக்குகளுக்கு இந்தப் புவியில் இடமுண்டு. அவை மேலைநாட்டு பிரபஞ்சநோக்குகளை முழுமையாக மறுத்தே இயங்கமுடியும். தங்களுக்குரிய அறிவியலை உருவாக்கவும் முடியும்.

இந்திய மெய்யியல் சார்ந்து எனக்கிருந்த குழப்பங்களை அதன் வழியாக நான் கடந்தேன். இந்திய மெய்யியல் சார்ந்து இருக்கும் தாழ்வுமனப்பான்மைகளை நீக்கினேன். நமது சிந்தனைகள் மேலை அளவுகோலில் என்ன மதிப்பு கொடுக்கின்றன என்று நோக்கும் மூடத்தனத்துக்கு நான் இடம்கொடுப்பதேயில்லை. மேலைச்சிந்தனைகளை படிக்கும்போதுகூட அவற்றின் வழிபாட்டாளனாக நான் ஒருபோதும் ஆனதில்லை. இலக்கிய உலகில் அவ்வப்போது மேலைநாட்டிலிருந்து வந்து சுழன்றடித்து கடந்து செல்லும் புயல்களில் இருந்து என்னைக் காத்தது இந்த தரிசனம்.

மாசானபு ஃபுகோகாவுக்கு என் அஞ்சலி. அவர் ஒரு நவீனகால ஞானி.

ஆகஸ்ட் 20, 2008

[56. காலச்சுவடுக்கு தடை]

காலச்சுவடு இதழுக்கு நூலகத்துறை அளித்துவந்த ஆணையை வாய்மொழி உத்தரவின்பேரில் ரத்துசெய்து வந்ததாக காலச்சுவடு இணையதளத்தில் இருந்து என் வாசகர் ஒருவர் அனுப்பிய சுட்டிமூலம் www.kalachuvadu.com/issue104/page53.asp அறிந்துகொண்டேன். நெடுநாட்களாகவே நான் காலச்சுவடை படிப்பதில்லை. அரவிந்தன் என்பவர் அதன் ஆசிரியராக இருந்த நாட்களில் அனேகமாக எல்லா இதழிலும் என்னைப்பற்றி வெளிவந்த அவதூறுகளும், வசைகளும் காரணமாக என் மனநிலையைப் பேணும்பொருட்டு தவிர்த்துவிட்டேன். வைக்கம் முகமது பஷீர் என்னுடைய கட்டுரை ஒன்றை அவர்கள் கோரி வெளியிட்ட இதழும் காந்தி பற்றிய இதழும் எம்.எஸ் கொண்டுவந்து தந்தார். காந்தி குறித்த இதழ் தமிழ் இதழியலில் ஒரு சாதனை.

காலச்சுவடை பழிவாங்கும் நோக்குடன் திட்டமிட்டே நூலக ஆணை தடுக்கப்பட்டதாகவும் விசாரித்து அறிந்தேன். நூலக ஆணை மூலம் காலச்சுவடு 1500 பிரதிகள் வாங்கப்பட்டது. இப்போது இவ்விழப்பு அந்நிறுவனத்துக்கு மிகவும் சுமையானது.

கனிமொழிக்கு எதிராகவோ விமரிசனமாகவோ எதையும் காலச்சுவடு எதுவுமே செய்துவிடவில்லை என்றுதான் கேள்விப்பட்டேன். கனிமொழியின் பாராளுமன்ற உரையை கிட்டத்தட்ட காலச்சுவடின் கொள்கைப்பிரகடனமாக வெளியிட்டமையால் வந்த எதிர்வினைகளையும் வெளியிடவேண்டியிருந்தது. அந்த எதிர்வினைகள் அவரை கோபப்படுத்தியுள்ளன என்கிறார்கள். உண்மை அவர்களுக்குத்தான் தெரியும். இப்போது காலச்சுவடு இதழில் எழுதப்பட்டுள்ள கண்ணனின் கடிதங்கள் மிக பொதுப்படையானவையாக மழுப்பலான நாசூக்குடன் உள்ளன.

இத்தகைய கெடுபிடிகள் மூலம் எந்த இதழையும் தடுத்துவிட முடியாதென்றாலும் எப்போதும் ஆட்சியாளர்கள் இதைச் செய்கிறார்கள். வன்மையாகக் கண்டிக்கத்தக்க செயல் இது. கருத்துச் சுதந்திரம் மீதும் இதழியல் மீதும் விடப்பட்ட தாக்குதல். அனைத்து தரப்புகளும் இணைந்து இதைக் கண்டித்தாகவேண்டும். இப்போக்கு வளரவிடப்பட்டால் நாளை நூலகத்துறை வாங்கும் நூல்களையே இவ்வாறு 'அரித்தெடுக்க' ஆரம்பிப்பார்கள். என்னுடைய கண்டனத்தை பதிவுசெய்கிறேன்.

ஒன்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்த நூலக ஆணையானது காலச்சுவடு தி.மு.க அரசில் தனக்கிருந்த நேரடியான செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கு மட்டுமாகப் பெற்றுக் கொண்ட சலுகை. அத்தகைய சலுகைகளைப் பெறுவதற்கு காலச்சுவடு செய்துகொண்ட சமரசங்களும் அதிகம். கனிமொழியை சென்ற காலங்களில் அது முன்னிலைப்படுத்திய விதத்தை வாசகர்கள் நினைவுகூர்வார்கள். கனிமொழி காலச்சுவடின் பார்வையிலேயே உச்சகட்டமாக மதிப்பிட்டாலும்கூட தமிழில் எழுதும் இளம் பெண்கவிஞர்களில் முக்கியமானவர், ஓரளவு வாசிக்கக் கூடியவர் அவ்வளவுதான்.

ஆனால் காலச்சுவடு அவரை அப்படியா முன்னிறுத்தியது? ஒரு இலக்கிய மேதைக்குக் கூட அளிக்கப்படாத முக்கியத்துவம் காலச்சுவடின் இதழ்களிலும், கூட்டங்களிலும் அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் ஒரு மாபெரும் அறிவுஜீவியாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் அல்லவா முன்வைக்கப்பட்டார்? அதைப்பற்றி நான் என் கண்டனத்தை அப்போதே

பதிவுசெய்துள்ளேன்.

அந்த விசுவாசம் காலச்சுவடுக்கு சில சிறிய நன்மைகளைப் பெற்றுத்தந்தது. அதற்கான விலையை அளிக்க சுந்தர ராமசாமியின் மகனால் முடியவில்லை. நம் அரசியல் தலைமை விசுவாசத்தை மட்டும் எதிர்பார்க்கவில்லை, மேலும் விசுவாசத்தை, மேலும் மேலும் விசுவாசத்தை, அடிமைத்தனத்தை, மேலும் மேலும் அடிமைத்தனத்தை எதிர்பார்க்கிறது.

இது அரசியல் சக்திகளுடன் குலாவி சில நன்மைகளைப் பெறலாம் என்று எண்ணும் எல்லாருக்குமே பாடம்தான். இந்த இதழிலேயே பா.செயப்பிரகாசம் பிரம்மராஜனைப்பற்றி எழுதியிருக்கிறார்.

காலச்சுவடு ஒருவகைச் சோர்விலிருந்து சமீப கால இதழ்கள் வழியாக பெருமளவு மீண்டுவிட்டதாகவும் அதன் சமீபத்திய இதழ்கள் மிகக் கவனமாகவும் தீவிரமாகவும் தயாரிக்கப்பட்டு வெளிவருவதாகவும் என் வாசகர்கள் பரவலாக கருத்து தெரிவித்து வருவதைக் காண்கிறேன். குறிப்பாக ஈழப்போர் இலக்கியத்தைப் பற்றி சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு தனி இதழ் குறித்து உணர்ச்சிகரமான வெளிப்பாடுகள் வந்தன. இதுவே முக்கியமானது. ஒரு இதழ் அதன் பொருளடக்கத்தாலும் நேர்மையாலும் தன் இடத்தை அடையமுடியும். நிரந்தரமான இடத்தை.

இந்த இக்கட்டு காலச்சுவடு மேலும் தீவிரம் பெறவும் தன் சக்திகளை ஒருங்கிணைத்துக் கொள்ளவும் உதவட்டும். காலச்சுவடு மேலும் மேலும் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் 22, 2008

57. அக்காமலையின் அட்டைகள்

இணையத்தில் எங்கள் பயணங்களைப்பற்றி படித்த கோவை வாசகரான அருண் அவருக்கு அறிமுகம் இருந்த சென்னை வழக்கறிஞர் செந்திலை தொடர்புகொண்டு நான் எழுதியிருப்பது அவரைப்பற்றித்தானா என்று கேட்டார். செந்தில் ஆமாம் என்றபோது அவர் தான் ஒரு பயணத்திட்டத்தை அமைப்பதில் ஆர்வமாக இருப்பதைச் சொன்னார். சென்னை செந்தில் என்னைத் தொடர்புகொண்டு உடுமலை சின்னாறு வழியாக ஒரு மலைப்பயணத்தை ஏற்பாடுசெய்ய அருண் ஆர்வமாக இருக்கிறார் என்றார். நானும் உடன்பட்டேன்.

திட்டமிட்டபடி சென்ற ஆகஸ்ட் 13 அன்று ரயிலில் கிளம்பி 14 காலையில் நான் ஈரோடு சென்று சேர்ந்தேன். ரயில்நிலையத்துக்கு விஜயராகவனும் அவரது குட்டிப்பையன் சூரியாவும் வந்திருந்தார்கள். மெரிடியன் ஓட்டலில் அறைபோட்டிருந்தார்கள். அங்கே தங்கி சற்றே இளைப்பாறினேன். நண்பர்கள் சிவாவும் தங்கமணியும் அறைக்கு வந்தார்கள். பேச்சு எப்படியோ காந்திக்கு திரும்பியது. சி.எஃப்.ஆன்ட்ரூஸ், வெரியர் எல்வின் முதல் லாரி பேக்கர் வரை மேலைநாட்டினர் பலர் காந்தியை சந்தித்ததுமே ஆழமான மனஎழுச்சிக்கு உள்ளாகி பெரும் இலட்சியங்களுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டதைப்பற்றிப் பேசினேன். அந்த அளவுக்கு காந்திக்கு இந்தியர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்களா என்ற ஐயம் எனக்கு உண்டு. நேரு, பட்டேல் உட்பட பெரும்பாலான காந்தியவழித்தோன்றல்களுக்கு அதிகாரம் சார்ந்த ரகசியத்திட்டங்கள் இருந்தன, அதிகாரமா காந்தியா என்ற கேள்வி எழுந்த போது அவர்கள் முன்னதையே தேர்ந்தெடுத்தார்கள்.

மதியம் செந்தில் வந்தார், ஈரோடு மாமன் மெஸ்ஸில் சாப்பிட்டோம். நான், சென்னை வழக்கறிஞர் செந்தில், ஈரோடு சிவா, ஈரோடு நண்பர் பாபு, வழக்கறிஞர் கிருஷ்ணன், நண்பர் தங்கமணி விஜயராகவன் ஆகியோர் விஜயராகவனின் மாருதி ஆம்னி வண்டியில் சின்னாறு நோக்கிக் கிளம்பினோம். மூன்றுமணியளவில் உடுமலையில் எங்களைச் சந்திப்பதாக அருண் சொல்லியிருந்தார். உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த சில நண்பர்கள் அவருடன் வருவதாக ஏற்பாடு. அந்த நண்பர்கள் தொடர்ந்து தாமதப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். நாங்கள் சின்னாறு நோக்கிச் சென்றோம். அழகிய மலைவளைவுகள். உயரமில்லாத மரங்கள் செறிந்த சரிவுகள். மாலை பயணம் இனிதாகவே இருந்தது.

சின்னாறு அருகே ஏரிமீதுள்ள பாலத்தில் நின்று நீரை வேடிக்கை பார்த்தபோது நான் தூரத்தில் மீன்கள் நீந்தும் அலைநகர்வைக் கண்டேன். மீன்கள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக வருவது போலிருந்தது. சிலகணங்களுக்குப் பின் முதலையோ என்ற ஐயம் ஏற்பட்டது. அந்த ஐயம் ஏற்பட்டதுமே முதலையை 'பார்க்க' முடிந்தது. மிகப்பெரிய முதலை நீரை மென்மையாக ஊடுருவி மறுகரை நோக்கி வந்தது. அதன் வாலின் சுழற்சியையும் நாசியையும் நன்றாகவே கண்டோம். கரையோரத்துப் புதர்களுக்குள் சென்று மறைந்தது. தன் தூங்குமிடத்தில் இருந்து இரைதேடுமிடத்துக்கு அன்றாட 'அலுவல் பயணம்'.

அருண் வந்துசேர இருட்டிவிட்டது. நாங்கள் சென்று சேரவேண்டிய காவல்கோபுரம் சாலையிலிருந்து தள்ளி காட்டுக்குள் இருந்தது. மூட்டை முடிச்சுகளுடன் இருட்டுக்குள் தடுமாறி அங்கே ஏறிச்சென்றோம். அது சின்னாறு நீர்த்தேக்கத்தையும் சூழ்ந்துள்ள மலைகளையும் ஒரே பார்வையில் பார்க்கும்விதத்தில் அமைந்தது. மாலையில் அங்கே

வந்திருந்தால் அற்புதமான காட்சியாக இருந்திருக்கும். அப்போது வானில் நிலவை மேகம் மூடியிருந்தது. காட்சிக்கோபுரத்தின் முன் அமர்ந்து பொட்டலத்தில் கொண்டுவந்திருந்த சப்பாத்திச் சுருள்களை சாப்பிட்டோம். காவல்கோபுரம் மீது ஏறி அமர்ந்து சூழ்ந்து நிழலோவியமாக விரிந்த வானையும் மலையடுக்குகளையும் காட்டையும் பார்த்தோம். காட்டின் அமைதி, காட்டின் ரீங்காரம். அதிக குளிர் இருக்கவில்லை.

மறுநாள் காலை நான்குமணிக்கே கிளம்ப வேண்டும் என்று அருண் சொன்னதனால் உடனே படுத்துவிட்டேன். வெறும் சிமிண்டு தரையில் படுத்தபோதும்கூட களைப்பு நல்ல தூக்கத்தை அளித்தது. மூன்றுமணியளவில் விழிப்புவந்தபோது உடுமலை நண்பர்கள் எழுந்து அமர்ந்திருந்தார்கள். தூரத்தில் யானை பிளிறல் கேட்டதாகச் சொன்னார்கள். மேகம் விலகி முழுநிலவு வானில் நிற்க காடும் மலைகளும் பளிங்கு வெளியாக எங்களை வளைத்திருந்தன.

நான்குமணிக்கு கிளம்பி இருட்டுக்குள் இறங்கி சின்னாறு செக்போஸ்டை அடைந்து கார்களை அங்கே விட்டுவிட்டு ஒரு மட்டடோர் வேனில் ஏறி உடுமலைப்பேட்டைக்குச் சென்றோம். அங்கே உணவுக்குச் சொல்லியிருந்த இடத்தில் ஒன்றரை மணிநேரம் தாமதம். போகும் வழியில் ஒரு மலையருவியருகே இறங்கி காலைக்கடன்களை கழித்தோம். சிவாவும் செந்திலும் அந்தக் குளிரிலும் அருவியில் குளித்தார்கள். வால்பாறைக்கு நாங்கள் திட்டத்துக்கு இரண்டுமணிநேரம் தாமதமாகச் சென்று சேர்ந்தோம்.

வால்பாறையில் இருந்து அக்காமலை. அக்காமலையில் அரசு தேயிலைத்தோட்டத்தைத் தாண்டி வனப்பாதை ஆரம்பம். எங்களுடன் ஒரு வனக்காவலரும் துணைக்கு வந்தார். அடர்ந்த காடுகள் இருபக்கமும் வேலியிட்ட காட்டுக்குள் வேன் சென்றது. கல்பாவப்பட்ட சாலை. அந்தக்காடு புலிகள் சரணாலயமாக அறிவிக்கப்படவிருக்கிறது. எனவே குடியிருப்புகள் காலிசெய்யப்படுகின்றன. சாலைகள் புதுப்பிக்கப்படுவதில்லை.

நினைத்ததுபோலவே எங்கள் வேன் ஒரு சேற்றுப்பள்ளத்தில் சிக்கி செயலிழந்துவிட்டது. அதை அத்தனை பேரும் தள்ளினோம். தள்ளி நகர்த்தினால் அடுத்த சக்கரம் புதைந்து கொள்ளும். அதை நகர்த்தினால் ஆக்ஸில் புதைந்து கொள்ளும். ஜாக்கி போட்டு தூக்கி விலக்கி மீண்டும் உந்தி மீண்டும் தள்ளி... டிரைவர் சேறோடு சேறாக கலந்துவிட்டிருந்தார். இரண்டுமணிநேரம் கழித்து ஒருவழியாக வேன் வெளிவந்தது. அங்கேயே எங்களை விட்டுவிட்டு வேன் திரும்பிச் சென்றது.

பயணத்திட்டத்தின்படி நாங்கள் எட்டுமணிக்கு அக்காமலைக்கு உள்ளே இருந்த ஒரு மலைபங்களாவுக்குச் சென்றுசேரவேண்டும். அங்கிருந்து பதினைந்து கிலோமீட்டர் நடந்து இறங்கி இன்னொரு பங்களா. அங்கே தங்கி விட்டு காலையில் கிளம்பி பத்து கிலோமீட்டர் நடந்து மதியம் உடுமலைக்குச் சென்று சேரவேண்டும். ஆனால் அப்போதே மதியம் இரண்டுமணி ஆகிவிட்டிருந்தது. ஆறு கிலோமீட்டர் நடந்தால்தான் அந்த மலைபங்களா வரும். சரி, அங்கே சென்று இரவுதங்கிவிட்டு காலையில் திரும்பி வால்பாறைக்கே செல்வோம் என்று முடிவெடுத்தோம்.

நடக்க ஆரம்பித்தோம். மதியம் இரவு இரண்டுவேளைக்குமான உணவு, தண்ணீர்ச்சுமைகள். ஆனால் மலைப்பாதை மிகமிக அழகாக இருந்தது.ஒருபக்கம் ஓங்கிய மலைச்சிகரங்கள். அவற்றின் மீது நீங்காத மழைமேகம். மேகங்களிலிருந்து நீர் நேரடியாக மலைகள் மீது இறங்கி அருவிகளாகக் கொட்டிக் கொண்டிருந்தது. வரையாடுகள் அதிகமாக இருக்கும் மலைச்சிகரம் அது என்றார் வன அலுவலர். மலையுச்சி ஆதலினால் மரங்கள் இல்லை. சில இடங்களில் சில்வர் ஒக் அல்லது பைன் மரக்கூட்டங்கள். மற்றபடி கண்தொடுதூரம் வரை பசும்புல்வெளி மட்டுமே. அமைதியை பச்சைவண்ணத்தில் வரைந்தது போன்ற விரிவு.

சிறுத்தைகளின் எச்சங்கள் எங்கும் கிடந்தன. அங்கே மிளாக்களும் காட்டெருதுகளும் (Gaur) அவற்றை வேட்டையாடும் சிறுத்தைகளும் மட்டுமே உள்ளன. காட்டெருதுக்கூட்டம் ஒன்றை

தொலைவில் பார்த்தோம். அந்த நிலத்தின் சிறப்பு உயிரினம் அட்டைகள்தான். எந்நேரமும் மேகம் மூடி தூறல் விழுந்துகொண்டே இருக்கும் இடம் அது. ஆகவே அட்டைகள் பல்கிப்பெருகி கொத்துக்கொத்தாக கால்களில் பற்றி தலைவரைக்கும் ஏறின. உப்புநீரில் டெட்டால் கலந்து விட்டால் பிடிவிட்டு உதிர்ந்தன. அட்டை விட்டுவிட்டு போனால் ரத்தம் உறையாமல் கொட்டிக்கொண்டிருக்கும். கிருஷ்ணனின் கால் படுகாயம் அடைந்தது போல ஆகிவிட்டது.

களைத்துச் சோர்ந்து மலைவிடுதிக்குச் சென்று சேர்ந்தோம். சுற்றும் புல்வெளி. நடுவே அதிதூய நீர் ஓடும் சிற்றோடை. பழங்கால விடுதி. ஆனால் அங்கே தங்க முடியாது. அது பழுதுபார்க்கப்படாமல் உடைந்து ஒழுகி உள்ளே ஈரம் தேங்கிக் கிடந்தது. ஒன்றும் செய்ய முடியாது. அங்கே உணவுண்டு இளைப்பாறிவிட்டு திரும்பி நடந்தோம். இம்முறை மேகம் எங்களை நன்றாகவே மூடிவிட்டிருந்தது. பன்னிரு கிலோமீட்டர் நடந்து அக்காமலை முகப்பை அடைந்தபோது இரவு ஏழரை மணி. கும்மிருட்டுக்குள் கைவசம் ஒரே சிறு மின்விளக்கு மட்டும்தான். சாரல்மழை பெய்துகொண்டே இருந்தது. அக்காமலை எஸ்டேட் வழியாக மீண்டும் மூன்று கிலோமீட்டர் நடந்து சாலைக்கு வந்தோம்.

நல்லவேளையாக கடைசிப்பேருந்து நின்று கொண்டிருந்தது. அதில் ஏறி அமர்ந்ததுமே அட்டைபொறுக்க ஆரம்பித்துவிட்டோம். விஜயராகவனின் கழுத்தில் எல்லாம் அட்டைகள். வால்பாறைக்கு வந்து சேர்ந்தபோது எல்லாருக்கும் களைப்பு. வால்பாறையிலேயே ஒரு அறைபோட்டு ஓய்வெடுக்கலாம் என்றார் செந்தில். ‘ஒரு நல்ல டீலக்ஸ் ரூம் போட்டு சூடா வெந்நியிலே குளிச்சிட்டு மெத்தையிலே படுத்து நல்லா தூங்கணும் சார்’. வால்பாறையில் மொத்தமே நான்கு விடுதிகள். நான்கிலும் அறைகள் இல்லை.

ஆகவே அடுத்த பேருந்தை இரவு பத்துமணிக்குப் பிடித்து இரவு ஒன்றரை மணிக்கு உடுமலைப்பேட்டைக்கு வந்துசேர்ந்தோம். அருணும் நண்பர்களும் கோவைக்கே செல்வதாகச் சொல்லி பிரிந்து சென்றார்கள். எங்கள் எவரிடமும் பெட்டிகள் ஏதுமில்லை. போட்டிருக்கும் உடைகள் மேலே மழைக்கோட்டு மட்டுமே. எல்லாருமே சிக்கன்குனியா நோயாளிகள் போல நடந்தோம். களைப்பு ஏறி நிற்பதே கூட கஷ்டம். இந்த நிலையில் உடுமலைப்பேட்டையில் விடுதிகளுக்குப் போய் இடம்கேட்டால் கொடுப்பதற்கு அவன் என்ன முட்டாளா? திசைதடுமாறும் ஆறு குடிகாரர்கள்!

எங்கும் அறை கிடைக்கவில்லை. நடுச்சாலையில் அமர்ந்துவிட்டோம். ஒரு போலீஸ்காரர் பைக்கில் வந்து ‘யார் என்ன’ என்று விசாரித்தார். பொள்ளாச்சி போவதா? ஆனால் அங்கே போனால் இன்னும் இரவாகிவிடும். பேசாமல் சின்னாறுக்கே போகலாம் என்றார் விஜயராகவன். அவரே சென்று ஒரு மாருதி ஆம்னி வண்டியை வாடகைக்குப் பிடித்துவந்தார். அதில் ஏறி சின்னாறு செக்போஸ்டுக்கே சென்றோம்.

செக்போஸ்ட் அருகே கட்டி முடிக்கப்படாத மூன்று கடைகள் இருந்தன. காலிசெய்யவைக்கப்பட்டவை. செந்தில் சென்று செக்போஸ்டிலிருந்து துடைப்பம் வாங்கி வந்து கடைத்திண்ணையின் குப்பைகளை கூட்டினார். ‘டீலக்ஸ் ரூம் கெடைச்சாச்சு. வெந்நிதான் இல்ல... என்ன செந்தில்?’ என்றேன். ‘போங்கசார்...’ என்றார் கடுப்பாக. அங்கேயே படுத்து நன்றாகவே தூங்கிவிட்டோம். காலையில் கண்விழித்தபோது சாலை பரபரப்பாக இருந்தது. லாரிப்போக்குவரத்து.

அங்கே டீ சாப்பிட்டுவிட்டு எங்கள் வேனில் ஏறி ஈரோடுக்கு கிளம்பினோம். மதியம் ஈரோடு வந்து சேர்ந்தோம். மீண்டும் மெரிடியன் ஓட்டல் அறை. எனக்கு இரவு பத்துமணிக்கு ரயில்.

‘எல்லாமே தப்பா போச்சுன்னாலும் ஜாலியான டிரிப்... என்ன சார்?’ என்றார் விஜயராகவன். உண்மைதான். ‘நம்ம ஆல் இண்டியா டிரிப்புக்கு ஒரு பயிற்சி’ என்று கிருஷ்ணன் சொன்னார். அவர் நடக்கும் இடமெங்கும் ரத்தம் ஒழுகியபடியேதான் இருந்தது அப்போதும்.

ஆகஸ்ட் 28, 2008

58. செங்காடு

வசந்தபாலனின் 'அங்காடித்தெரு' படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு திருச்செந்தூர் சுற்றுப்பகுதிகளில் நடைபெறுகிறது. படம் தொடங்கிய நாளில் இருந்து நான் படப்பிடிப்புப்பகுதிக்கே போய் பார்க்கவில்லை தேவையானபோது இணையத்தில் தொடர்புகொள்வதுடன் சரி. ஆகவே ஒரு வாரம் சென்று வேடிக்கை பார்த்துவிட்டு வரலாமென்று கிளம்பி சென்ற 20-8-08 அன்று திருச்செந்தூர் போனேன். அங்கே கோயில் அருகே விடுதியில் வாசம்.

அதிகாலை ஐந்துமணிக்கு 'வேக் அப் டீ' வந்துவிடும். படப்பிடிப்பில் காண்டீன் ஊழியர்களின் பங்களிப்பு மிக மிக ஆத்மார்த்தமானதாக இருப்பதையே நான் இதுவரை கண்டிருக்கிறேன். சென்னையில் இருந்து கூடவே வந்து கல்யாண மண்டபம் வாடகைக்கு எடுத்து மூன்றுவேளைக்கும் சமைத்துப் பரிமாறுவார்கள். ஒருமுறைகூட அதிகாலை டீ தாமதமாக வந்து நான் பார்த்ததில்லை. படப்பிடிப்பு முடிந்து இரவுணவு அளித்தபின் அவர்கள் தூங்க பன்னிரண்டு மணி ஆகிவிடும். ஐந்து மணிக்கு குழுவினர் தங்கியிருக்கும் எல்லா விடுதிகளுக்கும் டீ செல்லும். எப்போது அவர்கள் தூங்குவார்கள் என்றே தெரியாது.

பொதுவாக சினிமா ஊழியர்களின் தீவிரமான ஒருங்கிணைந்த உழைப்பை நான் வேறுஎங்குமே கண்டதில்லை. ஒரு இடத்துக்கு கிரேன் போகவேண்டுமென்று இயக்குநர் சொன்னால் அது போயாகவேண்டும். வெயில், மழை, குன்று, பள்ளம் எதுவானாலும். காலை வெயில்வரும் நேரம் முதல் வெயில் அணைவது வரை வேலை. அந்த அளவுக்கு தீவிரமாக அரசு ஊழியர்கள் வேலைசெய்தால் நாலில் ஒரு பங்கினரை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஆறரை மணிக்கு படப்பிடிப்பு நடக்கும் இடத்தில் இருப்போம். நாசரேத், சாத்தான்குளம் பகுதிகளில் தேரிக்காடுகளில் படப்பிடிப்பு.

அந்த நிலம் விசித்திரமானது. வத்தல் மிளகு பரப்பியதுபோன்ற ஆழ்ந்தசெம்மண். அதன்மேல் கன்னங்கரிய பனைமரங்கள். இப்போது சமூக வனத்துறையினர் அக்கேஷியா மரங்களை நட்டிருக்கிறார்கள். காயோகனியோ கிடைக்காத மரங்கள், ஆனால் ஆடுகள் மேயாதவை. ஆகவே அவை எதிர்கால தேரிக்காடுகளாக ஆகிக் கொண்டிருக்கின்றன. காலைமுதல் மாலைவரை வெயிலுக்கு ஏற்ப செம்மண்ணின் நிறம் மாறுவது ஓர் அலாதியான அனுபவம்.

ஏறத்தாழ 2500 சதுர கிலோமீட்டர் அகலத்துக்கு விரிந்துகிடக்கும் காடுகள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளன. அதேயளவு பகுதி பட்டாநிலமாகவும் இருக்கிறது. செம்மண் என்றால் களிபோன்ற உறுதியான செம்மண் அல்ல. பொலபொலவென்ற செம்மணல். அதில் ஊடுருவிய மினுமினுக்கும் டைட்டானியம் தாது சிவந்த சருமத்தில் நீலநரம்புவலை போல தெரியும். அதற்காக டாட்டாவும் வைகுண்டராஜனும் மோதிக் கொள்கிறார்கள்! மழைநீர் தடங்களில் மாமிசக்கதுப்புபோல மணல்வரிகள்.

மேகமற்ற ஆழ்நீலவானத்தில் இருந்து வெண்ணிற நெருப்புமழை போல வெயில். சமீபகாலத்தில் எங்கும் நான் இந்த அளவுக்கு வெயிலை அறிந்ததில்லை. அதிலும் இந்தப் பருவத்தில் குமரிமாவட்டத்தில் எந்நேரமும் தூறலும் சாரலுமாக வானம் இருண்டே இருக்கிறது. படப்பிடிப்பு இடத்தில் அத்தனைபேரும் வெயிலில் காய்ந்து வியர்த்து ஊற்ற நான் மட்டும் குடையுடன் நாற்காலியிலேயே இருந்தேன். ஆனால் வெயிலால் மிகவும்

பாதிக்கப்பட்டதும் நான்தான். களைத்துச் சோர்ந்து முகம் கறுத்து கன்னத்தோல் உரிந்து வறுவலாகிவிட்டேன்.

படப்பிடிப்பு என்றால் வேறுவழியே இல்லை. வசந்தபாலன் முழுநேரமும் வெயிலில்தான் இருந்தார். அவர் ‘வெயில்’ வசந்தபாலன். புழுதிக்காற்றில் உடம்பெல்லாம் செம்மண். அறைக்கு வந்து தலைதுவட்டினால் வெண்ணிற டர்க்கிடவல் சிவப்பாக ஆகிவிடும். திரும்பிவந்து குளிக்கும்போது ஒருகணம் உடல் சில்லிட்டு கடுமையாக குளிரும். பின்னர் சற்றே எரியும். பிறகு அழுத்தமான ஒரு விடுதலை உணர்வு. தொலைக்காட்சிப்பெட்டியை போட்டதுமே தூக்கம் வந்து சொக்கும்.

வெயில் எரியும் நிலத்து மக்களும் அந்த தாவரங்கள் போலத்தான் இருக்கிறார்கள். தடித்த, தொப்பை விழுந்த, எவரையுமே காணமுடிவதில்லை. வறண்டதலைமுடி, கருகிய முகம், உலர்ந்த உடல்... ஆண் பெண் குழந்தைகள் அனைவருமே அப்படித்தான். பலகிலோமீட்டருக்கு ஆளே தென்படாத முள்காட்டில் தன்னந்தனியாக இளம்பெண்கள் முள்விறகு வெட்டி சேர்த்து சுமந்துசென்று கொண்டிருந்தார்கள். உடைமுள், கருவேலங்காடுகளில் செடிகளும் மரங்களும் இலையே இல்லாமல் இரும்பால் செய்யப்பட்டது போல முழுக்க முழுக்க முள்ளாக சிலிர்த்து நிற்க, குழந்தைகள் கால்களில் செருப்பே இல்லாமல் ஊடே அலைகின்றன.

ஓர் அன்னியனின் கண்ணால் அந்த நிலத்தையும் மக்களையும் பார்க்கும்போது சில மனப்பதிவுகள் ஏற்படுகின்றன. ஆராய்ச்சி செய்து சென்றடையும் முடிவுகளைப் போலவே இவையும் முக்கியமானவைதான். போகிறபோக்கில் கண்ணில் படுகின்றவை. சொல்லிக் கேட்பவை... ஆர்.எம்.கே.வி மற்றும் போத்தீஸ் விளம்பரங்கள் இல்லாத இடமே இல்லை. சுவர்களெங்கும். அதைவிட்டால் மஸ்கோத் அல்வா, பேரீட்சை அல்வா விளம்பரங்கள். மக்களின் முக்கிய உணவே அல்வாதானா என்று நினைக்கத்தோன்றும்.

ஊர்பெயர்கள் பெரும்பாலும் நல்ல தமிழில் இருக்கின்றன. அறிவான்மொழி, நாலுமூலைக்கிணறு... ஓர் ஊரின் பெயர் நங்கைமொழி. உடனே அருண்மொழி நங்கைக்கு ஃபோன் போட்டுச் சொன்னேன். ஊர்கள் மிக விலகி பொட்டல்காடுகள் நடுவே உள்ளன. ஓலைக்கூரை கொண்ட வீடுகள் அனேகமாக இல்லை. ஆனால் ஓட்டுவீடுகளையும் குடிசைகள் என்றுதான் சொல்லவேண்டும். ஓலை வீட்டின் குளிர்ச்சி இல்லாத சூளை அறைகள் அவை.

பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் பண்ணையார்வீடுகள் காலியாக பூட்டி கிடந்து மௌனமாக பாழடைந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்துவிட்டார்கள். கிறித்தவர்கள் அதிகமாக வாழும் சில ஊர்களில் மிகப்பெரிய கைவிடப்பட்ட பங்களாக்கள் பல காணக்கிடைத்தன. பொதுவாக இப்பகுதியில் கிறித்தவமதப்பிரசாரம் அதி உக்கிரமாக நடைபெறுகிறது. தற்போது அதிகமாக மதமாற்றம் நிகழும் இடங்களில் ஒன்று. பால் தினகரனுக்குப் பின்னர் தனியார் மதப்பரப்புநர்களில் ஆகப்பெரிய நட்சத்திரங்களான மோகன் சி லாசரஸ் மற்றும் அப்பாத்துரையின் தலைமையகம் இங்கே நாலுமாவடி என்ற ஊரில்தான் உள்ளது.

தமிழகத்தின் செல்வாக்கான வணிகர்கள் பலருக்கு இதுவே சொந்த இடம். தினத்தந்தி குடும்பத்தினரின் சொந்த ஊரான காயாமொழியில் முத்தாலம்மன் கொடைவிழாவை ஒட்டி பெரியவர் சின்னவர் இருவருக்கும் பிரம்மாண்டமான சுவரெழுத்துக்கள் காணப்படுகின்றன. சரவணபவன் ராஜகோபாலின் ஊரும் அருகேதான். மழை அதிகமாக இல்லாததனாலும் போக்குவரத்து குறைவு என்பதனாலும் சாலைகள் பழுதடையாமல் செம்மண் நடுவே கரிய நேர்கோடாக செல்கின்றன. காடுகளுக்குள் எப்போதும் மயில் அகவல் ஒலி. அவ்வப்போது சாலையைக் கடக்கும் கீரிகள்.

காலையில் முயல்கள் வெளிவரும் என்றார்கள். ஆறு நாய்களுடன் வேட்டைக்குச் சென்ற

கும்பல் ஒன்றைச் சந்தித்தேன். ராஜபாளையம் இனம் போல ஒல்லியாக உருவிவிட்டது போன்ற உடலுடன் ஆனால் தவிட்டு நிறத்தில் இருந்த நாய்கள். டாபர்மானின் உள்ளூர் வடிவம்போல. மிகமிக அமைதியானவை. படப்பிடிப்புக்கு நடுவே வந்து ஆள்கூட்டம் நடுவே நின்று அமைதியாக வேடிக்கை பார்த்தன. ராஜபாளையம் நாய்கள் அந்த வெக்கையை தாக்குப் பிடிக்காதாம். ஒருகிலோமீட்டர் ஓடினாலே படுத்துவிடும். இவை ராஜபாளையம் ஆணுக்கு உள்ளூர் அன்னையில் உருவாக்கப்பட்ட கலப்புகள். எத்தனை ஓடினாலும் களைக்காதவை. ஒருநாள் முழுக்க தாகம் தாங்கும்.

நாய்களை நாள் வாடகைக்கு எடுக்க முடியும் என்ற தகவல் எனக்கு ஆச்சரியம் அளித்தது. யார் கூப்பிட்டாலும் வேட்டைக்குவந்து கட்டளைகளுக்கு கீழ்ப்படியுமாம். வாடகைக்குக் கொடுப்பவர் கொடுக்கும் குச்சியை கையில் வைத்திருந்தால் போதும். ‘கடிக்குமா?’ என்றேன். ‘சேச்சே. வேட்டை நாய் எங்கியாவது கடிக்குமா?’ என்றார்கள். சாம்பல்நிற முயல்கள் அங்கே அதிகம். அவற்றைப்பிடித்தால் குடலும் ஈரலும் நாய்களுக்கு. கொடுத்தால் கூட அவை பிறபகுதிகளை உண்பதில்லை. காட்டு இலாகா நிலத்துக்குள் பொதுவாக வேட்டைக்குச் செல்லமாட்டார்கள். மாட்டிக் கொண்டால் பிரச்சினை. முயல்வேட்டை என்பது பெரும்பாலும் லாபமில்லாத விளையாட்டுதான்.

நிலங்களில் கருவேல மரங்களை வளர்த்து அதற்கு கருவேலமர முட்களாலேயே வேலிபோடப்பட்டிருப்பதை காணலாம். கருவேலம் ஒரு லாபகரமான வேளாண்மையாம். அதற்கு ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை. நட்டு வளரவிட்டால் போதும். ஐந்துவருடங்களில் குத்தகைக்காரர்கள் வெட்டி காகித ஆலைக்கு அனுப்பிவிடுவார்கள். டன் ஒன்றுக்கு ஐந்தாயிரம் வரை விலை உண்டு. ஏக்கருக்கு ஐந்துவருடத்தில் இருபது டன் தேறும். கருவேலமரக்காட்டுக்குள் பறவை ஒலிகள். அங்கே அவை எதை தின்கின்றன?

காயாமொழிக்கு அருகே படப்பிடிப்பை விட்டு விலகி நடக்கப்போனேன். ஆள் நடமாட்டமே இல்லாத கருவேலங்காட்டுப்பாதையில் ஆடுகளுடன் வந்த ஆத்தங்கரை நாடாரைச் சந்தித்தேன். அவரது இயற்பெயரே அதுதான், சாமிபெயர். ஆடுமேய்ப்பதுதான் முக்கிய தொழில். இந்த ஊர் ஆடுகளின் சுவை வேறு எங்கும் வராது என்றார். காரணம் வெயில்தான். மழை உள்ள ஊர்களில் ஆடுகளின் சருமம் இத்தனை பளபளப்பாக இருக்காது. கருவேலத்தளிரைத்தான் அதிகமும் உண்கின்றன. மலையாளத்தானுக்கு அந்த அருமை தெரியும். ‘பொன்விலை’ கொடுத்து ஆடுகளை வாங்கிக் கொள்வார்கள்.

நாடாருக்கு நாலு பையன்கள், மூன்று பெண்கள். கடைசிப்பெண் கல்யாணத்துக்கு நிற்கிறாள். அவளுக்கு இருபதுபவுன் சேர்த்து வைத்திருக்கிறார். கல்யாணச்செலவுகளுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கைவசம் இருக்கிறது. அரசாங்கம் கொடுத்த டிவி இரண்டு கிடைத்தது. காரணம் வீட்டில் மூன்று ரேஷன் கார்டுகள். மகன்கள் குடும்பமும் சேர்ந்துதான் வாழ்கிறார்கள். ஒரு டிவி, கியாஸ் அடுப்பு இரண்டையும் பெண்ணுக்குச் சீதனமாக எடுத்து வைத்துவிட்டிருக்கிறார். செந்தூரரான் கண் பார்க்கணும். ஆடுமேய்த்தே பிள்ளைகளை எல்லாம் கரையேற்றிவிட்டார் நாடார். சிவாஜி ரசிகர். இப்போது படமே பார்ப்பதில்லை, சிவாஜியின் எல்லா படங்களையும் பார்த்தாகிவிட்டது.

பதினைந்து நிமிடத்தில் தன் வாழ்க்கையை சுருக்கமாகச் சொல்லிவிட்டு ஆடுகளைத் திருப்பி என்னுடன் ஊருக்குத் திரும்ப தயாரானார் நாடார். அவர் வீட்டுக்குப் போய் நான் ஒரு தேத்தண்ணி குடித்தே ஆகவேண்டும் என்றார். வீடு மேலும் நான்கு கிலோமீட்டர் அப்பால். மன்றாடி அதை தவிர்த்துவிட்டேன்.

இப்பகுதியெங்கும் நிறைந்திருக்கும் பனைமரங்கள் பல லட்சம் இருக்கும். கிட்டத்தட்ட அனைத்துமே அப்படியே பல வருடங்களாக சும்மா விடப்பட்டிருக்கின்றன. ஐந்து சத பனைகள் கூட பயன்பாட்டில் இல்லை. ஆனாலும் இப்பகுதியில் நிறைய தரமான கருப்பட்டி மற்றும் பதநீர் கிடைக்கிறது. இந்தப்பனைகள் தமிழ்நாட்டின் மாபெரும் சொத்து. பனைகளை

பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தாலே இங்குள்ள கிராமப்புற வறுமையை கிட்டத்தட்ட முற்றாக துடைத்துவிடலாம்.

ஆனால் அரசு கள் எடுப்பதை முழுமையாகவே தடைசெய்து வைத்திருக்கிறது. கள் வேறு எந்த மதுபானத்தைவிடவும் ஆரோக்கியமானது. பனைமரங்களில் ஏற்றுவதற்கு அதிக ஆள் கிடைப்பதில்லை என்பதும் பதநீரை காய்ச்சி கருப்பட்டியாக ஆக்க நிறைய விறகு தேவைப்படுகிறது என்பதும் கருப்பட்டி விலையை உச்சத்தில் வைத்துள்ளன. நவீன அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி கள்ளையும் பதநீரையும் சரியாக புட்டிகளில் அடைத்து விரிவாக வணிகம் செய்ய முடியும் என்றால் தமிழகம் பலகோடி ரூபாய் வருமானத்தைப் பெற முடியும். பலகாலமாகவே பற்பல பொருளியல் நிபுணர்களும் அமைப்புகளும் அதற்காகக் குரல் கொடுத்து வந்தாலும் அரசு பொருட்படுத்தவில்லை என்றார்கள்.

இருபத்தேழாம் தேதிவரை திருச்செந்தூரில் இருந்தேன். அன்று காலையிலேயே கிளம்பி கோயிலுக்குச் சென்றேன். திருச்செந்தூரில் ஆவணித் திருவிழா. கூட்டம்கூட்டமாக கிராமத்து மக்கள் வந்து கோயிலைச் சுற்றி ஆயிரக்கணக்கில் இரவு தங்கியிருந்தார்கள். விரிக்கப்பட்ட பிளாஸ்டிக் சாக்குகளில் வெள்ளித்தண்டை போட்ட கரிய குட்டிக்கால்களுடன் குழந்தை முருகன்கள் தூங்கினார்கள். பெண்முகங்களில் தெரிந்த குதூகலமும் பரபரப்பான உரத்த குரல்களும் மனதை மலர்வித்தன. அதிகாலையில் அலங்காரரூபனாக தீப ஒளியில் மின்னிய கல்யாணமுருகனையும் கடலையும் பார்த்துவிட்டு திரும்பிவந்தேன்.

ஆகஸ்ட் 29, 2008

[59. அலாவுதீன்]

அங்காடித்தெரு படப்பிடிப்புக்காக திருச்செந்தூர் சென்றிருந்தபோது நான் மக்களைத்தான் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். கிராமங்களில் படப்பிடிப்பு வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும்போதுதான் மக்கள் படப்பிடிப்பு நடக்கப்போவதை அறிகிறார்கள். பரபரப்புடன் சிறுவர்களும் சிறுமிகளும் அவிழும் கால்சட்டைகளையும் அழுக்குப் பாவாடைகளையும் கையில் பிடித்தபடி பெரிய பற்களைக் காட்டி உரக்கச் சிரித்தபடி ஓடிவந்து கூடி ஒருவரை ஒருவர் பிடித்துத்தள்ளி சண்டைபோட்டு முண்டியடித்து வேடிக்கை பார்க்கிறார்கள். இடுப்பில் பிள்ளைகளுடன் அரக்கப்பரக்க ஓடிவரும் பெண்களின் முதல் வரிசைக்குப் பின் அவசரமாக தலைசீவி சோப்புபோட்டு முகம் கழுவி உடைமாற்றி வரக்கூடிய அடுத்த வரிசைப்பெண்கள். முகவாயில் கைவைத்து கண்கள் கூச வேடிக்கை பார்க்கும் பாட்டிகள். அவ்வழியாக போகும்போது நின்று பார்க்கும் நடுவயது ஆண்கள். அவர்கள் நீர்ப்பாசிப்படலம்போல. விலக்கியபடியே இருக்க வேண்டும், இல்லையேல் மெல்லமெல்ல வந்து காமிராவையே மூடிவிடுவார்கள். படப்பிடிப்பில் ஒரு பகுதி மனித உழைப்பு இதற்காகவே செலவிடப்படுகிறது.

அத்தனைபேருக்கும் ஒரே கேள்விதான். 'என்ன படம்?' பெயரைச்சொன்னதுமே அடுத்த கேள்வி 'யாரு நடிக்காக?' அப்பகுதியில் முதல் நட்சத்திரம் சரத்குமார்தான். காரணம் சாதி. அடுத்துதான் ரஜினிகாந்த். 'புதுமுகம்தாங்க..' என்றதுமே ஆர்வம் சரசரவென்று சரிகிறது. மக்களுக்கு சினிமாவில் ஆர்வமிருக்கும் ஒரே விஷயம் நடிகர்கள்தான். 'வேற ஆரும் இல்லீங்களா?' 'இல்லீங்க எல்லாருமே புதுமுகம்.' இரண்டாவது நாள் அப்பகுதியில் படப்பிடிப்பு நடந்தால் பத்து சதவீத கூட்டம்தான் இருக்கும்.

அங்காடித்தெரு படப்பிடிப்பில் ஒரே நட்சத்திரம் பிளாக் பாண்டி. 'கனாக்காணும் காலங்கள்' என்ற தொலைக்காட்சித்தொடர் மூலம் பிரபலமானவர். இயற்பெயர் லிங்கேஸ்வரன். நாடகக் கலைஞராக இருந்த தந்தையின் இறப்புக்குப் பின் நடித்தே தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார். அங்காடித்தெருவில் அவர் ஒரு முக்கியமான கதாபாத்திரம். கிராமங்களில் அவரைச்சுற்றி எப்போதும் ஒரே கூட்டம். விதவிதமான தாள்களில் கையெழுத்து போட்டுக்கொடுத்துக் கொண்டே இருந்தார். 22 வயதானாலும் 18 வயது பையன்போலத்தான் தோற்றம், பேச்சு எல்லாமே. 'பாண்டிண்ணா நீ என்னா படிச்சே?' 'நானா? நான் பத்தாப்பு ஃபெயிலு மாப்ள' என்று சாதாரணமாக அனைவரிடமும் பழகுகிறார்.

பிளாக் பாண்டி அதிபுத்திசாலியான இளைஞர். ஒவ்வொரு காட்சிக்கும் நாலைந்து வகை நடிப்புகளை செய்துகாட்டி இயக்குநரை தேர்வுசெய்யச் சொல்லக்கூடியவர். அசலான நகைச்சுவை உணர்ச்சி கொண்டவர். ஐந்துவயது முதலே சினிமாத் தொடர்பு இருப்பதனால் சினிமாவின் தொழில்நுட்பமும் நன்றாகவே தெரிகிறது. சினிமாவில் ஒரு முக்கியமான இடத்தை அவர் அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம். அவருடன் நான் பேசிக்கொண்டிருக்கும்போது அவரது ரசிகர்கள் மொய்த்துக் கொண்டு 'பாண்டி நீ சூப்பரா நடிக்கிறே.. அப்றம் மத்தவன் ஹீரோ என்ன ஆனான்?' என்று சீரியலைப்பற்றிப் பேசுவார்கள். அவரை அறியாதவர்களே கிராமத்தில் இல்லை. அவருக்கும் எங்கும் ரசிகர்களைப் பார்த்துப் பார்த்து பழகிப்போய் இயல்பாக அவர்களை எதிர்கொள்கிறார். 'பாண்டி ஏன் படிப்ப நிப்பாட்டினெ?' 'இல்ல பாட்டி சீரியலிலயும் ஸ்கூலுக்குதானேபோறேன்...'

அடுத்தபடியாக வசந்தபாலனை சிலருக்கு தெரிந்திருந்தது. பெயர் சொன்னால் தெரியாது. வெயில் என்றால் தெரியும். வெயில் தென்தமிழ்நாட்டில் இருமுறை வெற்றிகரமாக ஓடியிருக்கிறது. தொலைக்காட்சிகளில் பலமுறை வந்திருக்கிறது. ‘ஏல, ஒரு கோட்டிக்காரத்தாயோளி புள்ளை வாழ்க்கைய நாசம் பண்ணுவானேலே, அந்தபடம்’ என்று பனையேறுபவர் சொன்னார். மற்றவர் ‘பசுபதி குடுத்த படம்தானே? நல்ல நடிப்பு’ என்றார். ‘ஏஞ்சாமி புள்ளய அப்டியா அடிக்கிறது? அடிக்கலாம்... ஆனா அவமானப்படுத்தப்பிடாதுல்ல?’ என்று என்னை கேட்டார்.

ஆனால் கதாநாயகனை எவருமே கதாநாயகனாக காணவில்லை. ஏனென்றால் அவரும் அவரை அப்படி நினைக்க ஆரம்பிக்கவில்லை. பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்த வாலிபால் சாம்பியனாகிய மோகன் இப்படத்தின்மூலம் மகேஷ் என்ற கதாநாயகனாக ஆகிறார். அப்பட்டமான தெற்கத்தி முகமும் வெட்கம் கலந்த இயல்பான சிரிப்பும்தான் அவரது தனித்தன்மைகள். சினிமா பற்றி எதுவுமே தெரியாது. எளிய நடுத்தரக் குடும்பத்துப் பின்னணி கொண்டவர். அவரை ஆறுமாதம் முன்னரே சென்னைக்குக் கொண்டு சென்று தங்க வைத்து நடிக்க பயிற்சி செய்து அவற்றை வீடியோ எடுத்து ஆராய்ந்து அசைவில் உள்ள குறைகளைக் களைந்து சினிமாவைக் கற்றுக்கொடுத்து மெல்லமெல்ல நடிகராக ஆக்கினார் வசந்தபாலன். மகேஷின் அப்பாவை தேடிப்போய் உதவி இயக்குநர்கள் இப்போதே கதைசொல்கிறார்கள் என்று தகவல்.

ஆரம்பத்தில் கூச்சம் காரணமாக மகேஷ் ஏராளமாகச் சொதப்பினார் என்றார்கள். நான் பார்க்கும்போது சாதாரணமாக நடித்துக் கொண்டிருந்தார். பாலன் சொல்வதை உடனே புரிந்துகொண்டு அதை இயல்பாகச் செய்தார். அவர் நடிக்கவில்லை. வெளியே பேசும்போதும் அதே வகையான இயல்பான பாவனைகளும் கூச்சச் சிரிப்பும்தான்.

சினிமாநடிப்பு என்பது செயற்கையின் உச்சம். வெளிச்சம், காமிராவின் நகர்வு இரண்டையும் எப்போதும் கணக்கில் கொள்ளவேண்டும். பார்வையின் திசை கவனத்தில் இருக்க வேண்டும். எதிரே நடிப்பவர்கள் அனேகமாக இருக்கமாட்டார்கள். ஆகவே கற்பனையில் நோக்கித்தான் நடிக்க வேண்டும். காட்சிகள் துளிகளாக சிதறடிக்கப்பட்டு வெறும் வசனங்களாகவும் அசைவுகளாகவும்தான் எடுக்கப்படும். ஒரு திசையில் காமிரா இருக்கையில் அத்திசை நோக்கிய வசனங்களும் அசைவுகளும் எடுக்கப்பட்ட பின்னர்தான் எதிர்திசைக்கு வருவார்கள். எப்போதும் எண்பதுபேர் சூழ இருக்க, என்னவென்றே தெரியாத நாநூறுபேர் வேடிக்கை பார்க்க, மொட்டைவெயிலில் மேலும் பிரதிபலிப்பான்கள் வைத்து உக்ர வெயிலாக்கி எடுக்கும்போது மீண்டும் மீண்டும் ஒரே வசனத்தைச் சொல்லி ஒரே அசைவை அளித்து நடிக்க வேண்டும். ஆனால் திரையில் இயற்கையாக இருக்க வேண்டும். சவால்தான். ஆனால் மகேஷ் மிக சரளமாக அதைச் செய்தார் என்பதைக் கவனித்தேன்.

அவர் மெல்ல தேறி வந்ததற்கு கதாநாயகி அஞ்சலி காரணம் என்றார் இணை இயக்குநர் சரவணன். (இலக்கிய அறிமுகமும் திரைப்பயிற்சியும் உள்ள சரவணன் அடுத்த வருடம் திரைப்படத்தை இயக்குவார் என்று உறுதியாகத் தோன்றியது.) அஞ்சலி ‘கற்றது தமிழ்’ மூலம் அறிமுகமானவர். புதுமுக கதாநாயகனின் முடிவில்லாத தவறுகளை பொறுத்துக்கொண்டு அவரது கூச்சத்தை மெல்லமெல்ல போக்கி சிறப்பாக நடித்தார் என்றார்.

மகேஷ் அவர் இருக்கும் ‘சிம்மாசனத்தை’ இன்னும் உணரவில்லை. வேடிக்கைபார்க்க வந்த இளைஞர்களில் ஒருவர் போல சாதாரணமாக கும்பலில் இருந்தார். பிறர் நடிக்கும்போது விளையாடினார். பையன்களுக்கே உரிய ஆர்வங்கள். செல்போன், விளையாட்டு, பெரியவர்களைப்பார்த்தால் நிறுத்திவிடும் பேச்சுகள். அதைவிட வேடிக்கை என்னவென்றால் அவர்தான் கதாநாயகன் என்று தெரிந்த பின்னும்கூட கூட்டம் அவரை நடிகராக எண்ணவில்லை. வெள்ளித்திரையில் இருநூறு மடங்கு பெரிதாக தெரிய வேண்டியிருக்கிறது அதற்கு. தமிழில் ஒரு நடிகரின் இடம், அதிலும் கதாநாயகனின் இடம் என்பது, புராணகால

தேவர்களுக்கு நிகரானது. அதிகபட்சம் டிசம்பர். அதன்பின் அவரது வாழ்க்கையே மாறிவிடும். அலாவுதீனின் விளக்கை தேய்த்துவிட்டார். பூதம் உள்ளே உடைமாற்றிக் கொண்டிருக்கிறது.

செப்டம்பர் 2, 2008

60. நெய்தல் விருது

எழுத்தாளர் சுந்தர ராமசாமி நினைவாக நாகர்கோயில் நெய்தல் அமைப்பு வருடம்தோறும் இளம்படைப்பாளிகளுக்கு இலக்கிய விருதுகளை அளித்து வருகிறது. சென்ற வருடம் இவ்விருதை எழுத்தாளர் கண்மணி குணசேகரன் பெற்றார்.

இவ்வருடத்திய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. நாவலாசிரியரும் கவிஞருமான ஜெ.பிரான்ஸிஸ் கிருபா விருது பெறுகிறார். எழுத்தாளர்கள் வாசகர்கள் ஆகியோர் முன்வைத்த பரிந்துரைகளில் இருந்து பாவண்ணன், சுகுமாரன், அரவிந்தன் ஆகியோர் அடங்கிய நடுவர்குழு இவ்விருதுக்குரியவரை தேர்வுசெய்தது. பாராட்டுப்பத்திரமும் ரூ. 10000 ரூபாயும் அடங்கியது இவ்விருது.

அக்டோபர் 19 ஆம்தேதி சுந்தர ராமசாமி நினைவுநாள் நாகர்கோயிலில் கொண்டாடப்படும்போது இந்த விருது வழங்கப்படும்.

ஜெ.பிரான்ஸிஸ் கிருபா தமிழின் இன்றைய மிக முக்கியமான இளம்படைப்பாளி. சொல்லப்போனால் தனக்கென தனி புனைவுமொழி கொண்ட சமகால இளம்தமிழ் எழுத்தாளர் இவர் ஒருவரே. பித்தின் வேகத்தை அபாரமான சொல்லாற்றலால் பிந்தொடரும் வல்லமை கொண்டவர் கிருபா. அவரது நாவலான ‘கன்னி’ (தமிழினி வெளியீடு) இதற்கு சிறந்த உதாரணம்.

‘வலியொடு முறியும் மின்னல்,’ ‘நிழலன்றி ஏதுமற்றவன்,’ ‘மெசியாவின் காயங்கள்’ ஆகிய கவிதைத்தொகுதிகள் வெளியாகியிருக்கின்றன. (தமிழினி)

மெசியாவின் காயங்கள்

உயிர்பிரியும் கணத்தில்

தம் காயங்களை

கடைசியாய் பார்வையிட்ட

மெசியாவின் கண்களை

பல நூற்றாண்டுகள் கழித்து

இன்று சந்தித்தேன்

கடற்கரையில்

மடித்த கைப்பைகளுடன்

சூழ்ந்து நின்ற மனிதர்களுக்கு

மத்தியில் மல்லாத்திவிட்டு

தன் வயிற்றில் இறங்கி

முழுவட்டமடித்த கத்தியை

தலை தூக்கி எட்டிப்பார்த்தது

ஆமை.

செப்டம்பர் 22, 2008

61. ஞாநி என்ற கோபக்காரர்

தமிழில் நான் எப்போதுமே கவனித்து வாசிக்கும் இதழாளர்களில் ஒருவர் ஞாநி. நான் சின்னப்பையனாக இருந்த காலத்தில் நாடகங்கள் அழிகிறதா என்ற ஒரு விவாதம் குமுதத்தில் வந்தது. அதில் 'ருத்ராட்சப்பூனைகளே !' என்று சீறி ஞாநி எழுதிய குறிப்பு வெளியாகியிருந்தது. அதுதான் நான் அவரைப்பற்றி படித்த முதல் தகவல். அதன் பின் இந்த முப்பது வருடத்தில் அவரை நுட்பமாகக் கூர்ந்து கவனிப்பவனாகவே இருந்திருக்கிறேன். அதன் பின் அவர் சங்கராச்சாரியாரை பேட்டிகண்டு எடுத்து வெளியிட்டது எனக்கு மிகவும் பிடித்த கட்டுரையாக இருந்திருக்கிறது.

ஞானியின் அரசியல் சமூகவியல் கருத்துகளில் எனக்கு எப்போதுமே முரண்பாடுதான். அவர் தவறாகச் சொல்கிறார் என்று தோன்றுவதில்லை. மாறாக எளிமைப்படுத்திவிடுகிறார் என்று தோன்றும். சமூக இயக்கம் என்பது எப்போதுமே முழுக்கப் புரிந்துகொள்ள முடியாத முரணியக்கத்தின் விளைவு. வன்முறை இல்லாமல் அம்முரணியக்கம் நிகழுமென்றால் அது வளர்ச்சிப்போக்காகவே இருக்கும் என்பது நான் கொண்டுள்ள இலட்சியவாத நம்பிக்கை. ஞாநி அந்த முரணியக்கத்தை காண்பதில்லை. கறுப்பு வெள்ளைகளில் நிற்கும் தீவிர நோக்கு அவருடையது. அந்த எளிமைநோக்குதான் அவரை ஈவேராவை நோக்கி இழுத்திருக்கிறது.

ஆனால் தன்னளவில் நேர்மை கொண்ட இதழாளர் என நான் அவரை நினைக்கிறேன். தன் கருத்துகளுக்காக போராடக்கூடியவர். அதன் பொருட்டு எதையும் இழக்க தயாராக இருப்பவர். சலியாத சமூகக் கோபம் கொண்டவர். தமிழில் இன்றைய தலைமுறையில் அப்படி சிலரை மட்டுமே நம்மால் சுட்டிக் காட்ட முடிகிறது. ஞாநி நான் சொல்லும் பெரும்பாலான கருத்துகளை எதிர்ப்பார். ஆனால் அவர் தமிழில் ஒரு தார்மீக சக்தி என்றே நான் எப்போதும் எண்ணி, சொல்லி வருகிறேன்.

தமிழில் அவ்வாறு சமூகக் கோபம் கொண்டவர்களாக காட்டிக் கொள்பவர்களில் பெரும்பாலானவர்கள் வெறும் தனிநபர் காழ்ப்பும் உள்ளடங்கிய சாதிக்காழ்ப்பும் மட்டுமே கொண்டவர்கள் என்பதை நான் பொதுத்தளத்தில் செயல்பட ஆரம்பித்த இந்த முப்பது ஆண்டுகளில் கண்டு சலிப்படைந்திருக்கிறேன். ஞானி தனிப்பட்ட காழ்ப்புகள் அற்றவர். தனிப்பட்ட கோபங்களுக்கு தாவிச்சென்றாலும் உடனே குளிர்ந்துவிடுபவர்.

எனக்கும் ஞாநிக்கும் சில பொது அம்சங்கள் கூட இருக்கின்றன. அவரைப்போலவே நானும் அசோகமித்திரனின் எழுத்துக்களின் தீவிர வாசகன். அவரைப் போலவே எனக்கும் பழைய போஸ்ட் கார்டு போல உடம்பெல்லாம் முத்திரைகள். ஞாநியை பார்ப்பனர் என்றும் (இந்துத்துவர் என்றும் கூட!) பிற்போக்குவாதி என்றும் முத்திரை குத்தும் எழுத்துக்களை நான் சென்ற எத்தனையோ வருடங்களாக கண்டுவருகிறேன். அதை முன்வைப்பவர்கள் எவருமே எளிய அடிப்படை நேர்மை கூட இல்லாத அரசியல் ஆத்மாக்கள்.

பெரும்பாலான சமயங்களில் ஞாநி முத்திரைகளுக்கு எதிராக அதீதமாக உணர்ச்சிவசப்படுவார். நேரடியாக அவர் எகிறுவதைக்கூட கண்டிருக்கிறேன். என்ன செய்வது, தமிழில் எழுதினால் இது நிகழாமலிருக்காது. நான் சிரிக்கக் கற்றுக் கொண்டுவிட்டேன். அவர் இன்னும் கொஞ்சம் புன்னகையாவது செய்யலாம்.

ஞானி ஓர் இணையதளத்தை ஆரம்பித்திருக்கிறார். வாசகர்களுக்கு ஆர்வமூட்டும் அரசியல்

சமூகவியல் விவாதங்களுக்காக அதை சிபாரிசு செய்கிறேன்.

www.gnani.net

அக்டோபர் 4, 2008

62. பெண்ணேஸ்வரனும் டெல்லியும்

1991ல் நான் முதன்முதலாக பெண்ணேஸ்வரனை டெல்லியில் சந்தித்தேன். அப்போது அவர் மத்திய அரசில் ஏதோ ஓர் அமைச்சகத்தில் குமாஸ்தாவாக வேலைபார்த்துக்கொண்டிருந்தார். அப்போது டெல்லியில் ஒரு இளம் நண்பர்குழு இருந்தது. சுரேஷ் என்ற இலக்கியவாசகரான நண்பர். அங்கே வேலைபார்த்த அச்சுதன் அடுக்கா என்ற தி.அ.ஸ்ரீனிவாசன்… பொதுவாக டெல்லிக்குச் செல்லும் எழுத்தாளர்கள், விடுதியில் அறை எடுக்க காசில்லாதவர்கள், பெண்ணேஸ்வரனின் இரண்டு அறை வீட்டில் தங்குவது வழக்கம். அல்லது டெல்லி பல்கலை தமிழ்பேராசிரியரும் நாடக ஒளி அமைப்பு நிபுணருமான ரவீந்திரன் அவர்களின் மாடி அறையில். அங்கே வெங்கட் சாமிநாதன் வருவார். இலக்கிய சர்ச்சைகள், ஊடே வசைபாடல்கள் நடக்கும். ஒட்டுமொத்தமாக ஒரு சிற்றிலக்கியச்சூழல் அப்போது அங்கே இருந்தது.

ஜகன்மித்யை கதைக்காக கதா விருது பெறுவதற்காகவே நான் டெல்லி சென்றிருந்தேன். வெங்கட்சாமிநாதன், வாஸந்தி போன்றவர்களையும் அப்போதுதான் சந்தித்தேன். வழக்கம்போல வாஸந்தி நான் அவரைப்பற்றி எழுதிய ஒரு விமரிசனத்தை தவறான பொருளில் தீவிரமாக எடுத்துக் கொண்டிருந்தார். அத்தகைய கசப்புகள் என்னுடனான நேர்ப்பேச்சில் எளிதில் விலகுவதை கண்டிருக்கிறேன். நம்பகத்தன்மையை உருவாக்கக்கூடிய ஒரு அசட்டுச் சிரிப்பு எனக்கு இருக்கிறது என்று அருண்மொழி சொல்வதுண்டு. அப்போது வெங்கட் சாமிநாதனும் வாஸந்தியும் இருபக்கமும் நிற்க நடுவே நான் நிற்கும் புகைப்படம் ஒன்று என் ஆல்பத்தில் இருக்கிறது. அதில் அந்தச் சிரிப்பு இருக்கிறது.

பெண்ணேஸ்வரனையும் அப்போதுதான் அறிமுகம். சுரேஷும் அவரும் சேர்ந்து வந்திருந்தார்கள். அவரது சொந்த ஊர் கிருஷ்ணகிரி. நான் தருமபுரியில் வேலைபார்த்துவந்தமையால் உற்சாகமான நட்பு ஏற்பட்டது. அவர் அப்போது நவீனநாடகங்களில் திளைத்துக் கொண்டிருந்தார். நான் நவீனநாடகமென இரண்டுதான் பார்த்திருந்தேன். அவற்றில் நவீனம் எந்தப்பக்கமாக இருக்கிறதென புரியவுமில்லை. பெண்ணேஸ்வரன் தர்மபுரி மாவட்டத்துக் கூத்துக்கலை பற்றி விரிவாகப் பேசினார். பல கூத்துக்கலைஞர்களைப்பற்றி என்னிடம் விசாரித்தார்.

எனக்கு அந்த உற்சாகம் புரியவில்லை. காரணம் நான் பாலக்கோடுஅருகே ஒரு தெருக்கூத்துக்கு போயிருந்தேன். அது முக்கால்வாசி திரைப்படப்பாடல்களும் ஆபாச வசனங்களும் கொண்டதாக இருந்தது. ‘ஊருவிட்டு ஊரு வந்து காதல் கீதல் பண்ணாதீங்க’ என்று சீதை ராமனிடம் பாடி திங்கு திங்கென்று ஆடினாள். கடத்திவந்த ராவணனுக்கு ஆத்திரம் தாளாமல் புடவையை தூக்கிக் காட்டினாள். மறுநாள் அலுவலகத்தில் தெருக்கூத்துக்குப் போன என்னை விபச்சார வீட்டுக்குப் போனவன்போல பார்த்தார்கள். உயிர்நண்பர் குப்புசாமி நான்குநாள் பேசவேயில்லை. என்ன காரணத்தால் அதை ஒரு கலை என்று இந்த மனிதர் சொல்கிறார் என்று வியந்து என் அனுபவத்தைச் சொல்ல ஆரம்பித்தேன். ‘வாய வச்சுட்டு சும்மா இருடே, அது தெருக்கூத்தே இல்ல’ என்று அச்சுதன் அடுக்கா அடக்கினார்.

பின்னர் வெங்கட் சாமிநாதன் தெருக்கூத்து என்ற தமிழ்க்கலையின் உன்னதம், நசிவு இரண்டைப்பற்றியும் என்னிடம் சொன்னார். திரும்பி நான் ஊருக்கு வந்தால் அப்படி ஒரு

கலையே கிடையாது, ராத்திரி பதினொருமணிக்கு மேல் ஊர்ப்பெண்களை வாசலைமூடி படுக்கச் சொல்லிவிட்டு எட்டூர் திரண்டுகூடி மேடைகட்டி ஆடும் தெருக்கூத்து மட்டும்தான் உண்டு என்றார்கள். மீண்டும் பலவருடங்கள் கழித்து மொரப்பூர் அருகே ஊத்தங்கரை என்ற ஊரில் உண்மையான தெருக்கூத்தைக் கண்டேன். அதில் கடைசிப்போரில் இந்திரஜித் ராவணனிடம் விடைபெறும் காட்சியை நான்கண்ட மிகச்சிறந்த நாடகக்காட்சிகளில் ஒன்றாக உணர்ந்தேன். தன் கண்ணீரை தம்பி காணாமலிருக்க ராவணன் பின்னால் திரும்பி நின்று கையசைத்து விடைகொடுத்தான். ஆனால் அதைப்பார்த்து நெகிழ நான் உட்பட ஒன்பது பார்வையாளர்களே விழித்திருந்தோம். நல்லவேளையாக அன்று பெண்ணேஸ்வரன் என்னை அப்போது அவமதித்து ஒன்றும் சொல்லவில்லை என்று நன்றியுடன் நினைத்துக்கொண்டேன்.

அடுத்தவருடமே சம்ஸ்கிருதி சம்மான் விருது பெறுவதற்கு அருண்மொழியுடன் டெல்லி சென்றேன். அன்று என்னுடன் இதழியலுக்கான விருது பெற்றது ராஜ்தீப் சர்தேசாய். அவரது அலட்டலான உயர்குடிபாவனையும், எளியவர்களை, குறிப்பாக வெயிட்டர்களை துச்சமாக நடத்தும் தோரணையும் என்னை மிகவும் புண்படுத்தின. நான் வணக்கம் சொன்னபோது ‘வாட் யூ வாண்ட்?’ என்றார்,கோணலான இதழுடன். ‘இவனுகளுக்கு தமிழ்னா அவ்ளவு துச்சம்... உங்களுக்கு தெரியாது’ என்றார் கூடநின்ற நண்பர். ஆனால் பின்னர் பத்திரிகைப் பேட்டியில் அனல் கக்கும் புரட்சியாளராக ஆவேசப்பேச்சு பேசினார். இந்திய இதழியலின் மாபெரும் கள்ளநாணயங்களில் ஒன்றை அன்றே அறிமுகம் செய்துகொள்ள நேர்ந்தது.

அருண்மொழிக்கு ஒன்றும் தெரியாது. அன்று அவளுக்கு 20 வயது. மிரண்ட பெரிய கண்களுடன் அறிவுஜீவிகளைப் பார்த்து பீதியுடன் உட்கார்ந்திருந்தாள். வெங்கட்சாமிநாதனும் பெண்ணேஸ்வரனும் எங்களுக்கு ஓட்டலில் ஒரு விருந்து அளித்தார்கள். சாப்பாட்டுடன் அவர்கள் ஆளுக்கொரு பீர் குடித்தார்கள். அருண்மொழி ஒடுங்கிப்போய் அமர்ந்திருந்தாள். கை கழுவும்போது என்னிடம் தனியாக ‘அவங்கள்லாம் குடிக்கிறது சாராயம்தானே?’ ‘இல்லை பீர்’ என்றேன் ‘அதும் சாராயம்தான். எனக்கு தெரியும்’ என்றவள் ‘ஜெயன், இவங்கள்லாம் கெட்டவங்களா?’ என்றாள். எனக்கு உறுதியான பதில் ஏதும் தோன்றவில்லை.

வெங்கட் சாமிநாதனிடம் அருண்மொழி நவீன ஓவியம் பற்றி ஐயம் கேட்டாள். ஏன் இப்படி கோணல்மாணலாக வரைய வேண்டும்? நேராக வரையவேண்டியதுதானே? வெங்கட் சாமிநாதன் மிக நிதானமாக அவளுடைய புடவையின் டிசைனைப்பற்றி பேச ஆரம்பித்தார். அதன் வண்ணங்கள் கோடுகள் ஏன் அப்படி அமைந்திருக்கின்றன? ‘வெளியே பார்க்கும் நிறங்களையும் வடிவங்களையும் நாம் நம் கற்பனையில் கலந்து நமக்கே உரிய வடிவங்களை உருவாக்கிக் கொள்கிறோம். அதன் மூலம் இயற்கையிலேயே நமக்குக் கிடைக்கும் அழகனுபவத்தை மேலும் பெருக்கிக் கொள்கிறோம். இயற்கையில் உள்ள சத்தங்கள் இனிமையானவை. ஆனால் நாம் அவற்றை பலவாறாக மாற்றி அமைத்து இசை என்ற ஒன்றை உருவாக்கி ரசிக்கிறோம் அல்லவா, அதைப்போலத்தான் இதுவும்.’

‘நவீன ஓவியங்களை புரிந்துகொள்ளவே முடியவில்லையே’ என்றாள் அருண்மொழி. ‘ஏன் புரிந்துகொள்ள வேண்டும்? இந்த ஸாரியை என்ன புரிந்துகொண்டு எடுத்தாய்? பல ஸாரிகளைப் பார்த்தாய். கொஞ்சம் கொஞ்சமாக அவற்றில் இந்த டிசைன் நன்றாக இருக்கிறது என்று உனக்குத் தோன்றியது... இதைத்தான் ரசனை என்கிறோம். நிறைய ஓவியங்களைப் பார். கொஞ்சம் கொஞ்சமாக நல்ல ஓவியம் பிடிக்க ஆரம்பித்துவிடும்... ஒரு ஓவியம் என்ன உணர்ச்சியை தருகிறதோ அதுதான் அதன் அர்த்தம்...’

அருண்மொழி சுட்டிக்காட்டிய அருவச் சுவர் சித்திரத்தைக் காட்டி ‘தண்ணியிலே மஞ்சளா புன்னைமரப்பூ விழுந்து கிடக்கும் நம்மூர்லே... பாத்திருக்கியோ? நீலமும் மஞ்சளுமா கலந்து அவ்ளவு அழகா இருக்கும். அந்த அழகை வேற மாதிரி மாத்தி வரைஞ்சிருக்கார் இந்த ஓவியர்னு வை’ என்றார். அருண்மொழியின் முகம் மலர்ந்தது. அறிவுஜீவிகள் கெட்டவர்கள்

அல்ல என்று அவளுக்குப் புரிந்தது. அதிலும் வெங்கட் சாமிநாதன் என்றால் ஒரு தனி பிரியம். மேலும் அவர் அவளுடைய தஞ்சை சீமைக்காரர்.

இப்போது பதினைந்து வருடம் தாண்டிவிட்டிருக்கிறது. இன்றும் எங்காவது பெரிசின் படத்தைப் பார்த்தால் அருண்மொழிக்குப் பரவசம்தான். அவளது பிரியமான எழுத்தாளர் அசோகமித்திரன். அவரை யார் விமரிசனம் செய்தாலும் வெடிப்பாள். ஆனால் வெங்கட் சாமிநாதன் அசோகமித்திரனை பிடிபிடி என்று பிடித்தால் ஒன்றும் சொல்ல மாட்டாள். 'என்னமோ சொல்றாரு' என்று ஒரு தஞ்சாவூர் இழுப்பு. அவளும் வெங்கட் சாமிநாதனின் பிரியமான மாணவரான அ.கா.பெருமாளும் அவரைப்பற்றி உணர்ச்சிவசப்பட்டு பேசிக்கொள்வார்கள்.

பெண்ணேஸ்வரனை அதன்பின் டெல்லிக்குப் போனபோதெல்லாம் பார்த்திருக்கிறேன், ஆனால் நான் டெல்லிக்கே நான்குமுறைதான் போயிருக்கிறேன். அவர் யதார்த்தா என்ற நாடக இயக்கத்தை ஆரம்பித்தார். சி.சு.செல்லப்பாவின் முறைப்பெண் நாடகத்தை இந்தக்குழு மேடையேற்றியது. தொண்ணூறுகளில் ஃபோர்டு நிறுவன ஆதரவால் மேடையில் கயிறுகட்டி ஆடுவதும் தெருக்கூத்து மாதிரி வேடமிட்டு வந்து ஏழரைக்கட்டையில் பேசுவதுமாக தமிழ் நாடகமேடை தமாஷ் பண்ணிக்கொண்டிருந்தபோது அந்த யதார்த்த நாடகம் மூலம் ஒரு அதிர்ச்சியை உருவாக்க அவரால் முடிந்தது. அவரை தமிழ்நாடகத்தை பின்னோக்கி இழுக்கிறார் என்று வைதவர்களை நான் கேட்டேன். ஆனால் பின்னர் இங்கே யதார்த்த நாடகங்கள் வர ஆரம்பித்தன.

பெண்ணேஸ்வரன் சமீபமாக 'வடக்குவாசல்' என்ற சிற்றிதழை நடத்தி வருகிறார். டெல்லியிலிருந்து வரும் இந்த இதழ் அதிக ஆதரவில்லாமல் பிடிவாதமாக அவரால் கொண்டுவரப்படுகிறது. பெண்ணேஸ்வரனின் சனிமூலை என்ற இணையப்பக்கத்தை வாசகர்களுக்கு பரிந்துரைக்கிறேன். தமிழ் இலக்கியவாதிகளைப்பற்றிய நினைவுகளும் பதிவுகளும் நிறைந்த உற்சாகமான வாசிப்புதரும் இணையப்பக்கம் இது.

அக்டோபர் 14, 2008

63. ஒரு மாறுபட்ட போதகர்

எனக்கு மிகவும் பிடித்தமான பெயர்களில் ஒன்று காட்சன். (Godson). எல்லா மனிதர்களும் அப்பெயருக்குப் பொருத்தமானவர்களே. மரபான பொருளில் அது மனிதகுமாரனையும் குறிக்கிறது. ஐந்து வருடங்களுக்கு முன்பு அப்பெயருள்ள இளைஞர் என்னை வந்து சந்தித்தார். அவர் அப்போது இறையியல் படித்து முடித்துவிட்டு கிறித்தவ அறக்கட்டளை ஒன்றால் நடத்தப்படும் பனைத்தொழில் பாதுகாப்பு அமைப்பு ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தார். சர்ச்சில் கிறிஸ்துமஸ் உரை ஒன்றை நிகழ்த்துவதற்கான முதல்வரைவு ஒன்றை எழுதிக்கொண்டு வந்திருந்தார். அதைப் படித்து கருத்து சொல்லமுடியுமா என்று கேட்டார்.

கிறிஸ்துமஸ் உரைகளை நான் நிறைய கேட்டிருக்கிறேன். நானே சில நிகழ்த்தியும் இருக்கிறேன். காட்சனின் உரை மிக வித்தியாசமான ஒன்று. கலப்பைக்கும் சிலுவைக்கும் இடையேயான உருவ ஒற்றுமை பற்றி பேச ஆரம்பித்த அக்கட்டுரை ஆன்மீகமான உழுதலையும் விளைச்சலையும் தொட்டு முழுமை அடைந்தது. அதில் ஒன்றுமே செய்வதற்கில்லை, சிற்சில சொற்றொடர்ப் பிழைகளைத் தவிர என்று சொன்னேன். அதன்பின் காட்சன் அடிக்கடி வருவார். ‘அண்ணன், இப்ப ஒரு விஷயம் படிச்சேன்..’ என்று சொல்வார். நிறைய பேசிக்கொண்டிருப்போம். அவர் நவீனத்தமிழிலக்கியத்துக்கு அறிமுகமானார்.

காட்சனுக்குப் பனைமீது அபாரமான ஈடுபாடு உண்டு. பனையோலையில் கலைப்பொருட்கள் செய்வதில் தொடங்கி பனைபற்றிய விரிவான ஆய்வுகளாக அந்த ஈடுபாடு விரிகிறது. பனையை அறிய நிறைய பயணங்கள் செய்திருக்கிறார். எந்த ஒரு விஷயத்திலும் நம் மனம் குவியுமென்றால் அது நம்மை முழுக்க உள்ளே இழுத்துக்கொண்டு பிரபஞ்சத்தைக் காட்ட ஆரம்பித்துவிடும். இத்தகைய ஆர்வங்கள் கொண்டவர்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.

அவரைப்பற்றி எண்ணும்போதெல்லாம் அவருக்குப் பொருத்தமான சிறந்த பணி போதகர்பணிதான் என்று எனக்குத் தோன்றும். அதே சமயம் நமது தேவாலய அரசியலில் அவர் மாட்டிக்கொண்டால் அவரது இனிய இலட்சியவாதம் மழுங்கிவிடும் என்ற எண்ணமும் ஏற்படும். அவர் மும்பையில் ஆங்கிலிகன் சர்ச்சில் போதகராகச் சென்றபோது அதை சரியான முடிவா இல்லையா என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் காட்சன் இப்போது மும்பையில் மகிழ்ச்சியாக இருக்கிறார். மும்பைக்குப் போனவர்கள் எல்லாருமே அப்படித்தான், அந்த நெரிசலையும் சத்தத்தையும் வாயாரச் சபித்தபடி அங்கே மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

காட்சன் ஒரு இணைய தளம் தொடங்கியிருக்கிறார். தன் அந்தரங்க தளத்தில் ஆன்மீகமான பயணத்தை நேர்மையாகவும் நேரடியாகவும் நிகழ்த்த முயலும் ஒரு போதகரின் சொற்கள் அவை. நண்பர்கள் அதைக் கவனிக்கவேண்டுமென விரும்புகிறேன்.

pastorgodson.wordpress.com

அக்டோபர் 21, 2008

64. தீபாவளி

எங்கள் வீட்டில் எல்லா பண்டிகைகளும் உண்டு. தீபாவளி, ஓணம், பொங்கல், கிறிஸ்துமஸ், ஈஸ்டர், சரஸ்வதி பூஜை... ஒவ்வொன்றையும் மரபான முறைப்படி கொண்டாடிவிட்டு ஏதாவது புதிதாகவும் செய்ய முயல்வோம். அனேகமாக பிள்ளைகளுடன் ஏதாவது ஒரு சிறு ஊர் சுற்றல். போன முறை ஏதேனும் ஒரு புதிய பறவையைப் பார்க்காமல் வீடு திரும்புவதில்லை என்ற சபதத்துடன் கிளம்பி மூன்றரை மணிநேரத்துக்குப் பின் திரும்பி வந்தோம். பட்டப்பகலில் ஒரு வெண்ணிற ஆந்தையை பாறையடிக்காடருகே பார்த்த பின்னர்.

இன்றுகாலை எழுந்ததுமே பல்தேய்க்காமல் வாய் கழுவிவிட்டு முறுக்கு, அச்சுமுறுக்கு, குலாப் ஜாமூன் என்று தின்றுவிட்டுதான் டீயே குடித்தேன். பழைய தீபாவளிக்கு திரைப்படம் வெளியாகும் கோலாகலங்கள் பற்றிய ஒரு நடிப்புச் சித்திரத்தை பிள்ளைகளுக்குச் சொன்னேன். குறிப்பாக டிக்கெட் எடுத்தபின் கவுன்டர் விட்டு நீங்க படும் அவஸ்தைகளை. சென்ட்ரல் தியேட்டரில் அன்னமிட்ட கை படம். பத்மநாபாவில் சித்ரவீணா. இங்கே கவுன்டரில் கைவிட்ட என்னால் கையை வெளியே எடுக்க முடியவில்லை. ஒரு துளைக்குள் ஒன்பது கைகள். நான் 'கை கை கை' என்று கதற உள்ளே இருந்த சிப்பந்தி 'கை சென்ட்ரலிலே கை சென்ட்ரலிலே' என்று கத்தினார். சிரித்து குழைந்து விழுந்தார்கள். சென்றகாலத்தில் உயிர் பிரச்சினையாக இருந்த எதுவும் இன்று நகைச்சுவைதான்.

பின்னர் எண்ணெய் தேய்ப்பு. அஜிதனுக்கு நானே உடலெங்கும் எண்ணெய் தேய்த்தேன். உடனே உள்ளே சென்று நிலைக்கண்ணாடியில் தன் உடலை மஸில் வரவழைத்துப் பார்த்துக்கொண்டான். 'அஜி உனக்கு மிஸ்டர் பீன் மாதிரி இருக்கு பாடி' என்று சைதன்யா சொன்னாள். துரத்திப்பிடித்து தன் உடலின் எண்ணெயாலேயே அவளை தேய்த்து அழவைத்தான்.

குளியல் முடிந்து மீண்டும் இட்லி பலகாரம் சாப்பிட்டோம். அஜிதனும் சைதன்யாவும் புதிய ஆடைகள் அணிந்து மாறி மாறி ஃபோட்டோக்கள் எடுத்துக்கொண்டார்கள். நான் துணிகளின் ஃபேஷன் மாறுவதை கிண்டல்செய்து நடித்துக்காட்டினேன். சாவித்ரி அந்தக்காலத்தில் கணுக்கை வரை ஜாக்கெட் போட்டு நடித்தார். வயதானபிறகு குட்டைக்கை போட்டு நடித்தார். கை தும்பிக்கை போல இருந்தது. படம் முழுக்க கை ஜெல்லி மாதிரி உருமாறிக்கொண்டே இருக்கும்.

அதன் பிறகு பட்டாசு வெடித்தல். பட்டாசு வெடிக்க ஆரம்பித்து இரண்டு நாள் ஆகிறது. நான் வாங்கியது, அண்ணா வாங்கி கொடுத்தனுப்பியது என்று நிறைய பட்டாசு ஸ்டாக் இருந்தது. தெருவெங்கும் ஒரே பயல்கள் கூட்டம். இப்போதும் பெரிய பட்டாசுகள் வெடிக்க எனக்கு பயம்தான். சின்ன வயசில் அண்ணா வெடிப்பதை நான் வேடிக்கை பார்ப்பேன். இப்போது அஜிதன் வெடிக்க வேடிக்கை பார்த்தேன். 'அப்பா பயந்திராதே... இது கொஞ்சம் பெரிசு' என்று அவன் அடிக்கடி பயமுறுத்தினான்.

மதியச் சாப்பாடுக்குப் பிறகு சாகஸப் பயணம் என்ன என்று இன்னும் திட்டமிடவில்லை. எண்ணெய் தேய்த்துக் குளித்தால் நான் சொக்கி விழ ஆரம்பித்துவிடுவேன். வெடி வெடிப்பதே ஒரு தாலாட்டுபோல இப்போது பழகிவிட்டிருக்கிறது.

எந்தக் கொண்டாட்டத்தையும் விட்டுவிடக் கூடாது என்பது என்னுடைய எண்ணம்.

தொன்மையான பண்பாடுகளில் இருக்கும் முக்கியமான சிறப்பே அவர்களுடைய திருவிழாக்களும் கொண்டாட்டங்களும்தான். இந்திய சமூகத்தை விடவும் சீனர்களுக்கு திருவிழாக்களும் பண்டிகைகளும் அதிகம் என்று சொன்னார்கள். காரணம் பல்வேறு பண்பாட்டுக்கூறுகள் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு வளர்ந்தபடியே இருக்கும் தன்மை பெரிய பண்பாடுகளுக்கு உண்டு. அந்த பண்பாடுகளில் இருந்தெல்லாம் அது கொண்டாட்டங்களை உள்ளே இழுத்துக்கொள்ளும்.

மனித வாழ்க்கையை பின்னுக்குத்திரும்பிப் பார்க்கும் ஒருவர் ஒன்றை உணர முடியும், களியாட்டங்களும் கொண்டாட்டங்களும் இயல்பாக அமைவது மிக மிக அபூர்வம். ஆனந்தம் பெரும்பாலும் தானாக நிகழ்வதே இல்லை. தேடிச்சென்றால் மட்டுமே கிடைக்கிறது அது. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு அதற்காக முயல்பவர்களே மகிழ்ச்சியை அடைகிறார்கள். மகிழ்ச்சிக்கான மனநிலையை உருவாக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு உரியது மகிழ்ச்சி.

நித்யா சொல்வதுண்டு, ‘மனிதர்களுக்கு மகிழ்ச்சி இல்லை என்பதல்ல பிரச்சினை, மகிழ்ச்சியாக இருப்பதெப்படி என்று தெரியவில்லை என்பதே’ என்று. நம்மில் ஒருவரை நிறுத்தி ‘நீங்கள் எப்போது மகிழ்ச்சியாக இருப்பீர்கள், அதற்கு உங்களுக்கு என்ன தேவை?’ என்று கேட்டால் பெரும்பாலும் நம்மிடம் பதில் இருக்காது.

பெரும்பாலும் நுகர்வையே நாம் மகிழ்ச்சிக்கான காரணமாகச் சொல்வோம். நுகர்வில் வரும் மகிழ்ச்சி என்பது மிகக்குறுகியது. முதல்முறை மட்டுமே உவகையளிப்பது. அதை அடைந்ததுமே இன்னும் அடுத்த கட்டம் சார்ந்த ஒன்றை நோக்கி நம் மனம் நகரும். வெற்றியின் இன்பம் இன்னும் தற்காலிகமானது, வென்றேன் என்ற கணத்திலேயே அது முடிந்துவிடும். ஆதிக்கம் அதிகாரம் அளிக்கும் இன்பம் நம் அகங்காரத்தை குளிர்விக்கிறது. ஆனால் அதற்கு அதேயளவுக்கு விலையும் நாம் அளிக்கவேண்டியிருக்கும். தராசின் மறுதட்டில் மனக்கவலையையும் எரிச்சலையும் வைத்தாகவேண்டும். அங்கீகாரம் புகழ் அளிக்கும் மகிழ்ச்சியோ இன்னும் அதிகமாக விலை தரவேண்டிய ஒன்று.

மகிழ்ச்சியாக இருப்பதற்கு தடைகள் இல்லையென்றாலே மகிழ்ச்சியாக இருப்பேன் என்பதே இயல்பான மனநிலை. அதையே நாம் பயின்று உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது இப்போது. தடைகளை மீறியும் மகிழ்ச்சியாக இருப்பேன் என்பது யோகம்.

சின்னஞ்சிறு விஷயங்களில் உள்ளது மகிழ்ச்சி. அதை அறியும்படி நம் மனதை வைத்துக்கொண்டாலே போதுமானது. மகிழ்ச்சிக்கான முகாந்திரங்களை உண்டு பண்ணுவதே முக்கியம். பண்டிகைகளும் திருவிழாக்களும் நம் மரபு நமக்கு உருவாக்கியளிக்கும் கொண்டாட்டங்கள். குறிப்பாக சிறு குழந்தைகளின் வாழ்க்கையில் அவை உருவாக்கும் உவகை சாதாரணமல்ல. இளமையில் பண்டிகைகளை இழந்தவர்கள் பின்பு ஒருபோதும் ஈட்ட முடியாத செல்வமொன்றை தவறவிடுகிறார்கள்.

இந்த நாளின் உவகையை காரண காரியத்துடன் அடைய வேண்டுமென்றால் எனக்கு நோபல் பரிசு கிடைக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் ஞானபீடம். லாட்டரியில் நாலைந்து கோடி ரூபாய் விழவேண்டும். நியூயார்க் டைம்ஸ் அட்டையில் படம் வரவேண்டும். ஒன்றுமே தேவை இல்லை என்றால் எல்லா நாளிலும் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்கலாம். ‘அப்பா இப்ப தவுசன் வாலா கொளுத்தப்போறோம்... பயப்படுறதுக்கு வாறியா?’ என்று சைதன்யாவின் குரல். கிக்கீகீ என்று சிரிப்பு.

தீபாவளி முடிந்ததும் ஒரு வெறுமை. உடனே திருக்கார்த்திகை வரும் என்பது ஓர் எதிர்பார்ப்பு. இன்னும் எத்தனை நாள் என்று சைதன்யா எண்ண ஆரம்பிப்பாள்.

அக்டோபர் 27, 2008

65. அசோகமித்திரன் சந்திப்பு

சென்ற 11108 அன்று சென்னையில் எழுத்தாளர் கோ.ராஜாராம் அவர்களின் மகளுடைய திருமணத்துக்குச் சென்றிருந்தபோது அசோகமித்திரனைச் சந்தித்தேன். அவரைப்பார்த்து நெடுநாள் ஆகிறது. மூன்று வருடங்களுக்கு முன்பு உயிர்மையின் கூட்டம் ஒன்றில் அவரைப்பார்த்தது. சென்னைக்குச் சென்றாலும் சாதாரணமாகச் சென்று சந்திக்க முடியாத அளவுக்கு தள்ளி புறநகரில் இப்போது குடியிருக்கிறார். திருமணத்துக்கு நானும் கவிஞர் ஹரன்பிரசன்னாவும் சுவாமிநாதன் என்ற நண்பரும் சென்றோம். உள்ளே சென்றபோது ராஜாராம் என்னைப் பார்த்து கலாப்ரியாவா என்று கேட்டார். அவர் என்னை நேரில் பார்த்ததே இல்லை. உள்ளே சென்று துக்காராமைப் பார்த்தோம்.

அதிகம் கூட்டம் இல்லாத கூடத்தில் பேசிக்கொண்டு நின்றபோது அசோகமித்திரன் வருவதாக ஹரன் பிரசன்னா சொன்னார். நான் முன்னால்சென்று வணங்கினேன். மதுமிதாவுடன் பேசிக்கொண்டிருந்தவர் என்னை நோக்கி திரும்பி 'ஆ?' என்று ஆச்சரியப்பட்டு அவரது இளமைக்கால ஆதர்சமான எர்ரால் ஃப்ளின் வாள்சண்டை போடுவது போல கைகாட்டி,'சண்டையெல்லாம் நன்னா போடுறேளா?' என்றார். 'ஆமா சார்' என்று புன்னகை செய்தேன்.

என் கைகளை தன் மெல்லிய கரங்களால் பிடித்துக்கொண்டு 'எப்டி இருக்கேள்?' என்றார். 'நல்லா இருக்கேன்' என்றேன். 'நாவல் எழுதறேளா?' நான் 'ஆமா சார், அசோகவனம்னு ஒரு நாவல்' என்றேன். 'அவ எப்டி இருக்கா? அருண்மொழி? பாத்து ரொம்ப நாளாச்சு'. 'நல்லாருக்கா' என்றேன். 'நான் பத்து வருஷமா ஒரு நாவல் எழுதறேன்... மேலே நகரலை' என்றார். அப்போது கோ.ராஜாராமின் அமெரிக்க நண்பர் சுந்தரமூர்த்தியும் அவர் மனைவியும் வந்தார்கள். அவர்களை அசோகமித்திரனுக்கு முன்னரே தெரியும் போல. அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

சாப்பிட்டு விடலாம் என்று துக்காராம் சொன்னதனால் லிஃப்டை நோக்கி நடந்தோம். ஹரன் பிரசன்னா புகைப்படம் எடுக்கலாம் என்றார். லிஃப்டின் முன்னால் வைத்து புகைப்படங்கள் எடுத்துக்கொண்டோம். லிஃப்டில் ஏறி மேலே சென்று சாப்பிட அமர்ந்தோம். அசோகமித்திரனின் அருகே நான் அமர்ந்துகொண்டேன். மறுபக்கம் சுந்தரமூர்த்தி அமர்ந்துகொண்டார். அவர்கள் அமெரிக்க நினைவுகளைச் சொல்ல அசோகமித்திரன் அவரது மகனுக்கு நிகழ்ந்த ஒரு விபத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

பின்னர் அவர் என்னை நினைவுபடுத்தி 'மெட்ராஸிலேதான் இருக்கேளா?' என்றார். 'இல்லைசார்... நாகர்கோயில்தான். அப்பப்ப வந்துட்டு போறதோட சரி..' என்றேன். 'சினிமாவுக்கு எழுதறதாச் சொன்னாங்க.' 'ஆமா சார்...ரெண்டுபடம் எழுதினேன் ' 'அந்தக்காலத்திலே கூட இளங்கோவன்னு ஒருத்தர் இலக்கியத்திலேருந்து சினிமாவுக்குப்போயி ரொம்ப புகழோட இருந்தார். அப்றம் நெறைய பணம் இழந்து கடைசிகாலத்திலே கஷ்டப்பட்டார். நல்ல மனுஷன்.'

'நான் அந்த அளவுக்கு சீரியஸா சினிமாவிலே இல்லை சார். சினிமாவிலே இப்ப ரைட்டர்னு நாம பெரிசா ஒண்ணும் செய்றதுக்கு இல்லை. சும்மா கொஞ்சம் பணம் வருது. அவ்ளவுதான்.' 'அப்டியா? எழுதறதுக்கெல்லாம் நேரம் கெடைக்குதா?' 'அதெல்லாம் பிரச்சினை

கெடையாது... வேலைக்குப் போறதில இருக்கிற சலிப்புதான் பிரச்சினை.'

மீண்டும் மறுபக்கம் பேசிக்கொண்டிருந்துவிட்டு என்னை நோக்கி திரும்பி புன்னகைசெய்தார். 'ஒரு மாசம் முன்னாடி தாமோதர ரெட்டி சாலைக்கு போயிருந்தேன் சார்...' அசோகமித்திரன் முகம் மலர்ந்து 'அப்டியா? எப்டி இருக்கு?' என்றார். 'பார்க்கிங் லாட் மாதிரி இருக்கு. ஒரே கார் ' 'ஆமா அப்பல்லாம்கூட அப்டித்தான் இருந்தது. எப்பவும் வண்டிகள் போய்ட்டு வந்திட்டு இருக்கும். நடக்கறதுக்கே பயமா இருக்கும்.'

நான் அசோகமித்திரனை முதலில் சந்தித்தது அவரது சொந்தவீடான தாமோதரரெட்டிசாலை வீட்டில்தான். பழைய ஓட்டுவீடு. அசோகமித்திரன் அவர் அப்பாவை இழந்து சிறுவனாக குடும்பத்துடன் சென்னைக்கு வந்து பல இடங்களில் வாடகைவீடுகளில் தங்கியிருந்து பின்னர் வாங்கிய வீடு. நானும் ஆராவமுதன் என்ற நண்பரும் அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். வீட்டுமுன் திண்ணையில் வேட்டிமட்டும் கட்டி நின்றிருந்தார். 'என்னத்துக்காக பாக்கணும்?' என்றார். 'நாங்க உங்க வாசகர்கள்.'

'அதுக்காக?' என்ற பாவனை அசோகமித்திரன் முகத்தில் தெரிந்தது. 'இங்கேயே ஒக்காந்து பேஷலாமே... உள்ளேயெல்லாம் ஒரே நெரிசல்' என்று முற்றத்திலேயே அமர்ந்து கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் பாராட்டு, வியப்பு, இலக்கியக் கருத்துகள் எதையுமே அவர் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. பத்து நிமிடம் கழிந்ததும் 'சரி கிளம்புங்கோ' என்று சொல்லிவிட்டார்.

அதன்பின் இருமுறை அவரை அதே தாமோதர ரெட்டி தெரு வீட்டில் சந்தித்தேன். ஒரு பேட்டிக்காகப் போனபோது கேள்விகளைப் பார்த்துவிட்டு 'நேக்கு ஒண்ணும் தோணல்லை. நீ என்ன நெனைக்கிறே?' என்று அவரது மகனிடம் கேட்டார். அவரது மகன் முகத்தில் மெல்லிய கேலி.'நான் இதெல்லாம் யோசிக்கிறதே கெடையாது. சரி எழுதி குடுத்திடறேன்...' என்றார்.

மூன்றாம் முறை அருண்மொழிக்காக. என்னிடம் பேசுவதைவிட உற்சாகமாக அவளிடம் பேசிக்கொண்டிருந்தார். 'நீ கு.ப.ராஜகோபாலன் ஜானகிராமன் ரெண்டுபேரையும் படிச்சிடு... ரொம்ப சூட்சுமமா எழுதுவா' என்றார். அப்போது அவர் இருந்த அந்த வீட்டை அடுக்குமாடிக் குடியிருப்பு கட்ட விற்றுவிட்டிருந்தார். அவர்கள் கொடுத்த தரைத்தள குடியிருப்பில் இருந்தார். 'காபி சாப்பிடலாமோ . இங்கே ஒரு ஓட்டலிலே காபி நன்னாருக்கும்' என்று வெளியே கூட்டிச்சென்றார். வீட்டில் அப்போது அவர் தனியாகத்தான் இருந்தார்.

'நாங்க குடிவந்தப்ப அங்கெல்லாம் ஜனநடமாட்டமே கம்மி. கிஷ்ணாயில்காரன் மட்டும்தான் தெருவிலே வருவான்' என்றார் அசோகமித்திரன். 'இப்ப கார் இல்லேன்னா அங்கே இருக்க முடியாது...' நான் 'இப்பல்லாம் எல்லா எடத்திலயும் அப்டித்தான் இருக்கு சார். ஹைதராபாத் செகந்தி ராபாத்தெல்லாம் ரொம்ப மாறியாச்சு. ஊருக்குள்ள எடமே கெடையாது. எல்லாம் அடுக்குமாடிகள். இப்ப உங்க லான்ஸர்பாரக்கெல்லாம் இருக்குமான்னே தெரியல்லை' என்றேன். 'ஆமாமா...ஒண்ணுமே நிக்கிறதில்லை. கண்ணெதிரே மாறிண்டே இருக்கு.'

சாப்பிட்டுவிட்டு கீழே வந்தபோது சல்மா வந்திருப்பதைப் பார்த்தேன். அசோகமித்திரன் அவரை அணுகி பேச ஆரம்பித்தார். பரவலாக விருந்தினர் வர ஆரம்பித்தார்கள். இம்மாதிரி பொதுநிகழ்ச்சிகளில் எனக்கு ஒரு சங்கடம் உண்டு. நான் கடுமையாக விமரிசனம் செய்தவர்களை நேருக்கு நேர் சந்திக்கவேண்டியிருக்கும். எனக்கு பொதுவாக எவரிடமும் பேசுவதில் சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் இறுக்கமாக பார்வைகளைத் தவிர்த்து கஷ்டப்படுவார்கள். ஆகவே மெதுவாகக் கிளம்பிவிட்டேன்.

அசோகமித்திரனைப் பற்றி நினைத்துக்கொண்டே வந்தேன். அசோகமித்திரன் எழுதிய நிலமும் மக்களும் முழுமையாகவே பூமியில் இருந்து மறைந்துவிட்டார்கள். ஆனால் அவரது எழுத்துக்களில் இப்போதும் அவற்றை அத்தனை துல்லியமாக நம்மால் காணமுடிகிறது. அந்த நிலம் அழியாது. சொல்லப்போனால் காலம் தோறும் வளரும். நம் மொழியில் உள்ள

பூம்புகார் உண்மையான பூம்புகார் புதைந்து விதையாகி முளைத்து கிளைபரப்பிய பெருமரம் அல்லவா?

நவம்பர் 5, 2008

இன்று பெற்றவை எழுத்தாளனின் நாட்குறிப்புகள் Indru Pettravai: Ezhuthalanin Natkurippugal
ஜெயமோகன் Jeyamohan ©

This digital edition published in 2015 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2009 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.